Digitized by eGangotri and Sarayu Trust.

வெள்ளி விழா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From :

Sri Ch. S. R. V. P. MURTHI RAJU

Sri Chintalapati BAPI RAJU

Dharma Samstha Administrative Society

CHINA NINDRA KOLANU

(West Godavari Dt) ANDHRAPRADESH

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம்

இராஜபாளையம்

★

14—12—83 – 17—12—83

★

வெள்ளி விழா மலர்

1983

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

Office : 2346
Works : 2326

உ
ஸ்ரீ பராசக்தி சகாயம்

ஸ்ரீ ஜெயராம் மோட்டார் சர்வீஸ்

ஆட்டோமோபைல்ஸ் இன்ஜினிரிங் ஸ்பேர் சேல்ஸ் & சர்வீஸ்
இராஜபாளையம்

Phone : 2776

ஜெய்ரெங்கா டிரான்ஸ்போர்ட் கார்கோ மூவர்ஸ்

பிராஞ்ச் ஆபீஸ் : மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், தளவாய்புரம்,
தென்காசி, கொல்லம், கோட்டையம்.
தலைமை ஆபீஸ் : இராஜபாளையம்

Phone : 2833

ஜெய்ரெங்கா மில்ஸ்

20s, 40s Hank ஆகவும் Cone ஆகவும் உற்பத்தி செய்கிறோம்

K. M. சங்கார் ராஜா & Co.,

டீலர்ஸ் : பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் பம்பு (at)
ஸ்ரீவில்லிபுத்தூர் & இராஜபாளையம்

Partners :
K. P. ஜெயராம் ராஜா ● K. S. R. ஸ்ரீரெங்க ராஜ், B. A.,

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From:

SREE SATYAM SPINNING & WEAVING MILLS LTD

A unit to spin quality cotton
and synthetic blended yarn.

Factory :
Sahabashpalli
Narsapur Taluk
Medak District
Phone 52 (Toopran)

Regd Office :
Samrat Complex
2nd Floor
5-9-12, Saifabad
HYDERABAD
Phone : 30202

Grams : SATYAMSPIN

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From :

NAGARJUNA STEELS LIMITED

NAGARJUNA SIGNDDE LIMITED

NAGARJUNA COATED TUBES LIMITED

NAGARJUNA FINANCE LIMITED

NAGARJUNA INVESTMENT TRUST LIMITED

NAGARJUNA HILLS, HYDERABAD - 500 004.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ANAND CEM

ஆனந்த வாழ்விற்கு அடிகோலும்
அழகிய மனைகளில் வான் சுதை வண்ணம்
'ஆனந்த செம்' தான் அளித்திடும்
அற்புத சேவையே எமது எண்ணம்

மின்னெனக் கண்கவர் மேலாம் வெண்ணிறம்
பொன்னென அனைவரும் புகழ்ந்து மகிழ்வது
செம்மை சேர் கட்டிடம் சிறப்புற' 'ஆனந்த்
செம்'' மது பூசிடின் சீர்பெறத் திகழ்வது

ANAND CHEMICAL,

29, Boopathi Bank Street,
RAJAPALAYAM - 626 117.

Phone : Off : 2901
Resi : 2156

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்ற வெள்ளிவிழா
மலருக்கு மனமுவந்த வாழ்த்துக்கள்

ம. போன்னையா,

தலைவர், திருவள்ளுவர் மன்றம்,
இராசபாளையம்.

வெள்ளிவிழா மலர் சிறப்புற
நல்வாழ்த்துக்கள்

எஸ். என். ஆர். டி. ராமசுப்பிரமணிய ராஜா,

தலைவர், கம்பன் கழகம், ★ இராஜபாளையம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

முன்னுரை

மனித சமுதாயத்தின் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது சிந்தனைவளமும், செயலாற்றலுமாகும். சிந்தனைசெம்மையுற்றாலே செயலும் நன்மையில் அமையும். மானுடநேயமும், கருத்திணைவும் ஏற்படுத்தும் நோக்கில் அமைந்த தத்துவமும் இலக்கியமும்தான் சமுதாயச் சிந்தனையோட்டத்தைச் சீராக்க முடியும்.

மனிதன், மனத்திலும், உடலிலும், உலகிலும் மாற்றத்தைக் காண்கிறான். புறவயமான மாற்றங்களை அங்கீகரிக்கும் அவன், அகநிலைப்பட்ட கருத்தோட்டத்தில் மாற்றத்தைச் சந்திக்கத் தயங்குகிறான். புதிய கருத்துக்களை சீரணித்துக் கொள்ளவும், எதிர்கொள்ளவும் தயக்கமடைகிறான். மனித மனத்தை விசாலப்படுத்தி ஆன்மவிசாரத்திலும் உலகக்கருத்தோட்டத்திலும் பக்குவப் படுத்தி, தன்னல வெறி நீங்கி, பொது சமுதாய நலனிலும் பொறுப்புணர்ச்சியுடையவனாக்குவதற்கு மதம், தத்துவம், கலைகள், இலக்கியங்கள் முயல்கின்றன. அறத்தைக் கைக்கொண்டு அடக்கமுடையவனாக, அன்பின் அமுதத்தைச் சுவைப்பதற்கு அவனுக்கு தத்துவமும் இலக்கியமுமே வழிகாட்டிகளாக அமைகின்றன.

நமது இந்தியத்தத்துவ ஞானமும், இலக்கிய வளமும் இமயமும் கங்கையும் போல, உயர்வும் புனிதமும் இணையற்ற சிறப்பும் உடையவை. ஐந்தாயிரம் ஆண்டுகளாக இடையறாது பெருகிவரும் நமது இந்தியச் சிந்தனையின் உயர்வினை மேனாட்டினர் வியந்து பாராட்டுகின்றனர். சுதந்திரப் போராட்ட காலத்தில் நமது இலக்கியத்தத்துவங்களின் மாண்பினையுணர்ந்து மதித்துப் போற்றிவந்தோம். சுதந்திரம் பெற்றபின், கால்நூற்றாண்டு கழிந்தபிறகு நம்நாட்டில், தியாகமும்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஆன்மீகப் பண்பாடுகளும் குலைந்து ஆடம்பரமும், பொறுப்புணர்ச்சியின்மையும் தன்னல வெறிமிக்க பணப் பேராசையும், பிரிவினை வாதங்களும் வன்முறைகளும் மேலோங்கி இருப்பதைக்கண்டு சமுதாய உணர்வுடையோர் யாவரும் நெஞ்சம் புண்ணாகி வருந்தும் நிலையைக் காண்கிறோம்.

புனித பாரதத்தின் புகழார்ந்த மரபின் சீலங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். புத்தனும் மகாவீரனும், காந்தியும் போதித்த அன்புநெறி இந்தியப் பண்பாட்டின் அடிப்படையாகும். அதன் மேன்மையை மீண்டும் நாம் உணர வேண்டும். பாரதி கூறியபடி ''எல்லோரும் ஒரேவிலை எல்லோரும் ஒரே நிறை'' யில் எல்லோரும் ஒரே நிலையில் சமமாக, சுதந்திரமாக சகோதரர்களாக வாழும் மானுட நேயமிக்க சமுதாயத்தை நாம்படைப்பதற்கு முன்னேறிச் செல்லவேண்டும். உலகின் பசிப்பிணி நீங்கி, உலக சமாதானமும், சமத்துவமும் உருவாக வேண்டும்.

இந்த லட்சிய நோக்கோடு, மரபுக்கு மதிப்பளித்தும் புதியன கண்டு வரவேற்றும், தேசிய ஒருமைப்பாட்டினை இலக்கியத் துறைமூலம் உருவாக்கும் செயலாக்கத் துணிவோடும் இராஜபாளையம் மணிமேகலை மன்றம் இருபத்தைந் தாண்டுகளாக இயங்கி வருகிறது. நல்லிலக்கியங்களை இனங்கண்டு வரவேற்று பல்வேறு மொழிகளின் இலக்கியச் செல்வங்களை பரஸ்பரம் அறிமுகப்படுத்துவதும் நூல்கள் வெளியிடுவதும், சொற்பொழிவுகள் அமைத்தலும், சான்றோர்களை அறிமுகப்படுத்துவதுமாகிய பல சாதனைகளைக் கடந்த காலத்தில் இம் மன்றம் செய்துள்ளது.

மன்றத்தின்சாதனைகளை நினைவுறுத்தும் வகையிலும், அதைக்கண்டுஏற்படும் பெருமிதத்தில் மீண்டும் அதிக உத்வேகமுடனும், தூய தொண்டுளத்துடன் இலக்கியப் பணி ஆற்றவும் மன்றம் தன் வெள்ளிவிழாவில் மலர் வெளியிடக் கருதியது. பதினெட்டாவது ஆண்டு விழா மலருக்குப்பிறகு இருபத்தைந்தாவது ஆண்டு விழாவில் இம் மலர் மணம்வீச வந்துள்ளது.

இராஜபாளையம் பகுதியிலுள்ள, முக்கியமாக மன்றத்தைச் சார்ந்த எழுத் தாற்றல் மிக்க கலைஞர்களின் படைப்புக்களும் மணிமேகலை சம்பந்தப்பட்ட கட்டுரைகளும், மணிமேகலை சம்ந்தமான அரியசெய்திகளும் இலக்கிய நிறுவனங்கள் தொடர்பான செய்திகளும் இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன. இச்செய்திகள் இலக்கிய ஆர்வலர்கட்குப் பெரும் பயன் நல்கும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வெள்ளிவிழா, அதற்கு முன்னைய சிறந்த சிலநிகழ்ச்சிகளின் நிழற்படங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. மணிமேகலை மன்றம் ஒருசொற்பொழிவுகட்குரிய அரங்கம் மட்டுமன்று அது ஒரு இயக்கம். மானுட நேயத்தையும் தேசீய ஒருமைப் பாட்டையும் சமுதாய முன்னேற்றத்தையும் சிந்தனை வளத்தின் மூலம் பேணும் ஒரு லட்சிய இயக்கம். பல்வேறு இந்திய மொழிகளில் உள்ள ஞானச் செல்வங்கள் தமிழுக்கு அறிமுகப்படுத்துவதும் தமிழின் அரிய ஞானச் செல்வங்களை பிறமொழி கட்கு அறிமுகப்படுத்துவதும் அதன் தலையாய நோக்கங்களில் ஒன்ருகும். இத் தகைய சிறந்த மொழிபெயர்ப்பாக்கங்கள் மொழிவளத்திற்கு இன்றியமையாத தேவையாகும். இதனையுணர்ந்து மன்றம் சிறந்த நூல்களின் மொழிபெயர்ப்புக்கு பரிசளித்தும், நூல்வெளியிட்டும் ஆக்கபூர்வமான தொண்டாற்ற முன்வந்துள்ளது. இந்த ஞானவேள்விக்கு நல்லிதயம்படைத்த இலக்கிய ஆர்வலர்கள் அனைவருடைய ஒத்துழைப்பை மன்றம் எதிர்பார்க்கின்றது.

ஞானச் சுடரின் கடைசிக்கங்கிருந்தாலும். போதும் நீறுபூத்த நெருப்பை ஊதிவிட்டால் மீண்டும் அதுபற்றிக் கொண்டு பிரகாசிக்கும். இன்று இலக்கிய உலகிலும் தன்னலமும் புகழ்வெறியும் விளம்பரமும் புகுந்து மாசடைந்துள்ளது. விமரிசனக் காற்றைஊதி சாம்பலை நீக்கிச் சத்திய தரிசனத்தைக்காண மீண்டும் ஞானச்சுடர்கொளுத்த நமது இலக்கிய இயக்கத்தில் நீங்களும் பங்கு கொள்ள வேண்டும் என விரும்பி அழைக்கின்ருேம்.

எதிர்காலத்தையுடைய இளைஞர்கள், திரைப்படமும், பத்திரிகைகளும் தரும் இலக்கியச் சுவையோடு நின்றுவிடாமல், சிந்தனைக்கருவூலங்களாக செஞ்சொல் அமுத நதிகளாகத்திகழும் நமது பழமையான நல்லிலக்கியங்களையும் பயின்று பாரத நாட்டின் பாரம்பரியச்சொத்தான ஞானப்புதையல்களை அனுபவிக்கவேண்டும்.

உலகிலேமனிதன் பசிப்பிணியைக் குறித்துச் சிந்தித்தமுதல் யதார்த்தவாதக் கவிஞன் சாத்தனுர் ஆகும். அவருடைய அரியபடைப்பான மணிமேகலை அமர காவியம். மணிமேகலையில்வரும் தியாகபாத்திரங்களான ஆபுத்திரனும் மணிமேகலை யும் நமக்கு ஆதரிசங்களாகத் திகழ்கின்ற பாத்திரங்கள் அவர்கள் மூலம் சாத்தனுர் சமுதாய நல்லறங்களை விளக்கிக் காட்டியுள்ளார். அவர்தம் அற்புதப் படைப்பான மணிமேகலையைப் பயின்று பயன்பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிருேம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

எமது மன்றம் இடையறாது தனது லட்சியப் பயணத்தில் முன்னேறும் உங்களது வரவேற்புப் புன்னகை மலர்கள் களைப்பறியாமல் செல்லத் தூண்டும் என நம்புகிறோம்.

வெள்ளிவிழா சிறப்புற நடைபெறுவதற்காக எமது மன்றப் புரவலர் திரு பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர்க்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இம் மலரை அணியுற வெளியிட உதவிய மலர்குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். விளம்பரங்களும், கட்டுரைகளும் தந்துதவிய பெரியோர்கட்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இம் மன்றம் இருபத்தைந்தாண்டுகளாக இயங்கிவர ஒத்துழைத்த செயல் குழுவினருக்கும், சிறப்பாக பொதுச் செயலர் கோ. மா. கோதண்டம், செயலர் பூ. அ. துரைராஜா ஆகியவர்கட்கும் என்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மலரை அழகுற அச்சிட்ட லியோ பிரிண்டர்ஸ் உரிமையாளரும் அகில இந்திய ஜேஸிஸின் தலைவருமாகிய நண்பர் A. ராஜேந்திரன் ராஜா அவர்கட்கும், அச்சக ஊழியர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. கு. ஜகந்நாத ராஜா,
தலைவர் மணிமேகலை மன்றம்,
இராஜபாளையம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பொருளடக்கம்

மணிமேகலை மன்றம்	—	
சாத்தனூர்	—	பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா
கவி சம்ராட்டும் கவியோகியும்	—	கே. ஆர். வேலாயுதராஜா
பொன்மொழிகள்	—	
இலக்கியமும் தத்துவமும்	—	பி. ஆர். ராமசுப்பிரமணியராஜா
மேகலை மாட்சி	—	பேராசிரியர் மது. ச. விமலானந்தம்
மணிமேகலைத் திறன்	—	பேராசிரியர் வ. சுப. மாணிக்கம்
செவிச் செல்வம்	—	என். எஸ். முத்துக்கிருஷ்ணராஜா
மகாகவி பாரதியார்	—	வித்வான் ல. சண்முகசுந்தரம்
தெலுங்கு மொழி - ஒரு கண்ணோட்டம்	—	பேராசிரியர் சி. ஆர் சர்மா
கலைகள் - ஒரு சிந்தனையில்	—	வே. பா வெங்கட்டரமணன் பி. காம்.
வடமொழி வளத்திற்கு தமிழரின் பங்கு	—	பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா
சுதந்திரப் போராட்டத்தில் தமிகழம்		
இலக்கியச் சான்றுகள்	—	டாக்டர் க. வெங்கடேசன்
புதுக்கவிதையின் சிறப்பு அம்சங்கள்	—	கவிஞர் பூ. அ. துரைராஜா
மணிமேகலை கூறும் பௌத்தம்	—	
காட்டுப் பாடல்கள்	—	கவிஞர் கொ. மா. கோதண்டம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சாத்தனூர்	—	பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
மொழிபெயர்ப்புக் கலை	—	பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா
அபிதான சிந்தாமணியில் மணிமேகலை	—	
இலக்கிய நிறுவனங்கள்	—	
இலக்கியப் பாலம்	—	
கவிஞர் சி. ஆ. ராமசாமி பிள்ளை	—	
எங்கள் பகுதி இலக்கியம்	—	பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா
பசி நீக்கு	—	கவிஞர் ப. செல்வநாயகம்
கைஎழுத்து பிரதிகள்	—	
மணிமேகலை காட்டும் அறம்	—	மு. ஒ. இராசசேகரன் எம். ஏ.
சமுதாயச் சிந்தனையாளர் திரு வி. க.	—	குன்றக்குடி பெரியபெருமாள்
மன்றமும் மக்களும்	—	தா. அ. ஈஸ்வரராஜா
மன்றம் வாழ்க	—	பி. கே. ராமசாமிராஜா
அறவண அடிகளின் ஞானதீபம்	—	வித்வான் ந. கி. நாராயணராஜா எம். ஏ.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்

செயற் குழு

புரவலர் : திரு பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா
(சேர்மன், ராம்கோ தொழில் நிறுவனங்கள்)

தலைவர் : பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

துணைத்தலைவர்: வித்துவான் ந. கி. நாராயண ராஜா
எம்.ஏ.பி.எட்.

பொதுச்செயலர் : கவிஞர் கொ. மா. கோதண்டம்

செயலர்கள் : கவிஞர் பூ. அ. துரை ராஜா
கவிஞர் கொ. ச. பலராமன்
என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா
குன்றக்குடி பெரியபெருமாள்
டி. ஏ. ஈஸ்வர ராஜா

பொருளர் : கே. ஆர். வேலாயுத ராஜா

சிறப்பு உறுப்பினர்கள் : பி. என். எஸ். நாராயண ராஜா
எஸ். என். பெருமாள் ராஜா
வித்வான் க. கொன்றையாண்டி
கவிஞர் ச, விவேகானந்தசாமி
பி. வி. வெங்கட்ரமணன்
கா. மாரிமுத்து எம். ஏ.
வித்வான் ரெ. சீனிவாசன்
வித்வான் வை. கிருஷ்ணன் எம். ஏ.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தெலுங்கு வித்யாலயம்
(மணிமேகலை மன்றக்கிளை)
இராஜபாளையம்

செயற்குழு

புரவலர் : திரு பி. கே. ராமசாமி ராஜா
(சேர்மன், ஸ்ரீராம் தொழில் நிறுவனங்கள்)

தலைவர் : பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

துணைத் தலைவர்கள் : டாக்டர் க. அழக ராஜா, எம். ஏ., எம். எஸ்ஸி ,
மு. கு. ராமச்சந்திர ராஜா, பி. ஏ , எம். எட்.,

செயலர்கள் : கவிஞர் பூ. அ. துரை ராஜா
,, கொ. மா. கோதண்டம்

பொருளர் : கே. ஆர். வேலாயுத ராஜா

மலர்க்குழு

பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா
பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா, பி. எஸ்ஸி.,
பி. கே. ராமசாமி ராஜா
கவிஞர் கொ. மா. கோதண்டம்
கவிஞர் பூ. அ. துரை ராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம், இராஜபாளையம்.

வெள்ளிவிழாச் செயற்குழு.

தலைவர்

திரு P. R. ராமசுப்பிரமணிய ராஜா, B. Sc.,
(சேர்மன், ராம்கோ தொழில் நிறுவனங்கள்)

துணைத் தலைவர்கள்

திரு N. A. ராமச்சந்திர ராஜா, தலைவர், ராஜுக்கள் கல்லூரி (ஜானகிராம் மில்ஸ் லிமிடெட்)
,, P. K. ராமசாமி ராஜா, (சேர்மன், ஸ்ரீராம் தொழில் நிறுவனங்கள்)
,, T. R. தினகரன், (ஸ்ரீ சண்முகர் மில்ஸ்)
,, M. S. D. சந்திரசேகர ராஜா, (பாரதி காட்டன் மில்ஸ்)
,, Dr. G. வெங்கடேசன், (முதல்வர் ராஜுக்கள் கல்லூரி)
,, M. பொன்னையா, (தலைவர், திருவள்ளுவர் மன்றம்)

பொதுச் செயலர்

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

பொருளர்

திரு P. R. விஜயராகவ ராஜா

செயலர்கள்

வித்துவான் ந. கி. நாராயண ராஜா, M. A.,
கவிஞர் கொ. மா. கோதண்டம்
கவிஞர் பூ. அ. துரை ராஜா
N. S. முத்துகிருஷ்ண ராஜா
குன்றக்குடி பெரிய பெருமாள்
T. A. ஈஸ்வர ராஜா
கொ. ச. பலராமன்
K. R. வேலாயுத ராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சமர்ப்பணம்

இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும்
ஈழ நாட்டின் விடுதலைக்கும்
முந்திய மரபைக் காப்பாற்ற
முயன்றும் இதயக் குருதியினைச்
சிந்திய வீரர் தமக்காகச்
சிறந்த அமைதி தனைவேட்கும்
செந்தமிழ் வெள்ளி மலரிதனைச்
சிந்தித் தர்ப்பித் தஞ்சலிப்போம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வெள்ளி விழா

14—12—83 ● 17—12—83



துவக்க விழா



பேராசிரியர் கு. ராஜவேலு, நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார், சுந்தரசுவாமிகள் பி. கே. ராமசாமி ராஜா, கொடைவள்ளல் முன்னாள் ஆந்திர மந்திரி சி. எஸ். ஆர். வி பி. மூர்த்தி ராஜா, பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பன்மொழிக் கவியரங்கம்



முன்வரிசை: டாக்டர் குலகர்ணி (கன்னடம்) நீல. பத்மநாபன் (தமிழ்) டாக்டர் T. கோடீஸ்வர ராவ் (தெலுங்கு) பன்மொழிப்புலவர் (தலைவர்) கவிஞர் மா. வரதராசன் (தமிழ்) ரா. பொன்ராசன், குன்றக்குடி பெரிய பெருமாள் (செயலர்)

பின்வரிசை: ஸ்ரீதரன் (இந்தி) பி. ஸ்ரீனிவாசாசார்யுலு (தெலுங்கு) பூ. அ. துரை ராஜா (தமிழ்) க. சுப்பிரமணியன் (ஆங்கிலம்) மந்தென சூரியநாராயண ராஜு (தெலுங்கு)

இந்திய இலக்கிய உறவுக் கருத்தரங்கம் மொழிபெயர்ப்பரங்கம்

கோமதி சுவாமிநாதன், பி. வி. ஸ்ரீனிவாசாசார்யுலு, இராம. கோபிநாதன், ஏ. வி சுப்பிரமணியன் (தலைவர்) மணவை. முஸ்தபா (கூரியர் தமிழ்ப்பதிப்பாசிரியர்) சௌரிராஜன். பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, பூ. அ. துரை ராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பட்டி மண்டபம்



வீ. ஜனார்த்தனம், வித்வான் க கொன்றையாண்டி, வித்வான் ந கி. நாராயண ராஜா. (மன்ற துணைத்தலைவர்) பேராசிரியை ச. கார்த்தியாயினி, பேராசிரியர் கு. ராஜவேலு (நடுவர்)

மணிமேகலை விழா



சிலம்பொலி செல்லப்பன் (இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்கம்) பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் குன்றக்குடி அடிகளார், வித்வான் ல. சண்முகசுந்தரம், பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, திரு பி, ஆர். ராமசுப்பிரமணிய ராஜா (புரவலர்) வாழ்த்துரை வழங்குகிறார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வெள்ளிவிழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த 'ஆதர்ஸ் கில்டு ஆப் இந்தியா' சென்னை சாப்டர் உறுப்பினர்கள்



அமர்வு :- அனுராதாரமணன், பி.வி. ஸ்ரீனிவாசாசார்யுலு, மகரம், எஸ்.வி.எஸ், கு. ராஜவேலு
நா. பார்த்தசாரதி, நீல. பத்மநாபன், பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா.

பின்புறம் :- அழ. வள்ளியப்பா, சௌரிராஜன், குன்றக்குடி பெரியபெருமாள், கொ. ச. பலராமன்
ருத்ர - துளசிதாஸ் கோமதிசுவாமிநாதன், பூ. அ. துரைராஜா,
கொ. மா. கோதண்டம், கொ. ரா. வேலாயுதராஜா, தோப்பூர் திருவேங்கடம்.

கூட்டத்தில் மகளிர்கள்



CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பதினெட்டாவது ஆண்டுவிழா

10-6-76 - 13-6-76

அன்னதான விழா



பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, தா. பாண்டியன், பி. கே. ராமசாமி ராஜா, திருமதி. வி. ஜெயலட்சுமி, எம். பி., அன்னதான விழாவில் உரையாற்றுகிறார்.

மணிமேகலை விழா 11–6–76

திரு பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா (விழாத்தலைவர்), தீபம் நா. பார்த்தசாரதி (மலர் வெளியிடுபவர்) எஸ். பொன்ராஜ் (மலர் பெறுபவர்), மு. கு. ஜகந்நாத ராஜா, பேராசிரியர் அ. ச. ஞான சம்பந்தம் எம் ஏ., (சிறப்புரை)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கவியரங்கம் 12–6–76



வாகீச கலாநிதி, கி. வா. ஜகந்நாதன், கொ. மா. கோதண்டம், வை. பூ. சோமசுந்தரம், பூ. அ. துரை ராஜா, ஆதி. சீனிவாசன், என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா, கொ. ரா வேலாயுதம், மு. கு. ஜகந்நாத ராஜா.

இருபத்தொன்றுவது ஆண்டுவிழா
மணிமேகலைவிழா 10-6-79



பேராசிரியர் மு. அருணாசலம், வித்வான் ல. சண்முகசுந்தரம், பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, கம்பன் அடிப்பொடி சா. கணேசன்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.



டாக்டர் V. சந்திரசேகர் கலைநிகழ்ச்சி 10–6–76

பண்டிதநேரு வேடத்தில்
V. சந்திரசேகர் (மோனே ஆக்யுஸ்)
பூ அ. துரைராஜா (செயலர்)
மகள் பிரபாவதி

கதகளி 10–6–79

கேரள கலா விலாசத்தாரின்
'நளசரிதம்' கதகளி

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு



பரிசளிப்பவர் : டாக்டர் க. வெங்கடேசன், முதல்வர் ராஜுக்கள் கல்லூரி இராஜபாளையம்.
பி. கே. ராமசாமிராஜா (தலைவர்) குன்றக்குடி பெரியபெருமாள் (செயலர்)
கொ. மா. கோதண்டம் (பொதுச் செயலர்)

பொது அறிவுத் தேர்வு

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கண்ட் (GUND) அவர்களும் திரு P. கோபால் அவர்களும் மன்றத்துடன் இணைந்து மாணவர்களுக்கு நடத்திய பொது அறிவுத் தேர்வு

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஆய்வரங்கம் 9—6—79



வித்துவான் ந. கி. நாராயணராஜா, பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா (ஆய்வுரை) புலவர்மணி இரா. இளங்குமரன் (தலைவர்) கொ. மா. கோதண்டம், கே டி. கே. தங்கமணி பார்-அட்-லா ஆய்வுரை வழங்குகிறார்.

சிறப்புரை 1—12—74



எஸ். எஸ். முத்துகிருஷ்ண ராஜா (செயலர்) பூ. அ. அன்னமராஜா (விழாத் தலைவர்) ந. கி. நாராயணராஜா, மு. கு. ஜகந்நாத ராஜா, குமரி அனந்தன் 'இலக்கிய இன்பம்' குறித்து சிறப்புரை ஆற்றுகிறார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust

ஆய்வுரை 29—1—75



பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜா, வித்வான் ந. கி. நாராயணராஜா, வரதராஜுலு நாயுடு. கம்பன் அடிப்பொடி சா. கணேசன் 'கம்பன் என்றொரு மானுடன்' எனும் பொருளில் ஆய்வுரை வழங்குகிறார்.

இருபத்து நான்காவது ஆண்டுவிழா 24-7-82
வழக்காடு மன்றம்



புரவலர் திரு. பி. ஆர். ராமசுப்பிரமனிய ராஜா (விழாத்தலைவர்) திருக்குறளார் வீ. முனுசாமி (நடுவர்)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பரிசும் பாராட்டும் 16—1—84



தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடமிருந்து தமிழ் வளர்ச்சி இயக்கப்பரிசு 'காதாசப்தசதி' எனும் நூலுக்காக, மு. கு. ஜகந்நாத ராஜா அவர்கள் பெறுகிறார். நாவலர் நெடுஞ்செழியன் (அமைச்சர்) அருகிலுள்ளார்.



24--7--82

கவிஞர் கொ. மா. கோதண்டம் - ஆரண்ய காண்டம், எனும் நூல் மத்திய அரசின் பரிசு பெற்றதற்காகப் பாராட்டி பி. கே. ராமசாமி ராஜா பொன்னாடை போர்த்துகிறார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம் - தெலுங்கு வித்யாலயம் தெலுங்கில் 'ராஜபாளையம் ராஜ கவுல யட்ச கானமுலு' நூல் வெளியீட்டு விழா 18–7–81



அமர்வு : டாக்டர் பி. வெங்கட் ராஜு (தெலுங்கு துறைத்தலைவர் தந்துலூரி நாராயண ராஜு கல்லூரி, பீமவரம் ஆந்திரா) கவியோகி. சுத்தானந்த பாரதி, டி கே. ராஜு கே. எஸ். கோதண்ட ராமையா (முன்னாள் எம். எல். ஏ. ஹோசூர்) என். ராமபத்ர ராஜு (முன்னாள் எம். எல். ஏ. அமலாபுரம் ஆந்திரா) கே. ஏ. ஏ. ராஜா (முன்னாள் அருணாசல பிரதேஷ் லெப்டினென்ட் கவர்னர்) ஆர். வி. எஸ். ராஜு (அமலாபுரம்) என். ஏ. ராமச்சந்திர ராஜா (தலைவர் ராஜுக்கள் கல்லூரி) பன்மொழிப்புலவர் மு கு. ஜகந்நாத ராஜா

நிற்பவர்கள் : கவிஞர் பொன்ராசன், குன்றக்குடி பெரியபெருமாள், பி. வி வெங்கடரமணன் பூ. அ. துரை ராஜா, கொ. ரா. வேலாயுத ராஜா, என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா, மு. கு. ராமச்சந்திர ராஜா. பி. ஏ. பி. டி. எம்.எட் கொ. மா. கோதண்டம் ஏ. கே. பாப்புராஜா (காந்தி கலை மன்ற துணைநூலகர்) வித்வான் ந கி. நாராயண ராஜா எம். ஏ.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தெலுங்கு வித்யாலயம் - தெலுங்கு தீபம் நூல் வெளியீட்டு விழா 15-9-76



பூ. அ. துரை ராஜா, கொ. மா. கோதண்டம், ந. சி. நாராயண ராஜா, V. ராஜேந்திரன் (மதுரை), மு. கு. ஜகந்நாத ராஜா, பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா, டி. கோதண்ட ராமையா, சாது சினராமகிருஷ்ண பந்துலு (நெல்லை). டாக்டர். கிருஷ்ண ராஜா என். எஸ். முத்து

வழக்காடு மன்றம் 18–7–81



பேராசிரியர் தி. ராச கோபாலன், கவி யோகி சுத்தானந்த பாரதியார். பேராசிரியர் பா. நமசிவாயம் (நடுவர்), பி. கே. ராமசாமி ராஜா (தலைவர்), செஞ்சொற் செல்வி காந்திமதி

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம் - செயற்குழுவினர்



அமர்வு : பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா (தலைவர்) கவிஞர் மந்தென சூரிய நாராயண ராஜு (அமலாபுரம் ஆந்திரா)

பின்புறம் : குன்றக்குடி பெரிய பெருமாள் (செயலர்), என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா (செயலர்), பூ. அ. துரை ராஜா (செயலர்), கொ. ச. பலராமன் (செயலர்) கொ. மா கோதண்டம் (பொதுச்செயலர்), டி. ஏ. ஈஸ்வர ராஜா (பொருளர்)

கூட்டத்தில் ஆடவர் பகுதி



CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஸ்ரீ கே. எஸ். ரெங்கசாமிராஜா நினைவுவிழா
தென்மொழிகளில் 'இராமாயணம்' கருத்தரங்கு 2-12-78

அமர்வு: கே. பி. ஜெயராம்ராஜா, செங்கோட்டை வீ. ஜனார்த்தனன் (மலையாளம்) பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் (தமிழ்) பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாதராஜா (கருத்தரங்கத் தலைவர்) டாக்டர் சல்லாராதாகிருஷ்ணசர்மா (தெலுங்கு) டாக்டர் டி. சித்தலிங்கையா (கன்னடம்) கே. எஸ். ஆர். ஸ்ரீரெங்கராஜா பி. ஏ.

பின்புறம்: பூ. அ. துரைராஜா, டி. ஏ. ஈஸ்வரராஜா, ந. கி, நாராயணராஜா, கொ. ரா. வேலாயுதராஜா, என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா, கொ. மா. கோதண்டம், குன்றக்குடி பெரியபெருமாள் கா. மாரிமுத்து.

காந்திஜி நூற்றுண்டுவிழா காந்தீய தொடர் சொற்பொழிவுகள்
10-10-69 -- 17-10-69

பேராசிரியர் நா வானமாமலை மு கு. ஜகந்நாதராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரை
4-1-81 - 10-1-81

மாநாட்டு கருத்தரங்கில் ருஷ்ய, இலங்கைப்பிரதிநிதிகளுடன் எடுத்தபடம் பெத்ருணிச்சோவா (ருஷ்யா) டொமினிக்ஜீவா (இலங்கை) வுடன் மன்றத்தினர்

பிரதமர் இந்திராகாந்தியுடன் ஆதர்ஸ் கில்டு ஆப் இந்தியா - இராஜபாளையம் உறுப்பினர்கள் 11-2-84



நிற்பவர்கள் : எம். ராஜாலிங்கராஜா (டெல்லி) பிரதமர் இந்திராகாந்தி ஜி. கருப்பையாமூப்பனர்
அமர்வு : மு. சிவம், கொ. மா. கோதண்டம், செ. ஞானன் பூ அ. துரைராஜா, மு. கு. ஜகந்நாத ராஜா, கொ. ச. பலராமன்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

திரு பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள்
சென்னை மாநில முதல்வர்
முன்னாள் ஒரிசா மாநில ஆளுநர்
காந்தி கலைமன்ற நிறுவனர்
(1898 — 1957)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

திரு பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா
சேர்மன் : ராம்கோ குரூப் இண்டஸ்ட்ரீஸ்
புரவலர் : மணிமேகலை மன்றம்
மேனேஜிங் டிரஸ்டி - காந்தி கலைமன்றம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா
தலைவர் : மணிமேகலை மன்றம்
தலைவர் : தெலுங்கு வித்யாலயம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.



பி. கே. ராமசாமி ராஜா

சேர்மன் : ஸ்ரீராம் குரூப் இண்டஸ்ட்ரீஸ்

புரவலர் : தெலுங்கு வித்யாலயம்

டாக்டர் கே. அழக ராஜா, எம்.எஸ்.சி.

துணைத்தலைவர் : தெலுங்கு வித்யாலயம்



மு. கு. ராமச்சந்திர ராஜா,

பி.ஏ., எம்.எட்.,

துணைத்தலைவர் : தெலுங்கு வித்யாலயம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கவிஞர் கொ. மா. கோதண்டம்
பொதுச் செயலர் :
மணிமேகலை மன்றம்



வித்வான் ந. கி. நாராயண ராஜா M.A.,
துணைத் தலைவர்:
மணிமேகலை மன்றம்

கவிஞர் பூ. அ. துரை ராஜா
செயலர் :
மணிமேகலை மன்றம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.



கவிஞர் கொ. ச. பலராமன்

செயலர் : மணிமேகலை மன்றம்



கவிஞர் கொ. ரா. வேலாயுதராஜா

பொருளர் : மணிமேகலை மன்றம்



தா. அ. ஈஸ்வர ராஜா

செயலர் : மணிமேகலை மன்றம்

என். எஸ். முத்துக்கிருஷ்ண ராஜா

செயலர் : மணிமேகலை மன்றம்



குன்றக்குடி பெரிய பெருமாள்

செயலர் : மணிமேகலை மன்றம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை மன்றம்

தமிழகத்தின் சிறந்த இலக்கிய மன்றங்களில் ஒன்றாகவும் மணிமேகலை காவியத்தின் பெயரில் அமைந்த ஒரே மன்றமாகவும் அமைந்த இராஜபாளையம் மணிமேகலை மன்றம் 14—4—59 தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜாவால் நிறுவப்பட்டது. அதன் தலைவராக அவர் அமைந்து இயக்கி வரும் இம்மன்றத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு விழா 14—12—83 17—12—83ல் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மன்றத்தின் இருபத்தைந்தாண்டு கால சரித்திரத்தில் எத்துணையோ தமிழ் அறிஞர்கள் கவிஞர்கள், சிந்தனையாளர்கள் பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். சிறப்பு மிக்க பல நிகழ்ச்சிகள் தேசீய ஒருமைப்பாட்டு நோக்கிலும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் நடத்தப் பட்டுள்ளன. பட்டிமண்டபங்கள், வழக்காடுமன்றங்கள் ஆய்வரங்குகள் கருத்தரங்குகள், நூல் வெளியீட்டுவிழாக்கள், பாராட்டுவிழாக்கள், சிறப்புரைகள், தொடர்சொற்பொழிவுகள் முதலிய பல அரிய நிகழ்ச்சிகள் நடத்தி இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்ககரமான பணி செய்துள்ளது பதினெட்டாவது ஆண்டுவிழா மலர் வெளியிடப்பட்டது. இவ்விரு மலர்களிலும் மணிமேகலை குறித்த பல ஆய்வுத்தகவல்கள் அரிதின் முயன்று சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன

மொழி, இலக்கியப் பேச்சுப் பயிற்சி, கவிதைப் பயிற்சி முதலியன அவ்வப்போது நடத்தப்பட்டுள்ளன. மணிமேகலை மன்றத்தின் கிளைகளான தெலுங்கு வித்யாலயம் மூலம் தெலுங்கு மொழிப் பயிற்சியும், திருக்குறள் சிறார் பயிற்சிக்கழகம் மூலம் திருக்குறட் பயிற்சியும் நடத்தப் பட்டன இவ்விரு கிளைகளும் சிறப்புடன் இயங்கி வருகின்றன.

மணிமேகலை மன்றம் - தூயநல்லிலக்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு மரபிலக்கியமும், புத்திலக்கியமும் வளரும் வகையிலும் தேசீய ஒருமைப்பாடு மானுடநேயம், உலக ஒருமைப்பாடு என்னும் லட்சியங்களைப் பேணும் வகையிலும் தொண்டாற்றி வருகிறது.

நோக்கம்

மானுட குல இதயங்களை இணைவிப்பதற்கு இலக்கியம் ஒரு பாலமாக அமைந்துள்ளது. இலக்கியத்தின் மூலமாக மனித சமுதாயம், நன்னெறியில் வாழ்ந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் லட்சியங்களைக் கடைப்பிடித்து மானுடநேயமும், உலகு தழுவிய விரிந்த கண்ணோட்டமும் கொண்டு தேசீய ஒருமைப் பாட்டுணர்வோடு இந்திய நாடு முன்னேற வேண்டும் என்ற நோக்கோடு மணிமேகலை மன்றம் இயங்கி வருகிறது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

உலகின் பசிப்பிணி நீங்க வேண்டும் என்ற லட்சியத்தை மையப்படுத்தி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட 'மணிமேகலை' நூலின் அறச்செய்திகளை தமிழகமும் இந்திய நாடும் நன்குணரப் பாடுபடுவதும், தமிழ் இலக்கியங்கள் பிற மொழிகளிலும், பிற மொழி இலக்கியங்கள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு நூல் வெளியீடுகள் செய்து இலக்கிய உறவுகளை வளர்ப்பதும் இம்மன்றத்தின் தலையாய பணிகள் ஆகும்.

நல் இலக்கியச் சூழலினைக் காத்தும், மரபிலக்கியத்தின் மாண்பினைப்புரிந்து கொண்டும், புத்திலக்கியப் போக்குகட்கு வரவேற்பளித்தும் நல்லிலக்கியச் சூழலை வளர்ப்பதும் இம் மன்றத்தின் பணியாகும்.

கருத்துச் சுதந்திரமுடன் முரண்பட்ட கருத்தோட்டங்களை அறிமுகப்படுத்தும் களனாகவும் இலக்கிய தத்துவக் கருத்தோட்டங்களை மக்கள் மன்றம் சுவைத்தின்புறவும், வாழ்நெறியில் கடைப்பிடிக்கவும் தூண்டுதலாக அமையும் அரங்கமாகவும் இம்மன்றம் செயல்படும்.

இலக்கியத் துறைகளில் படைப்பாற்றலை மிகுவிக்கும் ஊக்கமும் பயிற்சியும் தந்து, மொழிப் பயிற்சிகள் தந்து, நூல்வெளியீடுகள் செய்து மொழி வளத்துக்கும் இம் மன்றம் பாடுபடும்.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கட்குப் பரிசளித்தல், பல்வேறு மொழிகளிலுள்ள உயர்ந்த இலக்கியப்படைப்புகளை சேகரித்து நூலகம் அமைத்தல் முதலிய சீரிய பணிகள் இம் மன்றத்தின் மூலம் நடைபெறும் பல்வேறு இலக்கிய அமைப்புகளோடு தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்து, இலக்கிய வளத்துக்கு உரமூட்டும் பணிகளில் இம்மன்றமும் பங்கு கொண்டு பணிபுரியும்.

தொடர் சொற்பொழிவுகள்

1 காந்தீயத் தொடர் சொற்பொழிவுகள் (16 – 10 – 69 17—10 – 69)
2 சங்க இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் (21 – 4 – 67 28 – 4 – 67)
3 இந்தியத் தத்துவ ஞானம் (21 – 4 84 23 – 4 – 84)

சிறப்பு நிகழ்ச்சிகள்

14 – 1 – 62	மகாகவி பூதலபட்டு ஸ்ரீராமுலு ரெட்டி அவர்கள்
22 – 4 – 62	திரு கவிராஜபண்டித ஜகவீரபாண்டியனார் அவர்களால் 'நமதுநிலைமை' சிறப்புரை
17 – 5 – 65	பேராசிரியர் கோ ரா (ஆந்திரா) அவர்கள் கருத்துரை மன்றம்
10 – 7 – 65	கவியோகி சுத்தானந்த பாரதியாரின் "மணிமேகலை" சிறப்புரை
16 – 2 – 66	கிருபானந்தவாரியார் "சிறப்புரை"
20 – 3 – 66	பேராசிரியர் அ சீனிவாசராகவன் M A., அவர்கள் தலைமையில் "இதிகாசப் பேரவை
11 – 12 – 66	கே. டி. கே. தங்கமணி M. A, பார் அட்லா 'சிறப்புரை' "மணிமேகலை"
24 – 3 – 68	பன்மொழிப்புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார் "தொல்காப்பிய இருகூத்திர விளக்கம் பரிசளிப்புவிழா
30 – 1 – 72	ஜீவபந்து T. S. ஸ்ரீபால் "நல்லறம்"
29 – 7 – 73	சிலம்பொலி செல்லப்பன் "தேனில் ஊறிய செந்தமிழ்"
28 – 1 – 73	நடிப்பிசைப் புலவர் கீரன் "வாலிமோட்சம்"

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

1—12—74	குமரி அனந்தன்	''இலக்கிய இன்பம்''
26—1—75	தீபம் நா. பார்த்தசாரதி	''பாரதி''
29—1—75	கம்பன் அடிப்பொடி சா. கணேசன்	''கம்பன்''
16—11—75	என். கிரிதாரி பிரசாத்	''வள்ளலார்''
27—12—75	தவத்திரு குன்றக்குடி அடிகளார்	''கருத்தரங்கு''
16—1—76	பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன்	
	சோ. சத்தியசீலன் அ. வ. ராசகோபாலன்	பட்டி மண்டபம்
14—8—77	பொது அறிவுத்தேர்வு - பரிசளிப்பு விழா	

ஆண்டு விழாக்கள்

பத்தாவது ஆண்டு நிறைவுவிழா 1—6—69 2—6—69

''குறள் ஆய்வுரை'' திருக்குறள் மூலம் வெளியீடு

பட்டிமண்டபம் : சாத்தனார் படைப்பில் சிறந்து விளங்குவது மணிமேகலையா? ஆபுத்திரனா?

நடுவர் : நா. பாலுசாமி M. A.,

சிறப்புரை : தமிழ்க்கடல் ராய. சொ. (கம்பராமாயணம்)

பதினெட்டாவது ஆண்டுவிழா 10—6—76 13—6—76

அன்னதான விழா : திருமதி V. ஜெயலட்சுமி M. P.,

உரை : பாண்டியன் M. A., B. L., '' உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ''

டாக்டர் எஸ். பாலசந்திரன் M. A., ''சாத்தனாரும் வள்ளலாரும்''

கலையரங்கம் : டாக்டர் V. சந்திர சேகரம் (ஆந்திரா) (மோனோ ஆக்டிங்)

மணிமேகலை விழா : பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், தீபம் நா. பார்த்தசாரதி

பட்டிமண்டபம் : நடுவர்: அ. ச. ஞானசம்பந்தம், இராமன் பிரிவில் பெரிதும் நைந்தவர் தசரதனா? பரதனா? சீதையா?

Dr. தமிழண்ணல் M. A - மா. பழனிச்சாமி M. A - சாலமன்பாப்பையா M. A.

கருத்தரங்கம் — காவியங்கள்

கம்பராமாயணம் — அ. ச. ஞானசம்பந்தம் மணிமேகலை — வி. ஜனார்த்தனம்

சிலப்பதிகாரம் — தமிழண்ணல்

கவியரங்கம் — தலைவர்: வாகீசகலாநிதி - கி. வா. ஜகந்நாதன்

ஆய்வரங்கம் — தலைவர்: பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

வழக்காடுமன்றம் — நடுவர்: கணசிற்சபேசன் M. A.

பொருள்: கைகேயி குற்றவாளி

திருமதி உமையாள்முத்து திருமதி. இரா. காந்திமதி

பத்தொன்பதாவது ஆண்டுவிழா 3—6—77 5—6—77

கவியரங்கம் : தலைவர்: அரு நாகப்பன்

பட்டிமண்டபம் : நடுவர் : டாக்டர். எஸ் ராமகிருஷ்ணன் M. A.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நூல் வெளியீடு : மு. கு. ஜகந்நாத ராஜாவின் 'தரிசனம்'
கொ. மா. கோதண்டத்தின் 'சின்னச்சின்ன அரும்புகள்'
கருத்தரங்கம் : திரு சுகி. சிவம் B. A., B. L.,
ஆய்வரங்கம் . பன்மொழிப் புலவர் மு கு. ஜகந்நாத ராஜா
வழக்காடுமன்றம் : பேராசிரியர் பா. நமசிவாயம் M. A, இரா. காந்திமதி
(கர்ணன் குற்றவாளி) நாஞ்சில் நெடுமாறன் M. A.,

இருபதாவது ஆண்டுவிழா 20—5—78 22—5—78

கவியரங்கம் : தலைவர் : பெரி. சிவனடியான் எம் ஏ, கவிஞர் அரங்க சீனிவாசன்
பட்டிமண்டபம் : நடுவர் ; மு. கு. ஜகந்நாத ராஜா
இலங்கைப் பாத்திரப் படைப்பில் தனிச்சிறப்புற்றிலங்குவது
இராவணனா? கும்பகருணனா? வீடணனா?
வி. ஜனார்த்தனம், கு. துரைராஜ், நாஞ்சில் நெடுமாறன்.
மேல்முறையீட்டுப் பட்டிமண்டபம் :
நடுவர்கள் : பேராசிரியர் இரா ராதாகிருஷ்ணன், பா. நமசிவாயம்.
கருத்தரங்கம் : கவிஞர் எஸ். கே ராமராசன்
திரு ப. யு. அய்யூப் 'மேகலையும் குறளும்'
திரு மு. இராஜரத்தினம் 'மேகலையும் சங்க இலக்கியமும்'
திரு ஆ. ஜகந்நாதன் 'மேகலையும் சிலம்பும்'
தமிழ்நாவல் நூற்றாண்டு விழா : நீல. பத்மநாபன், ஜயந்தன்
மணிமேகலை விழா ; தலைவர் : ம. பொ. சிவஞானம் (தமிழக மேலவைத்தலைவர்)
பெ. நா. அப்புசாமி பி. ஏ., பி, எல்., ஆபிரகாம் அருளப்பன்

இருபத்தோராவது ஆண்டு விழா 8—6—79 10—6—79

கவியரங்கம் : கவிஞர் கே. சி. எஸ். அருணாசலம்
கருத்தரங்கம் : மு. ரா. கந்தசாமி கவிராயர் கே. ஆர். வாசுதேவன் (கதிர்)
மது. ச. விமலானந்தம் எம். எஸ். நாடார்
ஆய்வரங்கம் : இரா. இளங்குமரன் கே. டி. கே, தங்கமணி
பாராட்டுவிழா : தலைவர்: ப. லெட்சுமணன் (இலக்கிய சிந்தனை)
பாராட்டு பெறுபவர் : சாஹித்ய அகாடமி விருது பெற்ற வல்லிக்கண்ணன்
பொன்னாடை போர்த்தல் : பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா
பாராட்டுரை : பரிணாமன், நா. வானமாமலை, ஜே. எம். சாலி (ஆனந்த விகடன்),
தீப. நடராஜன்
மணிமேகலை விழா : தலைவர் : கம்பன் அடிப்பொடி சா. கணேசன்
பேரறிஞர் மு. அருணாசலம் வித்துவான் ல. சண்முகசுந்தரம்
கலையரங்கம் : கேரள கலா விலாசத்தாரின் நளசரிதம் கிராதம் கதகளி நிகழ்ச்சிகள்

★ ● ★

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வழக்காடுமன்றம் : நடுவர் பா. நமசிவாயம் அ. வ. ராசகோபாலன் (திருச்சி)
தி. இராசகோபாலன் (சென்னை)

வ. வே. சு. அய்யர் நூற்றுண்டுவிழா

தலைவர் : கவியோகி சுத்தானந்தபாரதியார், மா பா. குருசாமி எம். ஏ.
இலக்குமி நாரயணன் எம். ஏ.

மணிமேகலைவிழா : தலைவர் : கவியோகி சுத்தானந்தபாரதி

சிறப்புரை : பேரறிஞர் க. த. திருநாவுக்கரசு எம். ஏ.
(உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை)

இருபத்து நான்காவது ஆண்டுவிழா

23—7—82 25—7—82

கவியரங்கம் : தலைவர் மகாகவி அ. கு. ஆதித்தர் (சென்னை)

கருத்தரங்கம் : பாரதி நூற்றுண்டுவிழா

தலைவர் : டாக்டர் ச. வெங்கடேசன் (முதல்வர் ராஜாக்கள் கல்லூரி இராஜபாளையம்.)

சிறப்புரை : திரு டி. என். இராமச்சந்திரன் பி ஏ. பி எஸி. (தஞ்சை)

திரு பெ. சு. மணி (சென்னை)

திரு கு. துரைராஜ் எம். ஏ.

A பாராட்டரங்கம் : தலைவர் பி கே ராமசாமிராஜா

B நூல்வெளியீட்டுவிழா : இரா கதைப்பித்தனின் "எங்கள் சகாரா இங்கே இருக்கிறது" வெளியிடுபவர் பொன்னீலன்

வழக்காடுமன்றம் : நடுவர் வீ. முனிசாமி பி. ஏ. பி. எல்.
திருமதி இரா. காந்திமதி திருமதி ராசம்மரகதம்

ரசிகமணி டி. கே. சி, நூற்றுண்டுவிழா தலைவர் கி. ராஜேந்திரன் (ஆசிரியர் கல்கி)

சிறப்புரை : ல. சண்முகசுந்தரம், எஸ். வி. எஸ், D. திருமலை
கி. ராஜநாராயணன் தீப. நடராசன்

மணிமேகலைவிழா : தலைவர் : பன்மொழிப்புலவர் மு. கு ஜகந்நாதராஜா

சிறப்புரை : சிலம்பொலி செல்லப்பன்
இளம்பிறைமணிமாறன் வி. ஜனார்த்தனம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இருபத்திரண்டாவது ஆண்டுவிழா

25—7—80 27—7—80

கவியரங்கம் : தலைவர் அழ. வள்ளியப்பா
பட்டிமண்டபம் : நடுவர் பொ. ம. ராசாமணி பி ஏ பி டி.
நூல்வெளியீட்டு விழா : தலைவர் விக்கிரமன் (ஆசிரியர் அமுதசுரபி)
மு. கு ஜகந்நாதராஜாவின் வான்கலந்த வாசகங்கள்
கொ. ம. கோதண்டத்தின் மலையின் மைந்தர்கள்
வழக்காடுமன்றம் : நடுவர் திருமதி சரஸ்வதி ராமநாதன் M. A.

தென்மொழிகளில் இலக்கிய உறவுக் கருத்தரங்கம்

தலைவர் : டாக்டர் மருபூரு கோதண்டராமரெட்டி (நெல்லூர், ஆந்திரா)
தெலுங்கு : டாக்டர் தி. கோதண்டராமையா
கன்னடம் : டாக்டர் பா. ஸ்ரீனிவாசா
தமிழ் : சிலம்பொலி செல்லப்பன்
மலையாளம் : மு. கு ஜகந்நாதராஜா
மணிமேகலை விழா : தலைவர் : பெரும்புலவர் அ. நடேச முதலியார்
சிறப்புரை ; திரு ஏ. வி. சுப்பிரமணியம்

இருபத்து மூன்ருவது ஆண்டுவிழா 17—7—81 19—7—81

நூல்வெளியீட்டுவிழா டாக்டர் தமிழண்ணல் பேராசிரியர் தோதாத்திரி எம். ஏ
சொ. மா. கோதண்டத்தின் ''ஏலச்சிகரம்''
சி. வினாயகமூர்த்தியின் 'எரிநட்சத்திரம்''

கவியரங்கம் : தி. சு மலையப்பன் (புதுக்கோட்டை)
திருமதி ரோகிணி (கோவை)
திரு ரா. பொன்ராசன் (குன்றக்குடி)

தெலுங்கு காவியநூல் வெளியீட்டு விழா

தலைவர் : கே ஏ ஏ ராஜா (முன்னாள் அருணாசலபிரதேஷ் லெப்டினன்ட் கவர்னர்)
நூல் : இராஜபாளையத்தில் பதினேழாம் நூற்ருண்டிலிருந்த கொட்டுமுக்கல கிருஷ்ணமராஜு, சிங்கராஜு குமாரபெத்திராஜு ஆகியோரின் தெலுங்கு யட்சகான நூல்களை ஏட்டுச்சுவடியிலிருந்து பதிப்பித்த ''ராஜபாளையம் ராஜகவுல யட்சகானமுலு''
வெளியிடுபவர் : திரு என். ராமபத்ர ராஜு
(தலைவர் எஸ். கே. பி. ஆர். கல்லூரி அமலாபுரம் ஆந்திரா)
சிறப்புரை : டாக்டர் பி. வெங்கட்ராஜு எம். ஏ.
(தெலுங்கு மொழித்துறைத் தலைவர் டி என். ஆர் கல்லூரி பீமவரம் ஆந்திரா)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இருபத்தைந்தாவது ஆண்டு விழா

14—12—83 - 17—12—83

14—12—83 காலை துவக்க விழா

தலைவர்	;	நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார்
மலர் வெளியீடு	:	திரு எஸ். ஆர். வி. பி. மூர்த்திராஜு (முன்னாள் அமைச்சர் ஆந்திரா)
துவக்கஉரை	:	தவத்திரு சுந்தர சுவாமிகள்
வாழ்த்துக்கவிதை	:	கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்
வாழ்த்துரை	:	எஸ். வி. எஸ். (ஆதர்ஸ்கில்டு) விக்கிரமன் தீபம் நா. பார்த்தசாரதி
சிறப்புரை	:	திரு சுகி சிவம்

பன்மொழிக் கவியரங்கம்

14—12—83 மாலை

கலந்துகொண்டோர்	மொழி
கவிஞர் மா. வரதராசன்	தமிழ்
நீல, பத்மநாபன்	தமிழ்
பி; வி: குலகர்ணி	கன்னடம்
ம முத்தரசு	தமிழ்
ச. விவேகானந்தசாமி	இந்தி
ஸ்ரீதரன்	இந்தி
டாக்டர் டி: கோடீஸ்வரராவ்	தெலுங்கு
மந்தனசூரிய நாராயண ராஜு	தெலுங்கு
ஆர். சுப்பிரமணியம்	ஆங்கிலம்
ரா. பொன்ராசன்	தமிழ்
பூ. அ. துரை ராஜா	தமிழ்
மு. கு. ஜகந்நாத ராஜா	மலையாளம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இந்திய இலக்கிய உறவுக் கருத்தரங்கம்

15—12—83-காலை

(ஆதர்ஸ்கில்டு ஆப் இந்தியா - சென்னை கிளை ஆதரவில் நடந்தது)

கவிதை வளாகம் :

தலைவர் : டாக்டர் சி. ஆர். சர்மா
(தெலுங்கு மொழித்துறைத்தலைவர் மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்)

பங்கேற்போர் : கு. ராஜவேலு M. A.
(தலைவர் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம்)
டாக்டர் கோடீஸ்வரராவ்
அழ. வள்ளியப்பா
எஸ். வி. எஸ்.
வ. இந்திரபவானி
தீபம் நா. பார்த்தசாரதி

உரைநடை நாவல் வளாகம்

16–12–83-காலை

தலைவர் : டாக்டர் க. வெங்கடேசன்

பங்கேற்போர் : மகரம் திருமதி அனுராதா ரமணன்
கொ. மா. கோதண்டம்
நீல. பத்மநாபன்

மொழிபெயர்ப்பு வளாகம்

17—12—83-காலை

தலைவர் : ஏ. வி. சுப்பிரமணியம்

பங்கேற்போர் : பி. வி. ஸ்ரீனிவாசாசார்யுலு
ருத்ர - துளசிதாஸ்
மணவை முஸ்தபா
(ஆசிரியர்-கூரியர்) யுனெஸ்கோ)
மு. கு. ஜகந்நாத ராஜா
கோமதிசுவாமிநாதன்
சௌரிராஜன்
இராம. கோபிநாதன்
வி. ஜனார்த்தனம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வழக்காடு மன்றம்

15—12—83-மாலை

நடுவர் ; பேராசிரியர் பா. நமசிவாயம்

பொருள் : மணிமேகலை காவிய நோக்கில் இன்றைய மனிதன் குற்றவாளி

வழக்கு தொடுப்பவர் : பேராசிரியர் ஆ. ஜகந்நாதன்

வழக்கு மறுப்பவர் : சாலமன் பாப்பையா

பட்டி மண்டபம்

16—12–83-மாலை

நடுவர் : கு. ராஜவேலு

பொருள் : மனிதகுல மேம்பாட்டுக்கு பெரிதும் துணைபுரிவது

இலக்கியமா?	விஞ்ஞானமா?
வி. ஜனார்த்தனம்	நாஞ்சில் நெடுமாறன்
புலவர் ராசம் மரகதம்	குன்றக்குடி பெரியபெருமாள்
வித்வான் க. கொன்றையாண்டி	ந. செண்பகம்
ந. கி நாராயண ராஜா M. A.	க. வேம்புலு M. A.
கார்த்தியாயினி	மு. குருவம்மாள்

மணிமேகலை விழா

7–2–83-மாலை

தலைவர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்த்துரை : பி. ஆர். ராமசுப்பிரமணியராஜா

சிறப்புரைகள் : பேராசிரியர் அ. மு பரமசிவானந்தம் ''மணிமேகலை அறம்''
வித்துவான் ல. சண்முகசுந்தரம் ''மணிமேகலை திறம்''
சிலம்பொலி செல்லப்பன் ''மணிமேகலை வளம்''

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பாராட்டு விழாக்கள்

பாராட்டப் பெற்றவர்கள் :

13—3—74 திரு டாக்டர் எஸ் பாலசந்திரன் M. A.
9—6—79 சு. கொன்றையாண்டி ப, செல்வநாயகம் ம. முத்தரசு செங்கைராசன் M. A,
9—6—79 வல்லிக்கண்ணன்

நூல் வெளியீடு

மன்ற வெளியீடு:

திருக்குறள் (மூலம்)
இருசூத்திரவிளக்கம் - பூ. கு. குப்புசாமி ராஜா
குறள் ஆய்வுரை - பூ. கு. குப்புசாமி ராஜா
ராஜபாளையம் ராஜ கவுல யட்சகானமுலு (தெலுங்கு)
வான்கலந்த வாசகங்கள் (மு. கு. ஜகந்நாதராஜா)

மன்றத்தில் வெளியிட்டவை

தரிசனம் - மு. கு. ஜகந்நாதராஜா
மலையின்மைந்தர்கள் - கொ. மா. கோதண்டம்
ஏலச்சிகரம் - கொ. மா. கோதண்டம்
எ .நடச த்திரம் - சி. வினாயகமூர்த்தி
எங்கள் சஹாரா இங்கே இருக்கிறது - இரா. கதைப்பித்தன்
முடியாத முற்றுப்புள்ளி - கொ. ச. பலராமன்
சத்தியசோதனை - பூ. அ. துரை ராஜா
வசந்தம் - சிவானந்தம்

உரையாற்றிய அறிஞர்கள்

மேன்மைதங்கிய K. A. A. ராஜா (முன்னால் அருணாசல பிரதேச ஆளுநர்)
ராஜா சாகி சூரியநாராயணராஜு (ஆந்திர அமைச்சர்)
சி. அன்னாராவ்
டாக்டர் T. கோதண்டராமையா (தெலுங்குதுறைத் தலைவர் காமராஜர் பல்கலைக் கழகம்)
டாக்டர் G. அப்பாராவ் (தெலுங்கு துறை தலைவர் சென்னைப் பல்கலைக் கழகம்)
டாக்டர் சுப. அண்ணாமலை
அரசு நாராயணசாமி நாயுடு
மா. பழனிச்சாமி M. A.
V. மரிய அந்தோணி M A.
சரசுவதிராமநாதன்
இளம்பிறை மணிமாறன் M. A.
சே. சேவற்கொடியோன்
T. வெங்கடகிருஷ்ண அய்யங்கார்
பண்டித அ. சிவசுப்பிரமணியம்
அடிகளாசிரியன்
குமார அழகப்பன் M. A.
டாக்டர் சாலை இளந்திரையன் M A. (டெல்லி)
அ. சங்கரநாராயணன்
சேது ரகுநாதன்
T. S. கிரிபிரகாஷ் (தெலுங்கு மொழித்துறை)
தா. கு. சுப்பிரமணியம்
P. S. சின்னவெங்கட்ட ராஜா
மறை திருநாவுக்கரசு
மாறன்
கோ. சாரங்கபாணி (காரைக்கால்)
பெ. இராமையா (திருக்குறள் அட்டாவதானி)
தி. சி. பாலசுப்பிரமணியம் (திருக்குறள் தொண்டர்)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

''ஜனதா செம் வணங்குகிறது''

LIMENAPH CHEMICALS,
1/32, Annamaraja Nagar,
Sankarankovil Road,
RAJAPALAYAM - 626 117.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

''உலகின் பசிப்பிணி போக்குவதே உயர்ந்த நல்லறமாகும்''

ஸ்ரீ சாரதா அம்பிகா ஸ்டோர்ஸ்,

வெல்லம் வியாபாரம்,

36, நட்டுக்கால் ராஜா தெரு, இராஜபாளையம்.

S. N. M. திருப்பதி ராஜா,

வெல்லம் வியாபாரம்,

35, நட்டுக்கால் ராஜா தெரு, இராஜபாளையம்.

ஸ்ரீ கார்த்திகேயன் ஸ்டோர்ஸ்,

வெல்லம் வியாபாரம்,

35, நட்டுக்கால் ராஜா தெரு, இராஜபாளையம்.

With Best Compliments From

S. A. APPAL RAJA

Cloth Merchant

RAJAPALAYAM

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ சரவண கார்த்திகேயன்

லாரி சர்வீஸ்,

இராஜபாளையம்.

போன் : 2427

ஸ்ரீவில்லிபுத்தூர் - செங்கோட்டை

தினசரி ரெகுலர் சர்வீஸ்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சாத்தனார்

பன்மொழிப் புலவர் : மு. கு. ஜகந்நாத ராஜா

தமிழன்னை ஐம்பெருங் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, எனும் ஐந்து அணிகள் பூண்டு மிளர்கின்றாள். காலிற் சிலம்பும் காதில் குண்டலமும் கையில் வளை(யாபதி) யும் பூண்டு மார்பில் சிந்தாமணி பூண்டுள்ள அத்தாயின் இடையில் அணியுறுவது மணிமேகலையாகும்

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் எனும் பெரும் புலவராற் பாடப்பட்ட இக் காப்பியமும் இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரமும் இணைந்து இரட்டைக் காப்பியங்கள் என்று பெயர்பெறும் சிறப்புடையது

இளம்பூரணர் பேராசிரியர் தெய்வச் சிலையார் 'பரிமேலழகர்' நச்சினர்க்கினியர் அடியார்க்கு நல்லார் சமய திவாகரவாமன முனிவர் முதலிய பழம் பெரும் உரையாசிரியர்களும் இலக்கண விளக்கம் இலக்கணக் கொத்து உரையாசிரியர்களும் ஞானப்பிரகாசர் மயிலைநாதர் சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களும் விதந்தோதிய சிறப்புடைய பெருங்காவியம் மணிமேகலையாகும்.

''கொத்தார்குழல் மணிமேகலை நூல் நுட்பம் கொள்வதெங்ஙன்?'' என்று வேங்கைக் கோவையில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் மாதவிபெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே என்று அம்பிகாபதிக் கோவையாசிரியரும் பாராட்டியுள்ளனர் ஜி. யு. போப் போன்றோர் ஆங்கிலத்திலும் பூதலப்பட்டு ஸ்ரீராமுலுரெட்டி தெலுங்கிலும் மலையாளத்தில் ஜனார்த்தனம் பிள்ளையும் மொழிபெயர்த்துச் சிறப்பிக்கப்பட்ட இக்காவியம் ஜப்பானிய மொழியிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்நூலுக்கு ''மணிமேகலை துறவு'' என்பதே பெயர்.

இக் காப்பியத்தை தமிழ்தாத்தா மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் பரிசோதித்து குறிப்புரையுடன் 1898ல் வெளியிட்டு தமிழுலகுக்கு மாபெரும் தொண்டாற்றினார்கள் 1921ல் இரண்டாம் பதிப்பும் 1931ல் மூன்றாவது பதிப்பும் வெளியிட்டார்கள்.

சமுதாயச்சீர்கேடுகளைக் களைந்து, புதிய சிந்தனைகளை விதைத்து மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் மாபெரும்சிந்தனையாளர்களே மாகவிஞர்கள் ஆவர். ஒருத்திக்கு ஒருவன் ஒருவனுக்கு ஒருத்தி எனும் உயரிய கற்பொழுக்கத்தை வற்புறுத்திய மாகாவியம் ராமாயணம், மண்ணாசையும் மமதையும் ஒருசமுதாயத்தைப் பேரழிவில் கொண்டுய்க்கும் என்றும் கற்பின் பெயரில் பெண்மையை இழிவுபடுத்திக் கொடுமைப்படுத்துவது நீங்குதல் வேண்டும் என்ற நல்லறத்தைக்கூறவந்ததே மாபாரதம் சமுதாயத்தில் மலிந்துகிடந்த சாதிவேறு

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பாடு, பட்டினிக்கொடுமைகள், பெண்மையை இழிவு படுத்தும் பரத்தமை ஒழுக்கம் எனும் முப்பெரும் கொடுமைகளையும் நீக்க எழுந்த மாபெரும் காவியமே மணிமேகலையாகும்.

ஒருபுதிய சிந்தனையை தமிழ் மண்ணில் பதித்த புரட்சிக் கவிஞனே மணிமேகலையைப் படைத்த சீத்தலைச்சாத்தன் ஆவான். உலகிலேயே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே விஞ்ஞான நடப்பில் நோக்கில் சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றிச் சிந்தித்த முதற் கவிஞன் சீத்தலைச்சாத்தன் கிரேக்க நாட்டு மாபெரும் கவிஞன் ஹோமர் இலியட், ஒடிஸி எனும் இரு பெரும் காப்பியம் படைத்தான். வர்ஜில் எனும் இத்தாலியக் கவிஞன் ஏனியட் எனும் காவியம் படைத்தான். வடமொழியில் வால்மீகி இராமாயணமும் வியாசபாரதமும் பாகத மொழியில் குணாட்டியன் பிருகத்தையும் மாபெரும் இதிகாசங்களாக மிளிர்ந்தன.

கிரேக்க நாடகாசிரியர்கள் ஸோபாக்ளீஸ, ஈஸ்கிலஸ் அரிஸ்டோமனீஸ், வடமொழி நாடகாசிரியர்கள் பாசன் காளிதாசன் பவபூதி, திக்நாகர், ஸ்ரீஹர்ஷர், சூத்ரகர் ஆகியோரும் சரி, காவியங்கள் படைத்த பாரவி மாகன், பட்டபாணன் தண்டி பாகதமொழியில் பிரவரசேனனின் சேதுபந்தம், கௌடவதம் முதலியவை ஆயினும்சரிமேனாட்டில்தாந்தேயின் 'டிவைன் காமடி' மில்டனின் 'பாரடைஸ் லாஸ்ட்' பனியனின் 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் முதலியவை ஆயினும்சரி ஜெர்மானிய மாபெரும் கவிஞன் கதேயின் 'பாஸ்ட்' ஆயினும் சரி எல்லாக் கவிஞர்களுமே கற்பனையிற் சிறந்து விளங்கும் காதலும் வீரமும் குடும்ப உறவுச்சிக்கல்களும் ஆன்மீகக்கடைத்தேற்றமும் குறித்துச் சிந்தித்தார்களேயன்றி தம் கண்ணெதிரேயுள்ள சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் வறுமையைப் பற்றியும் பட்டினிக் கொடுமையைப் பற்றியும் சிந்தித்து யதார்த்தவாத நோக்கில் காவியம் படைக்கவில்லை.

முன்சொன்ன மாபெரும் கவிஞர்கள் சமுதாயத்தைப் பற்றியும் அதன்சீர்கேடுகளைப் பற்றியும், பட்டினிக் கொடுமையைப்பற்றியும் ஆங்காங்கே சிலகருத்துக்களை உயர்ந்த சிந்தனைகளைக் கூறியுள்ளனர். என்பது உண்மை தான். ஆனால் அதனையே மையப்படுத்தி காவியம் படைக்கவில்லை. அவர்களது காவியப் படைப்பின்நோக்கமானகற்பைப்பற்றியும்காதலைப்பற்றியும் அரசர்களின் வாழ்க்கையைப்பற்றியும்தான் காவியம் படைத்துள்ளனர் பக்தி, கடவுள்அருள்வேட்டல், ஆன்மபரிசுத்தம் அறநெறிக் கொள்கைகள் பற்றியும் அவர்கள் காவியம்நாடகங்கள் படைத்துள்ளனர். ஆனால் சமுதாயத்தில் நீங்காச்சாபமாகக் கிடக்கும் வறுமை, மிடிமை, பட்டினி இவற்றைப்பற்றிச் சிந்தித்து அதனை மையப்பொருளாக்கி காவியம் படைத்த ஒரேகவிஞன் சீத்தலைச்சாத்சாத்தன் ஒருவனே. இராண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்த சமுதாய லட்சியக் கவிஞன் சாத்தன்.

கவிஞர்கள் அழகுணர்ச்சிமிக்கவர்களாக புலமைத்திறனுடனும் கற்பனைவளமுடனும் இயற்கையின் எழிலைப்பற்றியும், இறைவனதருளைப்பற்றியும் உயர்குல நாயகர்களதுசரித்திரங்களைப்பற்றியும், வீரதீரசாகசங்கள், காதல், விரகம் முதலியவைப்பற்றியும் இலக்கியத்தில் பாடியுள்ளனர் இத்தகைய கவிதைகளே உலக இலக்கியத்தில் பெரும்பாலும் காணப்படுவன ஒருசில கவிஞர்கள் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் புதிய தத்துவச் சிந்தனைகளை மக்களிடையே பரப்புவதற்கும் இலக்கியத்தை சாதனமாகக் கருதிப் பாடியுள்ளனர்

இலக்கியத்திற்கு இரு நோக்குகள் உண்டு அழகுணர்ச்சியுடன் சுவை பயந்து பொழுது போக்குக்கும் மகிழ்ச்சிக்கும் உதவுவது ஒருநோக்கு. உயர்ந்த அறநெறிக்கருத்துக்களையும் உபதேசிப்பது ஒரு நோக்கு. இளங்கோ அடிகளின் நோக்கு முதல்வகையாகும் சாத்தனின் நோக்கு இரண்டாவது வகையாகும். முதல்வகை தேன்போன்றது இரண்டாவதுவகை தேன்பூசிய மருந்துபோன்றது. மணிமேகலைகாவியம் இரண்டாவது

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வகையைச் சேர்ந்தது. சாத்தன் வடமொழி, பாலி, பாகதம் முதலியமொழிகளைக் கற்றறிந்த பேறிஞர். சிறந்தமொழிபெயர்ப்பாளர். தத்துவ ஞானம் அறிந்தஞானி புலமைமிக்க கவிஞர் அரசியல் அறிஞர். சமுதாய மாற்றக்கருத்துக் களையுடையசிந்தனையாளர். அவர்காலத்தில் வேதமதம் (இந்துமதம்), சைவ, வைணவ பேதங்களுடன்இருந்தன. சாங்கியம். ஆசீவதம், சமணம்பவுத்தம்முதலியமதங்களும் இருந்தன. சாத்தன் பவுத்த மதத்தை தழுவியிருந்தார் எனினும் சமணமதப் பற்றுடைய இளங்கோவடிகள், பற்றுடைய வேதமதப்பற்றுடைய சேரன்செங்குட்டுவன் ஆகியோருடன் நட்புரிமைபூண்டு இருந்தார். இவர்களது நட்பு கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் மதித்துவாழும் சகிப்புத்தன்மைக்கு ஒரு உதாரணமாக விளங்குகிறது.

தனது தமையன் சேரன்செங்குட்டுவன் மனஅமைதியுடன் அரசாள வேண்டும் என்பதற்காக, தனது அரசுரிமையை துறந்து துறவறம் மேற்கொண்ட தியாகச்செம்மல் இளங்கோவடிகள் வஞ்சிமாநகரில் வாழ்ந்த அடிகளும், மாமன்னன் செங்குட்டுவனும் மதுரையில் கூல வாணிகம் (நவதானியவியாபாரம்) செய்து கொண்டு, பெரும்புலமை பெற்ற சிறப்பினரான சாத்தனாருடைய அறிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்து அதன்படி நடந்தனர். இம்மூவரில் சாத்தனார் வயதில் மூத்தவர் சாத்தனார் சொல்லிய கதையைத்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் காவியமாகப் படைத்தளித்தார். பத்தினிக் கடவுளுக்கு படிமம் அமைக்க செங்குட்டுவனுக்கு ஆலோசனை கூறியதும் சாத்தனாரேதான். சாத்தனார் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். இவரது பாடல்கள் நற்றிணை எனும்தொகை நூலில் மூன்றும், குறுந்தொகையில் ஒன்றும், அகநானூற்றில் ஐந்தும், புறநானூற்றில் ஒன்றும் உள்ளன. புறநானூற்றுப் பாடல் பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனைப்பற்றியது. இவர்பெயர் கூலவாணிகன் சாத்தன் எனவும் மதுரைச் சீத்தலைச்சாத்தன் எனவும், சாத்தன் எனவும், தண்டமிழ்ச் சாத்தன்எனவும் தண்டமிழாசான் சாத்தன் எனவும் நன்னூற்புலவன் எனவும் பாராட்டப்பட்டுள்ளன. சீத்தலை என்னும் ஊரில் பிறந்தவர் என்பது சிலர்கருத்து. பிறருடைய நூல்களிற்காணும் பிழைகளைக் கண்டதும் மனம் ஆற்றாது தமது தலையில் தாமே எழுத்தாணியாற் குத்திக் கொள்வார் என்றும் அதனால் அவரது தலை சீ(ழ்)ப்பிடித்துப் புண்ணாகி இருந்ததனால் சீத்தலை என்று அடைமொழியால் அழைக்கப் பட்டார் என்றும் ஒருகதை உண்டு திருவள்ளுவமாலையில் வரும் மருத்துவன் தாமோதரனார்.

''வள்ளுவர்முப்பாலால், தலைக்குத்து தீர்வு சாத்தற்கு என்று கூறியுள்ளதும், இயற்பெயர் சினைப்பெயர்''(தொல்காப்பியம்பெயரியல் சூத்திரம் 20) எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையில் ''சீத்தலைச்சாத்தன்'' என்று உதாரணங் காட்டியிருப்பதும் இக்கதையின் பழமையை உணர்த்தும். சிறந்த விமரிசகராக இவர் இருந்திருப்பார் என்பதை இக்கதை தெளிவுறுத்துகிறது. இவர் திருக்குறளில் மிகவும் ஈடுபட்டவர் என்பது மணிமேகலையில் வள்ளுவனை ''பொய்யில்புலவன்'' என்று பாராட்டுவதன் மூலம் உணரலாகும்.

சீத்தலைச்சாத்தனார் செய்த வியாபாரம் கூலவாணிகம் ஆகும். நவதானியங்களை விற்கும் கடைவைத்திருந்தவர் மதுரையில் அவர் இந்தவியாபாரம்செய்துவந்தார். தம்கடைக்கு வரும் மக்களையும் அவர்தம் வாழ்க்கைப்பிரச்சனைகளையும் நேரடியாக நன்குணர்ந்திருந்தார் அவரது வாணிகமே வயிற்றுப்பசியைப் போக்கும் உணவு தானிய வாணிகம்தான். ஆதலின் மக்களின் வயிற்றுப்பசிக் கொடுமையை நேரடியாகஅறிந்திருக்க வாய்ப்புகள் இருந்திருக்கின்றன அந்த அனுபவமே அவரை சமுதாயத்தின் பசிக்கொடுமையைப் பற்றிச் சிந்திக்கவும் அதற்கொரு தீர்வுகாணவும் தூண்டியது அன்றைய சமுதாயநிலையில் அவரால்பசிக்கொடுமையைநீக்குங்கள் என்று அறைகூவல் விடுக்கத்தான் முடிந்தது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஆதலினுல் 'அமுதசுரபி' எனும் கற்பனைபாத்திரத்தினை தனதுகதாபாத்திரங்களின் கையில் கொடுத்து ஆத்மதிருப்தி அடைந்தார் என்று சொல்ல வேண்டும். அவர் அன்னுளைய ஒடுக்கப்பட்ட தாழ்ந்தவர்களாக மதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களிடமும் பெண்களிடமும் பரிவுணர்ச்சி மிக்கவராக இருந்தார். மக்களிடையே கிடந்த மூட நம்பிக்கைகளையும் சுயநலத்தையும் கண்டு மனம் வெதும்பி அவர்களைச் சீர்திருத்தும் நோக்கோடு ஒரு தியாக சரித்திரத்தைக் காவியமாகப்படைக்க எண்ணினுர். அதன் விளைவே மணிமேகலை எனும் மாண்புடைய மாபெரும் காவியமாகும்.

ஒரு சமயத்தில் மிக உயர்ந்த நிலையில் போற்றப்படுபவர் துறவியேயாகும். மாமன்னர்கள் கூட துறவிகளை மதித்தனர். துறவிக்கு வேந்தனுந்துரும்பு என்றே கருதினர். அதே போல சமுதாயத்தில் மிகவும் இழிந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் பரத்தையர்தான் தீண்டத்தகாத பசுவின் புலால் உண்ணும் சண்டாளரைவிட பரத்தை மிக இழிந்தவள் எனறே அக்கால சமுதாயம் கருதியது. மேலும் பிறப்பால் அந்தணர் உயர்ந்தவர் என்றும், வருணாசிரம தருமம் உயர்ந்தது என்றும் கருதும் வேதமதம் செல்வாக்கோடு விளங்கிய காலம் அது.

சமண பவுத்த மதங்கள் இக் கருத்தை எதிர்த்து எல்லா மானிடரும் சமமே என்றும் உயிர்க்கொலை தீதென்றும் பிரசாரம் செய்து பரவிவந்தன. இந்தக் கால கட்டத்தில் பிறந்த சாத்தனுர் பரத்தமை ஒழுக்கத்தின் காரணமாக சமுதாயத்தில் பெண்மை அவலநிலைக்குள்ளாவதைக் கண்டு மனம் வெதும்பினுர். குலமகளிர்கள் கற்பொழுக்கத்துடன் வாழ வேண்டின் அவர்களை விடர்கள் நாடாதிருக்க பரத்தையர் என்ற ஒருசாதி ஒதுக்கப்பட்டு தனிச்சேரியில் இருக்க வேண்டும் என்று சமுதாயம் அமைத்திருந்தது.

இந்த அமைப்பு தூய்மைமிக்க அன்புடைய தாய்மைக்கும் பெண்மைக்கும் இழுக்காக அமைந்ததைக் கண்டு மனம்நொந்த சாத்தனுர் இவ்வமைப்பு முறையை நீக்கக்கருதினுர். பொருட்பெண்டிர் பொய்மை முயக்கத்தைக் கண்டித்து வள்ளுவர் கூறியிருப்பினும் அதனை தீவிரமாக மாற்ற வேண்டும் என்ற சிந்தனையைச் சாத்தன்தான் முதலில் கூறியவன் ஆவான்.

ஆதலின் தனது காவிய நாயகியை தாழ்ந்த பரத்தையர் குலத்திலிருந்து தேர்ந்தெடுத்து அவளை மிக உயர்ந்ததுறவி நிலைக்கும் தகுதியுடையள் என்று எடுத்துக் காட்டி பிறப்பால் உயர்வு தாழ்வுகூறும் பிற்போக்குத் தனத்தைச் சாடி பண்பினுல் யாரும் உயர்நிலை பெறமுடியும்என்று காட்டினுர். அதலபாதலத்தில் கிடந்த ஒரு பெண்ணைக் கண்டெடுத்து, இமயத்தின் உச்சியில் ஏற்றிவைத்து உலகம் பாராட்டும் உயர்வினை அடையச் செய்தார் இதுவே சாத்தன்செய்த பெரும்புரட்சியாகும்

சமுதாயத்தில் தனிமனிதர்கள் அனைவருமே தன்னலமே பெரிது என நடந்து கொண்டால், அறவொழுக்கம் குன்றி சமுதாயம் அவலமுற நேரும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்துக்காக தியாகம் செய்ய முன்வர வேண்டும். தியாகபுத்தியின்றி போகபுத்தியுள்ள சமூகம் சீரழிந்து விரைவில் அழிந்துபடும் கிரேக்க ரோம நாகரீகங்கள் அழிவிற்கு போகவாழ்வே (தன்னலவெறியே) காரணம் என்று சரித்திரம் சான்று கூறும். ஆதலின் தியாகம் என்ற உயர்பண்பு சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனிடமும் சிறிதளவாவது இருக்கவேண்டும்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாவிட்டால் குடும்ப உறவில் சிக்கலும் சீர்கேடும் விளையும் சமூக உறவில் சங்கடங்கள் நேரும் ஆகையால் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளர்கள் சிலர்தோன்றி தியாகமனப்பான்மையை வற்புறுத்திக் கூறுவதோடு தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் பிறருக்காக தத்தம் செய்வர் புத்தர் ஜாதகக்கதைகள் அனைத்தும் தியாக சரிதங்களே.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இராமாயணத்தில் ராமனும் பரதனும் லட்சு மணனும் தியாக தீபங்களாக திகழ்கின்றனர்.

பாரதத்தில் பீஷ்மர், கர்ணன், காந்தாரி போன்ற பாத்திரங்கள் தியாக தீபங்களாக மிளர்கின்றனர். அதுபோல சாத்தனர் ஒரு மாபெரும் தியாக பாத்திரமாக ஆபுத்திரனைப் படைத்துள்ளார். உலக இலக்கியத்திலேயே ஒப்பற்ற பாத்திரமாக தியாகத்துக்குஒருஎடுத் துக்காட்டாக திகழ்கின்ருன்.

பெண்மையின் உயர்வுக்கு மணிமேகலை யும் தியாகத்தின்மாண்பினை விளக்க ஆபுத்தி ரனும் படைத்து மாபெரும் கவிஞராக சாத்த ஞர் திகழ்கின்ருர்.

சாத்தனர் படைத்த ''மணிமேகலை'' காவியம் உலகின் ஒப்பற்ற உயர்காவியங் களில் ஒன்று தன்னிகரிலாத் தனித்தன்மை கொண்ட காவியம்.

பசிப்பிணி போக்கப்பட வேண்டும். பெண்மை மதிக்கப்படவேண்டும் பிறப்பால் உயர்தாழ்வு பாராட்டுதல் கூடாது தியாக உணர்வு சமுதாயத்தில் மேலோங்க வேண்டும். அறநெறிகள் பேணப்படவேண்டும் என்ற லட்சியங்களை முன்னிறுத்தி 'மணிமேகலை' காவியம் இயற்றப்பட்டுள்ளது.

எனினும் சிலதமிழறிஞர்கள் இந்நூல் பௌத்தமதக்கருத்துக்களை வலியுறுத்தவும், புத்த மதம் பரப்பவும் எழுந்த காவியமாகும் என்று கருதி அதை 'பௌத்தமதநூல்' என்றுசித்தரித் துள்ளனர். உயர்தர லட்சிய நூலை வெறும் பிர சார நூலாகக் காட்டியுள்ளனர் இது ஒரு தவ றான கருத்தாகும். காவிய மையக் கருத்து எது? என்று திறனய்வு நோக்கில் காணத்தவ றியதால் ஏற்பட்ட பிழை ஆகும். சாத்தனர் புத்தமத பிரசார நூல் எழுத விழைந்திருந் தால் ஏதேனும் புத்த ஜாத்கக் கதையையோ, புத்தர் வரலாற்றையோதான் எழுதியிருப்பார் ஆதலின் சாத்தனர் மணிமேகலை படைத்து பசிப்பிணி போக்கும் பண்பாடுடைய நல்ல நெறி போதிக்கவேதான். இனிமேலாவது தமிழறிஞர்கள் 'மணிமேகலை' யை புதிய நோக்கில் காண முற்படுபவர் என நம்பு வோமாக.

பிறமொழிச் சிந்தனைகள், பிறமொழி யிலுள்ள தத்துவக் கருத்துக்களை அறிமுகப் படுத்தி தமிழுக்கு வளம் சேர்க்க முற்பட்ட முதற்கவிஞர் சாத்தனரேயாகும் சமயக் கணக் கர் தந்திறங்கேட்ட காதையில் இந்தியதத்துவ ஞானமும் தருக்க ஞானமும் தமிழில் அறிமுகப் படுத்துகிருர், தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் பௌத்த மதத்தத்துவத்தை இனிய தமிழில் தந்து சிறந்த மொழி பெயர்ப் பாசிரியராக காட்சிதருகிருர்.

பல்வேறு கலைகள் அன்றைய சமுதாய நிலைகள் அனைத்தும் தெள்ளத் தெளிவாக படம் பிடித்தாற் போல் விளக்கும்பாங்கு அவர் சிறந்த அறிஞர் என்பதையும் கற்பனை நயம் மிகுந்த இயற்கைக் காட்சிகளை விளக்கும் பாங்கு அவர் சிறந்த கவிஞர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சில சிந்தனைகள்

மனிதன் இறந்த பிறகு துன்பப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. இறப்பதற்கு முன்பு இறப்பு வந்துவிடுமோ என்றும், நாம் இறந்துவிட்டால் என்னாகும் என்றும் எண்ணி வருந்துவது அறியாமையாகும். நம்மைமகிழ்ச்சி தரும் மனைவியும் மறந்து விடுவாள். மக்களும் பின்தொடரார். ஆகையால் அழியப்போகும் மனிதன் தன் வாழ்க்கைக்காகவும், ஆன்மாவுக்காகவும் எண்ணி ஏங்கி காலத்தை வீணாக்கக்கூடாது. உள்ளமும் உடலும் ஒன்றாகச் சேர்ந்து உறங்குவதுதானே இறப்பு. நாம் உறக்கத்தை விரும்புவது போல முடிவிலா உறக்கத்தையும் மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டுமேயன்றி மனம்கவல்வதற்கொன்றுமில்லை.

கிரேக்க சிந்தனையாளன் லூக்கிரிடிஸ்

கீழ்க்கண்ட ஐந்துநிலைகளில் பெண்கள் மற்றொருகணவனைத் தேடிக்கொள்ள அனுமதியுண்டு கணவனுக்கு தீராதபித்துப் பிடித்தல், கணவன் மரித்தல், துறவுபூணல் வீரியம் இழத்தல், குலத்திலிருந்து தள்ளிவைக்கப்படுதல்.

பராசர ஸ்மிருதி

கைம்பெண்களின் மறுமணத்திற்கு வழிவகுத்ததே என் வாழ்நாளின் சிறந்த சாதனை. தேவையானால் என் உயிரையும் இதற்காக தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.

ஈசுவர சந்திர வித்யா சாகரர்

நமது பூமியில் உயிர்ப்பொருள், அதனிடையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் இது ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சியினால் ஏற்பட்டிருக்கவேண்டும் அல்லது பரிணாம வரிசைக்கிரமப்படி ஏற்பட்ட பொருத்தங்களால் உருவாகியிருக்கவேண்டும். அல்லது அசைவற்ற ஜடமான பொருள் தகுந்த சூழ்நிலையில் உயிர்களைப்பிறப்பித்தல் இயல்பான நிகழ்ச்சியாகுமா என்பதை நாம் அறிய வேண்டும். இதற்கு தகுந்த விடை உயிர்நூலறிஞர்கள் தரவேண்டும். ஆனால் இது வரைக்கும் ஒரு விடையும் கிடைக்கவில்லை.

சர் ஜேம்ஸ் ஜீன்ஸ்

இன்சொல்லுடன் கூடிய கொடை, கருவம் இல்லாத ஞானம் பொறுமையுடன் கூடிய ஆற்றல், செல்வத்தில் ஈகை இந்த நான்கும் அமைவது அரிது.

இதோப தேசம்

முகத்தில் மலர்ச்சியும் இதயத்தில் இன்சொல்லும் செயலில் பரோப காரமும் உடையவர்கள் எல்லோராலும் வணங்கத்தகுந்தவர்கள்.

சுபாஷிதம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கவிசாம் ராட்டும் கவியோகியும்

கே. ஆர். வேலாயுத ராஜா

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும்தான் இந்திய இலக்கியங்கள் மறுமலர்ச்சி பெறத்தொடங்கின. இத்தகைய இலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்த கவிஞர்கள் பலர். அவர்களில் தெலுங்கு மொழியில் குரஜாட அப்பாராவும் தமிழில் பாரதியும் என்பதே இலக்கிய சரித்திர ஆய்வாளர்களின் முடிவு.

தெலுங்கு இலக்கியத்தை குரஜாட அப்பாராவின் அடியொற்றி கவிஞர் பலர் வளமாக்கினர். அவர்களுள் ராயப்ரோலு சுப்பாராவ் தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரி, துவ்வூரி ராமி ரெட்டி, அப்பூரி ராம கிருஷ்ணாராவ், பஸவ ராஜு அப்பாராவ், ஜாஷுவா, விஸ்வநாத சத்ய நாராயணு முதலானேர் முக்கியமானவர்கள்.

தமிழிலும் பாரதியைப் பின்பற்றி அவருக்குப் பின்னுல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, தமிழ்க்குமரி ச. து சு. யோகியார், கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் தமிழுக்கு வளம் சேர்த்தனர்.

இவர்களில் தெலுங்கு மொழியில் கவி சாம்ராட் விஸ்வநாத சத்ய நாராயணுவும் தமிழில் கவியோகி சுத்தானந்த பாரதியும் தனித்தன்மை பெற்று விளங்குகிருர்கள்.

தெலுங்கில் மற்றேனைய கவிஞர்கள் சிறு சிறு காவியங்களையும் தனித்தனி கவிதைகளையும் மட்டுமே பாடினுர்கள். ஆனுல் விஸ்வநாத சத்ய நாராயணு சிறு காவியங்கள் மட்டுமின்றி, "ராமாயண கல்ப்ப விருட்சம்" என்னும் காவியத்தை எழுதியிருக்கிருர். இது வால்மீகி ராமாயணத்தின் தெலுங்காக்கக் காவியமாகும். இக் காவியத்தை 1934-ம் ஆண்டில் எழுதத் தொடங்கி 1962-ம் ஆண்டில் முடித்தார் இன்னும் 10 கவிதைத் தொகுப்புகளும் வேயி படகலு (ஆயிரம் தலை நாகம்) ஏகவீர முதலிய அறுபதுக்கும் மேற்பட்ட உரைநடை, சமூக, சரித்திர நாவல்களும், நாடகங்களும், கட்டுரைகளும், சிறுகதைகளும், விமர்சனங்களும் எழுதி தெலுங்கு உரைநடை இலக்கியத்திற்கு புத்துணர்வும் செழுமையும் ஊட்டினுர்.

கவியோகி சுத்தானந்த பாரதியும், புரட்சிக்கவிஞர், நாமக்கல்லார், கவிமணி, ச. து. சு. யோகி இவர்களை விட தமிழுக்கு பல அரிய அற்புதமான கவிதைத் தொகுதிகளாம் புதிய தமிழகம், புதுமைப் பாடல் நாட்டுப் பாட்டு, அருளருவி, கவியரங்கம், யோக சித்தி, ஜீவ நாதம், முன்னேற்ற முழக்கம் போன்றவற்றையும், நடனஞ்சலி, சங்கீதாஞ்சலி போன்ற இசைத் தமிழ் கீர்த்தனைகளையும், 'பாரத சக்தி' என்னும் மகா காவியத்தையும், ஏழை படும் பாடு, இளிச்சவாயன் எனும் பிரெஞ்சு நாவல்களையும் அழகுத் தமிழ் நடையில் செய்தார். இன்னும் நூற்றுக்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கணக்கான உரைநடை நூல்களையும் சரித்திர சிறுகதை நாடகங்களையும் இயற்றி தமிழ் இலக்கியத்திற்கு உரமும் திறமும் ஊட்டினர்.

கவி சாம்ராட் விஸ்வநாத சத்ய நாராயணா தெலுங்கில் மட்டுமின்றி சமஸ்கிருத புலமையும் படைத்தவர் வடமொழியில் சுயமாக பல நாடகங்களை இயற்றியுள்ளார். ஓரெழுத்து ஒரு சொல், ஒரு வரி கவிதைகளைப் பாடி பல பொருள்படியான நயங்களுடன் விளக்கம் தந்து ரசவாதம் செய்வதில் வல்லவர். இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் விஜயவாடா கல்லூரியில் தெலுங்கு விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். ஆங்கிலத்திலும் புலமையுடையவர். சிறந்த மேடைப் பேச்சாளர். பூர்வாந்திர கவிஞர்களான நன்னய, திக்கன, போதன போன்றவர்களின் பாரதம், பாகவதம் போன்ற இலக்கியங்களை விமர்சனம் செய்து விமர்சனப் பாதையில் புதுமை செய்து மெருகூட்டினர். இவருடைய ''ராமாயண கல்ப்ப விருட்சம்'' காவியத்திற்காக பாரதீய ஞானபீடப் பரிசு கிடைத்தது. இது தவிர ஆந்திர பிரதேஷ சாகித்திய அகாதமியும் இந்திய சாகித்திய அகாதமியும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்தன. இவர் ஆந்திர பிரதேஷ சாகித்திய அகாதமியின் துணைத்தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார். இவரது 'ராமாயண கல்ப்ப விருட்சத்' தை தெலுங்கு பேராசிரியர்கள் பலர் பல கோணங்களில் ஆய்வு செய்து பாராட்டினர் என்ருலும், ''ராமாயண கல்ப்ப விருட்சம்'' காவியத்தைக் கண்டித்து ராமாயண விஷ விருட்சம் எனும் ஆய்வு நூலை பிரபல நாவலாசிரியை முப்பாள ரங்கநாயகம்மா விமர்சித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கவியோகி சுத்தானந்த பாரதி ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளை ஐபந்திரிபறக் கற்றவர். மற்ற இந்திய மொழிகள் அறிந்து தெரிந்தவர். ரமண மகரிஷி, வ வே சு. ஐயர், அரவிந்தர், பாரதியார், வ. உ. சி சிவானந்தர் முதலிய மகா மேதைகளுடன் நெருங்கித் தோழமை கொண்டிருந்தவர் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலம் பிரெஞ்சு சமஸ்கிருத மொழிகளில் ஏராளமான நூல் கொண்டும் கொடுத்தும் அம்மொழிகளைச் சார்ந்தவர்களே வியக்கத்தகு விதத்தில் கவிதை, காவிய, உரைநடை நூல்களை எழுதிப் புகழடைந்தவர்.

பல்லாண்டுகள் புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தின் மவுன விரதம் இருந்து பாரத சக்தி மகா காவியத்தை தமிழுலகிற்கு ஈந்தார் கற்பனை வளமும் உவமைநயங்களும் நீரோட்டம் போல் தட்டாமல் காவியம் நடக்கும் பாங்கும், கவிதையில் இனிமையும் எழிலும் குலுங்வதைக் காணலாம் ஆசிரியப்பா, விருத்தம், வெண்பா இயற்றுவதில் இயல்பான புலமையும் தமிழில் இவர் பெற்றிருக்கும் புலமைக்கு எடுத்துக் காட்டாகும். கம்பனின் விருத்தங்களோடு போட்டி போடும் அளவிற்கு பாரத சக்தியில் கவிதை நயங்கள் அமைந்துள்ளன, இவரது பாரத சக்தி மகா காவியத்திற்காக தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கி கவியோகிக்குச் சிறப்புச் செய்யும் முகத்தான் அதனைச் சிறப்பித்துக் கொண்டது.

இவரது பாரத சக்திமகா காவியத்தின் சிறப்பு இயல்புகளை பல்வேறு தலைப்புகளில் தமிழ் பேராசிரியர்கள் பலர் ஆய்வு செய்துள்ளனர்.

கவிசாம்ராட் ஆந்திரத்தில் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் வெளி நாட்டிற்கும் பயணம் செய்து இலக்கியத்திற்கு அருந் தொண்டாற்றினர். இவர் தலைமையேற்காத கவியரங்கம் ஆந்திரத்தில் அரிது.

கவியோகியும் உள் நாட்டில் மட்டுமல்லாது அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ், மலேயா, சீனா சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழிலக்கியம், ஆங்கில பிரெஞ்சு இலக்கிய அரங்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

குகளில் பேருரைகளையும் கவியரங்குகளிலும் கலந்து கொண்டு பன்மொழி இலக்கிய சேவை செய்து புகழீட்டியவர். பொதுவாக ஒப்பு நோக்கின் கவிசாம்ராட்டும் கவியோகியும் பன் மொழிப் பண்டிதர்கள். பழைய, புதிய இலக்கியங்களுக்கு பாலமாக அமைந்தவர்கள், சம காலத்தவர்கள். கவிசாம்ராட் இல்லற வாழ்வில் இன்பம் திளைத்தவர். கவியோகி துறவறத்தில் தோய்ந்தவர். இருபெரும் அறிஞர்கள் அரைநூற்றுண்டிற்கும் மேலாக இலக்கிய வானில் பிரகாசித்த இணையற்ற தாரகைகளாவர். கவிசாம்ராட் அண்மையில் மறைந்துவிட்டார். கவியோகி நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிருர்.

பாரதப் பண்பாட்டை எதிரொலிக்கின்ற புராண, இதிகாச, வேத, உபநிஷத் தத்துவங்களை ஆழ்ந்து கற்று ஜீரணித்துக்கொண்ட இவர்களின் படைப்புகள் இந்திய இலக்கிய மகுடத்தில் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்ற மாணிக்கங்களாகும்.

பன்மொழிப் பண்ணையில் பல்வேறு இலக்கியப் பயிர்களைச் செழிப்புறு பயிராக்கி நல்லறிவின்பத்தை அறுவடைசெய்து நாட்டுக்களித்த இந்நூற்ருண்டின் இணையற்ற இருமொழிக் கவிஞர்களே கவிசாம்ராட்டும் கவியோகியும் ஆவர்.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

— நாலடியார்

'எனது எனது, என்று இருக்கும் ஏழை பொருளை
எனது எனது என்றிருப்பன் யானும் - தனதாயின்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
யானும் அதனை அது.

— நாலடியார்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பொன் மொழிகள்

வாழ்க்கை என்னும் கசப்பான மரத்தில் இரண்டே பழங்கள் அமுதம் போன்றமைந்துள்ளன. ஒன்று சான்றோர் பொன்மொழிகளைக் கேட்டின்புறுவது மற்றொன்று நல்லோருடன் நட்புறவாடுவது.

★ ★

இவ்வுலகில் வளைந்து கொடுத்து வாழுங்கள் நேராக வாழ்வதாகக் கருதி உங்கள் இன்பங்களை இழந்து விடாதீர்கள் காட்டில் நேராக வளர்ந்த மரத்தைத்தான் தச்சன் முதலில் வெட்டுவான்.

★ ★

கடலில் பெய்யும் மழை, வயிறு நிறைந்தவனுக்குத் தரும் உணவு, பொருள் படைத்துள்ளவனுக்கு தரும் கொடை, பகலில் ஏற்றிய விளக்கு இவை வீணாகும்.

★ ★

தீயோர் நட்டைக் கைவிடுக நல்லோர் நட்பை நாடுக. இரவும் பகலும் நன்மையே இயற்றுக. இவ்வுலகின் நிலையாமையை எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பாயாக.

★ ★

இனிய சொற்கள் பேசுவதால் எல்லோரும் மகிழ்ச்சி யடைவார்கள் ஆதலால் இன்சொல் பேசுக பேச்சில் தரித்திரம் எதற்காக?

★ ★

உலகில் இயற்றப்பட்டுள்ள எல்லா நூல்களின் சாரத்தை ஒரே வரியில் சொல்கின்றேன். பிறருக்கு உதவுவதே புண்ணியம் பிறருக்கு தீங்களிப்பதே பாவம் ஆகும்

★ ★

சூரியன், சந்திரன். மேகங்கள், மரங்கள் நதிகள், பசுக்கள், சான்றோர்கள் - பிறருக்காகவே உலகில் இறைவனால் படைக்கப்பட்டுள்ளார்கள்.

★ ★

மெல்ல ஊர்ந்து சென்று கொண்டே இருந்தால் எறும்பு நூறுயோசனை தூரமும் கடந்து விடும் கருடன் ஆனாலும் முயலாமல் இருந்தால் ஒரடிகூட நகரமுடியாது.

★ ★

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இலக்கியமும் தத்துவமும்

திரு பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா
சேர்மன் : ராம்கோ குரூப் நிறுவனங்கள்

நமது பாரதநாட்டின் சிறப்புக்கும் பண்பாட்டுக்கும் மூலகாரணங்களாக இருப்பது நமது பழம்பெருமை மிக்க இலக்கியமும் தத்துவமும் ஆகும்.

வாழ்க்கைக்கு ஒருலட்சியத்தைப்படைத்தளிப்பது தத்துவம் ஆகும் தன்னைப்பற்றியும், உலகப் படைப்பினைப் பற்றியும் பரம்பொருளைப்பற்றியும் தத்துவ ஞானம் விளக்கம் தருகிறது. அந்த தத்துவத்தை அனைவருக்கும் புரியும் வகையில் அழகிய உவமை, உருவகங்களுடன், கதைகள் மூலம் விளக்கி, மக்கள் நெஞ்சில் பதியவைப்பது இலக்கியம் ஆகும் தத்துவமும் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன

உலகத்தின் பேரிலக்கியங்களாக மதிக்கப்படும் இராமாயணமும் மகாபாரதமும் தத்துவ ஞானக்களஞ்சியமாக மிளிர்கிறது. நம் நாட்டின் பண்பாட்டை உருவாக்கி ஜீவகளையுடன் திகழும் பழம்பேரிலக்கியங்கள் இவை மகாபாரதத்தில் வரும் கீதை -உயர்ந்த தத்துவஞான நூலாக உலகம் பாராட்டுகிறது. திலகர், காந்தி. வினோபா, அரவிந்தர். பாரதியார். ராஜாஜி போன்ற மேதைகள் கீதையினை தமது வாழ்க்கை வழிகாட்டி நூலாக ஏற்றுக் கொண்டனர்.

அது போலவே தமிழ் இலக்கியத்தில் சிறந்து திகழும் திருக்குறள் வாழ்க்கைத் தத்துவங்களை மிக எளிய முறையில் விளக்குகிறது. இலக்கியமும் தத்துவமும் இணைந்த மற்றொரு பெருங் காவியமாக மணிமேகலையும் திகழ்கின்றது.

கீதை, குறள், மணிமேகலை போன்ற இலக்கியங்கள் வெறும் ரசனைக்காக: படித்து மகிழ்வதற்காக ஏற்பட்ட நூல்கள் அல்ல. அவை வாழ்க்கைத் தத்துவங்களை எளிய முறையில் அரிய கருத்துக்களை போதித்து வாழும் வகை காட்டுகின்ற நூல்கள் ஆகும்.

நம் நாட்டின் இலக்கியங்கள் அனைத்தும் கடவுள் பக்தியையும் பரோபகாரத்தையும் வற்புறுத்திக் கூறுகின்றன.

'உத்தரேத் ஆத்மனாத்மானம்''
''ஆத்மனோ பந்து ராத்மமைவ ரிபுராத்மன''
மனிதன் தன்னைத்தானே உயர்த்தவேண்டும். தனக்குதானே நண்பனும் பகைவனும்ஆவான் என்று பகவத்கீதை கூறுகிறது மேலும்
'' சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம்
சரணம் வ்ரஜ ''

இறைவனை சரண் அடைய வேண்டும் என்றும் கீதை கூறுகிறது. அதுபோலவே குறள் முதலிய நீதி நூல்களும் கூறுகின்றன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தன் அகங்காரம் இன்றி, தன்னடக்கம் வேண்டும் என்றும் தன்னம்பிக்கையுடன் அன்பு நெறியில் அற வழியில் மனிதன் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிட வேண்டும் என்றும் நமது இலக்கியங்கள் கூறுகின்றன. நமது இந்திய தத்துவங்களின் நோக்கமும் அதுவேயாகும். ஆகையால் நமது இலக்கியங்களும் தத்துவமும் ஒரே லட்சியத்தை வற்புறுத்துகின்றன. தத்துவத்தை அடியொற்றி இலக்கியம் இணைந்து நடந்து வருவதை காணலாம்.

எனினும் தற்காலத்தில் தத்துவ ஞானத்தை விட்டு விலகி இலக்கியம் வெறும் பொழுது போக்கு வியசபாரச் சரக்காகவும் மலிந்து போலிகள் மிகுந்து தரம் குறைந்து வருவதாக அறிஞர்கள் கருதுகின்ரூர்கள். இன்றைய பத்திரிகைகளில் அரசியலும் சினிமாவும் ஆட்சி செய்கின்றன. நல்லிலக்கியங்களின் வெளியீடும், இலக்கியத்தரமான பத்திரிகைகளின் வெளியீடும் மிகவும் அருகிவிட்டன ஆகையால் இந்தச் சூழ்நிலையின் வலிமைக்கு ஆட்படாமல் சுயமாக சிந்தித்து உயர்ந்த நல்லிலக்கியங்களை தத்துவ ஞான வலிமையுடன் படைக்கும் ஒருசில கவிஞர்களும் அறிஞர்களும் தம் ஆளுமை(பெர்சனலிடி)யை இழக்காமல் நல்லிலக்கியங்களைப் படைப்பது இன்றியமையாததாகும். அப்படிப்பட்ட நல்லிலக்கியவாதிகளை ஆதரித்து உதவுவது சமுதாயத்தின் பொறுப்பாகும்.

★ ★ ★

நல் நிலைக்கண் தன்னை நிறுப்பானும் - தன்னை
நிலைகலக்கிக் கீழ் இடுவானும்-நிலையினும்
மேல் மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

— நாலடியார்

தவல் அரும் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகல் இலர் எஃகு உடையர் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி.

— நாலடியார்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மேகலை மாட்சி

பேராசிரியர் மது. ச. விமலானந்தம்
அரசு கலைக் கல்லூரி, கரூர்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று; இரட்டைக் காப்பியத்தில் இரண்டாவது. தமிழன்னையின் மேகலையாக மிளிர்வது நம் அகங்கவர் மேகலை - அணிமேகலையாம் மணிமேகலை. மனமேவும் மேகலையின் மாட்சி மனங்கொளத்தக்கது. இதன் ஏற்றம் எண்ண இதயம் களிக்கும்.

1) தமிழில் முதன்முதல் தோன்றிய சமயக் காப்பியம் சிலப்பதிகாரம் முதற் தமிழ்க் காப்பியம் என்றால், இது சமய முதற் காப்பியம் எனலாம். முதலும் முதன்மையும் வாய்ந்தது இந்த முழுக்காப்பியம்.

2) வெறும் சமயக் காப்பியமாக மட்டும் அமைந்து விடாது, எக்காலத்துக்கும் ஏற்ற எந்நாட்டவர்க்கும் உற்ற அறக்காப்பியமாகவும் அமைகிறது அறங்கள் அலசப்படுகின்றன. அள்ளித்தெளிக்கப் பெறுகின்றன. 3) அன்பே கடவுள் என்பது உலக எண்ணம். அந்த அன்பையே இன்ப ஊற்றாக ஓடவிட்டு உயிரோட்டமாக ஒளிர்கிறது அறங்களில் சிறந்தது அன்பறம் என நாட்டும் அன்புக் காப்பியமாக அமைகிறது. 4) சமயக் காப்பியமேயானாலும் கண்ணுடியாகவும் அந் நாளைய வரலாறு விளம்பும் வரலாற்றுக் காப்பியமாக விளங்குகிறது. செந்தமிழ் நாட்டுச் சமயவரலாறு சரியாக விளம்பும் தந்நா விளக்கம் இது 5) போரில் பிறந்தது பரணி இலக்கியம், கீதை. துறவில் பிறந்தது மணிமேகலை. எனவே இதனைத் துறவு தந்த காப்பியம் எனலாம். துறவி தந்த காப்பியம் சிலம்பு என்றால், துறவில் தோன்றிய காப்பியம் மேகலை எனலாம். 6) பாரதம் பெருங் காப்பியம் இதிகாசம். அதில் கிளைக்கதைகள் மண்டிக் கிடக்கின்றன. அதுபோன்றே மேகலையிலும் கிளைக்கதைகளும் உட்கதைகளும் (Episodes & Anecdotes) மிகுந்து கிடக்கின்றன; கதைக்களஞ்சியம் எனலாம். 7) வேறு எக்காப்பியத்தையும் விட எளிமை மிக்கது; பேச்சு நடையும் இலக்கிய நடையும் இணைந்த பனுவல். எனவே கல்லார்க்கும் எளிதில் விளங்கி, கற்றார்க்கு சுவையுடன் இலங்கி எல்லோர்க்கும் இனிய நூலாக இலங்குகிறது.

8) மது ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, பரத்தை ஒழிப்பு, கொலை களவு ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களை சுட்டிக் காட்டி விளக்கமூட்டும் சீர்திருத்தக் காப்பியம். இந்த 20ஆம் நூற்றாண்டில் தோன்றும் எண்ணம் செயற்பட முற்படும் சீர்திருத்தங்களையெல்லாம் 1800 ஆண்டுகட்கு முன்னமே தொட்டுக் காட்டிய வளமையது. 9) இலக்கு உடையது இலக்கியம். அப்படிக் காலம் இடம் இனம் கடந்த குறிக்கோள்களைக் கூறும் குறிக்கோள் இலக்கியமாகவும் கொலுவிருக்கிறது 10) சாதாரண ஒரு செட்டியில்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பெண்ணைச் சிறந்த பத்தினியாக உயர்த்திப் பெண்மைக்குப் பெருமை தந்தது சிலப்பதி காரம் ஆனால் மேகலையோ பரத்தையர் குலப்பெண்ணையே பெருந் தலைவியாக்கி - வெறுத்து ஒதுக்குதற்குரிய கணிகை மாதினைக் காப்பியக் கொடியாக்கியதோடு நில்லாது, அவளையே அறச்செல்வியாக்கிய அருமைக் காப்பியமாகப் பெருமை பெறுகிறது. இளங்கோ சிலப்பதிகாரம் என்றே பெயரிட்டார்; ஆனால் சாத்தனரோ தாம் குலப் பெண்ணைத் தம் காப்பியத் தலைவியாக்கிய தோடு அமையாது அவள் பெயரையே காப்பியத் தலைப்பாகவும் தந்து உவந்தார் என்றெண்ணும்போது இளங்கோவையும் விட ஒருபடி உயர்ந்து உலகவர் உள்ளத்திலெல்லாம் ஒளிர்கிருர்.

11) தனித் தமிழ் முதல் நூல்; இராமாயாண பாரதம் போல பிறநாட்டு மொழிக்காப்பியமன்று; கம்பராமாயணம் போன்றுஇரவல் கதையும் அல்ல. தமிழகத்தில் நடந்த-தமிழ்ப் புலவனே தமிழில் தந்த முதன்மையது எனவே தமிழ்ச் சொத்தென உரிமை பாராட்டும் உறவுக் காப்பியம். 12) பௌத்தம் பரப்பப் பிறந்ததேயாயினும், எண்சுவையும் இயற்கை வருணனையும் இன்னபிற நலனும் சான்ற பொதுக்காப்பியமாகவே பொலிகிறது ''மந்தர கிணியணி வேணியபிரான் வேங்கை மன்னவ! நீ. கொந்தார் குழல் மேகலை நூல் நுட்பம் கொள்வதெங்கன்'' எனத் திருவெங்கைக் கோவையில் சிவப்பிரகாசர் ஏத்துவது காண்க 13) பசுவதைத் தடுப்புபற்றி பரக்கப் பேசிவருகிறோம் இன்று; அன்றே பசுவின் பெருமையினைப் பாங்குடன் பகர்ந்தது இக் காப்பியம் 14) கடுமை மிக்க புத்தமதக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் இனிய எளிய சொற்களில் எத்துனை அழகுடன் பொருத்த முறப் பேசுகிறது. பௌத்தம் கதைமூலம் காட்டப்படும் கருத்து காட்சியாக்கப்பெறும் மாட்சியும் மிக்கது மேகலை 15) பாரதம் ஒருபெரும் நீதிக்களஞ்சியம்என்பர். அதன்கண் சொல்லப் பெறாத நீதிகளே இல்லை என்பர் அது இதிகாசம் அதனினும் பன்மடங்கு சிறிய மேகலையில் தள்ளரிய பெருநீதிகள் பேரறங்கள் தெள்ளத் தெளிய தெவிட்டா வகையில்-திகட்டாமுறையில் அள்ளித் தெளிக்கப் பெற்றுள்ளன. அந்த வகையில் நீதி இலக்கியமாகவும் நிலவுகிறது.

16) ஒழுக்கமுடைய சமுதாயம் உருவாக உள்நின்றுடற்றும் பசிப்பிணிபோக்கவேண்டும் என்பன போன்ற தத்துவமுத்துக்களை வித்தாக வைத்து விளக்குவது. தத்துவத்தை இலக்கியமாக இயம்புவது இலக்கியத்தைத் தத்துவார்த்தமாகத் தருவது இதனால் தத்துவ இலக்கியமாகத்திகழ்கிறது. 17) தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற தாரக மந்திர பேற்றுக் கானகம் சென்றவன் கதை இராம காதை. கணவன் சொற்றிறம்பா மனையாளின் மாண்பு மேவுவது சிலம்பு. மேகலையோ தாய்சொல்லைத் தட்டா மகளின்மாட்சி மொழிவது யௌவனப் பருவத்தே தன்னையும் கலக்காது தாய்மாதவி தன்னை போதிமாதவன் பொற்கழகத்தே தத்தம் செய்த போது தடுத்து மொழியாது அன்றலர்ந்த செந்தாமரை முகத்தினை வென்ற இராமனைப்போல் முகம்கூம்பாது தாயின் எண்ணப்படியே துறவு பூண்டாள் இராமனாவது அரசு இல்லைஎன்ற தோடு அமைந்தான் ஆனால் தளிர் பருவத்து மேகலையோ தன்னையே அடக்கிக்கொள்ள தன் ஆசையெல்லாம் பொசுக்கிக் கொள்ளத் தயாரானாள் தாய்சொல்லைத் தட்டாத தனையளின் திறம்வியந்து சொல்மறந்து பாராட்டற்பாலது பீஷ்மரினும் ஒருபடி ஓங்கிநிற்கிறாள் மாதவியின் மகள். எனவே ஒருதியாகச் செல்வியின் திருக்காப்பியம் இது. 18) நகரமைப்பு (Town Planning) விழா எடுத்தல் ஓவியம் போன்ற கலைகள் கணிசமான அளவு விளக்கமுறுகின்றன ஆதலின் இஃதோர் கலைக் காப்பியமாகவே காட்சியளிக்கிறது.

19) கடுமை மிக்க புத்தமதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் எளிமையும் தெளிவும் தோன்ற திட்டவட்டமாகத் தருகிறது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பௌத்தம் பற்றிய தனி முழுநூல் தமிழில்தான் அமைகிறது பௌத்த சமயப் பெட்டகமாகப் பிறங்குகிறது. 20) புகார் காண்டத்தில் கண்ணகியைக் குடும்பப் பெண்ணாகக் காட்டி, மதுரைக் காண்டத்தில் வீரக் கண்ணகியாக விளக்கமுறச் செய்து, வஞ்சிக்காண்டத்தே தெய்வக் கண்ணகியாகத் திகழச் செய்தார் இளங்கோ. சாத்தனாரோ பேரழகுச்செல்வி மணிமேகலையைபேரறிவுச்செல்வியாய்ப்பிறங்க வைத்து பேரறச்செல்வியாய் நடமாடவிட்டு மாதவிச் செல்வியாய் மிளிரச்செய்து பொது நலச்செல்வியாய்-சேவைச் செல்வியாய்ச் சிறக்கச் செய்து தியாகச் செல்வியாய்த் திகழவைத்துள்ளார், பெண்மை போற்றும் பெருங்காப்பியம்.

21) இந்நூற்றுண்டில் கலைச் சொல்லாக்கம் காண்கிறோம் பண்டே இக்கலைக்குக் கால்கோள் செய்துமேகலைக் காப்பியம் சமயச்சொற்களுக்கும் வடசொற்களுக்கும் வாகான தமிழ்ச் சொற்கள் வளமான நலச்சொற்கள், பொருத்தமான பெயர்ப்புகள் தந்து கலைச் சொல்லாக்கத்திற்கு ஒரு திறவுகோலாகத் திகழ்வது இத்திருக்காப்பியம் - கலைச் சொல்லாக்கக் காப்பியம்.

22) ஒருசாண் வயிறே இல்லாட்டா இந்த உலகில் ஏது கலாட்டா என்றான் ஒருகவிஞன் தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த உலகினை அழித்திடுவோம் எனச் சாடினார் பாரதி. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' என்றார் வள்ளுவர். இப்பிணியே எப்பிணிக்கும் அடிப்படைஎனவே இதனைப்போக்குவதே சமுதாய முதற்பணிஎன அணையா உலை ஏற்றித் தரும சாலை மூலம் மக்கட்பசிபோக்கும் மாநெறி மேற்கொண்டார் வடலூர்வள்ளலார். அத்தகு கொடிய பசிப்பிணி பாரகம் எங்கணும் அற வேண்டும் என்ற முதலறத்தை உட்குதழுவிய ஒருபெரும்உன்னத நோக்கினை உலகிலேயே முதன் முதல் அமுதசுரபி மூலம் அன்னம் பாலித்த அமுதகாப்பியம். உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்ற தாரக மந்திரத்தால் தரணியெங்கும் பரணிபாடிப் பசியும் பிணியும் போக்கி வசியும் வளனும் ஆக்கிய அருங்காப்பியம், பசிப்பிணிபோக்கும் பேரறத்தைஇந்நூல்போல்எந்தநூலும் இயம்பஇல்லை! 23) சமய வேறுபாடில்லாச் சங்க காலத்தையடுத்துச் சமயவுணர்வுக்குத் தோற்றுவாய் இட்ட எடுப்பானது கடவுள்நினைவுஇருந்ததே தவிரசமய நினைவுகள் எழாத காலகட்டம்சங்க காலம் சமயவேறுபாடு இன்றேனும் மாறுபாடு முளைத்து சமயங்கள் கால்கொள்ளக் களம் அமைந்த வேளைசங்கம் மருவிய காலம் அந்தக் காலத்தின் கோலத்தை மேகலை மேவிநிற்கிறது இந்தவகையில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த காப்பியாகவும் (Historic Epic) விளங்குகிறது. 24) அத்தோடு அக்காலபழக்க வழக்கங்கள் தமிழகப் பண்பாடு, சமயநிலை போன்றனவெல்லாம் பிரதிபலிக்கும் வரலாற்றுக் கூறுகள் கொண்டும் விளங்குகிறது. Manimehalai in its historical settings என்றொரு நூலே உருவாகும் அளவிற்கு ஊற்று நிலையாகவும் ஊற்றம் தந்து ஒளிரும் (Historical epic) வரலாற்றுக் காப்பியமாகவும் துலங்குகிறது.

25) சங்க இலக்கியத்துள் உவமை அணியே ஒருமைபெற்று ஒளிர, சிலேடை. மடக்கு தொனி என அணிஅணியாக அணிகளை முதன்முதல் கொண்டொளிர்கிறது. மணிமேகலைக் காப்பியம் ஓர் அணிக்காப்பியம் என்று கூடக் கூறிவிடலாம். 26) பிற சமய - பல்சமயக் கருத்துக்களையெல்லாம் நல்ல தமிழில் நயமுற நவிலலாம் - நவின்றிட முடியும் என நிறுவும் நற்றமிழ்க் காப்பியம். 27) பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்றது வள்ளுவம்; ஒழுக்கமே விழுப்பம் தரும் என்றும் கட்டியம் கூறியது அதற்கு விளக்கம் தரும் இலக்கியம் போல பிறப்பால் பெருமையில்லை; ஒழுக்கத்தாலேயே உயர்வு உண்டு என்பதை நிறுவியது. எவரையும் திருத்த முடியும் என்று நிலை நாட்டுவது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

28) வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது போன்றே, தமிழின் முதற் காப்பியமேயாயினும். உலகின் பொதுக் காப்பியமாகப் பொலிவது. 29) வாழ்விற்கு வளமூட்டுவதுதான் நலமார் நல்லிலக்கியம். அவ்வகையில் பசி பால்உணர்வு உணவு, உடை, உறையுள் ; கல்வி, மருந்து, மனந் திருந்தல் போன்ற வாழ்வின் அடிப்படை - அன்றாட தேவைகளை (Conventional necessaries and necessities of life) நிலை பெறக்கொண்ட நற்காப்பியமாக நிலவுகிறது. 30) சிக்கல் பிக்கல் இல்லாத சீரிய - சரள நடை உடையது. 'சிடுக்கில்லாத நடையது' என்கிறவர் வாகீச கலாநிதி கி. வா. ஜ. அவர்கள். இயல்பான இயற்கை வருணனை, இனிய எளிய உரையாடல்கள் கொண்டு நடக்கிறது.

31) இன்று நாம் வாழ்விலும் வளமார் இலக்கியத்தும் மேற்கொள்ள வேண்டிய யாவற்றுக்கும் ஒளியூட்டி வழிகாட்டுகிறது. மரபுக்கேற்ப பிற சொற்கள் மாத்தமிழில் கலந்தால் மாண்புறும் எனச்சுட்டியும் காட்டி யும் செல்லும் வழிகாட்டி நூல். 32) திருவள்ளு வரைப் 'பொய்யில் புலவன், எனவும் திருக் குறளைப் 'பொருளுரை' என்றும் முதன் முதலில் காப்பியத்தில் வைத்து நூலையும் நூலாசிரியனையும் ஒருசேரப்போற்றும் முதற் பனுவல். 33) எத்தனையோ சமயவாதங் களும் தத்துவதருமங்களும் சிதறிக்கிடக்கின்ற சிந்தனைக்குரிய விருந்தாக வந்தனைக்குரிய மருந்தாக அவை அமைகின்றன இந்தஉதிரி மணிகள்பிற்காலகுண்டலகேசி நீலகேசிகளாக உருவாகியுள்ளன கருமணிகள் கருத்து முத் துக்களாக அணிகின்றன. பின்னெழுந்தபனு வல்கட்குக்'கேசி''கேசி'எனப்பெண்டிரே தலை விகளாக அமைய வழிகோலிற்று. 34) சில இலக்கியங்கள் நயனுடை இலக்கியங்களாக இலங்கும் சில பயனுடைப் பனுவல்களாகப் பிறங்கும்ஒருசிலவே நயனும் பயனும் உடைய நல்லவல்ல. நலமும்வளமும்சான்ற இலக்யகிங் களாக விளங்கும். அம்முறையில் இருமையும் ஒருமையுற்று ஒளிரும் அருமைமிகு பெருமை மிக்கபேரிலக்கியமாக அமைகிறது மணிமேகலை 35) சுருங்கக்கூறின் சமயமும் தமிழும் சால் புடன் கலந்து-இணைந்து பிணைந்து-இரண் டறக் கலந்து மகிழ்ந்து பிறந்த காப்பியம் என லாம் சமயத்திற்கும் செந்தமிழுக்கும் பிறந்த மணியான குழந்தையே மேகலை எனலாம்.

இப்படி எண்ணரிய நலம் சான்ற வண் ணக்காவியமாக விளங்கும் மேகலை ஏனோ போதிய முறையில் போற்றத்தக்க வகையில் புகழ் பெறவில்லை - பயிலப் பெறவில்லை என்பது வியப்பாக உள்ளது தமிழ் இலக்கிய வரலாற்றைக் கண்ணோடின் ஓர் உண்மை உணரமுடிகிறது கம்பராமாயணம் பரவிய அளவு வில்லிபாரதம் பரவவில்லை; குறள் போற்றப்படும் அளவு நாலடியார் நவிலப் பெறவில்லை நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி என்று கூறப்பெற்றாலும்! அதுபோல் இரட்டைக் காப்பியத்துள் சிலம்பு சீர்மை பெற்ற அளவு மேகலை சிறப்புறவில்லை. ஒன்று ஓங்கி ஒளிருப்போது மற்றது மங்கியே நிற்பதை காண்கிறோம் அத்தோடு ஒன்றைப் பற்றின்அதனையேவிடாது பிடித்துக்கொண்டு போற்றுவதும், அடுத்ததற்குவராது அமைவ தும்நம்வழக்கமாகிறது இட்டிலியுந்தோசையும் அரிசியினின்றே ஆக்கப்பெறினும், ஒவ்வொன் றும் ஒவ்வொரு வகையில் சுவைக்கிறது வெவ் வேறு முறையில் இனிக்கிறது. எனவே இனி யேனும் அறிவுக்கும் உணர்ச்சிக்கும்விருந்தாக அமையும் அரிய அணி மேகலையாம் மணிமேகலை யைப் பயின்று நவின்று அதன் மாட்சியை தெரிந்து புரிந்து போற்றுவோமாக!

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலைத் திறன்

பேராசிரியர் : வ. சுப. மாணிக்கம்

[பேரறிஞரும், மதுரை காமராஜர் பல் கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான வ. சுப. மாணிக்கம் அவர்கள் காரைக்குடி செல்வி பதிப்பகம் வெளியிட்ட இரட்டைக் காப்பியங்கள் எனும்நூலைப் பதிப்பித்தபோது 'மணிமேகலைதிறன்' எனும் கட்டுரை வரைந் துள்ளார் 1958ல் இந்நூல் வெளிவந்துள்ளது. அதிலுள்ள சில ஆய்வுக் கருத்துக்கள் இங்கு தரப்பட்டுள்ளன]

கூலவாணிகன் மதுரைச்சாத்தனார் கொள்கைபரப்பவே மணிமேகலையைஎழுதினார்

சிலப்பதிகார அமைப்பிற்காணும் நல்ல இலக்கியகூறுகள் மணிமேகலைநூலுக்கு இல்லை என்பது வெளிப்படை. மணிமேகலை புத்தமதச் சார்புடைய ஓரிலக்கியம் தமிழ்மொழிக்கண் முதலில் தோன்றிய சமயகாப்பியம் இதுவே. தமிழில் பௌத்தகாப்பியம் பாடப்புகுந்த சாத் தனார்க்கு ஏனைப்புலவருக்கு இல்லாத ஒரு தனிக்கடமை அஃதாவது வடசொல்லுக்குத் தமிழ்ச்சொல் காணும்பணி உண்டாயிற்று இத் தமிழ்பணியை அவர் முழுதறமுடித்தார் என்று சொல்ல மாட்டேன் மொழியாக்கத்துறையில் முதன்முதற்புகுந்து ஓரளவு வெற்றி கண்டார் என்றும் பின்பு சமயகாப்பியம் செய்தார்க்கெல் லாம் ஒரு வழிகாட்டியாக நின்றார் என்றும் அறிவோமாக.

இல்லறக் குடியிற் பிறந்த வணிகப் பெண் நாடறிய ஆற்றல் காட்டி சிலப்பதிகா ரத்தின் தலைவியாகிறாள். இஃது ஓர் இலக்கியப் புரட்சி பரத்தைத் தொழிழிற் கன்றிய சித்தி ராபதியின் பேர்த்தி மணிமேகலைக் காவியத் தலைவியாகின்றாள் இஃது முன்னையினும் பெரும் புரட்சியன்றோ?

சாத்தனார் பரத் தையர் குலம் ஒழிய வேண்டும். பரத்தையர் இல்லறத்தோராக முன்னேறவேண்டும் சமுதாயம் வாழவேண்டும் என்று கருதும் சீர்திருத்தி சித்திராபதியும் முடி வில் திருந்தினாள் என்று சாத்தனார் செய்யும் சீர்திருத்தம் வரவேற்றற்கு உரியது பரத்தை ஒழிப்போடு மதுஒழிப்பு, சிறைஒழிப்பு. சாதி என்றனைய சமுதாயச் சீர்திருத்தங்களின்களஞ் சியம் இக் காவியம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

உயிர்களின் பசி ஒழிப்பே மணிமேகலை வற்புறுத்தும் பேரறமாகும். இவ்வறத்தை இந் நூல்போல வற்புறுத்தும் ஒரு நூல் வேறு தமிழில் இல்லை. மணிமேகலைக் காப்பியத்தைக் கற்குங்கால் புத்தமதத்தைப் பரப்பநினைத்தார் வணிகனர் என்ற தோற்றம் நமக்குப்புலப்பட வில்லை சீர்திருத்தத்துக்குப் பெயர்போன அம் மதத்தைக் கருவியாக வைத்து மன்பதையைச் சீர்திருத்த முனைந்தார் என்றே நூற்போக்கு காட்டுகின்றது.

சமுதாய ஊழலையும் மாந்தர்களின் சமுதாய நோக்கத்தையும் சீராக்க எழுந்த மணிமேகலை ஒரு பறை (முரசறையும்) நூல் ஆதலின்எல்லாத் தமிழ்காப்பியத்தைக் காட்டிலும் எளிய நடையில் இலங்குகின்றது. சொற்கள் செறிவின்றி சொல்லாக்கம் செய்யும் மொழி வன்மை பெற்ற சாத்தனர் இடத்திற்கேற்ப நடைஎளிமை செய்யும் புதுமனம் கொண்டவராக இருப்பது பாராட்டற்குரியது வழக்குச் சொற்களும் பேச்சுநடையையும் மிகத்தழுவியிருப்பதும் தமிழ் வளர்ச்சிக்கு வரவேற்கத்தக்க தொன்று. நடை எளிமைக் கதை சொல்லும் போதும் அறம் சொல்லும் போதும் நினைவோடு கையாளும் சாத்தனரின் நடைபிற இடங்களில் செம்மாப்பு உடையது

முற்பிறப்பு மறுபிறப்புக்கள் சொல்லும் மணிமேகலை நூல் ஒரு சாரார்க்குப் பிடிக்கும் ஒரு சாரார்க்குப் பிடிக்காது பெளத்தர் இன்று தமிழகத்தில் இல்லை ஒருமதம் சார்ந்த நூலென்று மணிமேகலையை இன்றுவாழ் தமிழர்கள் பற்றுக் காட்டாதிருத்தல் சரியன்று எம்மதமும் சார்ந்த காப்பியமாயினும் மொழி என்றஒருமை எண்ணமே நமக்கு நிற்பதாகுக.

மணிமேகலை சீர்திருத்திகளின் கையில் அமுதசுரபியாகப்புகுந்து மன்பதைக்கெல்லாம் நலவசோறு வழங்குவதாகுக.

செல்வத்தையும் கல்வியையும் தேடும் போது நீ என்றும் சாகாதவன் போல நினைந்து ஆர்வமுடன் முயற்சி செய்ய வேண்டும். அதனை பிறருக்குத் தரும்போது நீ எமன் கைப்பிடியில் இருப்பதாகக் கருதிக்கொண்டு தானம் செய்வாயாக.

— சுபாஷிதம்

★ ★

பழமை என்பதாலேயே எல்லாம் சிறந்ததாகி விடாது. புதுமை என்பதால் அலட்சியப்படுத்த வேண்டாம். ஆன்றோர் எதனையும் ஆராய்ந்து பகுத்தறிந்து பார்த்து நன்மையை மட்டும் ஏற்பர்.

— காளிதாசன்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

செவிச் செல்வம்

என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் இன்புடன் வாழ்வதற்கு அடிப்படையாக இருப்பது செல்வம். பொருளாதார ரீதியிலான இச்செல்வம் லௌகிக வாழ்விற்கு அடிப்படையானது மனிதன் உடலால் மட்டுமன்றி உணர்வாலும் இன்புறமுடிந்தவன் அவனது ஆன்மீக நாட்டங்கள் தத்துவம், கலை, இலக்கியம் இசை முதலிய பற்பலவாகும். இவையனைத்தும் ஆன்மீகச் செல்வங்களாகும்.

ஆன்மீகச் செல்வங்கள் அனைத்தும் சாதாரண மக்கள் அடைந்தின்புறுவதற்கு ஒரே வழி செவிவழியாக கேள்விமூலம் பெறுவதுதான் எனைத்தானும் நல்லவை கேட்க வேண்டும் என்றும் கேள்வி ஞானம் மூலம் நல்லறிவு பெற முடியும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

கல்வியறிவு குறைந்த நம் நாட்டில் மக்கள் கேள்விஞானம் மூலமே நல்லறிவுபெற்றுப் பண்பாடுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். இசை, நாடகம், கதாகாலட்சேபங்கள் மூலமாக நமது பண்பாட்டை நம் முன்னோர்கள் பரப்பிவந்தார்கள், இன்னும் நம் மக்கள் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, நாடகம், சொற்பொழிவுகள் மூலமாகவே நல்லறிவு பெற்று அரசியல், உலக விவரங்கள் பற்றித் தெரிந்து கொண்டு நம் சனநாயகமரபையும், பண்பாட்டையும் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள்.

கேள்விச்செல்வத்தில் தலையாயதாக இலக்கியமன்றங்கள் மூலம் நடைபெறும் சொற்பொழிவுகள், கதாகாலட்சேபங்கள், பட்டிமன்றம், வழக்காடுமன்றம் முதலியன இன்று திகழ்கின்றன.

தமிழகத்தில் கம்பன்அடிப்பொடி சா. கணேசன்அவர்கள் கம்பன் கழகம் மூலமாக இலக்கியஞானத்தைப் பரப்பியுள்ளார் அவரது அடிச்சுவட்டில் பலகம்பன்கழகங்கள் உருவாகி தமிழகமெங்கும் இலக்கியமணம் பரப்பி செவிச் செல்வம் ஈந்து சீர்பெற்றிலங்குகின்றன.

வள்ளுவர் மன்றங்களும், இளங்கோ, பாரதியார் முதலிய கவிஞர்கள் பெயரிலும் பலமன்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

றங்கள் திகழ்கின்றன. இராஜபாளையத்தில் மணிமேகலை மன்றம் சிறப்புடன் இயங்கி வருகிறது.

இம்மன்றங்கள் மூலமாக இலக்கியதத்துவச் சிந்தனைகளை சீரியமுறையில் சுவையுடன் தருகின்றார்கள். இலக்கிய சொற்பொழிவாளர்கள் பலர்தோன்றியுள்ளனர். மிகுந்தபொருட் செலவில் ஏற்பாடுசெய்யும் இலக்கிய நிகழ்ச்சிகள் மூலமாக பல்லாயிரகணக்கான மக்கள் கேட்டின்புறுவது மட்டுமன்றி, நற்சிந்தனைகள் மூலமாக நன்னெறியில் நடக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. சமுதாய நல்வாழ்விற்கு அடிப் படையாக அமைவது சிந்தனையில் செம்மை தான் செம்மையான சிந்தனை அமைவதற்கு மன்றங்கள் பேருதவிபுரிகின்றன.

மன்றங்கள் அளிக்கும் செவிவிருந்தினை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மன்ற நிகழ்ச்சிகள் நடைபெற ஊக்கமும் ஆக்கமும் அளித்துப் பேணி வளர்க்க வேண்டும். அப்போதுதான் செவிச் செல்வம் சீர்பெற்றுத் திகழமுடியும்.

"திருமகளே! நீ சான்றோர்களையும் அறிஞர்களையும் சேராமல் செருக்கும் அறியாமையும் மிக்க சாதாரண மனிதனைச் சேர்ந்து இருக்கிறாயே? இது நியாயமா?"

"அறிஞனே! அறிவினை வெறுத்து நான் விலகவில்லை. எனக்கு எல்லோரும் சமம்தான். ஆனால் அந்த சாதாரண மனிதனிடம் நான் சேராவிட்டால் அவனை யார் மதிப்பார்கள்? கல்வி, கலை, சான்றாண்மையில்லாத அவனை பணம்கொடுத்தாலாவது உலகம் மதிக்கட்டும் என்று இரக்கப்பட்டுத் தருகிறேன்."

— குவலயானந்தம்
(அப்பயதீட்சிதர்)

★ ★

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

— குறள்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மகாகவி பாரதியார்

வித்வான் ல. சண்முகசுந்தரம்

மகாகவி பாரதியார் தெய்வபக்தி நிறைந்தவர். தெய்வபக்திதான் பாரதியாரைக் கவிஞராக்கியது தெய்வபக்தி இல்லாவிட்டால் பாரதியார் கவிஞர் ஆகி இருக்கமாட்டார். அவருடைய தேசபக்தி முரட்டுத்தனமாகச் சில காரியங்களைச் செய்யத் தூண்டி இருக்கும்.

தெய்வபக்தி உள்ளவனிடம் உண்மையான தேசபக்தி இருக்கும். வெறும் கட்டை மண்ணையும் குட்டியச் சுவரையும் கட்டி அழுகிற காரியம் மட்டும் தேசபக்தி ஆகாது. மனிதர்களையும் வாழ்க்கையையும் மதிக்கிற காரியந்தான் தேசபக்தி.

பக்திமான் சும்மா இருக்கமாட்டான். சோம்பலுக்கும் அவனுக்கும் வெகுதூரம்.

மனிதர்களுக்கும், மனிதவாழ்க்கைக்கும் ஏற்படுகிற இடையூறுகளை விலக்குவான். தடைகளை நொறுக்குவான். தொல்லைகளை வேரற வெட்டி வீழ்த்துவான்.

மனிதர்களை மதிக்கிற காரியம் ஒன்றே தேசத்தை மதிக்கிற காரியமாகும் மனிதர்களை அதாவது, உணர்ச்சிகளையும், கலைகளையும், பண்பாடுகளையும், செயல்திறமைகளையும் மதிக்கிற காரியமே தேசபக்தியாகப் பரிமளிக்கிறது

தேசபக்தி சுரப்பதற்கு ஆதாரமாய் இருக்கிறது தெய்வபக்தி.

தெய்வபக்தி என்றால் மக்களை மதிக்கிற காரியந்தான். வாழ்க்கையை மதிக்கிற காரியந்தான். மனிதர்களிடத்தும் வாழ்க்கையினிடத்தும் மரியாதை இல்லாத பக்தி வெறும் பித்தலாட்டந்தான்.

பாரத நாட்டை ஆங்கிலேயர்கள் அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டார்கள். ஆங்கிலேயருக்கு பாரதநாடு வலிய அடிமையாகி விட்டது என்று கூடச் சொல்லலாம்.

அடிமைப்பட்டதின் காரணமாக மக்கள் சின்னபின்னமாகச் சிதறிப்போனார்கள். மக்களின் வாழ்க்கை ஒரே இருள் மயமாகி விட்டது. சுறுசுறுப்போ உற்சாகமோ இல்லாமல் சோம்பலுக்கு இடமாகிவிட்டது மக்களின் வாழ்க்கை.

அடிமையானது, அடிமைமையை உற்பத்தி பண்ணும். ஆங்கிலேயர்களுக்கு அடிமையான பாரதமக்கள், தங்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்தி ஒருவரை ஒருவர் அடக்கி ஆள ஆரம்பித்தார்கள்.

ஜாதிக்கொடுமை மதவிரோதம், ஏழை பணக்காரன், படித்தவன் படியாதவன், உத்தியோகம் பார்ப்பவன் குடும்பகாரியம் பார்ப்பவன் இப்படி ஒவ்வொன்றிலும் உயர்வு

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தாழ்வை உண்டாக்கி, ஒன்றை ஒன்று அடக்கி ஆளுவதில் முனைந்து செயல்பட்டன. அதனால் வெள்ளைக்காரனிடம் பட்ட அடிமை நிலை சாசுவதம் ஆகிவிட்டது.

விமோசனமே ஏற்படாதோ என்று கை விட்ட நிலையில் அதாவது, நாம் மனிதர் என்னும் நினைப்பே இல்லாமல், நாம் பிறர்க்கு அடிமைப் பட்டுக் கிடக்கிறோம் என்னும் சுரணையே இல்லாமல், உயிரற்ற சவங்களாய் நடமாடிக் கொண்டிருந்த நிலையில் கடவுளுடைய அருளால் தியாக மூர்த்திகள் அங்கங்கே சிலர் அவதரித்தார்கள்.

அவர்கள் அவ்வளவுபேரையும் ஒன்று படுத்தி வகுத்து நிறுத்தியவர் மகாத்மா காந்தி. அவருடைய காரியம் அதிசயமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக பாரத மக்களுக்கு வெளிச்சம் கிடைத்தது கண்ணைத் திறந்து பார்த்தார்கள். அடடா! நாம் மனிதர்களல்லவா! என்னும் நினைப்பு வந்தது நம்மை எப்படிப் பிறன் அடக்கி ஆளலாம் என்று கொதித்தார்கள்.

பயம் மெள்ள மெள்ள நழுவியது. ஊக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வந்தது.

மகாகவி பாரதியார் தனித்து நிற்க வில்லை. மக்களோடு சேர்ந்து கலந்து நின்றவர் பாரதியார்.

பாரத சமுதாயத்தின் ஊக்கமும் எழுச்சியும் தேசபக்தியோடு சேர்ந்து எப்படிக் கவியாய் உருவெடுக்கிறது பாருங்கள்.

வந்தே மாதரம்
    என்போம் - எங்கள்
மாநிலத் தாயை
    வணங்குதும் என்போம் (வந்தே)

ஒன்றுபட் டால்உண்டு
    வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில்
    அனைவர்க்கும் தாழ்வே (வந்தே)

நன்றிது தேர்ந்திடல்
    வேண்டும் - இந்த
ஞானம்வந் தால்பின்
    நமக்கெது ? வேண்டும்' (வந்தே)

நாம் எல்லோரும் மனிதர்கள் மனிதர்களாக இருந்தும் ஒற்றுமை இல்லாமல் இருக்கிறோம். நம்மில் ஒருவரை ஒருவர் விரோதித்துக் கொண்டிருக்கிறோம். அதனாலேயே நாம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். இந்த உண்மையை எல்லோரும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாலே போதுமே? அப்புறம், இன்னொருவன் நம்மை அடக்கி ஆளமுடியுமா?

உண்மை உணர்ச்சியாகிய ஞானம் உதிக்க வேண்டியதுதான். விடுதலையும் உதயமாகிவிடும். பிறகு நமக்குத் தேவையானவற்றை நாமே தயாரித்துக் கொள்வோம். அப்படி நம்மால் உண்மையை உணர முடியாவிட்டால் செத்தாவது தொலைவோம் என்கிறார்.

''எப்பதம் வாய்த்திடு(ம்)
    மேனும் - நம்மில்
யாவர்க்கும் அந்த
    நிலைபொது ஆகும் (வந்தே)

முப்பது கோடியும்
    வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி
    முழுமையும் வீழ்வோம்'' (வந்தே)

ஏதோ நடக்கக் கூடாத காரியம் நடந்துவிட்டது. போனது போய்த் தொலையட்டும் இனி நடப்பனவேனும் நல்லபடியாக நடக்கட்டும் என்று மன்றாடுகிறார்.

புல்லடி மைத்தொழில்
    பேணி - பண்டு
போயின நாட்களுக்(கு)
    இனிமனம் நாணி (வந்தே)
    தொல்லை இகழ்ச்சிகள்
        தீர - இந்தத்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தொண்டு நிலைமையைத்
 தூவென்று தள்ளி

வந்தே மாதரம்
 என்போம் - எங்கள்
மாநிலத் தாயை
 வணங்குதும் என்போம்.''

சாக்கடைப் புழுக்களாய் நெளிந்து நெளிந்து, சாகவும் தெரியாமல், வாழவும் முடியாமல் தத்தளிக்கும் மனிதர்மேல் ஏற்பட்ட பரிவும் அன்பும் கொதித்துச் சீறுகிறது.

பக்தியிலிருந்து பரிவு பிறக்கிறது அது அன்பாய்ப் பரிணமிக்கிறது. வீராவேசமாய்ப் பொங்குகிறது.

இனி உரிமையோடு கண்டிப்பை எப்படி வெளியிடுகிறது. அந்த தேசபக்தி என்பதைப் பார்ப்போம்.

பாரதத்தாய் பெருந்தூக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதாகத் தெரிகிறது. பாரதியாருக்கு. அன்னையின் சந்நிதானத்தின் - பள்ளியறையின் வாயிற்படியில் நின்று துயில் எழுப்புகிறார் கவிஞர்.

எப்படி என்று பாருங்கள்'

தாயே! எங்களுக்குப் புத்தி வந்து விட்டது. நாங்கள் எல்லோரும் உன் பிள்ளைகள் என்பதை உணர்ந்து விட்டோம். வெளிச்சம் கண்டுவிட்டது. தாயே! எழுந்தருள், எழுந்தருள்

பொழுது புலர்ந்தது
 யாம்செய் தவத்தால்.,
புன்மை இருள்க் கணம்
 போயின எல்லாம்.,

எழுபசும் பொற்சுடர்
 எங்கணும் பரவி,
எழுந்து விளங்கிய(து)
 அறிவெனும் இரவி ;

தொழுதுனை வாழ்த்தி
 வணங்குதற்(கு) இங்குன்
தொண்டர்பல் லாயிரர்
 சூழ்ந்துநிற் கின்றோம் ;

விழிதுயில் கின்றனை
 இன்னும்எம் தாயே !
வியப்பிது காண்பள்ளி
 எழுந்தரு ளாயே !

பாரதியார் சத்தம் போட்டுத்தான் அழைத்தார். ஆனாலும் அன்னையின் செவியில் ஏறவில்லை உறக்கம் கலையவில்லை தாய்க்கு. அவளுடைய இதயம் அப்படிப் புண்பட்டு ஆறாமல் இருக்கிறது.

தன்னை மறந்து வேதனையில் தூங்கு -கிறாள் தாய். பயந்து விடுகிறார் பாரதியார். அதனால் கொஞ்சம் எரிச்சலே வந்து விடுகிறது.

மதலையர் எழுப்பவும்
 தாய்துயில் வாயோ ?
மாநிலம் பெற்றவள்
 இஃதுண ராயோ ?

குதலை மொழிக்கிரங்-
 காதொரு தாயோ ?
கோமக ளே ! பெரும்
 பாரதர்க்(கு) அரசே !

விதமுறும் நின்மொழி
 பதினெட்டும் கூறி,
வேண்டிய வாறுனைப்
 பாடுதும் காணாய் ;

இதம்உற வந்தெமை
 ஆண்டருள் செய்வாய் ;
ஈன்றவ ளேபள்ளி
 எழுந்தரு ளாயே !

பாரதத்தாயின் சன்னிதானம் பாரத மக்கள்தான். அந்த சன்னிதானத்தின்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

முற்றத்தில் ஒரு முரசம். அன்னை பாரதத் தாய் சக்கரவர்த்தினி அல்லவா? அவருடைய சன்னிதானத்தின் முற்றத்தில் முரசு இருந்து முழங்கத்தானே செய்யும்.

பச்சைப் பசுங்கிளி ஒன்றிடம் பாரதியார் ஆசையோடு கேட்கிறார். ''கட்டி மரகதம் போன்ற என் ஆருயிரே! பசுங்கிளியே! எம் அன்னையின் முன்றிலில் நின்று முழங்கும் முரசின் பெயர் என்ன தெரியுமா''? என்று கேட்கிறார்.

ஏன் தெரியாது? வேதம் என்பது தான் அதன் பெயர் என்கிறது கிளி

வேதம் என்றால் எப்பேர்ப்பட்ட வேதம்? ''சொல்லென்றால் உண்மையாக இருக்க வேண்டும். செயலென்றால் நீதியாக இருக்க வேண்டும். ஆனந்தம் என்பது அதுதான்.'' என்று அடித்துச் சொல்கிற வேதந்தான் பாரதத்தாயின் முரசு என்று சொல்கிறது கிளி.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

ஆசை மரகதமே!
அன்னைதிரு முன்றிலிடை,
ஓசை வளர்முரசம்
ஓதுவாய்; - பேசுவது

சத்தியமே; செய்தல்
தருமமே; என்றொலிசெய்
முத்தி தரும் வேத(ம்)
முரசு''

பாரத தேசம் பாரதியாருக்கு எப்படித் தரிசனம் கொடுக்கிறது?

இமயமலையும், கங்காநதியும், கோயில்களும், கோபுரங்களும், சங்கீதமும் பரத நாட்டியமும், நெல் வயல்களும், கரும்புத் தோட்டங்களும், ஆலைகளும் சோலைகளும் எல்லாம் சேர்ந்து பாரதியாருக்குக் காட்சி கொடுக்கிறது நாடு அபூர்வமான அழகுடன்.

எவ்வளவு காலத்திற்கு முற்பட்டவள் எங்கள் அன்னை? எத்தனையோ விஷயங்களை அளந்து, துல்லியமாகக் கால நிர்ணயம் செய்கிற நிபுணர்கள் கூட, எம் அன்னையின் ஜாதகத்தைக் கணிக்க முடியவில்லையே! எவ்வளவு பெரியவள் எங்கள் தாய் என்று அதிசயக்கிறார் பாரதியார்

அவள் உண்டாக்கின நாகரீகம், பண்பாடு, கலை அவ்வளவும் பழமைக்கும் பழமையானவை. உலகில் இதுபோன்ற பழமையான கலைகளும், பண்பாடும், நாகரீகமும் வேறு எங்கும் இல்லை. அதாவது அங்கெல்லாம் அவை உயிரோடு இல்லை. மக்களின் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி, காட்சி சாலையில் உட்கார்ந்து விட்டன. ஆனால் எம் அன்னையின் உதரத்தில் உதித்த அத்தனையும், இன்றும் எம் பழக்க வழக்கத்தில் நிறைந்துள்ளன. இளமை நலம் குன்றாமல் புதுமைக்கும் புதுமையாய் மிளிர்கின்றன

எம் அன்னை, உலக சகோதரிகள் அத்தனை பேரிலும் மூத்தவள். ஆனாலும் கட்டுக் குலையாத கன்னி

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

''தொன்று நிகழ்ந்த(து)
அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்க
ளும் - இவள்,

என்றுபி றந்தவள்
என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள்
தாய்''

'' யாரும் வகுத்தற்(கு)
அரிய பிராயத்தள்
ஆயினு மேஎங்கள்
தாய் - இந்தப்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பாருள் எந் நாளும்ஓர்
கன்னிகை என்னப்
பயின்றிடு வாள் எங்கள்
தாய்''

மேலும் சொல்லுகிருர் பாரதியார்.

எம் அன்னை பேசுகிற பாஷை பதினெட்டு. அவளுக்குத் திருமுகங்களோ முப்பதுகோடி. ஆனாலும் கொள்கை. உணர்ச்சி உறுதி எல்லாம் ஒன்றுதான். நீதிதான் அவளுடைய கொள்கை. நீதிக்கு விரோதமானவை எவையானாலும் அவற்றை பஷ்மம் ஆக்கிவிடுவாள்.

'' முப்பது கோடி
முகம்உடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடை
யாள் - இவள்

செப்பும் மொழிபதி
னெட்டுடை யாள்; எனிற்
சிந்தனை ஒன்றுடை
யாள் ''

'' நாவினில் வேதம்
உடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை
யாள் - தனை

மேவினர்க்(கு) இன்னருள்
செய்பவள் ; தீயரை
வீட்டிடு தோள்உடை
யாள் ''

'' நல்லறம் நாடிய
மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாள் எங்கள்
தாய் ; - அவர்

அல்லவர் என்னின்
அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு
வாள் ''

உண்மையானது உணர்ச்சிமயமாய்ப் பொங்கி தமிழில் நடனமே ஆடுகிறது தாளத்தோடும், இசையோடும் ஜதிபிசகாமல் நடனமாடுகிறது.

இமயமலை பெரியமலை. உலகத்திலேயே பெரியமலை. எப்பொழுதும் பனியால் மூடப் பட்டு மோனத்தில் இருப்பது போல சலனமே இல்லாமல் நிறைந்து நிற்கும் புனித மலை. அதனுடைய ஒய்யாரத்தையும் கம்பீரத்தையும் பார்த்தால், மரணம் என்கிற ஒன்றையே காலடியில் போட்டு துவைத்து தைரியமாக நிமிர்ந்து நிற்கும் திண்மை கண்முன் தெரியும்.

இந்திய நாகரீகமும். சமயமும், வழி பாடும், கலைகளும், பண்பாடும் நிலைத்து நிற்கிறதைப் பார்த்தால், வெண் பனிமூடிய இமயமலைதான் ஞாபகத்துக்கு வரும்.

அப்படியானல் பாரதத்தாயை இமாசலனுடைய மகள் என்று உபசாரமாகச் சொல்லலாம் அல்லவா? பாரதியாரும் அப்படியே சொல்கிருர்.

'' வெண்மை வளர்இம -
யாசலன் தந்த
விறன்மக ளாம் எங்கள்
தாய் - அவள்

திண்மை மறையினும்
தான்மறை யாள்; நித்தம்
சீர்உறு வாள் எங்கள்
தாய் ,'

(அவள் திண்மை மறையினும்............சீர் உறுவாள். கால வித்தியாசத்தால் சோதனைக்கு மேல் சோதனை ஏற்பட்டு பாரதப் பண்பாட்டின் கட்டுக்கோப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தளர்ந்தது உண்மைதான். ஆனாலும் பண்பாட்டின் உள்ளீடாகிய உயிர் என்றும் தடைப்பட்டதில்லை. ஒவ்வொரு சோதனையிலும் வெற்றி பெற்று புதுப்புது பொலிவோடு ஜொலிக்கிறது பாரதப் பண்பாடு)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

உண்மையை உணர்ச்சிமயமாகப் பார்க்கிறார் பாரதியார். அவர் உணர்ச்சி-மயமாகப் பார்ப்பதால் உண்மைக்குத் தெளிவு பிறக்கிறது தமிழ் பாஷை அந்தத் தெளிவுக்கு உறுதி கொடுத்து விடுகிறது.

பேதத்தை வளர்ப்பது நமது படிப்பு, அறிவு, உத்யோகம், தொழில், பணம், ஜாதி, மதம் இவைகளில் ஏற்பட்ட கோளாறுகள் தாம், மாயை என்று சொல்ல வேண்டுமானால் மேலே குறிப்பிட்ட கோளாறுகளைத்தான் சொல்ல வேண்டும்.

பாரதியாரிடமும் மாயை வந்து வாலாட்டித்தான் பார்த்தது. ஆனால் அதற்கு இடங்கொடுக்கவில்லை. ''ஒழுங்காய் இரு. வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்'' என்று அதட்டி உட்கார வைத்து விட்டார் பாரதியார்.

அவரே சொல்கிறார்.

''எத்தனை கோடி
படைகொண்டு வந்தாலும்
மாயையே - நீ
சித்தத் தெளிவெனும்
தீயின்முன் நிற்பாயோ
மாயையே

இருமை அழிந்தபின்
எங்குநிற் பாய்அற்ப
மாயையே - தெளிந்து
ஒருமை உணர்ந்தார்முன்
ஓடாது நிற்பாயோ
மாயையே

மகாகவி பாரதி வாழ்க !

மணிமேகலை — பிற மொழிகளில் ஆக்கியவர்கள்:

தெலுங்கு — பூதலப்பட்டு ஸ்ரீராமுலுரெட்டி

மலையாளம் — பேராசிரியர் ப. ஜனார்த்தனம் பிள்ளை

ஆங்கிலம் — பேராசிரியர் ஜி. யூ போப்
,, ஜான் பேட்மேன்
,, பிரேமாநந்த குமார்

ஜப்பான் — டாக்டர் ஷு ஹி கோசாகா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தெலுங்கு மொழி - ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர் சி. ஆர். சர்மா

நம்நாட்டில் தோன்றிய சிறந்த அரசர்களுள் ஒருவரும், பன்மொழிப் புலவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் கோதையின் திருக்கதையைப் பெருங்காப்பியமாக வரைந்துள்ளார் வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றிருந்த அம்மன்னரது தாய் மொழி கன்னடம் என்று சிலர் கூறுவது சிறிது வியப்பாக இருக்கும். ஆனால், நாட்டுமொழிகளிலே தெலுங்கு மேன்மையானது (தேச பாஷலந்து தெலுகு லெஸ்ஸ) என்று அவர் கூறியதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் அவர் தெலுங்கு மொழியில் பேரன்பு கொண்டவர். அவர் அரசுபுரிந்த காலம்தான் தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. அவரது அவையில் தெலுங்குக் கவிஞர்கள் பலர் இருந்தனர். இத்தகைய சிறப்புமிக்க மன்னர் பெருமான் தெலுங்கு மொழியைப் புகழ்வதோடு மட்டு மல்லாமல், தெலுங்கில் சிறந்த காப்பியமும் படைத்துள்ளார்.

ஸ்ரீ கிருஷ்ணதேவராயரைப் போலவே, மகாகவிபாரதியாரும், 'சுந்தரத்தெலுங்கு' என்று போற்றியுள்ளார் பிறமொழி வல்லுநர்களால் போற்றப்பட்ட தெலுங்கின் இனிமை மேல்நாட்டு அறிஞர்களையும் மிகவும் கவர்ந்துள்ளது. ஹென்றிமார்ரிஸ் என்பவர் இவ்வாறு கூறுகிறார். ''தெலுங்கு மொழி செவிக்கு மிகவும் இனிமையானது பாமரர்களின் இதழ்களிலும் அது இனிமையாக ஒலிக்கப்படும் இதனைக் கிழக்கு நாடுகளின் இத்தாலிய மொழி என்று கூறலாம். மொழி வளத்திலும், இலக்கிய வளத்திலும் தமிழ் சிறந்ததாக இருக்கக் கூடும்; ஆயினும் இனிமைக்குப்பெயர்போனது தெலுங்குமொழி'' இவ்வண்ணமே திராவிட மொழிகளுக்குச் சிறந்த தொண்டு புரிந்த இராபர்ட்கால்டு வெல்லும் கூறியுள்ளார். மொழி வளத்தில் தமிழுக்கு அடுத்ததாக இருப்பினும், இனிமையில் தெலுங்கு மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது அவரது கருத்து. ஆகவே தமிழைப்போலத் தெலுங்கும் ஓர் இனிய பழைய மொழி என்று கூறுவது பொருந்தும்.

அறிவியலைக் கற்பிப்பதற்குத் தெலுங்கு மிகவும் பயன்படும் என்று சிறந்த விஞ்ஞானி ஜே பி. எஸ் ஆல்டேன் கருதியதைக் காணலாம். ''வெளிநாட்டுப் பொருள்களை ஒதுக்கிவைப்பது போல், வெளிநாட்டுச் சொற்களை ஒதுக்கி வைத்தல் இயலாது. பிற இந்திய மொழிகளை விட, தெலுங்கு அவற்றை எளிமையாக உட்கொள்ளுகிறது. ஆதலால் அறிவியல், மருத்துவம், பொறியியல் முதலியவற்றைக்கற்பிப்பதற்கு இந்தியுடன் அது போட்டியிடக் கூடும்.''

தெலுங்கு மொழிக்குத் தெனுகு, திரிலிங்கம், ஆந்திரம் என்னும் பெயர்களும் உண்டு. இந்திய அரசியல் சட்டத்தில் குறிக்கப் பட்ட பதினைந்து மொழிகளுள் அதுவும்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஒன்று சிறப்பாக ஆந்திரப் பிரதேசத்தில் அது வழக்கில் இருந்தாலும், அதனைப் பேசுவோரை நம்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம். இன்று ஏறத்தாழ ஆறு கோடி மக்கள் தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர். எனவே நம் நாட்டில் இந்திக்கு அடுத்தபடியாக மிகுதியான மக்கள் பேசும் மொழி தெலுங்கு எனக் கூறுவது மிகையாகாது.

தெலுங்கு பேசப்படும் ஆந்திரமாநிலத்திற்கு வடக்கில் மத்திய பிரதேசம். ஒரிசா மாநிலங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் தமிழ்நாடும், மேற்கில் கர்னாடக மகாராட்டிர மாநிலங்களும் எல்லைகளாகத் திகழ்கின்றன. வட, தென் இந்திய பகுதிகளுக்கு நடுவில் தெலுங்கு மாநிலம் உள்ளது. இதனால் தெலுங்கர்களில் திராவிட, ஆரிய பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அவ்வண்ணமே திராவிடமொழியான தெலுங்கில் வடமொழி, பிராகிருதம், அராபியம் முதலிய மொழிகளைச் சேர்ந்த சொற்களும் காணப்படுகின்றன.

தெலுங்கு மொழியின் தோற்றத்தைப் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. அது திராவிட மொழி என்றும், ஒருவிதமான பிராகிருத மொழி என்றும், வடமொழியைப் பின்பற்றிய மொழி என்றும் கருத்துக்கள் உள்ளன. ஆயினும் தெலுங்கு மொழி திராவிட இனத்தைச் சார்ந்தது என்பது தான் பலரின் கருத்து. அது மத்திய திராவிட மொழி என்று இன்றைய மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் தெலுங்கிலுள்ள அடிப்படைச் சொற்கள், வினைச்சொற்கள், ஒட்டுநிலை அமைப்பு முதலியவற்றை ஆராயும் பொழுது தெலுங்கு மொழி திராவிட இனத்தைச் சார்ந்ததாகப் புலப்படும்.

தெலுங்கு மொழியின் வரலாற்றில் கீழ்க்கண்ட முக்கிய காலக்கட்டங்களைக் காணலாம். 1 கி பி 1100 வரை பிராகிருத மொழியின் செல்வாக்கு 2. கி பி. 1100 1900 வடமொழியின் செல்வாக்கு. பின்னர் ஐரோப்பிய மொழிகளின், சிறப்பாக ஆங்கிலத்தின் செல்வாக்கு காணப்படுகிறது

தெலுங்கு நாட்டின் முதல் அரசர்கள் ஆந்திரசாதவாகனர் எனக் கருதப்படுகிறது. அவர்கள் கையாண்ட மொழி பிராகிருதம் அம்மொழியில் எழுதப்பட்ட ''காதாசப்தசதி'' யில் (700 செய்யுட்கள் கொண்ட காப்பியம்) தெலுங்குச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன. அம்மன்னர்களின் காலத்திலேயே தெலுங்கு இலக்கியம் தோன்றியிருக்கலாம். ஆனால் அதற்குத் தக்க சான்றுகளைக்காட்ட இயலவில்லை.

சாதவாகனர்களுக்குப் பின்னர் வந்த தெலுங்கில் சாசனங்களும் எழுதப் பட்டன. பழைய தெலுங்குச் சாசனங்களில் 'ழ' என்னும் தமிழ் எழுத்தும் இருக்கின்றது பிற்காலத்தில் அது மறைந்து போய் விட்டது. எனவே 'சோழ' போன்ற சொற்கள் சோழ, சோட' என ஆயின அதாவது ழகரம் தெலுங்கில் 'ள' கர 'ட' கரமாகத் திரிந்தது.

வட. மொழியில் ஐம்பது எழுத்துக்களும் பிரகிருத மொழியில் நாற்பது எழுத்துக்களும் இருந்தாலும், தெலுங்கு மொழியில் முப்பத்தாறு எழுத்துக்கள் மட்டும் இருக்கின்றன. அவை:- அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ ஔ, அஂ அஃ க, க^{3}, ச, ச், ஜ, ஜ், ட, ட^{3}, ண, த, த3, ந, ப ப3 ம, ய, ர, ல, வ, ஸ, ஹ, ள. வட மொழிச் சொற்கள் சேரச் சேர க^{2}, க^{4}, ச^{2}, ச^{4}, போன்ற எழுத்துக்களும் சேர்ந்து இவ்வாறு இன்றைய தெலுங்கு மொழிக்கு ஐம்பத்தைந்து எழுத்துக்கள் உண்டாயின.

தெலுங்கு எழுத்துக்களில் பல்லொலிகளான ச, ஜ, என்பவை இருக்கின்றன. இவ்விரண்டு ஒலிகளும் பற்ற திராவிடமொழிகளிலோ வட மொழியிலோ இல்லை.

தெலுங்குச் சொற்களைத் தத்சமம், தத்பவம், தேசியம் கிராமியம் என்று நான்கு பிரிவுகளாக இலக்கண ஆசிரியர்கள் பிரிப்பர். சமஸ்கிருத, பிராகிருத மொழிகளைச் சார்ந்த

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சொற்களை அப்படியே எடுத்துக்கொண்டதால் அவை தத்சமமாயின சான்றுகள் :

சமஸ்கிருதம்	பிராகிருதம்	தெலுங்கு
ராம :		ராமுடு (இராமன்)
அக்னி	அக்கீ	அக்கி [தீ]
ஸ்ரீ	சிரி	சிரி [திரு]

சமஸ்கிருத பிராகிருத மொழிகளிலிருந்து பிறந்த தெலுங்குச் சொற்களைத் தத்பவம் என்பர்.

சான்றுகள் : -

சமஸ்கிருதம்	பிராகிருதம்	தெலுங்கு
ஆகாச :		ஆகஸமு [ஆகாயம்]
குட்யம்		கோட [சுவர்]
ப்ருதிவீ	புடவீ	புடமி [பூமி நிலம்]

தெலுங்கு நாட்டில் வழக்கிலுள்ள சொற்களுக்குத் தேசியம் என்று பெயர்,

சான்றுகள் ;

ஊரு	[ஊர்]
இல்லு	[இல் வீடு]
தூட	[கன்று]

தெலுங்கு இலக்கணத்திற்கு மாறுபட்ட சொற்களைக் கிராமியம் என்பர். அதாவது வழக்கிலுள்ள பேச்சு மொழி [கொச்சை மொழி] தான் கிராமியம். இந்தச் சொற்களைப் பழைய இலக்கண நூலாசிரியர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், இன்றைய தெலுங்கு எழுத்தாளர்களும் புலவர்களும் பேச்சு மொழி நடையிலேயே நூல்களை அமைக்கின்றனர். பழையமரபில் எழுதும் எழுத்தாளர்களும் இருக்கின்றனர்; ஆனால் அவர்களது எண்ணிக்கை மிகக் குறைவு.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிடுகு வேங்கடராமமூர்த்தி என்னும் புலவர் பேச்சுமொழி இயக்கத்தைத் தோற்றுவித்தார் பழைய தெலுங்கு இலக்கியங்களில் பேச்சு மொழியைச் சார்ந்த வழக்குச் சொற்களை எடுத்துக் காட்டி, அவர் தம் இயக்கத்திற்கு வலுவூட்டினார், அவ்வியக்கத்தின் தொடக்கத்தில் பெரும் எதிர்ப்பு இருந்தது அவரது கொள்கையைப் புலவர்களும், எழுத்தாளர்களும் ஏற்றுக்கொள்ள வில்லை. தெலுங்கு நாட்டில் பேச்சுமொழி அந்தந்தப் பகுதிகளில் வெவ்வேறாக இருக்கின்றது என்றும், ஆகையால் நடையில் ஒரு சீரமைப்பு (uniformity) இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதினர். இதிலும் ஓரளவு உண்மை இல்லாமல் இல்லை. அதாவது இராயலசீமையில் [சித்தூர், கடப்பை, கர்னூல், அனந்தபுரம் மாவட்டங்கள்] வழங்கப்படும் சில தெலுங்குச் சொற்கள், கிருஷ்ணாகோதாவரி முதலிய மாவட்டங்களில் வாழ்வோர்க்கு எளிதில் விளங்கா. அதுபோலவே தெலிங்கானாவைச் [பழைய ஹைதராபாத் மாநிலம்] சார்ந்த சில வழக்குச் சொற்கள் மற்றப் பகுதிகளில் சிறிது விந்தையாக ஒலிக்கப்படும். எருமை என்னும் தமிழ்ச் சொல்லுக்குத் தெலுங்கு நாட்டில் எனுமு, கேதெ, பர்ரெ என்னும் சொற்கள் அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சில வேறுபாடுகள் சில சொற்களில் காணப்பட்டாலும் தெலுங்கு நாட்டில் எந்தப்பகுதியில் பேசினாலும் அது தெலுங்கு மொழிதான். மதுரை வழக்கிற்கும் சென்னை வழக்கிற்கும் சில வேறுபாடுகள் இருப்பினும் அவை எல்லாம் தமிழ்தான் இன்றைய தெலுங்கில் வட்டார வழக்குகள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றன. விஜயவாடாவில் அச்சிடப்பட்ட தெலுங்கு நாளிதழை எல்லோரும் படித்து அறிந்து கொள்கின்றனர். கடப்பை வானொலி நிலையத்தில் அஞ்சல் செய்யப்படும் தெலுங்கு நிகழ்ச்சிகளை அனைவராலும் அறிந்து கொள்ள முடிகிறது. நாள், வார, மாத இதழ்களும் வானொலி நிலையங்களும் பொதுநிலைப்பேச்சு வழக்குத் தெலுங்கை உருவாக்குகின்றன. தெலுங்கு நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களும் பேச்சு மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன பல ஆராய்ச்சியாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளைப் பேச்சு மொழியில் எழுதுகின்றனர். எனவே, விரைவில் ஒரு நிலையான தெலுங்கு பேச்சு மொழி உண்டாகி பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள வேற்றுமை குறையும் என்று நான் கருதுகிறேன்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கலைகள் - ஒரு சிந்தனையில் ......

தேனி வே. பா. வெங்கட்டரமணன், B. Com., (C. S.,)

கலைகள் :- என்றும், எப்போதும் அழியப் போவதில்லை. இருப்பினும், அவற்றின் தலையாய நோக்கமும், பயனும் காலத்திற்கேற்ப மாறுபடும். சிற்பக்கலை சித்திரக்கலை, கவிதை உள்ளிட்ட இலக்கியக் கலைகள், சங்கீதக் கலை போன்ற நவீன கலைகள் சென்ற சில நூற்றுண்டுகளுக்கு முன்வரை எந்தெந்தஇலட்சியங்களை எல்லையாகக் கொண்டிருந்ததோ - அந்த இலட்சியங்களும், அவற்றின் எல்லைகளும் மிகச் சுருங்கிப் போயிருப்பதை இன்று நாம் கண் கூடாகப் பார்க்கிறோம். வேலை செய்தால் கூலி - கூலியின் அளவுக்கு வேலை என்று தொழிலும், அதன் பயனும் இயைந்து வைத்துக் கணக்கிடப் படுகின்ற இந்த நூற்றுண்டில் கலைகள் எவ்வாறெல்லாம் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்பது, சிந்தித்தால் புலப்படும். தொழிலும், கலையும் வெவ்வெறு துறைகள் இவை ஒன்ருக முடியுமா? ஒரு தொழிலினைச் செய்பவன் அதை முடித்தும், அதற்காகக் கிடைக்கின்ற பயனைப் பெற்றுக் கொண்டு மனநிறைவு பெற்று விடுகிருனல்லவா?

ஓவியக் கலையின் மூலம் கிடைக்கின்ற மன நிறைவோ, பயனே (புகழோ) தொழில் கிடைப்பதைப்போல சுருக்கமாய் கிடைத்து, முடிவுறுவதில்லை. கலையின் தன்மை - நயம் போல அதற்குக் கிடைக்கின்ற புகழும் அழியாத சிரஞ்சீவித் தன்மையை உடையது. ஆனல் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த அந்தக் கலைகளெல்லாம் இன்று ஆற்றலின்றி தேய்ந்து போயன்றே நிற்கின்றன ! கலைகளின் மூலம் கிடைக்கும் பயனுன புகழ், தலைமுறை தலைமுறையாக வளர்ந்து கொண்டே போகக் கூடியது இத்தகு பெருமை கலைத் துறைக்கு மட்டுமே உண்டுஎன்பதற்கு வரலாறே சான்று.

சிற்ப சித்திர சங்கீதக் கலை :-

தான் சிந்தித்த சிந்தனைகளையும்' எண்ணங்களையும், தவத்தையும், அந்த தவத்தின் ஒளிமிக்க அழகுகளையும் செதுக்கி - மெருகூட்டி கல்லைத் தெய்வமாக்கும் சிற்பியின் சிந்தனைகளை, கைகளை எப்படி விலையால் மதிக்க முடியும். கல் என்ற ஒன்றை தன் சிந்தனைப் பார்வையோடு ஒரு தெய்வமாகவோ, ஒரு மனித உருவமாகவோ ஏன் ஒரு நாயாகவோ கூட உருவாக்குபவன் சிற்பிதானே. எண்ணங்களில் படித்துப் படித்து அழகாக்கி கோடுகளாலும், வர்ணங்களாலும் அதைக் கண்ணுக்குத் தென்படும் உருவமாய், நம்மை மெய்மறந்து பார்க்கச் செய்யும் ஓவியனின் எண்ணத்திற்கும், கைவினைத் திறனுக்கும் விலை மதிக்க முடியாது. மனிதனேடு மனிதன் பேச முடிந்த மொழியைக் காட்டிலும், ஒருபடி மேலே சென்று தெய்வத்தோடு மனிதன் பேசுவதற்கு ஒரு மொழி வேண்டுமென்ற குறிக்கோளுக்காகக் கண்டுபிடிக்கப்பட்டு உருவான சங்கீதத்துக்கும் விலைகாண இயலாது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கவிதை உள்ளிட்ட ஏனைய கலைகள் :-

''Poetry is the record of the best and the happiest monuments of the happiest and best minds'' என்ற, உலக மகா கவிஞன் ஷெல்லி யின் வார்த்தையிலிருந்து ''சொல்லால் உலகத்தை ஆள்பவர்கள் கவிஞர்கள்'' என்பது மறைந்து வந்த உயர் கருத்தாகும். எழுத்தாளர்களின் கவிஞர்களின் கற்பனை சக்தியைப் பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றியவர், ஆட்சியிலிருப்பவர் பலர்.

திருமதி காரியெட் பிஃட்சர் ஸ்டோவ் என்பவர், '' டாம் மாமனின் குடில் '' எனும் நூலை எழுதியிராவிட்டால் திரு ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க மாட்டார்; மாமேதை கார்ல் மார்க்ஸ் Manifesto of the communist party, Das capital ஆகிய நூல்களை எழுதியிராவிடில் இன்று உலகில் 2/3 பங்கு நாடுகள் கம்யூனிச நாடுகளாக மாறியிருக்காது. இது போன்ற பல காரணகாரியங்கள் கலை வடிவமான இலக்கியத்தால் வளர்பவையே.

கவிஞன் ஒரு பொருளை உற்றுநோக்கி அப்பொருளாகவே ஆகிவிடுகிறான். தொடர்ந்து சிந்தித்து - கற்பனை உள்ளத்தினால் தான் கண்ட அப்பொருள் பற்றி கவி புனைகிறான். அவன் அப்பொருளின் எல்லாத் தன்மைகளையும் சிறப்பிக்காமல், தான் சிறப்பெனக் கருதும் அப்பொருளின் தன்மைகளை மட்டுமேகற்பனையில் வரைகிறான் .

கவிதைகளை இன்பியல் (comedy) மகிழ்ச்சியை அளிப்பது, துன்பியல் (Tragedy) துன்பத்தைத் தருவது என இரு வகையாகப் பிரிக்கலாம். மகிழ்ச்சியை, நகைச் சுவையை அளிக்கும் பாடல்கள், படிப்போர் உள்ளத்தில் இலேசான இடத்தைப் பெறுவதுடன், எளிதில் மறந்து விடக்கூடியதாகவும் இருக்கும், துன்பஉணர்வை அளிக்கும் பாடல்கள் மட்டுமே நம்முள் இறையுணர்வை மனிதாபிமான உணர்வை வளர்த்து, நேரிய வழியில் நம்மை செயல்பட சிந்தனையைத் தூண்டுகிறது என்பது உண்மை உலகம் முழுவதற்கும் இது பொது. ஆனால் தமிழன் மனோபாவம் மட்டும் இதில் நேர் - எதிரானது துன்பியலை மையமாகக் கொண்ட பெரும் பாலான கவிதை நூல்கள் முதல் இன்றைய திரைப்படம்வரை தோல்வியை தழுவுவதற்கு இதுவே காரணம்.

இன்ப நிகழ்ச்சியாயினும்' துன்ப நிகழ்ச்சியாயினும் அவைகளைக் கூர்ந்து, சிந்தித்து அதன் தன்மைகளை அவைகளின் வடிவமாகவே இருந்து விளக்கிக் காட்டுகிறான். அதே நிகழ்ச்சியைப் பார்க்கும் பிறரின் உள்ளத்தில் எவ்வித மாறுதலுக்கான அறிகுறிகளும் உருவாவதில்லை இது கவிஞனுக்கும் பிறருக்கும் உள்ள ஒரு தலையாய வேறுபாடு.

கவிஞனின் கற்பனையும் அனுபவமும் தான் அவனுடைய படைப்புகள் வெற்றி பெற உதவுவன. ஒரே பொருள்பற்றி பல கவிஞர்கள் கவிதை புனைந்தாலும் - அவரவர் களின் மாறுபட்ட அனுபவத்திற்கேற்பவும், கற்பனை செய்யும் திறனுக்கேற்பவுமே அவர்களின் படைப்புகள் மின்னுகின்றன. உண்மைகளும் - உண்மைகளை உணர்ந்தவர் களின் அனுபவங்களுமே கொண்டு படைக்கப் படுவதே உயர்கவிதை. அதைப் படைப்பவனே கவிஞன், கவிஞன் தன் உள்ளம் விழைந்தவாறே கவி படைக்கிறான்.

கவிஞன் தன் வாழ்க்கை அனுபவத்தில் உணராத உணர்ச்சிகள் பற்றியும், காணாத காட்சிகள் பற்றியும் - தன் கற்பனை உள்ளத்தால் உணர்ந்து சிறக்கப் பாடுவதுண்டு. இதற்கு கவிஞனின் ஒத்துணர்வே காரணம். இப்படியாக - எதிர்காலத்தைப் பற்றியும் கூர்ந்தறிந்து மக்களை விழிப்பூட்டும் வாய்ப்பு கவிஞர்களுக்கு உண்டு. இப்படிப் பட்டவர்கள் தீர்க்கதரிசிகள் தானே !

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

உயர்ந்த கற்பனை, விழுமிய உணர்ச்சி நற்சிந்தனையூட்டும் கருத்துக்கள், அழகிய வடிவம், தெளிந்த பார்வை - ஆகியவைகள் கவிஞனின் படைப்பினில் ஒருங்கே அமைந்திருப்பது படைப்பு சிறக்க வழி தரும். அவனது அனுபவத்தை ஒருவழிப் படுத்தி இயக்கி செம்மையாக்குவது படைப்பின் வடிவு இத்தகு வடிவே கவிஞனின் உள்ளத்தையும், கற்போரின், கேட்டு இரசிப்போரின் உள்ளங்களையும் தொடர்பு படுத்தும் சாதனமாக (communication) அமைகிறது.

இத்தகு சிறப்புமிக்க **கவிஞர்களை, - தீர்க்கதரிசிகளை யாரால் விலை மதிக்க முடியும்?** கவிஞன் கூட சிந்தித்து விடை காண முடியாத இக்கேள்விக்கு ''விலை மதிக்க முடியாது'' என்பதே பதில்.

சிறிது சிந்திப்போமா ?

விரிந்து பரந்த இவ்வுலகத்தை இன்றும், என்றும் (நாளையும்) அழகுடையதாய் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணமானவைகளில் தன்னுடைய கலையும் ஒன்றென்ற பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நின்றுகொண்டு பலரைக் கைகூப்பி வணங்கிடச் செய்த இலட்சியக் கலைஞர்களைப் (அரசர்களைப்) பற்றி நினைத்து விட்டு, இன்றைய நிலையையும் நினைத்தால் மனதிலே வேதனைதான் மிஞ்சுகிறது. விடிவெப் போதோ? எனும் வினை எழுகிறது. கலை என்ற ஒன்று இவ்வுலகில் இல்லாவிடில், நாம் புரிந்ததோ - புரியாமலோ மனித வாழ்க்கை இன்றைய இயந்திர மனிதர்களைப் (Robats) போன்றுதான் இருந்திருக்கும்.

அழிந்து வரும் கலைகளை அழிவிலிருந்து மீட்கும் கடமை சிறிதேனும் நமக்கு இருக்கிறதா என்று சிந்தித்து - செயல்படுவது தான், நல்லோரின் - கலைஞர்களின் - கலை உணர்வு உள்ளவர்களின் - மனிதாபிமானிகள் தியாகச் செம்மல்களின் கடமை! நல்லவர்களே சிறிது சிந்தியுங்கள்!

★
★★

ஆனை துரப்ப அரவுறை ஆழ்குழி
நானவிர் பற்றுபு நாலும் ஒருவன்ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடர் வாழ்க்கை மதித்தனை கொண்மோ

— **சூளாமணி**

யானை விரட்டிக் கொண்டு வரும்போது ஒரு மனிதன் ஓடி வந்து எதிரே பாம்புகள் நிறைந்த பாழுங்கிணற்றைக் கண்டு பயந்து விழப்போய் அங்குள்ள ஆலமரத்து விழுதைப் பற்றிக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கும்போது - தேன்கூடு கலைந்து அதிலிருந்து சொட்டும் ஒரு துளித்தேன் அவன் நாவில் பட்டு தித்திக்கிறது என்று சுவைத்து மகிழ்வதுபோல இந்த வாழ்க்கை இருக்கிறது என்பதனை உணர்வீராக!

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வடமொழி வளத்திற்குத் தமிழரின் பங்கு

பன்மொழிப் புலவர் : மு. கு. ஜகந்நாத ராஜா

1. வடமொழி வளம் :

உலகின் மிகப் பழம்பெரும் மொழிகளுள் வடமொழி தனிச்சிறப்புடைய மொழியாகும். உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றுக இலங்கும் வடமொழி இலக்கிய தத்துவ நூல்களே உலகிலேயே மிகப் பழமையான நூல்களாகும். ருக்வேதமே உலகின் முதல் நூல் என்பது ஆன்ரேர் துணிபு. நான்மறைகளும், உபநிடத ஞானக் கருவூலங்களும், ராமாயண பாரத இதிகாசங்களும், பஞ்ச தந்திரம் முதலிய கதைகளும், சாகுந்தலம், மிருச்ச கடிகம், நாகானந்தம் முதலிய நாடகங்களும், பாணினி வியாகரணம், பதஞ்சலி பேருரை, ஜோதிடசில்ப சாஸ்திர நூல்கள், இசை, நாட்டியம், அலங்கார சாஸ்திரம், வைதீக, சமண, பவுத்த தத்துவ நூல்களும் மிக்க வளமுடைய மொழி வடமொழியாகும். காவியங்களும், காதம்பரி முதலிய புனைந்துரை வசன காவியங்களும் இம்மொழிக்கு அணி செய்கின்றன.

மிகப் பெரும் பேரறிஞர்களும், தத்துவ ஞானிகளும், கவிஞர்களும் திகழும் இவ்வடமொழியின் வளம் உலகனைத்தும் வியந்து பாராட்டிய சிறப்புடையதாகும். மேனுட்டறிஞர்கள் மாக்ஸ் முல்லர், கெதெ, கோபன் ஹவர், விண்டர்நீட்ஸ், கீத் முதலியோர் வியந்து பாராட்டிய ஞானச் செல்வங்களை உடைய மொழி. இத்தகு வளமிக்க வடமொழி என்னும் சமஸ்கிருதம் மூலவேத மொழியினின்றும் திராவிட இனக் கலப்பால் பிராகிருதமாக திரிவுற்றது. சம்ஸ்கிருதம் - பிராகிருதம் என இரு கிளைகளாக வளர்ந்துவரத் தொடங்கியது இந்த பிராகிருதத்திலிருந்தே இன்றைய இந்தி, வங்காளம், மராட்டி, குஜராத்தி முதலிய வட இந்திய மொழிகள் மலர்ந்தன. இங்கு சம்ஸ்கிருதம் - பிராகிருதம் இரண்டுமே வடமொழி என்று குறிப்பிடப்படும். பிராகிருதம் தமிழில் பாகதம் என்று வழங்கப்பெறும். செந்தமிழும் கொடுந்தமிழும் தமிழ் என்பதில் அடங்குவதுபோன்றே சம்ஸ்கிருத பிராகிருதங்கள் வடமொழி என்பதில் அடங்கும்.

வடமொழி இந்தோ - யூரோப்பியன் மொழிக் குடும்பம் (ஆரிய மொழிக் குடும்பம்) சேர்ந்த மொழியாகும். கிரேக்கம், லத்தீன் முதலிய மொழிகளோடு தொடர்புடையது எனினும் எழுத்து முறை தோன்றியபோது வேத காலத்திலேயே இம்மொழி தனி நெறியிற் செழித்து வளரத் தொடங்கிவிட்டது. கிரேக்க லத்தீன் எழுத்து முறைக்கும், வடமொழி எழுத்து முறைக்கும் மிக்க வேறுபாடு உண்டு. வடமொழி எழுத்து முறையும், திராவிட மொழிகட்கும் உள்ள ஒன்றேயாகும். இஃது வடமொழிக்கும் திராவிட மொழிகட்கும் உள்ள நெருங்கிய உறவையும், பிணைப்பையும் காட்டுகின்ற சிறந்த சான்ருகத் திகழ்கின்றது. மூல திராவிட மொழிக்கும், மூல ஆரிய மொழிக்கும் மிக நெருங்கிய தொடர்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பிருந்தது என்பது சொல்லாய்வுகள் மூலம் விளங்கும் இவ்விரு மொழி இனங்களும் பாலும் நீரும்போலக் கலந்து விட்டன.

இருபெரும் இனக் கலப்பின் விளைவான மறுமலர்ச்சி யுகத்திலேயே இதிகாசங்களும், சமண, பவுத்த மத இயக்கங்களும் தோன்றி புது உணர்ச்சியையும் எழுச்சியையும் பாரத சமுதாயத்திற்கு ஏற்படச் செய்தது. அதுவே பாரதப் பண்பாடாக உருவாகிப்பொலிவுற்றுத் திகழ்கின்றது.

வடமொழி இன்று வட இந்திய மொழியல்ல. அது இந்தியாவின் பொதுமொழியாகும். ஆங்கிலம் வருவதற்கு முன்பு அதுவே இந்தியப் பொதுமொழியாக நெடுங்காலமாகத் திகழ்ந்து வந்துள்ளது. பேச்சு வழக்கிழந்த மொழியாயினும் நூல் வழக்கில் நின்று நிலவும் ஞான மொழியாகத் திகழ்கின்றது. உயர்ந்த தத்துவ ஞானக் கருத்துக்களை விளக்கச் சிறந்த மொழியாக அமைந்துள்ளது இம்மொழியில் வளத்திற்கு காரணம் வட இந்தியர் மட்டுமல்ல தென்னாட்டவரே முக்கிய காரணமாவார்கள். இப்பேருண்மையை மறந்து வடமொழி வடநாட்டினர்க்குரிய மொழியாக நினைப்பது தவறாகும். அது நமது நாட்டின் அனைவர்க்கும் பொதுச் சொத்தான ஞான மொழியாகும்

2. வடமொழி-தென்மொழிகள் உறவு

வேதம் விளைந்தது வடக்கேதான் என்றாலும் அதன் வியாக்கியானங்கள் எழுந்ததெல்லாமே தெற்கேதான். பேருரையாளர்களான குமாரிலபட்டர், சாயனர், சங்கரர், சோமநாதர், ராமாநுஜர், மத்வர், அப்பய தீக்ஷிதர், ஜெகந்நாத பண்டிதர் நிலகண்ட தீக்ஷிதர், வல்லபாச்சாரியர் அனைவரும் தென்னாட்டினரே. இவர்களது அறிவுச் செல்வங்களின்றி வடமொழிஞானச் சிறப்பில்லை. சமண, பவுத்தமத ஆச்சாரியார்களில் மிகச் சிறந்தவர்களும் தென்னாட்டினரே. வடமொழி அலங்கார சாத்திரத்திற்கு காஷ்மீர தேசத்தவர் பெருந் தொண்டாற்றியதுபோல தென்னாட்டினர் வடமொழியில் சிறந்த தத்துவ ஞானச் செல்வங்களையும் இலக்கியங்களையும் படைத்துப் பெரும் பங்கு வகித்துள்ளனர்.

வட இந்தியாவில் பக்தி இயக்கத்தைப் பரப்பிய மூலவர்கள் ராமாநுஜரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர்கள்தான். மற்றொரு பேரியக்கமான அத்வைத தத்துவத்தை சங்கரரே நிலைநிறுத்தியவர் இவ்விருவரும் வடமொழிக்குச் செய்த தொண்டு அளப்பரிது.

வடமொழி தென்னிந்திய மொழிகளில் இலக்கிய வளத்திற்கும் மொழி வளத்திற்கும் உதவியுள்ளது. அதன் செல்வாக்கு சில காலங்களில் தேசிய மொழிகளின் இயல்பான வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது எனக் கருதுவோரும் உண்டு. இக்கருத்துக்குத் தக்க சான்றுகள் இருப்பதாகப் புலப்படவில்லை.

3. பிற மொழிகளில் தமிழர் தொண்டு :

இந்திய தேசியப் பண்பாட்டினை வளர்ப்பதில் தமிழர்களும் குறிப்பிடத் தகுந்த பங்கில் தொண்டாற்றியுள்ளனர் இங்கு தமிழகம் என்பது ‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் முப்புறமும் கடல் சூழ்ந்த நல்லுலகையே குறிக்கும் ஐநூறு ஆண்டுகட்கு முன்பு மலையாள மொழி உருவாவதற்கு முன்பு கேரள மாநிலமும் தமிழ் வழங்கும் நாடாக, சேர நாடாக இருந்தது என்ற சரித்திர உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது சேர நாட்டினராகிய தொல்காப்பியர், இளங்கோ அடிகள், செங்குட்டுவன், பதற்றுப் பத்து, புற நானூற்றில் காணும் சேர மன்னர்கள், சேரமான் பெருமாள் நாயனர், குலசேகர ஆழ்வார் முதலியவர்கள் படைப்புக்கள் தமிழில்தான் அமைந்திருந்தன

தமிழர்கள் பிற மொழிகளையும், இனங்களையும் நேசிக்கும் பாங்கில் கற்றறிந்து அம்மொழிகட்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். குறிப்பாக வடமொழிக்கு அவர்கள்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

அளப்பரிய தொண்டாற்றியுள்ளனர். அது மட்டுமின்றி தெலுங்கிலக்கியத்துக்கும் மிகச் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். மலையாள இலக்கியத்திற்கும் உள்ளூர் பரமேசுவர அய்யர் போன்றோர் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். தற்காலத்தில் ஆங்கிலம், வடமொழி, இந்தி, தெலுங்கு முதலிய மொழிகட்கு சிறந்த தொண்டாற்றியும் வருகின்றனர்

4. வடமொழி வளத்திற்குத் தமிழரின் பங்கு :

வடமொழி தத்துவ இலக்கியச் செல்வங்களைச் சேர்த்ததில் தமிழர்கட்கு கணிசமான பங்கு உண்டு. வடமொழி தத்துவ இலக்கியங்கள் சமஸ்கிருதம்-பிராகிருதம் எனும் இரு பிரிவுகளிலும், வைதீகம், சமணம், பௌத்தம் எனும் முப்பெரும் பாரம்பரியங்களிலும் தமிழர்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர் வேத சமண, பவுத்தமென்னும் முப்பெரும் தத்துவ நதிகளின் திரிவேணி சங்கமமே நமது பாரதப் பண்பாடு ஆகும். இம்மூன்று மரபுகளிலும் வடமொழி வளம்பெற்று இலங்குகிறது. ஆதலின் இம்மூன்று மரபுகளிலும் தமிழரின் பங்கு எத்துணைச் சிறப்புற்றிருந்தது என்பதை தனித்தனியே விளக்கமாகக் காணவேண்டும்.

உலகின் எல்லாத் தத்துவக்கருத் தோட்டங்களும் இம் முப்பெரும் தத்துவக் கருத்துக்களில் அடங்கிவிடும் அத்துணைச் சிறப்பு வாய்ந்து தத்துவக் ஞானத்தில் தமிழர்கள் ஆற்றிய பங்கு நினைக்கும் தோறும் வியப்பும் பெருமிதமும் ஏற்படுகிறது.

5. வைதீக தத்துவ இலக்கியங்களில் :

நான் மறைகளுடன் தொடங்கிய தத்துவ இலக்கியங்கள் உபநிடத காலத்தில் ஆன்மீக ஞானத்தைத் தேடிச் சென்றன. சமண மதமும் ஒருபக்கம் செழித்து வளர்ந்து. இதிகாசங்கள், புராணங்கள் மலர்ந்தன. பின்னர் காவிய நாடகங்கள், கலைஞானங்கள் உருவாகின. சமண, புத்த மதக் கருத்துக்கள் பரவிச் செழிக்கவே, வைதீக மதம் பொலிவிழக்கும் நிலை ஏற்பட்டபோது அதனை முன்னைய நன்நிலையில் நிலைநிறுத்திய பெருமை தென்னாட்டவரையே சாரும். பேருரைகள் மூலமும் பாரத தேசம் முழுவதும் பாத யாத்திரைமூலம் சென்று தம் கருத்தைப் பரப்பவும், பண்பாடு மறுமலர்ச்சியை உருவாக்கியவர்கள் தென்னாட்டினரேயாவர். அவர்களில் தமிழ்நாட்டினரை மட்டும் காண்போம்.

கி. பி முதலாம் நூற்றாண்டில் இருந்த சாணக்கியனின் சாணக்கிய நீதி சாஸ்திரம், கி மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்த சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம் இவ்விரு நூல்களும் தென்னாட்டினர் படைப்பாகவே அறிஞர்கள் கருதுகின்றனர். வடமொழி நாடகங்களில் முற்பட்டதும், காளிதாசனுக்கும் முன்பிருந்தவருமான பாசனின் நாடகங்கள் சேர நாட்டில் உருவானதாக கருதுகின்றனர். காவிய கண்டம் கணபதி சாஸ்திரிகள் திருவனந்தபுரத்தில் கண்டெடுத்து பதிப்பித்த பாச நாடகங்கள் வடமொழிக்கு சிறப்பளிக்கும் அணிகளாக திகழ்கின்றன. மணிப்பிரவாள நடையில் ''பாஷா கௌடலீயம்' என்ற அர்த்த சாஸ்திர மொழி பெயர்ப்பும் கேரளத்தில் கிடைத்துள்ளது. இவை சாணக்கியன் பாசன் இருவரும் சேர நாட்டினராக இருக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.

கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மதுரையில் இருந்த சுந்தரபாண்டியன் எனும் மன்னன் வடமொழியில் ' நீதி தவிஷஷ்டிகா'' எனும் அறநூல் இயற்றியுள்ளான் 116 ஆரியா விருத்தங்களில் மிக இனிய நடையில் இந்நூல் அறக் கருத்துக்களை விளக்குகிறது கவியின் பெயரே இவர் தமிழர் என்பதைத் தெளிவாக்கும்

கி பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னனாகிய காஞ்சியில் இருந்த மகேந்திர விக்கிரமன் 'மத்த விலாச பிரகசனம்' எனும் வடமொழியில் நகைச் சுவை நாடகம் எழுதியுள்ளார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் இறுதியில் சேர நாட்டில் காலடியில் பிறந்த சங்கரர் வடமொழிக்குச் செய்த சேவை அளப்பரியது. தத்துவம், இலக்கியம் இரண்டிலும் சிறந்திருந்த சங்கரர் பிரம்ம சூத்திரம், உபநிடதங்கள், கீதை ஆகிய பிரஸ்தானத்திரயத்திற்கு பேருரைகள் வரைந்தார். சிவானந்த லஹரி, சௌந்தரிய லஹரி, விவேக சூடாமணி முதலிய பல அரிய நூல்களை இயற்றினார். அவர் தம் நூலில் திருஞான சம்பந்தரை 'திராவிட சிசு' என்று குறிப்பிட்டுள்ளதால் தமிழ் நாயன்மாரைப் பற்றியும் அறிந்திருந்தார் எனத் தெரிகிறது அவர் காலத்தில் சேர நாட்டில் தமிழே வழக்கிலிருந்தது ஆதலின் சங்கரர் தமிழ் நாட்டவர் என்பதில் ஐயமில்லை. சங்கரரின் சீடரான 'சக்தி பத்ரன்' ''ஆச்சரிய சூடாமணி'' என்னும் நாடகம் வடமொழியில் இயற்றியுள்ளார். இவரும் சேர நாட்டினரே. வடமொழி வளத்திற்கு ஊற்றுக் கண்ணாக இருந்த பெருநகரம் காஞ்சிபுரம் ஆகும். ''நகரேஷு காஞ்சி'' என்று சிறப்பித்துப் பேசப்பட்ட இடம். வைதிக, சமண, பவுத்த பேராசிரியர்கள் பலரை விளக்கமுறத் தந்த ஞானச் செல்வம் மிக்க நகர் காஞ்சியாகும்.

காஞ்சியில் ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த தண்டி 'காவியாதர்சம்' எனும் அணி இலக்கண நூலும் 'தசகுமார சரிதம்' எனும் புனைந்துரை வசன இலக்கியமும் படைத்து பெரும் புகழ் பெற்றவர் தமிழில் உள்ள தண்டியலங்காரம் 'காவியாதரிசன' மொழி பெயர்ப்பே ஆகும். மூல நூலாசிரியரே மொழி பெயர்த்ததாகக் கருதுவோரும் உண்டு. காஞ்சியில் வாழ்ந்த தண்டி தமிழ் நாட்டவர் என்பதில் ஐயமில்லை.

கி. பி. எட்டாம் நூற்றுண்டில் சேர நாட்டில் மன்னனாகத் திகழ்ந்த குலசேகரர் வைணவ பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராவார். அவரது தமிழ்ப் பாசுரங்கள் திவ்வியப் பிரபந்தத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இக்குலசேகரர் வடமொழியில் 'முகுந்தமாலா' எனும் தோத்திர நூல் படைத்துள்ளார்.

பதினொன்றும் நூற்றுண்டின் முற்பகுதியில் வைணவத்தின் மூலவர்களாகிய நாதமுனியும் யாமுனரும் சிறந்த வடமொழி நூல்கள் படைத்துள்ளனர். நாதமுனி 'நியாய ரத்தினம்'' யோக ரகஸ்யம்' எனும் நூல்களும் யாமுனாச்சாரியார் ''ஆகமப்ராமாண்யம், கீதார்த்த சங்கிரஹம், ஆத்ம சித்தி, ஈஸ்வர புருஷ நிர்ணயம், ஸ்தோத்ர ரத்தினம், சதுஸ்லோகீ' முதலிய நூல்களும் வடமொழியில் படைத்துள்ளனர் ராமாநுஜரின் குருவாகிய யாதவப்பிரகாசர் பிரம்மசூத்திர உரையும்,' வைஜயந்தி நிகண்டு' எனும் நிகண்டுவும் படைத்துள்ளார். விஸிஷ்டாத்வைத மதஸ்தாபகராகிய இராமாநுஜர் பதினொன்றும் நூற்றுண்டின் இறுதியில் சென்னையை அடுத்துள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். திவ்வியப் பிரபந்தத்தில் மிக்க ஈடுபாடுடையவர். வடமொழியும், தென்மொழியும் தம்மிரு கண்கள் எனப் போற்றியவர். இவர் வடமொழியில் பல நூல்கள் இயற்றியுள்ளார். பிரம்மசூத்திரத்திற்கு பேருரையான ''ஸ்ரீ பாஷ்யம்'', கீதா பாஷ்யம், வேதாந்த சங்கிரஹம் வேதாந்த தீபம், வேதாந்த சாரம் கத்யதிரயம் முதலிய பல நூல்கள் படைத்து வடமொழி தத்துவ ஞானச் செல்வ வளத்திற்கு மெருகூட்டியவர். இவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிய வைணவ ஆச்சாரியார்கள் பலரும் வடமொழி, தென்மொழி (தமிழ்) இரண்டுமே நன்கு கற்று பெரும் புலமையுற்று நூல் படைத்து 'உபய வேதாந்தப் பட்டம் பெற்றுச் சிறப்புற்றூர்கள் மணிப்பிரவாள நடையையும் வளர்த்தனர்.

பன்னிரண்டாம் நூற்றுண்டில் வரதகுரு என்பவர் தத்துவசாரம் பிரமேயமாலை. தத்துவ நிர்ணயம், புருஷ நிர்ணயம் எனும் நூல்கள் இயற்றியுள்ளார்.

பதின்மூன்றும் நூற்றுண்டில் வடகலை சம்பிரதாய ஆச்சாரியரான வேதாந்த

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தேசிகர் என்னும் வேங்கடநாதர் மிகச் சிறந்த தத்துவ மேதையாகவும், கவிஞராக வும் திகழ்ந்து வடமொழிக்கு வளம்மிக்க அரிய படைப்புகளைப் படைத்தளித்துள்ளார். ''சர்வ தந்திர சுதந்திர கவிதார்க்கிக சிம்மம்'' என்று பிரசித்தி பெற்றவர். இவர் அதிகரண சாராவளி, தத்வடீகை, சததூஷணி, தாத்பர்ய சந்திரிகை, பௌத்தாதி மத நிராகரண தத்துவ முக்தா கலாபம் முதலிய பல தத்துவ நூல்களும், யாதவாப்யுதயம் எனும் பெருங் காவியமும், ஹம்ச சந்தேசம் எனும் சிறு காப்பியமும், சங்கல்ப சூரியோதயம் எனும் அரிய நாடகமும் படைத்து சிறப்புற்றார். இவரது ',தமிழ் நூல்கள் தேசிகப் பிரபந்தம்'' என்று வழங்கப்படுகிறது.

பதினாறும் நூற்றாண்டில் அருணகிரி நாதரின் மரபினராகிய ராஜ நாத கவி''அச்யுத ராமாப்யுதயம்'' எனும் காவியம் படைத் துள்ளார். சிதம்பர கவி [1533-1614] திரிசந்தான காவியம் எனும் ராகவயாதவ பாண்டவீயம் எனும் சிலேடைக் காவியம் படைத்துள்ளார்.

மிகப் பிரசித்தி பெற்ற வடமொழிக் கவிஞரும், தத்துவ ஞானியுமாகிய அப்பயதீக்ஷிதர் [கி பி. 1520 - 1593] ஆரணிக்கருகிலுள்ள 'அடையபலம்' கிராமத்தில் பிறந்தவர். அத்வைத மதத்தை வலியுறுத்தி, பல நூல்கள் செய்தார் அலங் கார சாஸ்திர நூல்கள் பல இயற்றியுள்ளார். இவர் பரிமளம் எனும் வியாக்யான நூலும் நியாய ரட்சாமணி, சித்தாந்த லேச சங்கிரகம். சிவார்க்கமணி தீபிகை முதலிய தத்துவ நூல் களும், குவலயானந்தம், சித்ரமீமாம்சா, விருத்திவார்த்திகம் முதலிய அணி இலக்கண நூல்களும் வடமொழிக்கு அணி செய்யும் நூல் களாகத் திகழ்கின்றன.

தஞ்சையை ஆண்டரகுநாத நாயக்கர் காலத்திலும், வடமொழி இலக்கியங்கள் தமிழகத்தில் படைக்கப்பட்டன. பதினாறும் நூற்றாண்டில் ராஜசூடாமணி தீக்ஷிதரின் ருக்மணி கல்யாண காவியம், ராமபத்ராம் பாவின் 'ரகுநாதாப்யுதயம்' எனும் காவியம், மதுரவாணி எனும் பெண்பாற் புலவரின் ராமாயணம் முதலிய பல இலக்கியங்கள் படைக்கப்பட்டன. ரகுநாத நாயக்கரும் 'பாரத சங்கிரகம்' எனும் நூல் வடமொழியில் இயற்றியுள்ளார். தஞ்சை நாயக்க மன்னர்கள் தெலுங்கிலக்கியத்துக்கும், தமிழ் இலக்கியம், சிற்பம், இசை நாட்டியம் முதலிய கலைகட்கும், வடமொழிக்கும் மிகப் பெருந்தொண்டாற்றி யுள்ளனர். தமிழ் நாட்டின் சிறப்புக்கு இவர்கள் தொண்டும் சிறந்த காரணமாகத் திகழ்கின்றது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் சஹஜீ(1684-1712), சரபோஜீ (1712-1728), துலஜாஜீ (1728-1736) காலத்திலும் வடமொழி இலக்கிய வளத்திற்கு நற்றொண்டாற்றியுள்ளனர். சஹஜீ, சப்தரத்ன சமன்வயம், சப்தார்த்த சங்கிரகம், எனும், நிகண்டுகள் படைத்துள்ளார். ராமபத்ர தீக்ஷிதர் கும்பகோணம் அருகிலுள்ள கண்டர மாணிக்கம் கிராமத்தில் பிறந்தவர் அபிநவ பதஞ்சலி எனும் பட்டம் பெற்றவர். பதஞ்சலி சரித்திரம், ஜானகி பரிணயம் சிங்கார திலக பாணம் முதலிய காவிய நாடகங்கள் இயற்றி யுள்ளார். ஸ்ரீதர வெங்கடேசாம்யம் 'சஹேந்திர விலாச காவியம்' பாஸ்கர தீக்ஷிதர் 'ரத்ன மாலிகா உரை'. வேத கவி 'வித்யா பரிணயம்', மகாதேவ கவி, அத்புத தர்ப்பணம், முதலியபடைப்புகள் இக்காலத்தே மலர்ந்தன. வெங்கடகிருஷ்ண தீக்ஷிதர் தென் னாற்காடு பள்ளக்கச்சேரி கிராமத்தில் பிறந்தவர் இவர் ''நடேச விஜயம்'', ஸ்ரீ ராம சந்த்ரோதய காவியம்'' இயற்றியுள்ளார் வெங்கடாத்வரி காஞ்சிபுரம் அருகில் அரசாணிப்பாலையில் பிறந்தவர். ',விஸ்வநாத குணாதர்ச சம்பு' எனும் காவியம் இயற்றி யுள்ளார்.

அப்பய தீக்ஷிதரின் பேரராகிய நீலகண்ட தீக்ஷிதர் 17-ம் நூற்றாண்டின் மிகப் பெரும் அறிஞராகத் திகழ்ந்தவர். இவர்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

'சிவலீலா ர்ணவம்' எனும் திருவிளையாடற் புராணக் கதையை வட மொழியிற் செய்துள்ளார். மதுரையில் திருமலை நாயக்கனின் மந்திரியாக இருந்தவர். நீலகண்ட சம்பு எனும் காவியம், நளசரிதம் நாடகம், மற்றும் பல தத்துவ நூல்கள் படைத்தளித்து வட மொழிக்கு வளம் சேர்த்துள்ளார்.

சரபோஜி வடமொழியில் ''ராகவ சரித்திரம்'' எனும் காவியம் படைத்துள்ளார். இவர் அவையில் இருந்த ஜகன்னாத கவி 'ரதி மன்மத நாடகம். சரபராஜ நாடகம். எனும் நூல்கள் படைத்துள்ளார்.

பதினேராம் நூற்றுண்டைச் சேர்ந்தவரான மற்றொரு கவிஞரான கும்பகோணம் அடுத்த கண்டரமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த நல்லா தீக்ஷிதர். அத்வைத ரச மஞ்சரி எனும் தத்துவ நூலும் சிருங்கார சர்வஸ்வ பாணம், சுபத்ரா பரிணயம் எனும் நாடகங்களும் இயற்றியுள்ளார்.

மதுரையைச் சேர்ந்த சொக்கநாதமகி ''சப்தகௌமுதி'' எனும் இலக்கண நூல் இயற்றியுள்ளார். இவரது மரபினர் அனைவரும் வடமொழிப் புலமையிற் சிறந்து விளங்கினர். 'வடமொழி வரலாறு' தமிழில் எழுதிய பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார். இவர் மரபினரேயாவார் சங்கீதமும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துச்சாமி தீக்ஷிதர் இசைத் துறையில் வடமொழிக் கீர்த்தனைகள் இயற்றி சிறந்த தொண்டாற்றியவர் இவர் எட்டயபுரத்தில் பிறந்தவர்.

இங்ஙனமாக எத்தனையோ தமிழ் நாட்டில் வாழ்ந்த தத்துவ மேதைகளும், கவிஞர்களும் பல்வேறு துறைகளிலும் சிறந்த படைப்புகளை நல்கி வடமொழிக்கு வளம் சேர்த்துள்ளனர்.

சமண தத்துவ இலக்கியங்களில் :

மகாவீரர் சமண சமயத்தில் கடைசி தீர்த்தங்கரராகத் திகழ்ந்து மக்கள் மொழியாகிய மாகதியில் தம் அருளுரைகளை வழங்கி சமண மதம் பரவச் செய்தார். அவர் மறைவிற்குப் பின் கி மு 317-297 -ல் சமண சமயத் தலைவராக இருந்த பத்திரபாகு முனிவர் சந்திரகுப்த மௌரிய மன்னனுடன் தென்னாடு போந்து கன்னட நாட்டில் உள்ள 'சிராவண பௌகுள' வில் தங்கிய காலத்தில் தமிழகத்தில் சமணம் பரவியது சமண சமயம் தமிழகத்தில் செழித்துப்பரவியிருந்ததை நமது கல்வெட்டுக்கள், சரித்திரம், பள்ளிகள், இலக்கிய தத்துவ நூல்கள் மூலம் தெளிவாக தெரிகிறது சமண ஆச்சாரியார்கள் வடமொழிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளார்கள். அவர்களில் தமிழகத்தைச் சார்ந்தவர்களும் மிக அரிய தொண்டாற்றியுள்ளனர்.

திகம்பர சமணத் துறவிகளில் மிக உயர்ந்தவரும் சிறந்த தத்துவ நூல்களான பிரவசன சாரம். பஞ்சாஸ்திகாயம். சமய சாரம் முதலிய பிராகிருத மொழி நூல்களை இயற்றிய ஆச்சாரியார் குந்தகுந்தர் கி பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவரது திருவடிகள் பதித்த இடமாகிய வந்தவாசி தாலூகா. பொன்னூர் மலையை இன்றும் சமணர்கள் வழிபடுகின்றனர். இவரே திருக்குறள் படைத்ததாகச் சமணர்கள் தம் மரபின்படி கருதுவர். இதற்கு தக்க சான்றில்லை எனினும் குந்தகுந்தர் தமிழகத்தைச்சார்ந்தவர் என்பதில் ஐயமில்லை.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டிறுதியில் வாழ்ந்த உறையூரை யாண்ட சோழ மன்னனின் மரபினராகிய சமந்தபத்திரர் வடமொழியில் சிறந்த பல நூல்கள் இயற்றியுள்ளார். பிருகத் ஸ்வம்பூ ஸ்தோத்திரம். ஜின சதகம், ஆப்த மீமாம்சா. ரத்ன கரண்டக ஸ்ராவகாசாரம், ஜீவ சித்தி, தத்துவானு சாசனம் முதலிய தத்துவ நூல்கள். பிராகிருத வியாகரணம். பிரமாண பதார்த்தம் எனும் இலக்கண தர்க்க நூல்களும் படைத்த பேரறிஞர். இவரது ரத்ன கரண்டகமே தமிழில் ''அருங்கலச் செப்பு'' நூலின் மூல நூலாகும். குந்தகுந்தரும், சமந்தபத்திரரும் சமண சமயத்தில் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ள ஆசாரியர்கள் இவர்கள் இருவரும் தமிழ்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பெருமைக் குரிய செய்தியாகும்.

கி. பி. ஆரும் நூற்றுண்டில் வாழ்ந்த பாத்திரகேசரி எனும் ஆசாரியார் உறையூரைச் சேர்ந்தவர். சமணர்கள் நிறுவிய தமிழ்ச் சங்க (திரமிள சங்க) ஆச்சாரியார். இவர் திரிலக்ஷன தர்சனம் எனும் தத்துவ நூலும் படைத்துள்ளார். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் மிகச் சிறந்த தத்துவப் பேராசிரியராகவும், பேருரையாளருமாகத் திகழ்ந்த அகளங்க தேவர் காஞ்சிபுரத்தையடுத்துள்ள திருப் பறம்பூரில் பிறந்தவர். பிற மதங்களை வென்று தம்மதம் நிலைநாட்டிய பேரறிஞர் ஆவார். இவர் லகீயஸ்தந்திர, நியாயவிநிஸ்சய சுவிருத்தி, சித்தி வினிஸ்சய சுவிருத்தி. பிரமாண சங்கிரகம், அஷ்ட சதி முதலிய பல நூல்களை படைத்துள்ளார்.

கி. பி ஒன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த வாதீப சிம்மன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். பட்டபாணனைப்போல வட மொழியில் வசன நூல் படைத்தவர் இவரது க்ஷத்ரசூடாமணி, கத்ய சிந்தாமணி எனும் இரு வசன காவியங்களும் வடமொழிக்கு வளம் மிக்க படைப்புகளாகும். தமிழில் திருத்தக்க தேவர் படைத்த 'சீவக சிந்தாமணி காவியத்திற்கு இவரது நூல்களே மூலமாகும் என உ. வே. சா. கருதினுர்.

கி. பி. பதினென்றும் நூற்றுண்டைச் சார்ந்த ஆசாரிய வாதராஜர் திராவிட சங்கத் தலைவராக இருந்தவர் பார்ஸ்வநாத சரிதம், யசோதர காவியம் எனும் இரு காவியங்கள் படைத்துப் புகழ் பெற்றவர். யசோதர காவியம் தமிழாக்கம் பெற்றுள்ளது. நியாய வினிஸ்சய விவரணம், பிரமாண நிர்ணயம் முதலிய தர்க்க நூல்களும் படைத்துள்ளார்.

கி. பி பன்னிரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த குணபத்திராச் சாரியர் தென்னுற் காடு ஜில்லாவில் 'திருமருடகுண்டம்' எனும் ஊரைச் சேர்ந்தவர். இவர் ஆதிபுராணம், உத்தர புராணம், ஆத்மானு சாசனம், ஜீவதத்த சரித காவியம் முதலிய உயர்ந்த படைப்புக்களை நல்கியவராவார்.

ஆச்சாரிய ஹஸ்திமல்லன் கி. பி பதி மூன்றும் நூற்றுண்டிற்கு முன்பிருந்த பல்கலைச் செல்வர். பன்மொழி கற்ற பேராசிரியர். இவர் தஞ்சையை அடுத்துள்ள தீபங்குடியைச் சேர்ந்தவர். இவர் விக்ராந்த கௌரவம், மைதிலீ கல்யாணம், அஞ்சனபவன ஜயம் முதலிய நாடகங்களும், ஆதிபுராண காவியமும் படைத்துச் சிறப்புற்றவர்.

சமண சமயம் பிற்காலத்தில் செல்வாக் கிழந்துவிட்டாலும் அவர்கள் செய்த இலக் கிய தத்துவத் துறைகளிலான தொண்டு மிகப் பரந்த அளவானதாகும். மிகச் சிறந்த படைப்புகளைப் படைத்துள்ளனர். தமிழ் நாட்டினர் பங்கும் மிக உயர்ந்த நிலையில் அமைந்திருந்தது.

7. பௌத்த தத்துவ இலக்கியங்களில்

சமண மதத்தைச் சார்ந்திருந்த அசோகன் பௌத்த மதத்தைச் சார்ந்த பின்னர் புத்த மதத்தை தீவிரமாக பரப்பிய காலத்தில் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் புத்த மதம் தமிழகத்தில் பரவியது. தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் புத்த மத ஆச்சாரியார்கள் தங்கி மிகச் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். ஆச்சாரிய புத்ததத்ததேரர். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் காவிரிப்பூம் பட்டினம், உறையூர், காஞ்சிபுரத்தில் சில காலம் தங்கியதோடு பின் இலங்கைக்கும் சென்று புத்த மதத்தைப் பரப்பினுர். இவர் பாலி, வடமொழியில் உரைநூல்கள் வரைந் தவர். தமிழகத்தினர் ஆவார். மதுராத்த விலாசினீ எனும் குத்தக நிகாய உரை, அபதம்மாவதாரம் எனும் அபதம்ம பிடக உரை, வினய வினிச்சயம், உத்தரவினிச்சயம், ரூபா-ரூபவிபாகம், ஜினுலங்காரம் முதலிய பல நூல்கள் படைத்தவர். இவர் தம் நூலில் தாம் பிறந்தகாவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஊரைப்பற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். புத்தமித்திரர் என்பவர் மாயூரம் ஊரில் பிறந்தவர். கி. பி. ஐந்தாம் நூற்றூண்டில் இருந்தவர் ஆவார். கி. பி. ஆறும்நூற்றூண்டின் தொடக்கத்தில் காஞ்சிபுரம் மன்னர் மரபின ராகிய போதிதருமர் தமிழராவார். இவர் சீன தேசம் சென்று தம் கொள்கைகளைப் பரப்பினூர். சீன. ஜப்பான் நாடுகளில் இவருக்கு கோயில் எடுத்துச் சிறப்பித்துள்ளார்கள்.

கி. பி. ஐந்தாம் நூற்றூண்டின் மிகச் சிறந்த அறிஞூராகத் திகழ்ந்த ஆச்சாரிய திக்நாகர் காஞ்சிபுரம் அருகில் சீயமங்கலும் கிராமத்தில் பிறந்தவர். பிராமணராகிய இவர் பௌத்த மதத்தைத் தழுவியதோடு விஞ்ஞான வாதப்பிரிவை உருவாக்கியவர் இவர் வடமொழியில் குந்தமாலா நாடகமும், நியாயப் பிரவேசம், நியாய துவாரம் எனும் தர்க்க நூல்களும் படைத்துள்ளார். இந்நூல் கள் வடமொழிக்கு அணிசெய்யும்நூல்களாகும்

ஆசாரிய தருமபாலர் (கி. பி. 528-569) திக்நாகரின் மாணவர் ஆவார். இவர் காஞ்சி மன்னனின் அமைச்சருடைய மூன்ருவது குமாரர் ஆவார். இவர் உலகப் பிரசித்தி பெற்ற நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராகத் திகழ்ந்தார். இவருடைய சீடர் சீலபத்திரரிடமே உலகப் புகழ் பெற்ற சீன யாத்திரிகர் யுவான்-சுவாங் வடமொழி பயின்ருராம். தருமபாலர் வட மொழிக்கு வளம் சேர்த்த தமிழராவார்.

மற்ரெரு ஆசாரிய தருமபாலர் தாம்பிரபருணி ஆறு பாயும் திருநெல்வேலிச் சீமையைச் சார்ந்த தஞ்சை நகரில் பிறந்தவர். (இந்த தஞ்சை மன்னன்போல் தான் 'தஞ்சை வாணன் கோவை' பாடப்பட்டுள்ளது). இவர் இலங்கை சென்ற பாலிமொழியில் பெரும் புலமை பெற்ற 'பரமார்த்த தபனி' எனும் உரைநூல் படைத்திருக்கிருர்.

ஆச்சாரிய வச்சிரபோத (கி. பி. 661 - 730) பாண்டி மண்டலம் பொதிகை மலைக் கருகில் மலைய நாட்டில் பிறந்தவர். நாளந்தா பல்கலைக் கழகத்தில் பயின்றவர். தமிழகம் வந்து சில காலம் தங்கினூர். பின் சீன நாட்டிற்குச் சென்று, பின் இந்தோனேஷியா முதலிய இடங்கட்குச் சென்று புத்தமதத்தைப் பரப்பியவர். இவர் பௌத்த நூல்களை சீன மொழியிலும் ஆற்றிய சிறப்புக்குரியவர். வட மொழியை நன்குணர்ந்தவர்

கி. பி. பன்னிரண்டாம் நூற்றூண்டில் சோழநாட்டில் பிறந்து காஞ்சியில் வாழ்ந்த தீபங்கரதேரர் பாலி மொழியில் 'பஜ்ஜமது' எனும் நூலும் 'ரூபசித்தி' எனும் பாலி இலக்கண நூலும் படைத்துள்ளார்.

பாண்டி நாட்டினரான அனுருத்தர் அதே காலத்தில் இருந்தவர் அபிதம்மார்த்த சங்கிரகம் பரமார்த்த வினிச்சயம், நாமரூப பரிச்சேதம் முதலிய நூல்கள் இயற்றியவர்.

கி பி. பதிமூன்ரும் நூற்றூண்டில் இருந்த தப்மகீர்த்த பாண்டி நாட்டவர். இவர் 'தாட்டா வம்சம்' எனும் நூல் பாலி மொழியில் இயற்றியுள்ளார். அதே காலத்தில் இருந்த காசபதேரர் சோழ நாட்டில் பிறந்த ஆசாரியர். இவர் மோகவிச்சேதம், விமதி விச்சேதம், விமதி வினேதனீ, அநாகத வம்சம் எனும் வடமொழி, பாலி நூல்கள் படைத்துள்ளார்.

புத்த மதம் தமிழகத்தில் மட்டுமன்றி தான்பிறந்த இந்திய நாட்டை விட்டு மறைந்தாலும், கீழை நாடுகளில் தன் தத்துவ வளத்தால் செழிப்புடன் திகழ்கின்றது தமிழ்ப் பெருங் காவியமான 'மணிமேகலை'யை இயற்றிய சீத்தலைச்சாத்தனூரும் வடமொழியில் பெரும் புலமை பெற்றவராவார். புத்த மத ஆசாரியார்களில் தமிழர்கள் மிகச் சிறந்த முறையில் சீனம் முதலிய நாடுகட்கும் சென்று தம்மதம் நிறுவி, நம் தமிழகத்துக்குப் பெருமை தந்துள்ளார்கள். வடமொழி வளத்திற்கு கணிசமான பங்கில் தொண்டாற்றியுள்ளார்கள்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

9. எதிர்கால உறவுகள்.

வடமொழிக்கு பழங்காலத்தில் மட்டுமன்றி அண்மைக்காலத்திலும் பல தமிழர்கள் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். காவியகண்டம் கணபதி சாஸ்திரிகள் சிறந்த பல நூல்களைப் பதிப்பித்து உதவியுள்ளார். பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரி 'கௌமுதி சோமம்' முதலிய நாடக இலக்கிய நூல்கள் படைத்துள்ளார். திருச்சியை சேர்ந்த எம், வி, சடகோபாச்சாரியார் சேக்ஸ்பியர் நாடகங்களை வடமொழியில் மொழி பெயர்த்துள்ளார் ஸ்ரீராமதேசிகன் தமிழிலக்கியங்கள் சிலவற்றை வடமொழியில் தந்துள்ளார். டாக்டர் வே. ராகவன் தற்காலத்தின் மிகச் சிறந்த வடமொழிப் பேராசிரியராகத் திகழ்ந்து பல நூல்கள் படைத்து புகழ் பெற்றவர். ஆஸ்தான கவியாக இருந்த கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 'பிரகிருதி விலாசம்' முதலிய பல நூல்கள் படைத்தார், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியர் போன்ற பல சான்றோர்கள் வடமொழிப் புலமையில் சிறந்த நூல்கள் படைத்து வருகிறார்கள். சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் வடமொழிப் புலமையில் சிறந்ததொண்டாற்றி வருகின்றனர். பல நூல்கள் படைத்தும், பதிப்பித்தும் சிறப்புற்று விளங்குகின்றனர். வைதீக, சமண, பவுத்த மரபில் பழங்காலத்திலும், தற்காலத்திலும் தமிழ் நாட்டார் வடமொழிக்கு வளம் சேர்த்த தொண்டை எண்ணிப் பார்த்தால் வியப்பும், பெருமித உணர்வும் தோன்றாமல் இருக்க முடியாது. இத்துணை நெடுங்காலமாக இணைந்து வளர்ந்துவந்த வடமொழி உறவு இனி வரும் எதிர்காலத்திலும் சிறந்து விளங்குமென்றே நம்புவோமாக. மொழியியல் துறையிலும், இலக்கியத்துறையிலும் தத்துவத்துறையிலும் இவ்வுறவின் நெருக்கத்தால் பெரும்பயன் விளையும் என்பதில் ஐயமில்லை, அரசியல், ஆட்சிமொழிக் கொள்கைகளில் எழும் முரண்பாடுகள் இலக்கியமொழி என்ற அமைப்பில் ஏற்படும் உறவுக்குத் தடையாக இருக்கக் கூடாது. 'வடமொழி தென்மொழி வடுகு கன்னடம்' என்னும் நான்கு மொழிகளே இந்திய நாட்டின் பழம் பெரும் இலக்கியச் செல்வங்களை உடைய மொழிகள் ஆகும். இவற்றின் இலக்கிய உறவுகள் இன்னும் ஆழமாகவும், நெருக்கமாகவும் அமைவதால் நமது தேசீய ஒருமைப்பாடு நிலை பெற முடியும்

கடந்த காலத்தைப்போன்றே எதிர்காலத்தும் இம்மொழி இலக்கிய உறவுகள் சீரும் சிறப்புடனும் செழித்தோங்கவேண்டியது இன்றியமையாததாகும்.

ஆய்வு நூல்கள்

1, வடமொழி வரலாறு	பி. எஸ் சுப்பிரமணிய சாஸ்திரி	(தமிழ்)
2. பௌத்தமும் தமிழும்	மயிலை சீனி வேங்கடசாமி	(தமிழ்)
3, தீர்த்தங்கர் மகாவீர் ஔர்உன்கிஆச்சார்ய பரம்பரா - 4 பாகங்கள்	டாக்டர் நேமிசந்திர சாஸ்திரி	(ஹிந்தி)
4, அமரவானி பிரசாரமுலு	பைடிபாடி சுப்பராம சாஸ்திரி	(தெலுங்கு)
5. ஜைன சாஹித்ய மத்து சம்ஸ்க்ருதி	சுபசந்திர	(கன்னடம்)
6. எ, கன்சைஸ் ஹிஸ்ட்ரி ஆப் கிளாஸிகல் சான்ஸ்கிரிட் லிட்டரேசர்	வி. கோபாலகிருஷ்ண அய்யங்கார்	(ஆங்கிலம்)
7 முகுந்தமால	குலசேகரர்	(வடமொழி)
8. ப்ரதிமா நாடகம்	பாஸன்	(வடமொழி)
9. பஞ்சாஸ்திகாயம்	குந்தகுந்தர்	(பிராகிருதம்)
10 சமயசாரம்	,,	,,
11 பிரவசனசாரம்	,,	,,
12. மணிமேகலை	சாத்தனார்	(தமிழ்)

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சுதந்திரப் போராட்டத்தில் தமிழகம் இலக்கியச் சான்றுகள்

டாக்டர் க. வெங்கடேசன்

தற்காலத் தமிழக வரலாற்றில் 1) ஐரோப்பியரது வருகை, 2) ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டி, 3) கர்நாடகப் போர்கள் (1740 – 63), 4) தமிழ் நாட்டில் ஆங்கிலேயரது ஆதிக்கம் ஏற்படல். 5) ஆற்காட்டு நவாபிடமிருந்து ஆங்கிலேயர் அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளல், 6) ஆங்கிலேயருக்கெதிராகப் பாளையக்காரர்கள் நடத்திய போர்கள் ஆகியவை முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

முதல் சுதந்திரப்போராட்டம் :

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் ஆங்கிலேயரது ஆதிக்கத்தை எதிர்த்துப் பாளையக்காரர்கள் போரிட்டனர். அப்போராட்டங்களைப் பற்றி வரலாற்று வல்லுநர்கள் பலவாறு எழுதியுள்ளனர். இவற்றுள் டாக்டர் கே. ராஜய்யன் பல்லாண்டு கால ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின் வெளியிட்ட ''தென்னிந்தியக்கிளர்ச்சி : முதல் சுதந்திரப்போர் 1800 – 1801'' (South Indian Rebellion : The First war of Inde pendence 1800—1801, Mysore, 1971) என்ற நூல் குறிப்பிடத்தக்கது

இச்சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்தியவர்களுக்குத் தெளிவான குறிக்கோள் இருந்தது ஆங்கிலேயரை சொந்த மண்ணிலிருந்து விரட்டுவதில் அவர்கள் குறியாக இருந்தனர் ஆங்கிலேயரது ஆதிக்கத்தை அழித்து விட்டால் மக்கள் கண்ணீர் சிந்தாமல் மட்டற்ற மகிழ்ச்சியடையலாம் என்று **'மருது பாண்டியன் பிரகடனம்'** தெளிவாக அறிவித்தது. அக்குறிக்கோளை அடைய சாதி, சமய, மொழி, இன, நிற. பிராந்திய, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து ஒன்று சேர்ந்து, திட்டமிட்டு, அமைப்புக்களை உருவாக்கித் தென்னகம் முழுவதிலும் போராடினர் அப்போராட்டத்தில் தமிழர்கள். தெலுங்கர், மலையாளிகள். கன்னடர், மராத்தியர் ஆகியோர் பங்கேற்றனர் சிவகெங்கை மருது பாண்டியன். பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன், ஊமைத்துரை, இராமநாதபுரம் வேலப்பன். சிங்கம் செட்டி முத்துக் கருப்பதேவர். திண்டுக்கல் கோபால நாயக்கர் தஞ்சாவூர் ஞானமுத்து, மலபார் கேரளவர்மா கர்நாடக தூண்டாஜி வாக் போராட்டத்தை நடத்திய முக்கிய தலைவர்களாவர்.

வரலாற்றுச் சான்றுகள் :

வரலாற்று முக்கியத்துவமுடைய இப்போராட்டத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான அதிகார பூர்வமான அரசாங்க. அரசாங்க சார்பான சமகால ஆவண ஆதாரங்களும், நூல்களும் ஏராளமாக உள்ளன அரசாங்க கடிதப் பரிவர்த்தனை, நாட்குறிப்புகள் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள், அறிக்கைகள் ஆகியவை மூலாதா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ரமான ஆதாரங்களாகும். இந்தஆதாரங்களின் அடிப்படையில் ஐரோப்பியரும், இந்தியரும் பல நூல்கள் எழுதியுள்ளனர். இவையாவும் இரண்டாந்தரமான ஆதாரங்களாகும்.

தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ள கர்னல் ஜே வெல்ஷின் 'இராணுவநினைவுகள்' (வெல்ஷ் என்பவர் கட்டபொம்மனுக்கு எதிராகப் போரிட்ட ஆங்கில ராணுவ அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது); ஜே. எப். கெர்னின் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரும் திருநெல்வேலிச் சீமையும்; பிஷப் ஆர் கால்டு வெல்லின் 'திருநெல்வேலி வரலாறு' ஸ்டுவர்டின் 'திருநெல்வேலி வரலாறு' பேட்டின் 'திருநெல்வேலி வரலாறு'; ஆரமின் 'தட்சிண வரலாறு' ;நெல்சனின் 'மதுரை வரலாறு'; திருநெல்வேலி கெஸட்டியர்; மதுரை கெஸட்டியர்: டாக்டர் ராஜய்யனின் 'தென்னிந்தியப் போராட்டம். மதுரை வரலாறு (1736-1801) தமிழ் நாட்டு வரலாறு (1565-1982) டாக்டர் என். சுப்ரமணியனின் 'தமிழ் நாட்டு வரலாறு' ஆகிய நூல்கள் பெரும் துணை புரிகின்றன.

தமிழ் நாட்டுச் சான்றுகள் :

பாளையக்காரர் போராட்டத்தின் முதல் பெருந்தலைவராகவும், உயிர்த்தியாகியாகவும் கருதப்படுபவர் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவார். ஆனால் கட்டபொம்மனைக் கொன்ற பின்னர் அவரைப் பற்றிய சமகாலச் சின்னங்கள், நேரடியான ஆதாரங்கள் அனைத்தையும் ஆங்கிலேயர் திட்டமிட்டு அழித்துவிட்டனர்! பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இருமுறை அழிக்கப்பட்டு அடிச்சுவடு தெரியாமல் தரைமட்டமாக்கப் பட்டுவிட்டது. கட்டபொம்மனோடு இறந்தோர் போக எஞ்சியிருந்த அவரது உறவினர்களை ஊமைத்துரையின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாடுகடத்தி விட்டனர். கட்டபொம்மனின் மனைவி சக்கம்மாள் 'கோசுண்டு' என்ற ஊரில் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான உறவினரிடம் ஒப்படைத்திருந்த தங்க நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும், செப்புப்பட்டையங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும் மேஜர் பானர்மென் மூலம் அபகரித்துக்கொண்டு, பட்டயங்களையும் பத்திரங்களையும் அழித்துவிட்டனர். எனினும் கட்டபொம்மனைப் பற்றியும் பாளையக்காரர்கள் நிகழ்த்திய போர்கள் பற்றியும் வழிவழியாக வந்த நாட்டுப்பாடல்களை ஆங்கிலேயரால் அழிக்க முடியவில்லை!

இலக்கியச் சான்றுகள் :

கும்மி, கதைப்பாட்டு, லாவணி, வில்லுப்பாட்டு, சிந்து, அம்மானை, ஏசல் ஆகிய வடிவங்களில் நாட்டுப்பாடல்கள் உலா வருகின்றன. இப்பாடல்கள் புராண கதைப் பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப் பாடல்கள் என்று மூவகைப்படும். இவற்றுள் வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப்பாடல்கள் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கான சான்றுகளைத் தன்னகத்தே தாங்கியுள்ளன. உதாரணமாக தேசிங்குராஜன் கதை, புலித்தேவர் சிந்து. கட்டபொம்மன் கதை, மருதுபாண்டியர் கதை ஆகியவை வரலாற்று வீரர்களைப் பற்றிய நாட்டுப்பாடல்கள் ஆகும்.

நாட்டுப் பாடல்கள் :

வரலாற்று நாட்டுப்பாடல்கள் தமிழகத்தில் இன்றைக்கும் விழாக்காலங்களில் பாடப்படுகின்றன. தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் தேசிங்குராஜன் கதை பாட்டாகப் பாடப்படுகின்றது. கோவை மாவட்டத்தில் கள்ளழகர் அம்மானை பாடப்படுகின்றது இதே போன்று, திருநெல்வேலி குமரி மாவட்டங்களில் கோயில் கொடையின்போது கட்டபொம்மன் கதை, வில்லுப்பாட்டுகள் பாடப்படுவது வழக்கமாக உள்ளது. அறுவடைக் காலங்களில் திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களில் கட்டபொம்மன் கதைப்பாடல்கள் கூத்தாக நடிக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

(நா. வானமாமலை பதிப்பித்து மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பட்டுள்ள 'வீரபாண்டிய கட்டபொம்மு கதைப் பாடல்' மதுரை, 1971).

வீரபாண்டியக் கட்டபொம்மன் கதைப் பாடல்கள், பாஞ்சாலங்குறிச்சி அழிவுச் சரித்திரக் கும்மி, சிவகெங்கை சரித்திரக் கும்மி, மருது பாண்டியர் கதை, புலித்தேவர் சிந்து ஆகியவை இலக்கியச் சான்றுகளாகப் பயன்படத் தக்கவை. **'வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாட்டு'** கட்டபொம்மனது வீரதீரப் பராக்கிரமச் செயல்களைப் பற்றிக் கூறுகிறது **'பாஞ்சாலங் குறிச்சி அழிவு சரித்திரக் கும்மி'** 1801ல் பாஞ்சாலங் குறிச்சி அழிக்கப் பட்ட நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது அதே போன்று, **'சிவகெங்கை சரித்திரக்கும்மி'** ஆங்கிலேயர் எவ்வாறு சிவகெங்கையை வெற்றி கொண்டனர் என்பதைக் காட்டுகின்றது.

இந்த நாட்டுப்பாடல்கள் அனைத்தும் தல வழக்காறு வழிமுறைகளை ஆதாரமாகக் கொண்டு கோர்வையாகப் பின்னப்பட்டவை. இவை வெறும் கட்டுக் கதைகள், கற்பனை நிகழ்ச்சிகள், புராண அதிசயங்கள் ஆகிய வற்றை மட்டும் உள்ளடங்கியவையன்று இதே போன்று காலக்கோர்வைப்படி எழுதப் பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளுமன்று, இந் நாட்டுப் பாடல்களிலிருந்து வரலாற்று உண்மைக்காகக் கண்டுபிடிப்பதென்பது வைக்கோற் போரிலிருந்து ஊசிகளைக் கண்டு பிடிப்பது போன்றதாகும்! அப்படிக் கண்டு பிடிக்கப்படும் ஊசிகள் அரிய ஆதாரங்களை அளிப்பவை அல்லது உறுதிப் படுத்துபவை யாக உள்ளன.

நாட்டுப்பாடல்களில் காணக்கிடக்கும் விபரங்களை வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக் கொள்வதற்குமுன் அவற்றைப் பிற சமகால அகப்புற ஆதாரங்களோடு ஒப்பிட்டு ஆராய வேண்டியது அவசியமாகும் அப்போதுதான் இலக்கியச் சான்றுகள் நம்பகமான, ஏற்றுக் கொள்ளக்கூடிய, விஞ்ஞானபூர்வமான வரலாற்றுச் சான்றுகளாகும். எடுத்துக் காட்டாக, பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையின் வீழ்ச்சிக்குப்பின் கட்டபொம்மன் சென்னைக்குச்சென்றதாகப் பாஞ்சாலங்குறிச்சி அழிவுச் சரித்திரக் கும்மியில்குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதற்கான சமகாலச் சான்றில்லை. மாறாக கட்டபொம்மன்கள்ளர் நாட்டுக்காட்டுக் குள் நுழைந்து விட்டதற்கான அதிகார பூர்வ மான சமகாலச் சான்றுகள் உள்ளன. 1801ல் பாளையங்கோட்டையிலிருந்து ஊமைதுரையும் அவரது சகாக்களும் தப்புவதற்காக மேற் கொண்ட சாகசச் செயல்கள் பற்றிய இலக்கிய சான்றுகள் சமகால அதிகாரபூர்வமான சான்றுகளோடு ஒத்துள்ளன

வரலாற்றுச் சிறப்பு :

நாட்டுப் பாடல்களில் விவரிக்கப் பட்டுள்ள அல்லது வர்ணிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் அவை நிகழ்ந்த காலத்தைகுறிப் பிடுவதில்லை. நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப கூறப்படுகின்றன. கற்பனை மிகக்கலந்து உயர்வு நவிற்சியோடு நிகழ்ச்சிகள் வர்ணிக்கப் படுகின்றன. இக்கதைகள் வரலாற்று நிகழ்ச் சிகளை அப்படியே படம்பிடித்துக்காட்டு வதில்லை ஆண்டு வரிசையில் விவரிக்கப்படு வதுமில்லை. வரலாற்று நாயக்கர்களைப்பற்றிய செவிவழிச் செய்திகளை உணர்ச்சிபூர்வமாக கற்பனையில் குழைத்து. கிராமவாசிகளின் கண்ணோட்டத்தில், கிராமங்களின் ரசனைக் கேற்றவாறு பாடப்பட்டுள்ளன. இப்பாடல் களில் வரலாற்று வீரர்களின் பல்வேறு பண்பு கள், பராக்கிரமச் செயல்கள் ஆகியவை ஆர்வத்தோடு உணர்ச்சி பூர்வமாகப் பாடப் பட்டுள்ளன எனவே நாட்டுப்பாடல் இலக்கி யச் சான்றுகள் ஓரளவுக்கு மட்டுமே வரலாற் றுச் சான்றுகளாகப் பயன்படத்தக்கவை; அந்த அளவுக்கு இலக்கியச்சான்றுகள் முக்கி யத்துவமுடையவை நாட்டுப் பாடல்களில் சரித்திர நாயக்கர்கள் சாகாவரம் பெற்று நிலை நிற்கின்றனர் என்ற உண்மையையும் உணர வேண்டியது அவசியம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஏழ்மையை நொந்து என்று விடிவு காண்போம் என ஏங்கிக் கிடைக்கின்றவர்களுக்கு ஒரு நல்ல உவமானத்துடன் நெஞ்சில் பதிய வைக்கிறார். இப்பால் இக்கவிதையில்,

'இளம்பிறையே' எனும் தலைப்பில்

இளம்பிறையே
உனது ஏழ்மையை
நினைத்து வருந்தாதே
ஏனென்றால்...
உன்னுள்ளே தான்
பூர்ணச் சந்திரன்
புதைந்து கிடக்கின்றான்

உன்னுள் இருக்கும் மாபெரும் சக்தியை உணராமல் வீணாக வாய் மூடி வெற்றுப் புலம்பல் எதற்கு? என குத்திக்காட்டுகிறார் கவிஞர்.

செல்வச் செழிப்பில் மிதக்கும் கனவான் ஒருவர், பாமர மக்களைச் சுரண்டிக் கொழுத்து விட்டு அவர்களைக் கண்ணற்றவர்களாக்க தடபுடலாக வெள்ளிவிழா எடுத்து கொடியும் ஏற்றுகிறார். சிலதுகளின் கை தட்டலுடன் மறைபொருளாக சமுதாய ஏற்றத் தாழ்வை அருமையாக நம் முன் வைக்கிறார் கலாப்பிரியா.

'குருடர் பள்ளியில்' எனும் தலைப்பில்

விழியுள்ள கனவான்
விழாக் கொடி யேற்ற
வெறும் கை தட்டலுடன்
வெள்ளி விழா வென்று
களித்தனர் - சுற்றி நின்ற
கண்ணற்றவர்.

புதுக் கவிதையுலகில் புரட்சியை ஏற்படுத்திய கவிதை என்றும் எல்லார் மனதிலும் நின்று நிலைக்கும் வண்ணம் இரண்டே வரிகளில் இந்தியத்தின் சோகத்தைப் பிழிந்து விடும் அற்புதமான கவிதை எ. அரங்கநாதன் சுதந்திரம் எனும் தலைப்பில் பாடுகிறார்.

இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை!

இதைப் பின்பற்றி சுதந்திரத்தைப் பல கவிஞர்கள் பல வடிவங்களில் எழுதினாலும் இக் கவிதைக்கும் முன் நிற்க முடிய வில்லையே? அது தான் கவிதையின் சிறப்பு.

இது போன்று இன்னொரு கவிதையும் பார்ப்போம். உழவர்களின் உழைப்பின் ஏற்றத்தைப் பற்றியும், அவர்களது உழைப்பை இச் சமுதாய மேன் மக்கள் சரியாக கணித்து உரிய பயனும், மதிப்பும் அளிக்காவிட்டால் என்ன விளைவு ஏற்படும் என்பதை மிகத் தெளிவாக நான்கே வரிகளில் எழுதி நீங்கா இடம் பெற்று அனைவர் நாவிலும் முழக்கமிடும் "ஓர் குரல்" எனும் தலைப்பில் ஜோதியின் கவிதை.

நாங்கள் சேற்றில்
கால் வைக்கா விட்டால்
நீங்கள் சோற்றில்
கை வைக்க முடியாது!

எத்தனை பெரிய பிரச்சினையை இவ்வளவு எளிமையாக சொல் நயம் பட மெருகூட்டி நம் வயிற்றைக் கலக்கி விடுகின்றாரே? கவிதையின் ஆழம் புரிகின்றது!

இத்தனை ஆண்டுகளாகியும், எத்தனை வரிகள் போட வேண்டுமோ அத்தனை வரிகளையும் நம்முதுகில் போட்டு ஏற்றி நமக்காகவே என்று சொல்லி திட்டங்கள் போடும் அரசின் கவனத்திற்கு 'திட்டங்கள்' எனும் தலைப்பில் தீபக் லதா கவிதை தருகிறார்.

மேட்டினை நோக்கியே
வெள்ளம் போகும்
இங்கு மட்டுமே
இது சாத்தியம்!

ஆம் உண்மை தானே? இங்கு தானே மக்கள் உறங்குகிறார்கள். உறங்கட்டும் உறங்கி எழுந்து, விழிசிவக்க நோக்கும் வரை மேட்டை எப்படி யார் சமப்படுத்துவது?

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

புதுக் கவிதையின் சிறப்பு அம்சங்கள்

பூ. அ. துரை ராஜா

'ரவி எர கனிதி கவி எருகுனு' என்பது தெலுங்கு பழமொழி தீர்க்கதரிசனமுடன் கூறிய வரிகள். ஆம் உலகில் தொன்று தொட்டு கவிஞர்களுக்கு தனிப்பாரம்பரியம், கீர்த்தி, பெருமதிப்பு நிலவி வருவதை காணும் போது மேற்கூறிய வரிகள் நம்மனதில் பதிகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயச் சார்புடைய தாய் பக்தியைப் பேண எழுந்த பாடல்களுக்கு இன்றளவும் மக்கள் மத்தியில் செல்வாக்கும் புகழும் உண்டு. ஆயினும், சமயக்குரவர்களால் பாடப்பட்ட அப்பாடல்கள் பண்டிதர்களால் மட்டுமே படித்து இன்புறும் நிலையில் சிறப்புற்றது எனலாம். தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், கந்தரனுபூதி, திருமுருகாற்றுப்படை, திருவிளையாடற்புராணம் போன்ற பல நூல்களின் நனிசொட்டும் செவிக்கினிய பாடல்கள் உண்டு. அவ்வினிய பாடல்கள் சந்தன நயத்துடன், பக்திப்பரவச முடன் பாடுதற்கேற்ற முறையில் ஓசையின் பம் பயக்க வல்லது.

தமிழ் இலக்கியம் தோன்றிய கால கட்டத்தில் சங்கப் புலவர்கள் மன்னர்களைப் பாடியும், புகழ்ந்தும், அறநெறி புகட்டியும் மக்களது உள்ளம்குளிர உலாப் பாட்டும், காதற் களியாட்டங்களை முன் வைத்துப் பாடல்கள் இசைந்தனர். அக்காலத்து தமிழ்மொழி நடையில் திகழ்ந்த இப்பாடல்கள் உரையின்றி எவராலும் பொருளுணரமுடியாத நிலையில் இருந்தது இலக்கண வரம்புக்குட்பட்டு, எதுகைமோனையுடன், யாப்பிலக்கண கட்டுக்கோப்பில் எழுதும் கவிஞர்களே அன்று சிறப்புப்பெற்றனர். ஆங்கிலேயரின் ஆட்சியில் தமிழ்மொழி உரை நடை வளர்ச்சியுறவும் குடத்திலிட்ட விளக்குப்போல ஆக்கம்கண்டது.

பின்னர் பாரதியின் வளம் மிகுந்த எளிய கவிதையின் வருகையில் தமிழ் புத்துணர்வும், மறுமலர்ச்சியும், உத்தவேகமும், உணர்ச்சியும், தன்னகத்தே கொண்டு எழுச்சி பெற்றது. மரபும், சந்தமும், ஓசை நயமும் குன்றுமல், என்றும், எவரும் எளிதில் புரிந்து சுவைக்கும் வண்ணம் எழுச்சி மிக்க பாடல்களைப் புனைந்து தமிழன்னைக்கு ஆரம்சூட்டியவன் மகாகவி பாரதி பண்டிதர்கள் வெருண்டனர் எள்ளிநகையாடினர் அதையெல்லாம் தகர்த்தெறிந்து மக்கள் மத்தியில் நாவினிக்கப்பாடி கருத்தாழகும், சொல்நயமும் உணர்ந்து தமிழ்க்கவிதையுலகுக்கு புதுப்பாதை, நெறி வகுத்தவன் என பாரதி முதன்முதலாக வசன கவிதையும் எழுதினான் இன்றைய புதுக்கவிதைக்கு விதை விதைத்து முன்னோடியாகத் திகழ்ந்தவன் பாரதியென்றால் மிகையாகாது அவனதுவசன கவிதை, சொற்செட்டும் அழகும், ஆரியஉருவ அடைப்பும் கொண்டிலங்குகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாரதியைப்பின்பற்றி

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

புதுக்கவிதையை அறிமுகம் செய்து வைத்த மூலவர்கள் ந. பிச்சமூர்த்தி சி சு, செல்லப்பா ஆவார்கள். அன்றும் தமிழ்ப் புலவர்களால் எதிர்ப்புகளாகி புதுக்கவிதை அடங்கிஒடுங்கிக் கிடந்தது.

இரும்புக் கூண்டை உடைத்து ஆங்கா ரமுடன் வெளிவரும் புலியைப்போல ''வானம் பாடி'' கவிஞர்கள் முழங்கினர். முற்றிலும் புதுக்கவிதைகளாய் பரிணமிக்க தமிழ்மணம் பரப்பியது ''வாளம் பாடி'' புதுமைவேட்கை யும், மாதுடநேயமும், சமுதாய சீர்திருத்த நோக்கும் சமதர்ம சிந்தனையும்மிக்க புதுக் கவிஞர்களான புவியரசு ஞானிசிற்பி மீரா, மேத்தா, அபி, அப்துல்ரஷ்மான், இன்குலாப் ஆகியோர்கள் இலக்கணம் தவிர்த்து யாப்பை விடுத்து தமிழில் சிறந்த உத்தியுடன் உருவு டன் எளிய நடையில் அருமையான சிலவரி களில் முன்வைத்தனர்.

கடுமையான விமர்சனங்கட்கும் தமிழ் மரபு அழிக்கவந்த கோடரிக் காம்பு எனவும் புதுக்கவிஞர்களை சாடியும், ஏசியும் பல ஏடு களில் பழமையை மாற்ற விரும்பாத புதுமையை வரவேற்க ஏலாத பிடிவாதக் காரர்கள் சிலர் வெகுண்டெழுந்தனர்.

ஆனாலும் இவர்கள் அத்தனை பேர்களை யும் மீறி வெண் நுரையோடும் வெள்ளமென வேகமாக மக்களுடைய ஆதரவை, அரவணை ப்பைப் பெற்றது புதுக்கவிதை.

புதுக்கவிதைக்கும், வடிவம், உள்ளீடு, உத்தி படிமம் சுருங்கச்சொல்லி, நெஞ்சைத் தொட்டிர்க்கும் தன்மைகள் இருந்ததினல் மரபுகள் சில நாட்களில் தங்கள் கூக்குரலை அடக்கி வாய் மூடினர் மேனாட்டில் ஓகோ வென புதுக்கவிதைகள், எழுதி புகழ்பெற்ற வால்ட் விட்மன், எஸ்ரா பவுண்ட் முதலிய கவிஞர்களைப் பின்பற்றி நீண்டகாலமாக காத்திருந்து இப்போது தான் தமிழுக்கு கொணர்ந்துள்ளனர். புதுக்கவிதையின் தாக் கத்தை அநேகமாக இந்திய மொழிகளில் சிறப்பாக ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், மலை யாளம் முதலியனவும் ஏற்றுக்கொண்டு விட்ட தைக் காண்கிறோம்.

தமிழில் புதுக்கவிதைகளை சிறந்த உத்தி வடிவம் தாங்கிய கவிதைகள் எழுதிப் புகழ் பெற்றவர்களை விரல் விட்டுத் தான் எண்ண முடியும். ஏனெனில் இலக்கிய அறிவோ படிக் கும் ஆர்வமோ சிறிதும் இல்லாதவர்கள் கூட புதுக்கவிதை லேசாக எண்ணி எழுத முனைந்து விட்டனர்.

வெறும் சொற்கள் மட்டும் கவிதை ஆய் விடும் என்று நினைப்பது தவறு அதே போல வெறும் கருத்துக்கள் மட்டும் கவிதையாய் விடாது? அனுபவ ஞானம். அறிவு முதிர்ச்சி ஆழ்ந்த சிந்தனை, உழைப்பு இவைகளோடு, நல்ல கற்பனை வளமும் சேர்ந்தவர்களால் தான் நெஞ்சை ஈர்க்கும் இனிய புதுக்கவிதை கள் சிலவற்றைப் பார்ப்போம்.

அது...எனும் தலைப்பில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் எதையும் தாங்கும் இதயங்களாய் தேசப்பற்றின் திலகங்களாய் திகழ்ந்த வியட்நாமியர்களின் நெஞ்சுரத்தைப் போற்றும் வகையில் ஞானி அருமையாகப் பாடிய கவிதை இது.

தீயினுள் சுட்டெரித்தேன்...
குண்டுகளால் நிலம்பிளந்தேன்...
விஷ வித்துக்களை எங்கும் தூவினேன்...
பாறைகளுக் கிடையில்...
அமுத ஊற்றுக் கிளம்பியது...
நிலம் குளிர்ந்தது...
விஷம் விலக்கியது...
சோலை எழுந்தது...
அது...
வியட்நாம்;

பத்தே வரிகளில் தழும்பேறிய தியாகச் சுடரை எப்படிப் படம்பிடித்து நம்முன் காட்டி விடுகிறார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மண்ணடியில் விற்கும் லட்டு
மடியில் வாங்கிகட்டு
எடுத்துக் கொஞ்சம்பிட்டு
எனக்கு முன்னே இட்டு
உண்டுவிட்டு எப்பம்
ஓடுகொஞ்சம் பாப்போம் ''

'' காசா லட்டு
கைமேலே துட்டு ''

வேலைநேரப் பாடல்கள் வேலை சிரமம் தோன்றாதிருக்கப்பாடுவது

கருத்த காளை ரெண்டுபூட்டி
கரிசக்காட்டை உழுகப்போறேன்
செவளக்காளை ரெண்டுபூட்டி
செவக்காட்டை உழுகப்போறேன்
மயிலைக்காளை ரெண்டுபூட்டி
மானும்பரிய உழுகப்போறேன் ''

'' முத்துமுத்தாக வளரவேணும் கதிர்
முக்கலநெல்லு காணவேணும்
பாத்தி பாத்தியாக நாத்துப்போட்டு
பந்தயம்போட்டு நடவுங்கடி ''

உழுதல், நாற்று நடுதல், வேலைகளைப் போலவே ஏற்றம் இறைத்தல் மற்றும் கடலில் ஓடம்விடுதல் போன்ற வேலைகளிலும் சுவையான பாடல்கள் வழங்கி வருகின்றன.

சிறந்தவர்கள் பெருமைகளையும் இறப்பினால் பாதிக்கப்படுபவரின் துன்பத்தையும் எடுத்துச் சொல்லிப் பாடுவது பட்டிதொட்டிகளில் இழவுவீட்டில் உறவினர்கள் துக்கம் விசாரிக்கவந்து வீட்டார் அழும்போது தாமும் தம்வீட்டில் முன்பு இறந்தவர்களைப்பற்றிபாடி அழுவதை இன்றும் காணலாம்.

'' பாலூத்தி பாத்திகட்டி பாக்குமரம்
உண்டாக்கி
பாக்கும் தழையலையே நான் பாதி
நாள் வாழலையே
நெய்யூத்தி பாத்திகட்டி நெல்லி மரம்
உண்டாக்கி
நெல்லியும் தழையலையே நான் நீண்ட
நாள் வாழலையே
சீரகம் பூப்பூக்கும் செடிமுறுக்கி
பிஞ்செறங்கும்
சீராளன் இல்லாமெ நான் செடிபோல
வாடுதனே ''

ராஜபாளையம் நகரிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் பல்வேறு வகையான நாட்டுப்பாடல்கள் வழங்கி வருகின்றன அவற்றை நாங்கள் (கொ. மா. கோதண்டம் பூ. அ. துரைராஜா கொ. ச. பலராமன்) சேகரித்து 'தாமரை' 'சாந்தி' முதலிய இதழ்களில் வெளிவந்தன இதோ இரண்டு பாடல்கள்

'' நானிருக்கேன் ராஜபாளையம்
நீயிருக்கே வெங்காலூரு
கண்டு பேசனுமுன்னா
கருங்குளந்தா ஊடேருக்கு ''

'' அப்பனேரிப் பண்ணையிலே
பேரான கருதறுப்பு
கொழுந்தப்புள்ள கட்டுகட்டி
தூக்கிவிடும் கொத்தனாரே ''

நாடோடிப் பாடல்கள் இன்று உலகத்தின் பல நாட்டு பல்கலைக் கழகங்களில் பாடமாகவும் ஆய்வுப் பொருளாகவும் வைத்துள்ளார்கள் இன்றைய நாகரிக மோகத்தில் தாலாட்டுப் பாடல்கள் பாடுவது தாய்மார்களால் மறக்கப் பட்டுவருகிறது. இழவு வீடுகளில் ஒப்பாரிப் பாடல்கள் பாடுவது அனேகமாய் நின்றுபோய் விட்டது.

சேகரித்து அச்சாக்காமல் இன்னும் நம் கிராமங்களில் ஆயிரக்கணக்கான பாடல்கள் வழங்கி வருகின்றன. மெல்ல மெல்ல மறைந்தும் வருகின்றன. இவ்வரிய இலக்கியச் செல்வத்தை இழந்துவிடாமல் இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் முன்வந்து இவற்றை சேகரித்து தொகுத்து ஆய்வுமுறையில் நூலாக வெளியிட முயல வேண்டும். வெளியீட்டாளர்களும் இதற்கு துணைசெய்ய வேண்டும்.

இலக்கிய மன்றங்களும், பல்கலைக் கழகங்களும் இன்னும் தீவிரமாக இப்பணியில் பாடுபட வேண்டும். தமிழக அரசும் இத்துறையில் கவனம் செலுத்த வேண்டும் நம் நாட்டின் பண்பாடு கலாச்சாரம் இவற்றொடு கூடிய வரலாற்றுப் பொக்கிஷத்தை இழந்து விடக் கூடாதல்லவா!

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஏழ்மையை நொந்து என்று விடிவு காண்போம் என ஏங்கிக் கிடைக்கின்றவர்களுக்கு ஒரு நல்ல உவமானத்துடன் நெஞ்சில் பதிய வைக்கிறார். இக்பால் இக்கவிதையில்,

'இளம்பிறையே' எனும் தலைப்பில்

இளம்பிறையே
உனது ஏழ்மையை
நினைத்து வருந்தாதே
ஏனென்றால்...
உன்னுள்ளே தான்
பூர்ணச் சந்திரன்
புதைந்து கிடக்கின்றான்

உன்னுள் இருக்கும் மாபெரும் சக்தியை உணராமல் வீணாக வாய் மூடி வெற்றுப் புலம்பல் எதற்கு? என குத்திக்காட்டுகிறார் கவிஞர்.

செல்வச் செழிப்பில் மிதக்கும் கனவான் ஒருவர், பாமர மக்களைச் சுரண்டிக் கொழுத்து விட்டு அவர்களைக் கண்ணற்றவர்களாக்க தடபுடலாக வெள்ளிவிழா எடுத்து கொடியும் ஏற்றுகிறார். சிலதுகளின் கை தட்டலுடன் மறைபொருளாக சமுதாய ஏற்றத் தாழ்வை அருமையாக நம்முன் வைக்கிறார் கலாப்பிரியா

'குருடர் பள்ளியில்' எனும் தலைப்பில்

விழியுள்ள கனவான்
விழாக் கொடி யேற்ற
வெறும் கை தட்டலுடன்
வெள்ளி விழா வென்று
களித்தனர்-சுற்றி நின்ற
கண்ணற்றவர்.

புதுக் கவிதையுலகில் புரட்சியை ஏற்படுத்திய கவிதை என்றும் எல்லார் மனதிலும் நின்று நிலைக்கும் வண்ணம் இரண்டே வரிகளில் இந்தியத்தின் சோகத்தைப் பிழிந்து விடும் அற்புதமான கவிதை எ. அரங்கநாதன் சுதந்திரம் எனும் தலைப்பில் பாடுகிறார்.

இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை!

இதைப் பின் பற்றி சுதந்திரத்தைப் பல கவிஞர்கள் பல வடிவங்களில் எழுதினாலும் இக்கவிதைக்கும் முன் நிற்க முடிய வில்லையே? அதுதான் கவிதையின் சிறப்பு.

இது போன்று இன்னொரு கவிதையும் பார்ப்போம். உழவர்களின் உழைப்பின் ஏற்றத்தைப் பற்றியும், அவர்களது உழைப்பை இச்சமுதாய மேன் மக்கள் சரியாக கணித்து உரிய பயனும், மதிப்பும் அளிக்காவிட்டால் என்ன விளைவு ஏற்படும் என்பதை மிகத்தெளிவாக நான்கே வரிகளில் எழுதி நீங்கா இடம் பெற்று அனைவர் நாவிலும் முழக்கமிடும் ''ஓர் குரல்'' எனும் தலைப்பில் ஜோதியின் கவிதை.

நாங்கள் சேற்றில்
கால் வைக்கா விட்டால்
நீங்கள் சோற்றில்
கை வைக்க முடியாது!

எத்துணை பெரிய பிரச்சினையை இவ்வளவு எளிமையாக சொல் நயம்பட மெருகூட்டி நம்வயிற்றைக் கலக்கி விடுகின்றாரே? கவிதையின் ஆழம் புரிகின்றது!

இத்தனை ஆண்டுகளாகியும், எத்துணை வரிகள் போட வேண்டுமோ அத்தனை வரிகளையும் நம்முதுகில் போட்டு ஏற்றி நமக்காகவே என்று சொல்லி திட்டங்கள் போடும் அரசின் கவனத்திற்கு 'திட்டங்கள்' எனும் தலைப்பில் தீபக் லதா கவிதை தருகிறார்.

மேட்டினை நோக்கியே
வெள்ளம் போகும்
இங்கு மட்டுமே
இது சாத்தியம்!

ஆம் உண்மை தானே? இங்கு தானே மக்கள் உறங்குகிறார்கள். உறங்கட்டும் உறங்கி எழுந்து, விழிசிவக்க நோக்கும் வரை மேட்டை எப்படி யார் சமப்படுத்துவது?

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஐந்துவிரல்களில் இந்தச் சமுதாய ஏற்றத் தாழ்வை எப்படி அளக்கிருர் பாருங்கள்! சிந்திக்க சிரிக்கத் தூண்டும் ஓர் ஓவியமாக நம் கண்முன் காட்டுகிருர் இக் கவிதையில் ''ஒரு விரல்மட்டும்'' எனும் தலைப்பில் தென்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜா கூறுகிருர்.

அஞ்சு விரலும்
ஒன்று போலிராது
என்பது உண்மைதான்.
அதற்காக
நடுவிரல் மட்டும்
நாலடி வளர்ந்தால்
நறுக்காமலிருக்க முடியுமா?

பாமரனுக்கு எதை எளிமையாக உதாரணம் கூறினல் புரியுமோ அதை நாசூக்காக கையாண்ட அற்புதக் கவிநயம்.

யாப்பிலா, ஓர் வரம்பிற்குக் கட்டுப் படாத கவிதைகள் எல்லாம் கவிதைகளாகுமா? எனப் பொருமி புதுக் கவிதைப் படைப் போரைச் சாடுவோர்க்கு சரியான சாட்டையடி தருகிருர். மா. தட்சிணமூர்த்தி ''யாப் பெனும் காப்பெதற்கு''

இவள் செழுமையைக் கட்டியணைக்க
யாப்பும் அணியும் வேண்டுமோ?
யாப்பெனும் காப்பெதற்கு
இவள் பொன் மேனிக்கு

இவள்தான் சொக்கத் தங்கமாச்சே? இவளுக்கு எதற்கு அணிகலன் அதுவும் புத்தம்புதுசுக்கா தேவையில்லையே என்ன அழகான கவிதை!

நலிந்தவர்களின் மனம் அசைக்கும் வண்ணம் அழகான கூர்மையான உதாரணத் துடன் பூத்த கவிதை இதில் எவ்வளவு அவசரம், எள்ளல், காத்திருக்கவேண்டாம், துள்ளிஎழு. தூக்கு உன்கோடாலியை என்கிருர் கவிஞர் ஏ ஏ ஹெச்கே கோரி 'கைகள்' எனும் தலைப்பில்

மரம் கொத்தி கொத்தி
சாய்ந்த மரம் அள்ள
உட்கார்ந்திருக்கிருயா காத்து
புழு கிடைத்து அது
போய்விடும் பறந்து
மரம் சாய்க்கும் ஜோலி
அதுக் கில்லை
நீ எந்திரி
தூக்கு உன் கோடாலியை

அருமையான உணர்ச்சி பாவம் வெளிப்படும் சிறந்த படைப்பு.

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை மிருகத்திற்கும் கீழாய் ஈன ஜென்மங்களாய் எண்ணி நகையாடி திரியும் எத்தர்களை நோக்கி கேள்விக்கணைத் தொடுக்கிருர் கவிஞர் கொ. மா. கோதண்டம் அவர் தொடுக்கும் கணை கூர்மையானது நெஞ்சைப்பிளந்து நியாயத்தை தேடவல்லது 'அவர்கள்மட்டும் யார்?' என்ற தலைப்பில்

உங்களுக்கு நலம்தர வேண்டி
நகரத்தின் நரகத்தை நாங்கள்
பரிசுத்தம் செய்வதால்
பதிதர்கள் ஆக்கப்பட்டோம்
சுவர்க்கத்தை
தங்கள் காலடியில் அமைத்துள்ள
உங்கள் தாய்மார்கள் நீங்கள்
குழந்தைகளாக இருக்கும் போது
உங்களின் மலம் எடுத்தார்களே
அவர்கள் மட்டும் யார்?

காலம்காலமாய் தீண்டாமையைக் கைவிட மனதால் மறுக்கும் கயவர்களுக்கு இதைவிட வேறு எப்படித்தான் பாடுவது. கவிதை நெஞ்சை தொடுகிறது.

டி. வி.யில் ஓர் ஓலைக் குடிசையை அங்கு பதிவாகும் ஏழ்மையின் சின்னங்களை அருமையாக சித்தரிக்கும் பாங்கு எண்ணி எண்ணி வியக்க வல்லது. இளசை அருணுவின் எங்கள் வீட்டு டி வி. எதைக்காட்டுகிறது கவிதையைப்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பார்ப்போம்.

வானக் கூரையின்
விரிசல் சலனத்தில்
பகலில் பதிவாகும்
சூரியக் கிளைகள்
வீட்டிலெங்கும்
ஒளி பரப்புகின்றன
இரவின் கருமை ஒழுக்கலில்
நட்சத்திரப்பவனியுடன்
நிலா அலைவரிசைகளில்
தெளிவும் பல்லவிகளும்
கண்ணில்
இமையாடுகின்றன

நல்ல கற்பனை வளத்துடன் சிந்தனையைத் தூண்டும் வளமான கவிதை.

சாதாரண பட்டிக்காட்டுப் பாஷையிலும் ஒரு சிறந்த கற்பனை வளத்துடன், சுரண்டல் முறையை அம்மக்கள் பாடும் இசையில் புதுப் பாடல் தருபவர் கவிஞர் பரிணாமன் மக்களின் நெஞ்சில் நிழலாகும் புதுக்கவிதையை வைத்துப் பாடுகிறார். ''சுதந்திர மாடன்'' எனும் தலைப்பில்

பத்துத்தலை ராவணனை
ஒத்ததலை ராமன்வென்றான்
மொத்தத்திலே வீரம் வேணும் சுடலை
மாடா - அந்த
வித்தைகளைக் கத்துக்காம
சத்தியத்தை ஒத்துக்காம
கத்தினால் போனதெல்லாம்
கிடைக்குமாடா?

புலிபசித்துக்கிடந்தாலும்
புல்லைத்திங்க மாட்டாது
போட்டதைத் திங்கிறயே சுடலை
மாடா ! உன்
பொண்டுபிள்ளை வாழ்க்கையிலே
கண்டசுகம் ஏதுமில்லெ
தெண்டத்துக்கு உழைக்கிறே
ஞாயமாடா?

அடுத்தநாள் சோத்துக்கில்லே
அடகுவைக்கப் பண்டமில்லே
யாருமேல கோவிக்கிறே சுடலைமாடா
உனைக்
கெடுத்ததோ சாமியில்லே
பாடுபடும் பூமியில்லே
கேடுகெட்ட சுரண்டல்முறை
தெரியுமாடா?

இப்படித் தொடரும் இப்புதுக் கவிதையின் நயம் இசை கூட்டிப்பாடும் போது சாதாரண மக்கள் நெஞ்சம் மகிழ்ந்து தலையாட்டி வாயசைத்து நெகிழ்ந்து, நெக்குருகி, விழிப் புணர்வு பெறமுயலும் முயற்சியில் மின்னுகிறார் கவிஞர்.

ஒருவனது படைப்பின் நிறை, குறைகளை அலசி ஆராய்ந்து கூறுவது விமர்சனமாகும். இதை மெத்தப்படித்து, தம்மைவிட எழுத்துலகில் மிஞ்சியவர் யாருமிலர் என எண்ணி இறுமாந்திருப்போரும், தம் படைப்பிற்கு விமர்சனம் எதற்கு? என்று விசுவாமித்திரனும் மாறுவதுண்டு. எழுத்துலகில் புதுசானவர்களுக்கும் விமர்சனத்தைக் கண்டால் ஹூம் இதைக் கூட விடமாட்டான்கள் என மனம் குழைந்து அங்கலாய்ப்பர். இப்படிப்பட்ட பிரச்சினையை உண்டாக்கும் விமர்சனத்தைப் பற்றி அழகான கருத்தில் சுவைபட விளக்குகிறார் ''விமர்சனம்'' எனும் தலைப்பில் இந்திரபவானி

விமர்சன உளிகள்
படைப்பவன் அறிவுவிளக்கின்
ஒளிச்சுடர் நிமிர்த்தும் ;
கற்பனை ஊற்றின்
கண்களைத் திறக்கும் ;
அடுத்துப் பிறப்பன
உயர் பிறப்பாக்கும்

பாராட்டுப்
பன்னீர்த் துளிகள்
படைக்கின்ற
மனசுத் தோட்ட

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வாழைகள் வளர்க்கும்
வேர்நீர் ;
சீராட்டும் அன்னையின்
தாலாட்டுப் பாக்கள்
ஆரோக்கிய அந்தியின்
ஓய்வுக்கு உதவிடும்
சாய்வு நாற்காலிகள்

எவ்வளவு பெரிய புகழ்பெற்ற கவிஞனானாலும், நிறை, குறைகளை ஏற்றுக் கொண்டு மேலும் ஒருபடி முன்னேறவேண்டும் இல்லையா ?

வர்க்கப் போராட்டத்திற்கு வழி சமைக்கிறார் கவிஞர் கதைப்பித்தன். கேட்டுக் கேட்டு தட்டுத்தட்டி என்னய்யா பிரயோஜனம் செவிடன் காதில் சங்கை ஊதறமாதிரி, மயிலிடம் போய் மயிலே இறகுகொடு என்று கேட்கிறமாதிரி சும்மாக் கெஞ்சினால் கிடைக்குமா ? முஷ்டியைத் தூக்கு, உடைத் தெறி, ''புதிய சுவிசேஷம்'' படை என்கிறார்.

'கேளுங்கள் கொடுக்கப்படும்''
கேட்டுக்கேட்டு அலுத்துப்போனோம்
'தேடுங்கள் கண்டடைவீர்கள்''
தேடித்தேடி வாடினோம்
''தட்டுங்கள் திறக்கப்படும்''
தட்டித்தட்டிக் கைகளில் ரத்தம்
கட்டிப் போயின
கடைசியில்
உடைக்கப் போகிறோம்
பிதாவே, எங்களை
மன்னியும் !

சமுதாயச் சுரண்டலை, ஏற்றத்தாழ்வை உடைக்கப் புறப்பட்டவர்களுக்கு கடவுளாவது மன்னிப்பதாவது ! கவிதை சிந்திக்கவைக்கும் அருமை என்னே !

சமுதாயத்தில் பெண்கள் படும்பாடு, பெண்களை வரதட்சணைக் கொடுமையென்ற தீ பொசுக்கி சின்னாபின்னப் படுத்துவது, இவைகளைச் சிந்தித்து, எழுதாத கவிஞர்கள் இல்லை. ஆனால் சி. விநாயகமூர்த்தி முற்றிலும் புதிய முறையில் பெண்மையின் கொடுமையை பெண் மனக் கோணத்தில் ஆராய்கிறார் 'தலைகுனிவு' என்ற கவிதையில்

நாணலைப் போல்
நம்குலப் பெண்கள்
மணவறை தன்னில்
தலைகுனிவது
வெட்கத்தால் அல்ல

பொன்னையும் கேட்கும்
புல்லரைக் காண
வெட்கப்பட்டு தானே
தலையைக் குனிவார்

ஒரு புதுச் சித்திரத்தைத் தீட்டி நம்மை வியக்க வைக்கிறார் கவிஞர்.

விலைவாசி ஏற்றம் மக்கள் மனதில் எவ்வளவு துன்பத்தைத்தந்து வாழ்க்கை கசக்கிறது என்பதை கவிஞர் வை. பூ. சோமசுந்தரம் மிக அழகாக பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறார் விலை(யை)வாசி எனும் தலைப்பில்

எண்ணெ விற்கிற
விலையைப் பார்த்து
மொட்டை யடிக்கலாம்னு
போனான்
அங்கிருந்து திரும்பியவன்
ஹிப்பி யாகிவிட்டான்

இப்போதுள்ள விலைவாசியில் இதுவும் ஒரு நல்லவழிதான் !

பாமரர் வாழ்க்கையில் அவலங்கள் எப்படியெல்லாம் நேர்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டு இக்கவிதை. ஒரு சோகக் காவியத்தை ஐந்தே வரிகளில் சித்திரமாகத் தீட்டுகிறார் கவிஞர் கொ. ச. பலராமன் 'பூக்காரி' என்பவளை நினைக்குந்தோறும் நம் நெஞ்சம் நெகிழ்கிறது அது கவிஞரின் வெற்றியல்லவா?

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பூக்காரி
பூக்குமுன்
பொட்டிழந்தாள்
பொலிவிழந்தாள்
பூவும் இழந்தாள்

அவள் எல்லோருக்கும் லட்சுமி கரத்தைக் கொடுத்துக் கொடுத்து தானதை இழந்துவிட்ட துன்பத்தை எத்துணை நாசுக்காகத் தருகிறார் கவிஞர், அருமை

சமுதாய மாற்றத்தை உருவாக்குபவன் கவிஞன். அவனது உள்ளத்துடிப்புகள், சொற்களில் வெளிப்படுத்த வேண்டும் துவக்கத்தில் புதுக்கவிதைகள், புத்தெழிலுடன், சமுதாய சீரழிவை எதிர்க்கப்புறப்பட்ட கூர்மையான அம்புகள் போல் நெஞ்சில் துளைத்தன. ஆனால் புற்றீசல்கள் போலப் புறப்பட்ட புதுக்கவிஞர்களின் கையிலகப்பட்ட புதுக்கவிதை, உருவம் கெட்டு, உத்திகெட்டு படிமம், கற்பனை யாவும் கெட்டும் எதை எழுதினாலும் புதுக்கவிதை என்ற சாதாரண எண்ணம் ஏற்படுத்துவதாய் அமைந்து விட்டது. இந்நிலை புதுக்கவிதையுலகிற்கு ஏற்படக் கூடாது என்ற நன்னோக்கில் எழுந்த விமர்சன நூற்கள் பல அவற்றில் வல்லிக்கண்ணனின் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ஆ ஜெகநாதனின் புதுக்கவிதை ஒரு திறனாய்வு தமிழ் நாடனின் ''புதுக்கவிதை நாலு கட்டுரைகள்'' என்ற நூல்களில் புதுக்கவிதைகளை விமர்சனம் செய்தும், கவிஞர்களை எச்சரித்து மிக நல்ல முறையில் விளக்கி ஆராய்ந்திருக்கின்றார்கள்.

புதுயுகத்தைப் பிரகடனப் படுத்த புறப்பட்ட இளங்கவிஞர்கள் பழைய மரபில் சலித்து ஜீவகளை மிக்க வசன நடையை ஒரு வித சந்த லயத்தோடு கூடிய செய்யுள் வடிவைத் தேர்ந்தெடுத்துள்ளனர் அது தான் புதுக் கவிதை. சிலர் நையாண்டி செய்து உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றனர். சிலர் மறை பொருளாக பிடிக்காததைக் கண்டு முணுமுணுக்கும் மெல்லிய குரலில் வெளிப்படுத்துகின்றனர். வேறுசிலர் அரசியல், சமுதாயப்பிரச்சினைகளைத் தன் நோக்கில் விமர்சித்து சுவைக்கத் தக்க விதத்தில் அமைக்கின்றனர். சிலர் புதுமையே இல்லாமல் பிறருடைய சொல்லாட்சிகளைப் பயன்படுத்துகின்றனர். நெல் வயலில் புல் முளைப்பதை களைகளை தவிர்ப்பது இயலாத காரியம். பலதடவை முயன்றும் மீண்டும் அறுவடையின் போது களைகள் தலை தூக்கி நிற்பது தெரியும். அது போலவே இலக்கிய உலகிலும் நடப்பது சகஜம் களைகள் இடை இடையே மின்னினாலும் உண்மை களைக் கவிதைகளை இனங்கண்டு பாராட்டுவது ரசிகன் கடமை ''என்கிறார் பன்மொழிப் புலவர்'' மு. கு. ஜகந்நாதராஜா ''இந்த யுகத்தின் இலக்கியத் துறையில் மகத்தான மாற்றங்களை விளைவிக்கப் போவது போன்ற பாவனையுடன் தான் பெரும் பாலான புதுக் கவிதையாசிரியர்கள் எழுதி வருகிறார்கள். கவிதை இலக்கியத் துறையை மட்டுமன்றி உலகையே புரட்டக் கூடியதுதான் என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் எந்தப் பின்னணியும் உந்துதலும் இன்றி எல்லோராலும் கவனிக்கப்படுவதற்கு இது ஒரு வழி என்பதற்காக மட்டுமே இத்துறையில் நுழைந்தவர் பலர் எந்தவிதமான இலக்கும் இல்லாததால் பல நேரங்களில், எதைப்பாடுவது என்பதே அவர்களுக்குச் சிக்கலாகப் போய்விடுகிறது'' என்கிறார் திறனாய்வாளர் ஆ. ஜெகநாதன்.

புதுக்கவிதை சமுதாய மாற்றத்தைக் காண விரும்பும் இளங்கவிஞர்களால் ஏற்றம் கண்டது. வீறு நடை போடுகிறது அதை இனி எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தி விட இயலாது பெருக்கெடுத்தோடும் 'வெள்ளத்தை தடுக்க நினைத்தால் வெள்ளத்தில் கரைவது உறுதி. புதுக்கவிதை எழுதும் கவிஞர்கள் மக்கள் இதயத்தில் எழும் உண்மையான உணர்வுகளை மதித்து. கலை மக்களுக்காக, கலைக்காக அல்ல என்பதை உணர்ந்து சமுதாய நெம்புகோலாக உயர்ந்த கருத்துக்களைப் பரப்பி சிறந்த நடையில் சிந்தனையைத் தூண்டி, மனத்தால் செயலால், வாக்கால் என்றும் உலகில் அதன் புகழ் மங்காது நின்று நிலைக்கும் வண்ணம் தொண்டுபுரிய வேண்டும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை கூறும் பௌத்தம்

" Buddhism As Expoundend in Manimekalai " என்று டாக்டர் எஸ். என். கந்தசாமி M. A. PHD அவர்கள் ஒரு ஆய்வுநூல் எழுதியுள்ளார். இந்நூல் 1978ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்துள்ளது. அதில் காணும் சில கருத்துக்கள்.

" டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் 1928ல் முதலில் மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பேராசிரியர் ஜாகோபி (JACOBI) பேராசிரியர் குப்புசாமி சாஸ்திரிகள் திரு நாராயண அய்யங்கார் ஆகியோர் மணிமேகலையும் திக்நாகரின் நியாய பிரவேசத்தையும் ஒப்பிட்டாய்வு செய்துள்ளனர்.

நூலைபதிப்பித்த உ. வே. சாமிநாதய்யர் உரையாசிரியர் ஔவை அ. துரைசாமிபிள்ளை முதலிய தமிழறிஞர்கள் இந்நூலை இலக்கிய நோக்கில் ஆய்ந்துள்ளனர். இதனை தத்துவ நோக்கில் ஆயும் முயற்சியே மணிமேகலை கூறும் பௌத்தம் எனும் ஆங்கிலநூல் மணிமேகலையின் காலம் காஞ்சியில் புத்தமதம் பிரபலமாக இருந்த கால கட்டமாகிய நான்கு அல்லது ஐந்தாம் நூற்றுண்டாகலாம்.

அவர்கால பௌத்தமதக் கருத்துக்கள் அனைத்தையும் நன்குணர்ந்து சாரமாக தமிழில் வெளியிட்டுள்ளார்.

தத்துவச் சொற்களைத் தமிழாக்குவதில் சிறந்த மொழியாக்கத்திறனையுடையவராவார்.

பௌத்த தத்துவத்தின் மூலக்கொள்கைகள் அனைத்தும் சரியாக விளக்கப்பட்டுள்ளன. பன்னிரு நிதானம் குறித்து சாத்தனுர் கூறும் விளக்கம் சக்கரமாக உருவகிக்கப் பட்டுள்ளது போலவே கி. பி. ஆரும் நூற்றுண்டில் அஜந்தா குகையில் ஒரு சக்கரமாக குறியீட்டுமுறையில் வரையப்பட்டுள்ளது. புத்தமதத்தத்துவ அறிஞர்கள் I. A. வாடேல், ரைஸ்டேவிஸ், கெரன், ஹரதயாள் ஆகியோர் பன்னிரு நிதானங்களை சித்திரவடிவில் தெளிவாக விளக்கியுள்ளனர்.

நாகார்ஜுனரின் ' மூல மாத்யமிக காரிகை ' கூறும் வகையிலேயே பிரதீத்ய சமுத்பாத கொள்கை மணிமேகலையில் விளக்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நாட்டுப் பாடல்கள்

குறிஞ்சிச் செல்வர் கொ. மா. கோதண்டம்

நாட்டு மக்கள் தாமாகப் பாடும் பாடல்கள் நாட்டுப்பாடல்கள் எனப்பெயர்பெற்றன. இவை நாட்டார்பாடல்கள் நாடோடிப்பாடல்கள் கிராமீயப் பாடல்கள் பாமரர் பாடல்கள் ஏடறியாக் கவிதைகள் எழுத்தறியாக் கவிதைகள் வாய்மொழி இலக்கியம் எனப் பலபெயராலும் வழங்கிவருகின்றன.

இவற்றில் தாலாட்டுப் பாடல்கள் விளையாட்டுப் பாடல்கள் சடங்குப் பாடல்கள் திருமணப் பாடல்கள் திருவிழாப் பாடல்கள் கும்மிப் பாடல்கள் கோலாட்டுப் பாடல்கள் வில்லுப் பாடல்கள் ஒயில்ப் பாடல்கள் கரகப் பாடல்கள் காதல் பாடல்கள் வீரப் பாடல்கள் தெய்வப்பாடல்கள் ஒப்பாரிப்பாடல்கள் எனப் பல வகைகள் உள்ளன.

உழைப்பின் துயரத்தை மறப்பதற்கு இப்பாடல்களே பாட்டாளிகளுக்கு பெரிதும் உதவுகின்றன. விவசாய வேலைகளான உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சல், களையெடுத்தல், பயிர்பாதுகாத்தல், அறுவடை செய்தல், பாரம்சுமத்தல் வண்டி ஓட்டுதல், மாடுகளை மேய்த்தல் போன்ற வேலை நேரங்களில் இந்தப்பாடல்களை அவர்கள் பாடும் பொழுது இன்றும் நாம் கேட்கலாம்.

ஒரு சமுதாயத்தின் நாகரிகம் பண்பாடு வரலாறு இவைகளுக்கு கல்வெட்டுகளும் புதைபொருள்களும் எவ்வாறு உதவுகின்றனவோ அவ்வாறே நாட்டுப்பாடல்களும் உதவுகின்றன இதையும் நாம் பிற நாட்டாரிடமிருந்தே கற்றுக்கொண்டோம்.

இன்று கற்றறிந்தோரெல்லாம் சாதாரண கிராமப்புற உழைப்பாளனிடம் சென்று நாட்டுப்பாடல்களையும் அதுபற்றிய சூழ்நிலைகளையும் கேட்டறிந்து தன் ஆய்வுக்கு பயன்படுத்திக்கொண்டு முன்னேறுகின்றனர் அந்த பாடகனோ பாடிக்கொண்டும் உழைத்துக் கொண்டும் என்றும்போல சாதாரணமாகவே வாழ்கின்றான்.

ஒரு மொழியின் இயல்பை அறியாத எதுகை மோனை போன்ற செய்யுள்முறைகளை தெரியாத யாப்பிலக்கணம் இல்லாத ஒருகிராமத்தான் தனது இன்பத்திலோ துன்பத்திலோ மன உளைச்சல்களை வெளியிடும் முகத்தான் பாடலாகப் பாடுகிறான். அதிலே மிகச் சிறந்த கவித்வமும் உவமை நயங்களும் உணர்ச்சிப் பிரவாகங்களும் கருக் கொண்டு மிளிர்கின்றன புகழ் பெற்ற கவிஞனின் கவிதைகளுக்குஈடாக இந்தப் பாடல்களும் திகழ்கின்றன.

உள்ளத்து உள்ளதுதான் உண்மையான கவிதையல்லவா! இதனை ஒருநாட்டுப் பாடல் மூலமே உணரலாம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

'' பாட்டறியேன் படிப்பறியேன்
பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்திலுள்ள வகையறியேன்
ஏட்டிலே எழுதவில்லே
எழுதிநான் படிக்கவில்லே
வாயிலே வந்தபடி
வகையுடனே நான்படிப்பேன் ''

சாதாரண பாமரன் ஏதும் அறிந்திருக்கவில்லை வாயிலே வந்தபடி தான் பாடினான் ஆயினும் வகையுடனே நான்படிப்பேன் என்ற வரியில் எத்தனை உறுதியும் உண்மையும்இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும். நாட்டுப் பாடல்கள் எப்படி உருவாயின ?

மனிதன் பேசப் பழகுவதற்கு முன்பே பறவைகளைப் போல மிருகங்களைப் போல சங்கேத மொழியைக் கடைப்பிடித்த காலத்திலேயே நீட்டிக் கூவும் அவன் மொழியில் ஒரு இதமான இசை கலந்திருப்ப்பதை உணர்ந்தான். அந்த ஒலியை மேலும் நீட்டி ஒலித்துரசித்திருக்கிறான் இயற்கை ஒலிகள் தரும் இசையினையும் கேட்டுரசித்திருக்கிறான். அந்த அனுபவம் அவனைப் பாடத் தூண்டியிருக்கிறது ஆகவே அவன்பேசுவதற்கு முன்பே பாடிப் பழகியிருக்கிறான்.

மழைபெய்து முடிந்திருக்கிறது கூரையிலிருந்து தண்ணீர் ஒவ்வொரு சொட்டாககீழே தேங்கியுள்ள தண்ணீரில் ''தளக்'' ''தளக்'' என்ற தாள லயத்துடன் விழுகிறது ஒருசொட்டுக்கும் இன்னொருசொட்டுக்கும் உள்ள இடைவெளி பிசகாமல் ஓசைமாறாமல் சொட்டுகின்ற நீர்த்துளிகள் இயற்கை தரும் தாளமல்லவா !

வேலைமுடிந்து குளித்துவிட்டுதுவைத்த வேட்டியை தலைக்கு மேலே இரு கைகளையும் தூக்கிப் பிடித்து காற்றில் ஆறவைத்துக் கொண்டு வருகிறான் ஒரு கிராமத்துப் பாட்டாளி. காற்றுக்குஅந்ததுணி'சடக்' 'சடக்' என்று ஓசை எழுப்புகிறது ஒருவாத்திய இசை போல.

பையன் பனை ஓலை செய்த காற்றாடியை கையில் பிடித்திருக்கிறான் அது காற்றில் சுழல்கிறது 'ஹீம்' என்ற குழல் ஓசை போன்ற ஒலி கிடைக்கிறது

இப்படி இயற்கை பல வகையில் ஒரு பேரானந்தமான இசையைத் தருகிறது. இது தானே பாட்டுக்கும் மூலவித்து இதில்மயங்கிய மனிதனே வாயைத்திறந்து இசையோடு பாடினான்.

ஏன் மகாகவிபாரதியே இந்தஇயற்கை இசையில் மயங்கவில்லையா !

''கானப் பறவை
கலகலெனும் ஓசையிலும்
காட்டு மரங்களிடை
காட்டும் இசைகளிலும்
ஆற்று நீர் ஓசை
அருவி ஒலியினிலும்
நீலப் பெருங்கடல் எந்
நேரமும் தானிசைக்கும்
ஓலத்தி டையே
உதிக்கும் இசையினிலும்
நெஞ்சைப் பறிகொடுத்தேன் ''

இந்த அதிசய இசை மேடையில் தன்னையே பறிகொடுத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறான் பாரதி

அதுபோல மயங்கிய பாமர உழைக்கும் மக்களும் அதை வெளிப்படுத்தும் முகத்தான் பாட்டுகளாகப் பாடினார்கள் உழைக்கும் போது ஒன்றுகூடி ஆடும்போதுகாதல் செய்து களிக்கும்போது இப்படியெல்லாம் இயல்போடு பாடினார்கள் ரசித்து மகிழ்ந்தார்கள்

இந்த நாடோடிப் பாடல்களில் கூடவல்லவா பாரதி நெஞ்சிழந்து நிற்கிறான். அடேயப்பா எத்தனை வகையான வேலைநேரங்களில் வெளிப்படும் இசைகள் எத்தனை ஊர்களுக்கு சென்றிருந்தால் அத்தனையும் அவன் கேட்டிருக்கமுடியும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

'' ஏற்ற நீர்ப் பாட்டின்
இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாமொலிக்க
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
நாட்டினிலும் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைபறி
கொடுத்தேன்.''

நாட்டினிலும் காட்டினிலும் என்று கூறும் போது தான் உண்மையான நாடோடி இலக்கியத்தின் பெருமை நமக்குப் புரிகிறது. அந்த இலக்கியத்தின் ரசனையை வேறுயார் தான் இவ்வளவு அற்புதமாக சொல்லமுடியும்

இன்றைய உலகின் அனைத்து மொழி களிலும் தோன்றிய காவியங்கள் செய்த மகா கவிகளுக்கு எல்லாம் முதலடி எடுத்துக்கொடுத் தவன் ஏன் மூலக் குருவாகி நின்றவன் இந்தப் பாமர உழைப்பாளிப் பாடகன் அல்லவா? அவனின்றி இந்த இலக்கியங்கள் ஏது.

நாட்டுப் பாடல்கள் பூமியை, மலைகளை, நதிகளை. கடலை, தாவரவண்ணங்களை, நட்சத்திரங்களை சூரியசந்திரஅழகுருவங்களை. இயற்கையின் எழிலை, இனியபொழில்களை இவற்றை எல்லாம் அழகாக வர்ணிப்பதோடு மனித மனத்தில் உந்தி எழுகின்ற மாறுபட்ட உணர்ச்சிப் பாவனைகளையும் வெளிப்படுத்து கிறது உண்மையானஅன்பும் மனிதமனத்தை லயிக்கச்செய்யும்இசையும் அதில்கலந்துள்ளது ஆகவேதான் அப் பாடல்கள் உலகளாவிய வகையில் இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படு கிறது

''நாட்டுப் பாடல்களின் இசை அவற் றின் வளத்தையும் கம்பீரத்தையும் அதிகப் படுத்துகிறது''

என்று கூறுவார் ஜே சி. ஹாட்கார்ட் என்ற மேலைநாட்டு ஆய்வாளர்

'' உலகமுழுவதிலுமுள்ள நாட்டுப் பாடல்களிடையே விளக்கிகூறமுடியாத ஓர் ஒற்றுமை நிலவுகிறது. அவற்றின் மொழிகள் வேறு வேருக இருப்பினும் அவைகள் எடுத்துக்கொள்ளும்பொருள் சொல்லும்பானி கருத்தில்கூட ஒற்றுமை காணப்படுகிறது''

என்று கூறுவார் W. P. ஹெர் என்ற சிந்தனையாளர்.

'' மிக்க ஒளிபொருந்திய விலைமதிக்க வொன்னுத எத்தனையோ மாணிக் கங்கள் ஆழமறியமுடியாத கடல்குகை களின் அடியில் மறைந்துகிடக்கின்றன. சுகந்த மணத்தோடு கூடிய மெல்லிய மலர்கள்காடுகளில் மலர்ந்துஅவற்றின் வாசனையாரும் நுகர முடியாமலேயே வாடி உதிர்ந்து விடுகின்றன அதே போல மில்டனைப் போன்று கவிதை உள்ளம் படைத்த பலர் கிராமங்களில் பிறந்திருக்கலாம் அவர்களைச் சார்ந்த சூழ்நிலைகள் அவர்களின் கவிதை உள்ளங்களின் உலகிற்கு திறந்து காட்டும் வாய்ப்பை அளிக்கவில்லை''

என்று சொன்னுர் ஆங்கிலக் கவிஞர் கிரே.

இது உண்மைதான் 'மூங்கிலிலை மேலே தூங்கும் பனிநீரே' என்ற ஏற்றக் காரனின் பாடலின் அடுத்த அடிக்கு கவிச்சக்கரவர்த்தி கம்பன் எத்தனை நாள் தவங்கிடந்தான் கம்பனைப் போல பாரதிபோல கவிதாவேச உள்ளங்கொண்டவர்ஆனுலும்அவற்றைவெளி யிட வாய்ப்புகள் கிடைக்காத எத்தனை பாமர

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நாடோடிக் கவிஞர்கள் தம் தமிழ் மொழியில் இருந்தார்களோ யார் கண்டது?

நாட்டுப் பாடல்களில் இயற்கை வர்ணனை இன்பதுன்பங்கள் சிறுசிறுநிகழ்ச்சிகள் இவற்றோடு சமுதாயத்திற்கு சேவை செய்த வீரர்கள், தலைவர்கள், அரசர்கள் இவர்களின் வாழ்க்கையும் கதையைப்போல தொகுத்துப் பாடிவந்தனர் இவை கதைப் பாடல்கள் எனப்பட்டன. இவை மக்களின் இதயத்திலிருந்து பொங்கிப் புரண்டு தாவிக் குதித்து எழுந்தவை இப்பாடல்கள் வாய்க்கு வாய் மொழிக்கு மொழி சமுதாயத்திற்கு சமுதாயம் நாட்டுக்கு நாடு யுகத்திற்கு யுகம் மெல்லெனப் பரந்து வந்து உலகசமுதாயத்தோடு வியாபித்துகவிதையின்பமும் இசையின்பமும் கலந்து மனித வாழ்க்கையை இன்பமயமாக ஆக்க உதவுகிறது.

''நாட்டுப் பாடல்களை பண்ணோடுபாடும் பொழுது பறவைகள் இறகை விரித்துப் பறந்து விண்ணிலே உயர உயரக் கிளம்புவது போலிருக்கும்''

என்று கூறுவார் இந்தியாவில் நாடோடிப் பாடல் இலக்கியப் பணிக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சத்தியார்த்தி அவர்கள்.

''ராமாயணம் பாடிய வால்மீகி தோன்றுவதற்கு முன்பே அவருடைய கதாபாத்திரங்களான ராமனும் சீதையும் கிராமமக்களிடத்தில் நாட்டுப் பாடல் வடிவத்தில் வாழ்ந்திருக்கின்றார்கள்''

என்று சொல்வார் ராஜாஜி அவர்கள்.

அதுமட்டுமா இராமாயணம் மகாபாரதத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படும் உலகப் பேரிலக்கியங்களான 'ஒடிசி' 'இலியட்' இவை கூட ஒருகாலத்தில் மக்கள் மத்தியில் கதைப் பாடல்களாக வழங்கி வந்தன என்று ஆய்வாளர்கள் கருதுகின் றனர்.

தமிழன் முதல்காப்பியமான 'சிலப்பதிகாரக்' கதையும் எழுதப்படுமுன் மக்களிடத்தே கதைப் பாடலாக உலவிவந்திருக்க வேண்டும் என்று கருதவும் இடமுண்டு

நமது சங்கத்தொகைப் பாடல்களில் ஐந்திணை தழுவிய அகப் பாடல்களுக்கு நாட்டு மக்களிடையே வழங்கிவந்துள்ள காதல் பாட்டுக்களேமுன்னோடியாக இருக்கவேண்டும் எனவும் இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நமது பழந் தமிழ் நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் எத்தனையோ வகையான நாட்டுப் பாடல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன நமதுகாவியங்களிலும் அவற்றின் சாயல் தொடர்ந்துள்ளது.

'' அக்கச்சி அச்சோ, அப்பூச்சி, அம்மானை, ஆற்றுவரி, இம்பில், உந்தியார், ஊசல், எம்பாவை, கானல்வரி கிளிப்பாட்டு, குணலை, குதம்பை குரவை, குறத்தி, கூடல், கொச்சகச்சார்த்து, கோத்தும்பி, சாழல், செம்போத்து, தச்சராண்டு, தாலாட்டு, திணைநிலைவரி, திருவங்கமாலை, திருவந்திக் காப்பு, தெள்ளேணம், தோணுக்கம், நிலைவரி, நையாண்டி, பகவதிபடைப்புலரி, பந்து, பல்லாண்டு, பல்லி, பள்ளியெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற்சுண்ணம், மயங்குதிணைநிலைவரி, முகச்சார்த்து, வள்ளப் பாட்டு, என்பனவும் ஆனந்தக்களிப்பு, கண்ணி, கீர்த்தனம், கும்மி, கோலாட்டம், சிந்து, நொண்டிச்சிந்து, முதலிய இசைப் பாட்டுக்களுக்கும் நாட்டுப்பாடல் வகைகள் '' என்று பேராசான் உ. வே. சாமிநாதய்யர் கூறுவார்.

மகாகவி பாரதியின் பாஞ்சாலி சபதம் நாட்டுப்பாடலின் நடையை பின்பற்றிய புதிய காவியமரபாகும் பாரதியின் பல்வேறுபாடல்களில் நாட்டுப்பாடலின் அமைப்பும் சந்தத்தையும் காணலாம் கோபாலகிருஷ்ண பாரதியார் ராமலிங்கசுவாமிகள் போன்றபல கவிஞர்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

களும் பலவகை நாட்டுப்பாடல் வடிவங்களை கையாண்டுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு வாய்மொழிப் பாடல்கள் ஏட்டிலக்கியங்களுக்கு அழகும் உயிரும் ஊட்டி வளர்த்திருக்கின்றன.

'' நாட்டுப் பாடல்கள் எளியவை பகட்டில்லாதவைபொய்க்கலப்பற்றவை நேரானவை உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும் இசையொலியும் நிறைந்தவை செழுமைமிக்க மனோபாவமும் கற்பிக்கப் படாத கட்டுப்பாடற்ற கற்பனையும் நிறைந்த களஞ்சியங்கள் அவை தீங்கற்ற கலைக்கருவூலங்கள் என்றே அவற்றைக் கூறலாம் ''

என சிறப்பித்துக் கூறுவார் ஆய்வாளர் அன்னகாமு நாட்டுப் பாடல்கள் பாமரமக்களின் ஆன்மா அல்லவா அங்கே சத்தியத்தை தவிர வேறு என்ன குடியிருக்கமுடியும்.

'' உலகெங்கிலுமுள்ள நாட்டுப் பாடல்களை ஊன்றிப்பார்த்தால் வாழ்மீகி, கம்பன், இளங்கோ, காளிதாசன், சேக்ஷ்பியர், மில்டன், வோர்ட்ஸ்வொர்த், தாகூர் போன்ற உலககவிஞர்களின் உள்ளங்களில் கவிதைவித்திட்டு அவர்களின் கவிதைபொழில் செழிக்க உரமானது அவைகளே என்பதை உணரலாம். அவர்களின் தாய்மார்களின் தாலாட்டுக்கள் அவர்களின் மனங்களில் அடைபட்டிருந்த கவிதை ஊற்றைதிறந்திருக்க வேண்டும் அவர்களின் கவிதைகளில் நயமானவற்றை எடுத்து சிலகற்பனை நிறைந்த நாட்டுப் பாடல் குறிப்பாக தாலாட்டுப்பாடல்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அவை தெரியவரும் ''

என்று ஆய்ந்து கூறுவார் ஆர். அய்யாச்சாமி தாய் என்பவள் சுவர்க்கத்தை தன் காலடியில் வைத்திருப்பவளல்லவா ! தாய்மை என்பது அன்பின்ஊற்றுஅல்லவா அந்தஉன்னதமான உணர்ச்சிப்பெருக்கிலே பிறப்பதால் அதிலே எல்லா அழகுகளும் அனைத்து நயங்களும் நிரம்பப்பெற்று தனக்கு நிகரில்லை என்று தாலாட்டுப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. அந்தச் சின்னக்குழந்தையின் பொன்மேனியில் பூப்பட்டாலே நோகுமென்று துன்புறும் உள்ளத்தில், அந்த மென்மை உரங்கலந்த அன்புநிலத்தில் எந்த நயக்கவிதைகள்தான் வளர்ந்து செழிக்காது !

'' நாட்டுப் பாடல்கள் முன்னிருப்பவர்கள் கேட்கப்பாடுவது, கேட்பவர்கள் மனத்தில் மகிழ்ச்சி சோகம்,, பெருமை பணிவு பெருமிதம், ஆர்வம், வியப்பு, வெறுப்புமுதலிய உணர்ச்சிகளை எழுப்பும் நிகழ்ச்சிகளையோ கவிதைகளையோ சொல்லுவது வழக்கமாக இருந்தன. அல்லது வேலைசெய்யுங் காலத்தில் களைப்பைப்போக்க அவர்கள் கூட்டு முயற்சியை ஊக்குவிக்க பாடுபடும் பாடல்களும் உள்ளன எப்படியும் ஒருகுழுவினரின் மனத்தில் ஏககாலத்தில் சமமான உணர்ச்சியை உண்டுபண்ணுவது பெரும்பான்மையான நாட்டுப் பாடல்களின் நோக்கமாகும் ''

என்று கூறுவார் தமிழகத்தில் நாடோடி இலக்கிய ஆய்வுக்கு பெரும்பணியாற்றி வழிவகுத்த பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் நியாயந்தானே! எந்த ஒரு காரியமும் சமுதாய நன்மைக்கே என்று இருந்தால்தானே அதுமக்கள் மத்தியில் நிலைத்து நிற்கும் அந்த வழியில் நாட்டுப்புற இலக்கியப் பாடல்களும் உழைப்பின் களைப்பை நீக்கி நல்லுணர்வுகளை வளர்த்து மனித உள்ளங்களுக்கு கலைஉணர்வுகளை ஆர்வமுடன் விருப்பங் கொள்ளச் செய்து ஆத்மார்த்தரீதியாக உள்ளம் நிறைவு விருந்தும் அளிப்பதாலல்லவா பன்னெடுங் காலமாக இப்பாடல்கள் வாழ்ந்து வருகின்றன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வரும் வரை அழாமல் கொத்தனிடம் பேச்சு வாங்கித் தராமல் இருப்பாயா என்று ஏக்கத்துடன் பாடுகிருள்.

'' வடகடல் முத்தை
வாரிஉமி கூட்டி
தென்கடல் மாணிக்கம்
திரட்டி அடுப்பாக்கி
வெண்கலப் பானை
விளக்கி அடுப்பில்வைத்து
சந்தனக் கட்டை
தரிச்சு அடுப்பில்வைத்து
வெள்ளிக் குழல்கொண்டு
வெள்ளாட்டி தீஊத
தங்க அகப்பையாலே
தாயுனக்கு பாலாற்ற ''

செல்வர் வீட்டு குழந்தைபோலும் சீரான தாலாட்டுஇந்தசெல்வத் தாயின்கற்பனையாகக் கூட இருக்கலாம்.

காதல் பாடல்கள்

உள்ளத்தால் உணரப்படுவது காதலின்பம் உள்ளத்தின் மலர்ச்சியிலிருந்து வெளிப்படும்தேன் தான் அதுகாதல்வாய்ப்படும்ஆணும் பெண்ணுமாகிய இருவரின் உள்ளத்துணர்ச்சிகள் தேனாய், தீங்கனியாய், அமுதமாய் வெளியிடும் சொல்லோவியங்களே கவிதைகள்.

'' தண்ணிக் குடமெடுத்து
தனிவழியே போறகண்ணே !
தண்ணிக் குடத்தினுள்ளே
தளும்புதடி எம்மனசு ''

அவள் தண்ணீர் எடுத்து வருகிருள் அவளைக் கண்டதும் அவன் மனம் தத்தளிக்கிறது. அரைகுடத்துநீர் தளும்புவதற்கு சொல்லும் உவமை நயம் அருமையாக இருக்கின்றது தனிவழியே என்பதில் நானும் கூடவருவேன் எனும் கருத்துதொனியாக உள்ளது.

'' சந்தன மரத்தடியில்
சந்திப்போம் மாலையிலே
பூவலடிக்கு மச்சான்
பொழுதுபட வந்திடுங்க ''

இப்போதுகூட வந்தால்யாரும் பார்த்துவிட்டால் ஆபத்து பின் மாலை பொழுதில் வரச் சொல்லி குறியிடம் காட்டுகிருள் அவள்.

'' தேமல் மார்பழகும்
தேனினிக்கும் செவ்வுதடும்
வாழை உடலும் என்னை
வாட்டுதடி நித்திரையில் ''

காதலியின் அழகுருவம் அவனை நித்திரையிலும் சித்திரவதை செய்கிறது

'' எண்ணைத் தலையழகா
எழுத்தாணி மூக்கழகா
கோயில் சிலையழகா
கொல்லுதடா உன்னுசை ''

அவனுடைய உருவஅழகுருவம் கொல்லுகிறதாம் எழுத்தாணிமூக்கு புதுமையான உவமை

சிறுவர் விளையாட்டுப்பாடல்

சிறுவர்கள் விளையாடும் பொழுது அந்த விளையாட்டையே பாடலாக பாடுவதும் திண்பண்டங்கள் பற்றியும்பாடுவதும் கிராமங்களில் கொஞ்சிப்பேசும் பிஞ்சு உள்ளங்களிலேயே இயல்பான பாடல்கள் இன்றும் காணலாம்.

'' புங்கஇலை பிச்சிப்பூ எங்கிருக்குது
பொன்னப்பன் தோட்டத்துலே பூத்திருக்குது
அங்கேபோயி கண்ணுமூச்சி விளையாடலாம்
அய்யய்யோ தோட்டத்துல பூச்சியிருக்கும்
பூச்சிக்கு எங்கிட்டமருந்திருக்குது
பூத்தொடுத்து சாமிக்கி போட்டிடலாமே ''

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மண்ணடியில் விற்கும்லட்டு
மடியில் வாங்கிகட்டு
எடுத்துக் கொஞ்சம்பிட்டு
எனக்கு முன்னே இட்டு
உண்டுவிட்டு ஏப்பம்
ஓடுகொஞ்சம் பாப்போம் ''

'' காசா லட்டு
கைமேலே துட்டு''

வேலைநேரப் பாடல்கள் வேலை சிரமம் தோன்ருதிருக்கப்பாடுவது

'' கருத்த காளை ரெண்டுபூட்டி
கரிசக்காட்டை உழுகப்போறேன்
செவளக்காளை ரெண்டுபூட்டி
செவக்காட்டை உழுகப்போறேன்
மயிலக்காளை ரெண்டுபூட்டி
மானும்பரிய உழுகப்போறேன் ''

'' முத்துமுத்தாக வளரவேனும் கதிர்
முங்கலநெல்லு காணவேணும்
பாத்தி பாத்தியாக நாத்துப்போட்டு
பந்தயம்போட்டு நடவுங்கடி ''

உழுதல், நாற்றுநடுதல், வேலைகளைப் போலவே ஏற்றம் இறைத்தல் மற்றும் கடலில் ஓடம்விடுதல் போன்ற வேலைகளிலும் சுவையான பாடல்கள் வழங்கி வருகின்றன.

சிறந்தவர்கள் பெருமைகளையும் இறப்பினல் பாதிக்கப்படுபவரின் துன்பத்தையும் எடுத்துச் சொல்லிப் பாடுவது பட்டிதொட்டிகளில் இழவுவீட்டில் உறவினர்கள் துக்கம் விசாரிக்கவந்து வீட்டார் அழும்போது தாமும் தம்வீட்டில் முன்பு இறந்தவர்களைப்பற்றிபாடி அழுவதை இன்றும் காணலாம்.

'' பாலூத்தி பாத்திகட்டி பாக்குமரம்
உண்டாக்கி
பாக்கும் தழையல்லையே நான் பாதி
நாள் வாழலையே
நெய்யூத்தி பாத்திகட்டி நெல்லி மரம்
உண்டாக்கி
நெல்லியும் தழையல்லையே நான்
நீண்ட நாள் வாழல்லையே
சீரகம் பூப்பூக்கும் செடிமுறுக்கி
பிஞ்செறங்கும்
சீராளன் இல்லாமெ நான் செடிபோல
வாடுதனே ''

ராஜபாளையம் நகரிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் பல்வேறு வகையான நாட்டுப்பாடல்கள் வழங்கி வருகின்றன அவற்றை நாங்கள் (கொ. மா. கோதண்டம் டி. அ. துரைராஜா கொ. ச பலராமன்) சேகரித்து 'தாமரை' 'சாந்தி' முதலிய இதழ்களில் வெளிவந்தன இதோ இரண்டு பாடல்கள்

'' நானிருக்கேன் ராஜபாளையம்
நீயிருக்கே வெங்காலூரு
கண்டு பேசனுமுன்னு
கருங்குளந்தா ஊடேருக்கு ''

'' அப்பனேரிப் பண்ணையிலே
பேரான கருதறுப்பு
கொழுந்தப்புள்ள கட்டுகட்டி
தூக்கிவிடும் கொத்தனரே''

நாடோடிப் பாடல்கள் இன்று உலகத்தின் பல நாட்டு பல்கலைக் கழகங்களில் பாடமாகவும் ஆய்வுப் பொருளாகவும் வைத்துள்ளார்கள் இன்றைய நாகரிக மோகத்தில் தாலாட்டுப் பாடல்கள் பாடுவது தாய்மார்களால் மறக்கப் பட்டுவருகிறது இழவு வீடுகளில் ஒப்பாரிப் பாடல்கள் பாடுவது அனேகமாய் நின்றுபோய் விட்டது.

சேகரித்து அச்சாக்காமல் இன்னும் நம் கிராமங்களில் ஆயிரக்கணக்கான பாடல்கள் வழங்கி வருகின்னற மெல்ல மெல்ல மறைந்தும் வருகின்றன. இவ்வரிய இலக்கியச் செல்வத்தை இழந்துவிடாமல் இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் முன்வந்து இவற்றை சேகரித்து தொகுத்துஆய்வுமுறையில் நூலாக வெளியிட முயல வேண்டும் வெளியீட்டாளர்களும் இதற்கு துணைசெய்ய வேண்டும்.

இலக்கிய மன்றங்களும், பல்கலைக் கழகங்களும் இன்னும் தீவிரமாக இப்பணியில் பாடுபட வேண்டும். தமிழக அரசும் இத்துறையில் கவனம் செலுத்த வேண்டும் நம் நாட்டின் பண்பாடு கலாச்சாரம் இவற்ரெடு கூடிய வரலாற்றுப் பொக்கிஷத்தை இழந்து விடக் கூடாதல்லவா !

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சாத்தனர்

அ. மு. பரமசிவானந்தம்

[அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் - 1972 ஜனவரி 30, 31 தினங்களில் ஆற்றிய டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை நிறுவிய சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்]

[சில ஆய்வுக்குறிப்புகள்]

மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த G. U. போப் அவர்கள் சாத்தனார் என்பது சைனப் பெயர் என்றும் இவர் புத்தர் சிறப்பினைப்பாடும் மேகலையை இயற்றினார் என்றும் கூறுவார்.

சாஸ்தா என்பது புத்தருடைய பெயரே என்று அமரகோசம் முதலிய வடமொழி நிகண்டு முதலியவற்றை மேற்கோள் காட்டுவர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்,

மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பஞ்சாபகேசஐயர் இளங்கோ புத்தத்துறவி என தம் முன்னுரையில் தவறாகக் கூறியுள்ளார்.

ஆய்ந்து நோக்கின் இளங்கோவடிகள் சைனர் என்பதும் அவர் அண்ணன் செங்குட்டுவன் சைவன் என்பதும் சாத்தனர் பௌத்தர் என்பதும் அக்காலத்தில் நாட்டில் நிலவிய சமய பொறையே அனைவரையும் அன்பால் பிணிக்க நமக்கு நல்ல ஈரிலக்கியங்கள் தந்தது என்பதும் அறிய முடிகிறது.

சிலம்பு மேகலை இரண்டும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் தோன்றிய பெருநூல்கள் எனக்கொள்வதே ஏற்புடைத் தாகும்.

சாத்தனரைப் பற்றியும் ஆராய்ந்த சென்னைப்பல்கலைக்கழக பேரா சிரியர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் சங்க இலக்கியங்களைப்பாடிய சாத்த னரே மணிமேகலையைப் பாடினர் என்று கருதுகிருர்.

மணிமேகலையைப் பற்றிய கனகசபைப்பிள்ளை குறிக்கும்போது, இது புத்தசமய நூல்கள் எல்லாவற்றிலும் முதலில் உண்டான மூலநூல் கள் [திரிபிடகநூல்கள்] தவிர்த்து; பிற எல்லா மொழிகளிலும் இதுவே பழமையான நூல் என்று கூறுகிருர்.

பௌத்தம் சைனம் இரண்டும் தமிழ்மரபுக்கு மாறுபட்ட துறவினை வற்புறுத்த சைவரும் வைணவரும் துறவினும் இல்லறமே ஏற்றமெனக் கொண்ட பழந்தமிழ்க் கொள்கையினையே பின்பற்றி வாழ்ந்தனர் எனவே தமிழர் அம் மதத்தை நன்கு பற்றிக்கொண்டனர்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மொழி பெயர்ப்புக் கலை

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

மனிதகுல நாகரிக வளர்ச்சிக்கு, உற்பத்திக் கருவிகளின் மாற்றம் முதலிய பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பரஸ்பர சிந்தனைப் பரிமாற்றமே அடிப்படையாக அமைந்திருந்தது என்பது சரித்திரம் கண்ட உண்மையாகும். இடம், காலம் இரண்டையும் கடந்து, அழியாத உயர்ந்த சிந்தனைகளைச் சேமித்து வைக்கப்பட்ட மொழிகளின் மூலமாக நெடுங்காலமாகவே சிந்தனைகள் பரிமாறிக் கொள்ளப் பட்டன பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் ஜென்ட் அவஸ்தாவைப் பற்றியும் ஜொராஸ்டரைப் பற்றியும் நன்கறிந்திருந்தனர். இந்திய தத்துவஞானச் சிந்தனைகள் ஸாக்டரடீசுக்கு முன்பேயே கிரேக்கத் தத்துவ ஞானிகள், குறிப்பாக பித்தா கோரஸ் போன்றோர் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. புத்தமதம் கீழ்நாடுகளில் பரவிய போது, திபேத்திய, சீன மொழிகளில் சிறந்த மகாயான நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. இந்தியாவில் பாலி, சமஸ்கிருத மொழிகளில் கிடைக்காத அரிய பௌத்தச் சிந்தனைகளின் மூல நூல்கள் இன்றும் திபேத்திய மொழியில் பாதுகாக்கப் பட்டுள்ளன. ராகுல சாங்கிருத்யாயன் அவர்கள் குறிப்பிடுவது போல இம் மூலநூல்கள் மொழி பெயர்க்கப் பட்டிராவிட்டால் உயர்ந்த சிந்தனைகளை உலகம் இழந்திருக்கும். ஏழாம் நூற்றுண்டளவில் 'பஞ்சதந்திரம்' பார்ஸி, அரபு மொழிகளில் மொழியாக்கம் பெற்று விட்டது. இரண்டாவது கலிபாவின் காலத்தில் அரபு மொழியில் கிரேக்க, ரோமானிய, இந்திய கலைஞான நூல்கள் பெருவாரியாக மொழி பெயர்க்கப் பட்டதன் விளைவாக அரபு மொழி வளமுடையதாயிற்று. இராமாயண, பாரத இதிகாசங்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் பெற்று இலக்கிய வளம் படைத்து மிளிர்கின்றன. பிராகிருத மொழி இலக்கியங்கள் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப் பட்டன. குறிப்பாக பைசாசி மொழியில் குணுட்டியர் கி.பி. முதலாம் நூற்றுண்டில் இயற்றிய பிருகத்கதை - சமஸ்கிருதத்தில் சோமதேவரால் (9நூற்றுண்டில்) மொழி பெயர்க்கப்பட்டு நமக்கு கிடைத்திருக்கிறது. பிருகத்கதை தமிழிலும் 'பெருங்கதை' என்ற பெயரில் 10ம் நூற்றுண்டில் மொழி பெயர்க்கப் பட்டதும் குறிப்பிடத் தகுந்தது. மேனுட்டில் மறுமலர்ச்சி யுகத்தின் சிந்தனை வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைந்தது கிரேக்க இலக்கிய தத்துவஞான நூல்களும், மொழி பெயர்க்கப் பட்டதே ஆகும் என்பது உலகறிந்த உண்மையாகும். ஆங்கில மொழியின் வளம், அம் மொழியில் உலகெங்குமுள்ள சிறந்த சிந்தனைச் செல்வங்கள் எல்லாம் மொழி பெயர்க்கப் பட்டதால் தான் உருவாயிற்று. மொகலாய மன்னர்கள் காலத்தில் சமஸ்கிருத இலக்கியதத்துவ ஞான நூல்கள் பாரசீக மொழியில் மொழி பெயர்க்க பட்டன ஷாஜஹானின் மூத்தபுதல்வர் தாரா ஷுக்கோ (அவுரங்கசீபின் அண்ணன்) தாமே வேதோப நிஷதங்களை பாரசீக மொழியாக்கம் செய்த தத்துவ வித்தகராகத் திகழ்ந்தார். தமிழ் தவிர்ந்த மற்ற இந்திய மொழிகள் எல்லாம், (சிங்களம் உட்பட) சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் இருந்த வைதிக (ஹிந்து) சமண, பவுத்த மூல நூல்களின் சிந்தனைகளைப் பிரதி பலிக்கும் தழுவல் இலக்கியமாகவே பெரும் பாலும் அமைந்-

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

துள்ளன. சுயமான படைப்புகள் அளித்தோர் மிகச் சிலரே. தமிழில் இளங்கோ அடிகள் சாத்தனுர், தெலுங்கில் பிங்களி சூரனர் ஆகியோரைத் தவிர மற்றவர்களின் காவியப் படைப்புகள் எல்லாம் சரித்திரக் கூறுகவோ, தழுவலாகவோ தான் அமைந்துள்ளன. மற்ற கவிஞர்களின் சிறந்த படைப்புகள் எல்லாம் வட மொழியின் தழுவல் இலக்கியங்களே என்பது தெளிவு

இதன் மூலம் மொழி பெயர்ப்பு என்பது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலக்கிய தத்துவ ஞானங்களிலும் பிற கலைஞானங்களிலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது பல்வேறு மொழிகளின் வளமைக்கும் செழுமைக்கும் மூல காரணமாக அமைந்திருக்கிறது என்பது தெளிவாகும். ஐந்தாம் நூற்றுண்டில் பாஹியானும், பின்னர், ஏழாம் நூற்றுண்டில் ஹுவான் சாங்கும் சீனத்திலிருந்து பாரதத்திற்கு வந்து பல அரிய தத்துவ நூல்களை சீன மொழிக்கு தந்துள்ளனர். பதினெட்டாம் நூற்றுண்டில். சிறந்த பல வடமொழி நூல்கள் ஆங்கிலம், ஜெர்மன் முதலிய மேனுட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் மாக்ஸ் முல்லர், ரிக்வேதம், உபநிடதங்கள்; தத்துவஞான நூல்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்து மிக அரிய சேவை செய்துள்ளார். ஹெர்மன் ஜாகோபி, கால்ட்வெல் போன்ரேரும் பல்வேறு மொழிகளைக் கற்றறிந்து சிறந்த சேவை செய்தனர். மொழியியல் விஞ்ஞான பூர்வமான கலையாக உருவாகியதின் காரணமாக உலக மொழிகளை எல்லாம் கற்றறிந்து மொழிகளின் உறவுகளைக் கண்டறிந்ததன் மூலம் மனிதகுல வரலாற்றில் புதியஒளி தென்பட்டது. எமர்சன் தோரோ, டால்ஸ்டாய். அர்னல்ட், ஷோபன் ஹவர், ஆல்பர்ட் ஷ்வெட்ஷர் போன்ற மேதைகள் இந்தியச் சிந்தனைகளில் உரம் பெற்றவர்கள். ஜெர்மன் மொழி அறிஞர்களும். கதே போன்ற கவிஞர்களும், தத்துவ ஞானிகளும், இந்திய தத்துவ ஞானத்தை, மொழி பெயர்ப்பின் மூலமாக உணர்ந்து ஊக்கம் பெற்றனர். அண்மைக் காலத்தில் இந்தியாவில், ராகுல் சாங்கிருத்யாயன், சுநீதி குமார சட்டர்ஜி, சுத்தானந்த பாரதி போன்ரேர் பல்வேறு மொழிகள் கற்றுத் தெளிந்து தமது மொழிகளில் மொழி பெயர்ப்புகள் செய்து இலக்கிய வளத்திற்கு உதவியுள்ளனர்.

மொழிபெயர்ப்பு - இரு மொழிகளை மட்டுமன்று இரு இனங்களையும் இணைவிக்கும் பாலமாகும். பயிருக்கு உரம் எவ்வளவு இன்றியமையாத் தேவையாக இருக்கிறதோ அதுபோல ஒவ்வொரு மொழியின் வளர்ச்சிக்கும் மொழி பெயர்ப்புக் கலையும் இன்றியமையாத தேவையாகும்

ஒரு மொழியின் வளத்துக்கும், மனித குல அறிவு வளர்ச்சிக்கும் மொழி பெயர்ப்பு முக்கியத்துவம் உடையது என்ற உண்மையை பல படைப்பாளிகளும், வாசகர்களும் உணராமலிருப்பது துரதிர்ஷ்ட வசமானதாகும். சிறந்த எழுத்தாளர்கள், அறிஞர்கள் கூட பிற மொழி இலக்கியங்களைப் பற்றிய அறிவைப் பெறுவதில் சிரத்தையின்றி தமது மொழி அறிவிலேயே திருப்திபடைந்து விடுகின்றனர். இதனுல் தம் மொழியைப் பற்றி அதீதமான குறுகிய மனப்பான்மையுடன் காணப்படுகின்றனர். இதன் விளைவாக பிராந்திய வேறுபாடுகளை மிகைப்படுத்துகின்றனர். தேசீய ஒருமைப் பாட்டுச் சிந்தனைகளைப் புறக்கணிக்கின்றனர். இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் பேசும் நாட்டில் அறிவு ஜீவிகள், பிற மொழி இலக்கிய கலாசாரங்களைப் பற்றிய அடிப்படை ஞானமாவது பெறுவது அவசியமாகும். பெரும்பாலும் வாசகர்களும் மொழி பெயர்ப்பு நூல்களைப் படிப்பது இல்லை. சில தரமற்ற மொழி பெயர்ப்புகள் வாசகர்களின் படிக்கும் ஊக்கத்தைக் கெடுத்து சலிப்படையச் செய்து விடுவதும், காரணமாகலாம். மேலும் பிற மொழிப் பெயர்கள் வேறுபாடான களம், சூழ்நிலைகளும் காரணமாகலாம் எனினும் சிறந்த தரமான மொழி பெயர்ப்பு நூல்களைப் படிக்கும் போது இத்தகைய சிக்கல்கள் இராது ஆதலின் தரமான மொழி பெயர்ப்பு நூல்களை சிரமம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பாராது படித்து அறிவைப் பெருக்குவது அவசியமாகும்.

ருஷ்யா, ஜப்பான், அமெரிக்கா முதலிய முன்னேறிய நாடுகளில் உலகின் எந்த மூலையில் வெளிவந்த நூலாயினும் தரமான படைப்பாக இருக்குமானால் உடனடியாக மொழி பெயர்த்து தத்தம் தாய் மொழி -யிலேயே உலகச் சிந்தனைகளைக் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளனர். நமது இந்திய நாடோ இந்த வகையில் ஒரு நூற்றாண்டு காலம் பின்தங்கி இருக்கிறோம். ஒரு தமிழ்ப் பண்டிதரோ தமிழ் அறிஞரோ, தம் அண்டை மொழியான தெலுங்கு கன்னட மொழிகளைப் பற்றி எந்த ஒரு அடிப்படையறிவும் இல்லாத நிலைமையைக் காண்கிறோம்

வடமொழி கீதை, உபநிடதங்கள், இதிகாசங்கள்; சில காளிதாசன் படைப்புகள். சில நாடகங்கள் மட்டுமே தமிழில் வந்த மொழி பெயர்ப்புகள். வட மொழியில் குவிந்து கிடக்கும் தத்துவ ஞான நூல்கள், சிறந்த இலக்கியப் படைப்புகள், கவிதையியல் (Asthetics) ஆய்வுகள் பற்றிய நூல்கள் இன்னும் நமக்குக் கிடைக்காத பொக்கிஷங்க -ளாகவே உள்ளன. கிரேக்கத்திலிருந்து சாஹித்ய அகாடமியினர் வெளியிட்ட ஒரு சில நூல்களும், வெ. சாமிநாத சர்மா மொழி பெயர்த்த சில நூல்களும் தவிர வேறு வரவில்லை. நேஷனல் புக் டிரஸ்டார் தற்கால இலக்கியங்கள் சில மொழி பெயர்ப்புகள் வெளியிட்டு பேருதவி செய்துள்ளனர். சாஹித்ய அகாடமியும் சில தரமான நூல் -களைத் தந்துள்ளதைப் பாராட்ட வேண்டும். எனினும் மூல நூல்கள் மூல மொழியிலிருந்தே மொழி பெயர்க்கப்படல் வேண்டும். இவை பெரும்பாலும் ஆங்கிலம் வழியாக வந்த இரண்டாந்தர மொழி பெயர்ப்புக்கள் தான். சிறந்த பேரிலக்கியங்களைத் தக்க இரு மொழி யிலும் ஆழ்ந்த புலமையுடையவர்களால் மொழி பெயர்க்கச் செய்ய வேண்டும். இந்த வகையில் பாலையில் ஒருசோலை போல லக்னோவில் உள்ள புவனவாணி டிரஸ்ட் சிறந்த பேரிலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் மூல மொழியிலிருந்து மொழி பெயர்ப்புகள் செய்த மூல மொழிச் சொல் அமைப்பும் (Translitration) தந்த அருமையான பல நூல்களை வெளியிட்டதை எவ்வளவு பாராட்டினும் தகும். இந்நூல்கள் இந்தியில் வெளியிட்டுள்ளார்கள்.

இந்திய மொழிகளில் சிறந்த பேரிலக்கியங்களை எல்லாம் வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருவது மகிழ்தற்குரியது. பாரதீய வித்யா பவனும் ஞான பீடமும் சிறந்த பலநூல்களை மொழி பெயர்ப்புடன்வெளியிட்டுள்ளனர். இந்த வகையில் நமது நாட்டின் பல்கலைக் கழகங்களும், அரசாங்கமும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று பாரதி கூறியதுபோல இந்திய நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத் தாய் மொழிகளிலும் பிற மொழி நூல்களை மொழி பெயர்த்து வெளியிட ஒரு இலக்கிய இயக்கமாகவே தொடங்க வேண்டும். தெலுங் -கில் வட மொழி இலக்கியங்களின் மொழி பெயர்ப்பு நூல்கள் மிகுதியாக இருப்பது போல வேறு தென்னிந்திய மொழிகளில் இல்லை. தனிச் சிறப்புடையதும், தனித் தன்மை வாய்ந்ததுமான தமிழ் இலக்கியங்கள் பிற மூன்று திராவிட மொழிகளிலும் போதுமான அளவு மொழி பெயர்க்கப் படவில்லை

தெலுங்கில் பூதலப்பட்டு ஸ்ரீராமலு ரெட்டி அவர்கள் இருபதாண்டுகட்கு முன்பு கம்பராமாயணம் பெரிய புராணம், திருக்குறள் சிலப்பதிகாரம். மணிமேகலை, நாலடியார், பாரதி கவிதைகள் முதலிய சிறந்த தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்துத் தந்து ஒரு அரிய சாதனை செய்தார் எனினும் சங்க இலக்கியங்கள் தெலுங்கில் மொழி பெயர்க்கப் பட வேண்டியுள்ளது. கன்னடத்தில் வர வேண்டும் கன்னடத்தில் தனிச் சிறப்புடைய

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சமண காவியங்களும், உபநிடதங்கட் கிணை - யான சிவசரணரின் இனிய வசனங்களும் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். தமிழோடு நெருங்கிய உறவுடைய மலேயா ளத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, புறம் அகம், பதிற்றுப்பத்து திருக்குறள், கம்ப - ராமாயணம் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. எனினும் பிற சங்க இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். திராவிட மொழி களில் நெருங்கிய உறவு ஏற்பட வேண்டும். இதே போல இந்தி, மராட்டி முதலிய வட இந்திய மொழி இலக்கியங்கள் தமிழிலும், தென் இந்திய இலக்கியங்கள் வட இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்-டும். இதன் மூலமே நாம் இந்திய தேசிய ஒருமைப் பாட்டை உருவாக்க முடியும்.

மொழி பெயர்ப்பு ஒரு கலையாகும். இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய பல்வேறு துறைகளிலும் மொழி பெயர்ப்பு இன்றியமையாததாகும். சில இடங்களில் அது ஒரு தொழிலாக்கப்பட்டாலும் கூட இலக்கிய நூல்களைப் பொறுத்தமட்டிலும் அது ஒரு கலையாகவே பேணப்பட வேண்டும். மொழி பெயர்ப்பாசிரியன் மூல நூலின் மொழியைப் போலவே தான் மொழி பெயர்க்-கும் மொழியிலும் கூட ஆழ்ந்த புலமை பெற்-றிருத்தல் அவசியமாகும். அந்தந்த மொழி களின் சொல்லமைப்புகளை நன்குணர இலக்க ணப் பயிற்சி தேவை.

தான் மொழி பெயர்க்கும் நூல் எந்தத் துறையைச் சார்ந்ததோ அந்தத்துறையிலும் தான் முன்பே கற்றறிந்த தெளிவான ஞானம் தேவை. ஒவ்வொரு துறைக்கும் உள்ள கலைச் சொற்கள் குறித்து தெளிவான அறிவு இருத்தல் வேண்டும். மொழி பெயர்க்கும் போது ஒவ்வொரு சொல்லும் மொழியாக்கம் பெற வேண்டிய தேவையில்லை, சில சொற்களைத் தவிர்க்க நேரிடலாம். சில சொற்களை அதிகமாகப் பெய்ய வேண்டிய தாகலாம் ஒரு கவிதை நூலை மற்றெரு மொழியில் செய்யுள் வடிவில் மொழி பெயர்க்கும்போது இது நேரிடலாம். அடி நிரப்புவதற்காக தன் சொந்தக் கருத்தையும் மூலப்பாடலின் கருத்துக்கு மெருகூட்டும் வகையில் அமைக்கலாம். இது தவறல்ல. மூல நூலாசிரியனின் இதயத்தை நன்கு உணர்ந்து, பொருட்சிதைவு ஏற்படாத வாறும், கூடுமான வரை மூல மொழியின் நடைச் சிறப்பு (Style) தோன்றும்படி யாகவும் மொழி பெயர்க்க வேண்டும்.

சில மொழிகளின் சொல்லமைப்பால் ஏற்படும் சிலேடை நயங்களை மற்றெரு மொழி யில் கொண்டு வர இயலாது போகலாம், சில மொழிகளில் உள்ள சொற்களுக்கு சரியான. இணையான சொற்கள், தான் மொழி பெயர்க்கும் மொழியில் இல்லாது போகலாம். இத்தகு சிக்கலான இடங்களில் மொழி பெயர்ப்பாளன் மிகவும் நிதான - மாகவும் கவனத்துடனும் கூடுமானவரை மூல நூலின் கருத்தில் சாரம் வருமாறும் மொழி பெயர்த்தல் வேண்டும்

மொழி பெயர்க்கும் போது அகராதிகள் நிகண்டுகள் நமக்குத் துணை புரியலாம்., அதே சமயம் அகராதிகளை விட தனது மொழி அறிவின் ஆழத்தையே தான் நம்ப வேண்டும். அதற்கேற்ப தன் மொழிப் புலமையை மிகுவித்துக் கொள்ள வேண்டும் தமிழிலிருந்து பிற மொழிக்கு மொழி பெயர்க்கும்போது, தமிழில் உள்ள பயனற்றதும், தொனிப் பொருள் தராததும் ஆன அடை மொழிகள், சில தொகைச் சொல் அமைப்புகளை தவிர்க்க லாம். அலை கடல் என்று வரும் சொல்லை பிற மொழியில் மொழி பெயர்க்கும் போது கடல் என்ற சொல் மட்டும் வழங்கும் அமைப் - பாகும். செஞ்ஞாயிறு, வெண்டிங்கள், அலை கடல் என்பன தமிழ் வழக்கு. இதற்கு விசேஷார்த்தம் ஒன்று மிராது. பிற இந்திய மொழிகளில் விசேஷார்த்தமோ, தொனிப் பொருளோ இன்றி அடை மொழிகள் வருவ தில்லை. மேலும் ஒவ்வொரு மொழிக்கும் உரிய சில சம்பிரதாயங்கள், மரபுகளையும் நாம் கவனித்தில் கொள்ள வேண்டும் கருவிழி நமக்கு அழகு. மேனாட்டினர்கோ நீல விழிகள் அழகாகும். மென்முலை என்பது

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தமிழ் மரபு. கடின ஸ்தனி (வன்மையான-முலை) என்பது வடமொழி மரபு. தமிழில் இலை, மடல், ஓலை, தோகை, முதலிய பல சொற்கள் இடம் அறிந்து பயன் படுத்த வேண்டும். தொல்காப்பிய மரபியல் சூத்திரங்கள் இதற்காகவே எழுதப்பட்டவை. பிற மொழியில் இலை (Leaf)என்ற ஒரே சொல் கொண்டே விளக்க நேரிடும். அருவி என்ற சொல்லை பிற மொழியில் நீர் வீழ்ச்சி (Water-Falls) என்று தான் கூற வேண்டும். கற்பு என்ற சொல்லை பதிவிரதத்துவம் என்று தான் கூற வேண்டி வரலாம். சமஸ்கிருத மொழியில் உபசர்க்கங்கள் சேர்வதால் அற்புதமான சொல்லாக்கங்களை உருவாக்கும் அழகைப் பிற மொழிகளில் காண இயலாது. துருக்கிய மொழியில் எளிமையும் சுத்தமும் உடைய இலக்கண அமைப்பு வேறு மொழியில் காண முடியாது. தெலுங்கிலும், இத்தாலிய மொழியிலும் எல்லாச் சொற்களும் உயிரீருகவே முடிந்து இனிமை தருவதைப் பிற மொழிகளில் காண முடியாது இது போல சொல்லிலும், சொல் அமைப்பு முறை-களிலும் பல்வேறு தனிச் சிறப்புகளும் அழகு-களும் அமைந்து ஒவ்வொரு மொழிக்கும் ஒரு சில தனித்தன்மைகள் இருக்கக் காண்கிறோம் அந்தச் சிறப்புகளை இழந்துவிடாமல், தான் மொழி பெயர்க்கும் மொழியின் அழகை உணர்ந்து மொழி பெயர்க்க வேண்டும்

சுய படைப்பை விட மொழி பெயர்ப்புப் பணி கடினமானதாகும். மற்றொருவருடைய கருத்தை தன்வயமாக்கிக் கொண்டு. தன்னை இழந்து, மீண்டும் மற்றொருவராகவே மாறி கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். சுதந்திரமான நிலை சுயபடைப்பாகும் கட்டுப்-பாட்டுடன் கூடிய நிலை மொழி பெயர்ப்பாகும் ஆதலால் வரம்புக்குட்பட்ட நிலையில் தன் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி மூல நூலாசிரியனின் கருத்தை மட்டுமே வெளி-யிட வேண்டும். மூல நூலின் கருத்தை தெளிவுபடுத்துவதற்காக தன் கூற்றுக்கள் பெய்ய வேண்டி ஏற்படும்போது தன் கருத்தை அடைப்புக் குறிக்குள் எடுத்துக் காட்ட வேண்டும். ஏனென்றால் தன் சுயமான கருத்தோ கருத்து விளக்கமோ மூல நூலின் கருத்தாகக் கருதி மயங்காமல் இருக்க தார்மீகக் கடமையாகக் கருதி மொழி பெயர்ப்பாளன் இவ்விதம் அடைப்புக் குறிகளுக்குள்ளோ, அடிக் குறிப்புகளிலோ தன் கருத்தைத் தரலாம். தான் மொழி பெயர்க்கும் நூலில் தனக்குத் தெரியாத துறைகளின் கலைச் சொற்களோ, பொருட் பெயர்களோ வந்தால் கூடுமானவரை அத்துறையாளரின் மூலமே விளக்கம் பெற்று மொழி பெயர்க்க வேண்டும். அத்தகு வாய்ப்பு இல்லாவிட்டால் மூல நூலில் குறிப்பிட்ட சொல்லையே தானும் பயன்படுத்திச் செல்வதே நல்லது. அப்படியின்றி ஒன்றை ஒன்ருகக் கருதிக் கொண்டு மொழி பெயர்க்கும்போது விபரீதங்கள் நேரலாம்.

பைபிளை மொழி பெயர்த்தவர்கள் Camet என்ற சொல்லுக்கு வடம், ஒட்டகம் என்று இரு பொருள் படுவதால் ஊசிக் காதில் வடம் நுழையாது என்பதற்குப் பதிலாக ஊசிக் காதில் ஒட்டகம் நுழையாது என்று மொழி பெயர்த்தது போல சில தவறுகள் நேரிடலாம். ஆதலால் மூல நூலின் கருத்துக் கியைந்த பொருளை உணர்ந்து மொழி பெயர்க்க வேண்டும் மொழி பெயர்க்கும் நூல் ஒரு மூல நூலைப் போலவே வாசிப்பதற்கு எளிமையாகவும், தங்கு தடையின்றி ஆற்றெழுக்காகச் செல்லும் நடையில் அமைய வேண்டும். தன் புலமையைக் காட்டுவதைவிட வாசகர்களுக்குச் சிரமமின்றி புரிய வைப்பது தான் முக்கியம் என்ற கருத்தை மறந்துவிடக் கூடாது ஆகையால் எளிய சொற்களாகவும், நடைமுறையில் நன்கு பழக்கப்பட்ட வழக்காற்றுச் சொற்களையே அதிகம் பயன் படுத்த வேண்டும். அதே சமயம் சில இடங்களில் மூல மொழிப் பெயர்களைப் பயன் படுத்தும் போது மூல மொழி உச்சரிப்பை அப்படியே தருவதே நல்லது அதை தன் மொழிக் கேற்ப உருச் சிதைத்தல் அழகன்று. பழைய இலக்கியக் கவிஞர்கள் இப்படி உருச்சிதைத்த சொல்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பெயர்களை பயன்படுத்தினர்கள் விபீஷணன் வீடணன் ஆனன். லஷ்மணன் இலக்குவன் ஆனன். சூர்ப்பணகை தெலுங்கில் 'சுப்பநாதி' ஆகி விட்டாள் சமஸ்கிருத பெயர்கள் பிரா கிருதத்தில் மிகமிகத்திரிந்து அடையாளம் காண முடியாத அளவு மாறு பட்டு இருக் கிறதைக் காணலாம். தற்காலத்தும் சேக்ஷ் பீயர்-செகப்பிரியர் ஆகவும் மாக்ஸ்முல்லர் மோட்சமூலராகவும், அன்னிபெசண்ட் அன்னை வசந்தை என்றும் மொழிமாற்றம் பெற்றுள்ளனர். ஆனல் இது சில சமயங்களில் மயக்கத்தைத் தந்து இடர்ப்பாடுகள் தரும்.. மாக்ஸ்மூலர் வேறு மோட்சமூலர் வேறு என்று கருதுகின்ற இடர்ப்பாடு விளைந்து விடுகிறது. ஆகையால் இடத்தையும், மனிதர் களையும் சுட்டும் பெயர்ச் சொற்களை மட்டும் மூல மொழி உச்சரிப்பின்படியே வெளியிட வேண்டும். வெளியிட இயலாத மொழிகளில் கூட சில குறியீடுகள் பெய்து அதன் மூல உருவத்தைக் காட்ட வேண்டும்.

இந்தியில் எகர ஒகரங்கள் இல்லை. வட மொழியிலும்அப்படியே. என்,ஏன் இரண்டுமே இந்தியில் ஏன் என்றே உச்சரிக்க வேண்டும் இதுபோன்ற மொழியமைப்புகள் உள்ளஇடத் தில் சில குறியீடுகளைப் படைத்துக் கொள்ள வேண்டும். தமிழில் வட மொழி, தெலுங்கு முதலிய மொழிகளில் உள்ள வர்க்க இரண்டு மூன்று நான்காம் எழுத்துக்கள் இல்லை. தமிழில் ஒரு ககரம் மட்டுமே உண்டு. பிற இந்திய மொழிகளில் ககர வர்க்கத்தில் Kha, Ga, Gha, என்ற மற்றும் மூன்றெழுத்துக்கள் உள்ளன. இதில் இரண்டாம் நான்காம் எழுத்து உச்சரிப்புகளை நீக்கிவிட்டாலும் பரவா யில்லை. மூன்ரும் எழுத்து உச்சரிப்புகளை நீக்கி ஞல் பொருள் சிதைந்துவிடும். ஆதலின் தமிழில் சில புதிய குறியீடுகளைப்பயன் படுத்தி அந்த உச்சரிப்பை எடுத்துக் காட்ட வேண்டும். இன்றைய விஞ்ஞானச் சொற் களுக்கு இது மிகவும் தேவையாகும். பழைய கால இலக்கண விதிகள் எல்லாம் தற்கால மொழி பெயர்ப்புக்குப் பயன்படாது. சில விதிகளைப் புறக்கணிக்க நேரிடலாம் சில பிற மொழி உச்சரிப்புகளும் சொற்களும் முதலில் நமது காதுகட்கு இதமாக இராது. ஆனல் நாளாக நாளாக அச்சொற்களே இனிமை யாகத் தோன்றும். ஆகையால் கூடுமான வரை பெயர்ச் சொற்களை மூல மொழி உச்சரிப் புகளிலேயே பயன் படுத்த வேண்டும் புதிய சொல்லாக்கங்கள் அறிமுகப் படுத்த நேரிடும். இதனல் மொழிக்கு வளமும் அழகும் கூடுமே யன்றிக் குறைவு நேராது.

மொழி பெயர்ப்பில் பல வகைகள் உண்டு. மூல மொழியை அதன் மொழி எழுத்துக்களில் எடுத்துகாட்டி (Translitration) அதை மொழி பெயர்ப்பு (Translation) செய்து தன் கருத்துக்களையும் விளக்கி வருவது ஒரு முறை. இது செய்யுள்களில் அமைந்த பேரிலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் மொழி பெயர்க்கும் போது செய்யப்படும் முறை. கீதை, தம்மபதம், திருக்குறள் மொழி பெயர்ப்புகள் இவ்வகையில் செய்யப் பட்டுள்ளன.

மூலத்தின் சொல்லமைப்புகளை ஒன்று விடாமல் உள்ளது உள்ளவாறே மொழி பெயர்ப்பது ஒருவகை. மூலக் கருத்தைக் தழுவி தனது விளக்கக் கருத்தையும் இடை இடையே பெய்து, சில சொற் பொருள்களை தவிர்த்தும், சில புதுக் கருத்துக்களை ஊடாட விட்டும் தழுவல் வகை (Free Translation and Rendering) மொழி பெயர்ப்பு மற்றெரு வகை. இத்தகைய மொழிபெயர்ப்புகள் சுவை குன்ருமல் கருத்துக்களை விளக்குவதற்குரிய நல்ல நடையில் அமையும். மூலக் கதைபோ கருத்தையோ சிறிதளவே எடுத்துக் கொண்டு தனது கருத்தும் நடையும் மிகுதியாக அமை யும் மொழி பெயர்ப்பு இன்னெரு வகை.

இத்தகைய மொழி பெயர்ப்பில் ஒரு கருத்து மூல நூலாசிரியருடையதா மொழி பெயர்ப்பாளனுடையதா என்று புரிந்து கொள்ள முடியாது இத்தற்கு மயக்கத்தைத் தரும் மொழி பெயர்ப்புகள் கூடுமானவரை தவிர்க்க வேண்டும். மூலக் கருத்தின் ஆசிரிய

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

னுக்கு நன்றி கூறி விட்டு அதன் சாயலாக தன் புதிய அனுபவத்தை படைத்துத் தரும் மொழி பெயர்ப்பும் இன்றி, தன் சுய படைப்பும் இல்லாத கவிதைகள், கதைகள்பல வெளிவருவதுண்டு. இவற்றில் முதலில் கூறிய மூன்று வகை மொழி பெயர்ப்புகளே சிறந்தவையாகும்.

சிறந்த கவிதை காவியங்களை மொழி பெயர்க்கும் போது மிகவும் சிரத்தையுடனும் கலை யார்வமுடனும்மொழி பெயர்க்கவேண்டும் உமர்கய்யாம் மொழி பெயர்த்த பிட்ஜ்ரால்ட் தாமே முதலில் மொழி பெயர்த்ததையே மெருகிட்டு இரண்டாவது தடவையும் மொழி பெயர்த்து மூலக் கருத்தைக் கொண்டு வரப் பாடு பட்டதனுல் தான் இன்று அது சிறந்த மொழி பெயர்ப்பாக மதிக்கப்படுகிறது. கலை யார்வமுடன் நிதானமாக இருந்து மொழி பெயர்ப்பது சிறந்த படைப்பு உருவாகக் காரணமாகிறது காலைக் கதிரவனின் இளங் கதிர்கள் பட்டதும் தானுக விரிகின்ற மலரைப் போன்றது இயல்பான மொழிபெயர்ப்பு: ஒரு மொட்டை தன் முரட்டுக் கைகளால் இதழ் பிரித்து மலர்விக்க முயல்வது போன்றது கலை நய மற்ற தொழில் ரீதியில் செய்யும் மொழி பெயர்ப்பு. எந்தக் கலையும் இயல்பான மன உந்துதலால் எழும்போது உருவாகும் கலை நயம், பிறருடைய நிர்ப்பந்தத்தால் அமைக்கப் படும் போது உருவாவதில்லை.

மொழி பெயர்ப்பு ஒரு உன்னதமான கலை: அதை செய் நேர்த்தியுடனும் எந்த மொழியில் மொழி மாற்றம் பெறுகிறதோ அந்த மொழி மரபுகட்கிணங்கவும் மொழியாக்கம் செய்யும் போது அது சிறப்பாக அமையும். மூல மொழி மரபினை கவனித்துக் கொண்டும், ஆழ்ந்த புலமையின்றியும் மொழி பெயர்க்கும் போது அது தோல்வியுற நேரிடும். மொழி பெயர்ப்பு என்பது ஒரு கரும்பாலை (Crusher) போன்றது மூல மொழி நூல் என்னும் கரும்பை அதில் தரும் போது சக்கை வேறு சாறு வேருக வெளிவருகிறது. நமக்குத் தேவை சாறு என்னும் சாரமான கருத்தே அன்றி சக்கையான சொற்கோவை அல்ல ஆனுல் சில மொழி பெயர்ப்புகளில் வெறும் சக்கை மட்டுமே காணப்படும். சில தரமான மொழி பெயர்ப்பில் சாறு மட்டும் காணப்படும் ஆதலின் சாறு மட்டும் தருவதே சிறந்த மொழி பெயர்ப்பாக மதிக்கப்படும். கீதாஞ்சலியை வங்க மொழியில் முதலில் படைத்த ரவீந்திரநாத் டாகுர் தாமே அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். எனினும் மூல மொழியின் அழகு அதில் பெற முடியாது என்று குறிப்பிட்டார். மொழி பெயர்ப்பு ஒரு பிரதிச் சாயைதான். மூலத்தின் எழில் முழுவதும் கொணர்வது கடினம். ஆனுல் சிறந்த மொழி பெயர்ப்பாளன் அதற்கு ஈடுகட்டும்படியாக புதிய மெருகூட்டும் கலை நயப்பாங்கின் மூலமாக வேறு அழகுகளைப் பெய்து சரிக்கட்டி விடுகிருன். சில சமயம் மூலத்தை விட மொழி பெயர்ப்பு சுவையாகவும் அழகு மிக்கதாகவும் அமைவதும் உண்டு.

மொழி பெயர்ப்புக்கும், மொழி பெயர்ப்பாளனுக்கும் உரிய கௌரவம் தரப்படவேண்டும். சுயமான படைப்பாளியைப் போன்றே இவனும் உயர்ந்த சமுதாயத் தொண்டாற்றுபவன் தான், இன்னும் கூறினுல் மொழி பெயர்ப்பாளன் ஒரு இரட்டை மனிதன், அவனுக்கு இருமடங்கு கௌரவம் தருவதே நியாயமாகும். அவன் மூலமே மூல நூலாசிரியனுக்குரிய கௌரவத்தையும் அளிக்க வேண்டும். தனியார் பதிப்பகங்கள் சிறந்த மொழி பெயர்ப்புகளை தக்கவர்களால் உருவாக்கச் செய்து வெளியிட வேண்டும். வியாபார நோக்கோடுமட்டுமன்றி மொழித் தொண்டாற்றும் நோக்கிலும் சிறந்த பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கச் செய்து வெளியிட வேண்டும். இது ஒரு தார்மீகமான கடமையாகும், சிறந்த மொழி பெயர்ப்புகட்குத் தனியாக பரிசுகள் வழங்கப்பட வேண்டும். ஆங்கிலத்திலிருந்து மட்டுமே இன்று பெரும்பாலான நூல்கள் மொழி பெயர்க்கப்படுகின்றன. பிற இலக்கிய வளம் மிக்க மொழிகளில் இருந்தும் சிறந்த

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

படைப்புகளை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகத்தார் (Progress Publishers) சிறந்த பல ருஷிய இலக்கிய நூல்களை இந்திய தேசீய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டு இருப்பது பாராட்டத்தக்க செயலாகும். இந்திய மாநில அரசுகள் கூட்டு முயற்சியில் தத்தம் மொழி இலக்கியப் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்போது தான் நூல் பதிப்பிப்பதற்கும் அதை சீராக விநியோகிப்பதற்கும் வாசகர்கட்கு பரவலாக கிடைப்பதற்கு வழி ஏற்படுத்தவும் முடியும். தெலுங்கிலக்கியங்கள் தமிழில் வர வேண்டும் என்றால் ஆந்திர அரசும், தமிழக அரசும் கூட்டாக மொழி பெயர்ப்புக்கென ஒரு அமைப்பை ஏற்படுத்திச் செயல் படுத்த வேண்டும். அந்த அமைப்பு தமிழ்-தெலுங்கு இலக்கிய உறவுக்கு மட்டுமே பணிபுரியும். அப்படி இருந்தால் தான் இரு மொழிகளிலும் கனிசமான தரமான நூல்கள் மொழியாக்கம் பெறும். அது போலவே கன்னடம்-தமிழ் மொழியாக்க நிறுவனம், மற்றும் பிற மொழி மொழியாக்க நிறுவனங்கள் ஏற்படுத்தலாம். இத்தகு தனித்தனி அமைப்புகள் இல்லாவிட்டால் தேசீய இலக்கியங்களின் பரஸ்பர பரிமாற்றம் நடைபெறுவது இயலாது., இது ஒரு அவசரத் தேவையாகும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், ஒருவரை ஒருவர் சமமாக கௌரவித்து வாழவும் இத்தகைய மொழியாக்கங்களே உதவும். இதயம் இணையாமல் இனங்கள் இணைவதில்லை. இலக்கிய தத்துவஞானங்களே இதயங்களை இணைவிக்கும் பாலமாகும். அதற்கு மொழி பெயர்ப்புக் கலையே உருப்படியான உதவுபடியான கருவியாகும். தேசீய ஒருமைப்பாட்டுக்கு உதவும் நல்ல மொழி பெயர்ப்புகள் நமது நூலாசிரியர்கள் படைக்க வேண்டும். அது மொழி வளத்துக்கும் தேசீய ஒருமைப்பாட்டுக்கும், நமது பாரத கலாசாரத்துக்கும் பேருதவி செய்ததாக அமையும் அத்தகைய சிறந்த மொழியாக்கப் படைப்புகளை நூலாசிரியர்கள் படைக்க வேண்டும்.

பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை ஆயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்

— மணிமேகலை

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

Phone No. 2341
2080

Grams Spinners
Telex 0442-202 JAYAIN

மலர் வெளியீட்டு விழாவுக்கு
எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



ஸ்ரீ ஜெயஜோதி அன் கோ (பி) லிமிடெட்,

உரிமையாளர்கள் :

ஸ்ரீ சண்முகர் மில்ஸ்,

இராஜபாளையம்.

★
★
★

தரமான உயர்ரக நூல் உற்பத்தியாளர்கள்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

'அபிதான சிந்தாமணி'யில் மணிமேகலை

மாதவியின் மகள் மணிமேகலையின் துறவு முதலியவற்றைக் கூறும் நூல் இது சீத்தலைச் சாத்தனாரால் செய்யப்பட்டது.

மாதவியின் குமரி. தந்தை கோவலன் க... ...ரவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடை பெ...றது. அவ்விழாவிற்கு மாதவியும். மணி மொழ... ...லயும் வந்திலர் அதனையறிந்த சித்தி ...வயந்த மாலையை அழைத்து மாதவி ...ன்று வராததற்கு காரணம் கேட்டு ...ள. அவள் சென்று அவளை வினவ, ...மகலை தவவழியிற் செல்லுதலின் ...ம் அறவணவடிகளை வணங்கித் ...வழியிற் புகுந்தேன் என்றனள் இதுநிற்க மணிமேகலை மலர் பறிக்கச் சுதமதியுடன் உய்யானமடைந்தனள். இதனை எட்டி குமரனால் கேள்வியுற்ற உதயகுமாரன் அவளைத் தன்வசமாக்க வேண்டி. அவ்வனமடைந்தான் இவனடைந்த செய்தி அறிந்த சுதமதி மணிமேகலையை பளிக்கறையிற் புகுவித்தாள். தனியே நின்று உதயகுமாரனுக்கு உடம்பினிழிவைத் தெரிவிக்கையில் உதயகுமாரன் மணிமேகலையை பளிக்கறையிற் கண்டான் கண்டு சுதமதியை அவள் எத்திறத்தினள் எனச் சுதமதி மணிமேகலை தவவொழுக்கத்தினள் அவளை நீ அணுகற் பாலையல்லையெனக் கேட்டு அவளைச் சித்திராபதியால் அணைவேன் எனும் எண்ணத்தால் சோலை விட்டு நீங்கினான். பின் மணிமேகலை பளிக்கறை விட்டு வெளிவந்து என் மனம் அவன் பின்னே சென்றது காரணம் உணரேன் என்று சுதமதியிடம் கூறினள் இவ்வகைக் கூறக் கேட்ட சுதமதி நித்திரை செய்தலும் மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிச்சென்று மணிபல்லவத்தீவிற் கொண்டுபோய்ச் சேர்த்தது பின் மணிமேகலை துயிலுணர்ந்து புது இடமாக இருத்தலையும், தன் தோழியைக் காணாததினாலும் வருந்தித் தன் தந்தையை நினைந்து வருந்துகையில் புத்தபீடிகை தோன்றியது அப்புத்த பீடிகையால் பழம் பிறப்புணர்ந்து மணிமேகலா தெய்வத்தால் முற்பிறப்பில் தனக்கு நாயகன் ராகுலன் அவனே உதயகுமாரனாய் இப்பிறப்பில் உன்னை விரும்பினனென்று கூறி அவளுக்கு வேற்றுருவைக் கொடுப்பதும் ஆகாயவழி சஞ்சரிப்பதும், பசியை நீக்குகிறதுமாகிய மந்திரங்களை உபதேசித்துச் சென்றது அப்பால் மணிமேகலை தீவதிலகையைக் கண்டு அவள் சொல்லால் கோமுகியெனும் பொய்கையை வலம் கொண்டு அக்ஷயபாத்திரம் பெற்று ஆகாயகமன மந்திரத்தால் அவ்விடம்விட்டு நீங்கி மாதவி சுதமதிகளையடைந்து அவர்களின் முற்பிறப்புணர்த்தி அறவணவடிகளால் ஆபுத்திரன் செய்தியறிந்து பாத்திரம் கொண்டு பிச்சைக்குப் புறப்பட்டு ஆதிரையின் வீட்டைந்து முதலில் பிச்சை கொண்டு காயசண்டிகையின் பசிதீர்த்து உலக அறவியை அடைந்து பணிந்து அங்குள்ளோர் பலர்க்கும் உணவளித்து உதயகுமாரன் வர அவள் பொருட்டு காயசண்டிகையின் உருக்கொண்டு

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வந்து சிறைக்கோட்டம் சென்று யாவருக்கும் உணவளித்தனள். இதனை அரசர் அறிந்து அப்பாத்திரத்தின் மகிமை கேட்டு அவளைத் தான்செய்யவேண்டியதென்னவென்ன அவள் இச்சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கு வென்ன அரசன் அவ்வாறு செய்விக்கக் காய சண்டிகையின் கணவனுகிய காஞ்சனன் எனும் வித்தியாதரன் காயசண்டிகையைத் தேடி வருவோன் காயசண்டிகையின் வேடங் கொண்ட மணிமேகலையைக் கண்டு பழைய நட்பினைபாராட்டும் பலவினிய மொழிகளைக் கூற மணிமேகலை அவற்றை மதியாது உதய குமாரனுக்கு இளமையாக்கை நிலையாமை அறிவுறுத்துகையில் காஞ்சனன் இவள் உதய குமாரனைக்காமுற்று நம்மை அவமதித்தனள் என்று ஒளிந்திருந்து மணிமேகலையின் உண்மை அறிய நள்ளிரவில் வந்த உதய குமாரனை வெட்டிக் கந்திற்பாவை இவள் உன் மனைவியல்லள் மணிமேகலை கொண்ட வேற்றுரு வென்னக் கேட்டுத் தன்னகர டைந்தனள். இதனை முனிவராலறிந்த அரசன் தன் குமரனுக்குத் தகனக்கிரியைகள் நடப்பித்து மணிமேகலையை சிறையில் அடைத்தனள். இதனை அறிந்த இராஜ மாதேவி இவளை சிறை நீக்கி வஞ்சித்து வருத்த எண்ணி அரண்மனைக்கு வருவித்து இவளைப் பிச்சியாக்க எண்ணிப் பல விஷ மருந்துகளை உண்பிக்க இவள் சலியாதிருக் கக்கண்டு ஒரு இளைஞனை இவளிடம் அனுப்பி மணிமேகலை தன்னை விரும்பினள் என்று கூறும்படி சொல்ல அவன் செல்லுகை யில் இராஜமாதேவியின் வஞ்சனையால் வந்த வன் என்றறிந்து ஆணுருக் கொண்டனள். இதை இளைஞன் கண்டு ஓடிப்போயினன் பின் மணிமேகலையை வாயிலில்லாத அறை யில் அடைப்ப இவள் பசியில்லா மந்திரமறிந்த பலத்தால் குற்றமில்லாதிருந்தாள் இதனை அறிந்த இராஜமாதேவி குற்றம் பொறுக்க வேண்ட அவளுக்கு உதயகுமாரனது முற்பிற புணர்த்தி அவளுக்கும் தர்மோபதேசம் செய்தனள் மணிமேகலை இராஜமாதேவி யிடமிருத்தலை ஒழிந்து அறவணவடிகளால் அவ்விடம் நீங்கிப் புண்ணியராசன் சோலை யடைந்து ஆபுத்திரனுக்கு மணிபல்லவம் தரிசிப்பித்து அவன் தன் பழைய என்பைக் கடற்கரையிற் கண்டு வருந்த அவனைத் தேற்றி வஞ்சிநகர் சென்று கண்ணகியைத் தெரிசித்து அவளது முன்னைய வரலாறிறந்து முனிவன் வேடங்கொண்டு பலசமயக் கொள் கைகளையறிந்து காஞ்சிநகர் சென்று பலவறங்களைச் செய்து அறவணவடிகளை வணங்கி அவர் கூறிய தருமோபதேசம் பெற்றுக் காஞ்சிநகரத்திலேயே நோற்றுக் கொண்டு இருந்தாள்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From :

D. V. S. Productions,
56, G. N. Chetty Road,
T. Nagar, MADRAS - 600 017.

With Best Compliments From :

P. K. JEYARAM RAJA,
P. K. ஜெயராம் ராஜா,
கமிஷன் மண்டி,
தேனி.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இலக்கிய நிறுவனங்கள்

சாஹித்ய அகாடமி :

இந்திய அரசு இலக்கிய வளர்ச்சிக்காக 1954ல் சாஹித்ய அகாடமி என்னும் சுதந்திரமான நிறுவனத்தை நிறுவியது. பிரதமர் ஜவகர்லால்நேரு இதன் முதல் தலைவராக இருந்தார். இதற்கடுத்து ராஷ்டிரபதி எஸ். ராதாகிருஷ்ணன் தலைவராக இருந்தார். பின்னர் ஜாகீர் ஹுசேன், பேராசிரியர் சுநீதிகுமார்சட்டர்ஜி கே. ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார் முதலியவர்கள் தலைவர்களாக இருந்துள்ளனர். ஒவ்வொரு மொழியின் இலக்கிய வளர்ச்சிக்காக சிறந்த நூல்கட்கு பரிசு அளிக்கப்படுகிறது. சிறந்த நூல்கள் வெளியிடப்படுகின்றன. பிற மொழி நல்லிலக்கிய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றன சிறந்த இலக்கிய நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறுகள் வெளியிடப்படுகின்றன. எழுத்தாளர்கள் யார்? எவர்? ஆங்கிலத்தில் (who's who) வெளியிடப்பட்டுள்ளது இராமாயண ஆய்வு நூல்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அக்கமிட்டி மூலம் அம் மொழியில் மூன்றுண்டுகளில் வெளியிடப்பட்ட சிறந்த நூலுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு அளிக்கிறது. பயிற்சிமுகாம்கள், சிறந்த பெருங் கவிஞர்களின் நினைவு விழாக்கள் நடத்தப்படுகின்றது. சிறந்த எழுத்தாளர்கள் பிற மாநிலங்கட்குச் சென்று அங்குள்ள இலக்கியம், பண்பாடுகளைப் புரிந்து கொள்ளும் வகையில் பயண உதவித் தொகை (TRAVEL GRAND) அளிக்கிறது.

தலைமை அலுவலகம் முகவரி

SAHITYA AKADEMI
Rabindra Bhavan
35, Ferozesha Road
NEW DELHI 110 001

பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய கேந்திரங்களிலும் கிளை அலுவலகங்கள் உள்ளன.

மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, சிந்தி மொழிகட்கு பம்பாய் கிளையும், வங்காளம், ஒரியா, அசாமி ஆகிய மொழிகட்கு, கல்கத்தா கிளையும், தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகட்கு சென்னை கிளையும், ஆங்கிலம் ஹிந்தி.சமஸ்கிருதம், உருதுமுதலிய மொழிகட்கு டில்லி தலைமையகமும் நூல் வெளியீட்டில் பொறுப்பேற்று செயல்படுகின்றன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சென்னை அலுவலக முகவரி

சாஹித்ய அகாடமி
29 எல்டாம்ஸ் ரோடு
தேனாம்பேட்டை.
சென்னை - 600 018.

தமிழ்மொழி - ஆலோசனைக்குழு (1983-85)

1. டாக்டர் ராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)
2. கு. ராஜவேலு
3. சிலம்பொலி செல்லப்பன்
4. டாக்டர் எ. என். பெருமாள்
5. வல்லிக்கண்ணன்
6. ஜோதிர்லதாகிரிஜா
7. டாக்டர் டி. முத்துக்கண்ணப்பன்
8. டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்
9. எல். எஸ். கந்தசாமி
10. தீபம். நா. பார்த்தசாரதி (கன்வீனர்)

தற்போதைய - தலைவர்

பேராசிரியர் வி. கே. கோகக்

துணைத்தலைவர்

பேராசிரியர் வீரேந்திரகுமார் பட்டாச்சாரியா

செயலர்

பேராசிரியர் இந்திரநாத் சவுத்ரி

சாஹித்ய அகாடமியில் சிறந்த இலக்கிய நூல்கள் விலை மலிவாகக் கிடைக்கிறது. இலக்கிய ஆர்வலர்கள் வாங்கிப் பயனடைவது நலம்,

நேசனல் புக் டிரஸ்ட்

இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பான நேஷனல் புக்டிரஸ்ட் (தேசீய நூற்கழகம்) புத்திலக்கிய நூல்களும், பொது அறிவு நூல்களும் வெளியிடுகின்றது. நாடும் மக்களும் எனும் வரிசையில் நம்நாட்டு மக்கள் சரித்திரம், மரம், செடி. விலங்குகள், பறவைகள் குறித்த நூல்கள் பல இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது. குழந்தைகட்கான நூல்களும், பிறமொழி இலக்கியமொழி பெயர்ப்பு நூல்களும் வாழ்க்கை வாலாற்று நூல்களும் வெளியிட்டுள்ளது. அகில உலகப் புத்தகக் கண்காட்சி. நூல்வெளியீடு குறித்த கருத்தரங்குகள், எழுத்தாளர்கட்கான பயிற்சிகள் முதலியன அளித்து சிறந்த தொண்டு ஆற்றுகிறது.

முகவரி

NATIONAL BOOK TRUST, INDIA
A. 5 Greenpark
NEWDELHI 110 016.

புக்டிரஸ்ட் தமிழ் நூல்கள் கிடைக்கும் முகவரி

பாரிநிலையம்
புத்தக வெளியீட்டாளர்கள்
பிராட்வே சென்னை 600 001.

பாரதீய வித்யாபவன்

குலபதி கே எம். முன்ஷி அவர்கள் பாரதப் பண்பாட்டின் ஞானச் செல்வங்களை அறியவும், பாரதக் கல்வியின் மேன்மையை உணர்ந்து பயன்பெறவும் பாரதீயவித்யா பவன் எனும் நிறுவனம் பம்பாயில் நிறுவினார். இதன் சார்பில் சமஸ்கிருதபாடசாலை, வேதபாட சாலை, கீதாவித்யாலயம்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

முதலியன நடைபெறுகின்றன. ஆராய்ச்சிக் கழகங்களும் நிறுவப்பட்டுள்ளன. இதன் சார்பில் பதிப்பகம் வைத்து சிறந்த நூல்கள் பலமொழிகளில் வெளியிடப்படுகின்றன. இதன்கிளை சென்னை மயிலாப்பூரில் உள்ளது. ராஜாஜியின் பெயரில் சிறந்த இலக்கியப் படைப்புக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது.

சென்னை முகவரி

பாரதீயவித்யாபவன்
36, 39 கிழக்குமாடவீதி
மயிலாப்பூர் சென்னை 4

பாரதீய ஞானபீடம்

பிரபல இந்தியத் தொழிலதிபர் ஸ்ரீ சாஹு சாந்தி பிரசாத்ஜைன் அவர்களும், அவரது துணைவியார் ஸ்ரீமதி ரமாஜைன் அவர்களும் நிறுவிய பாரதீயஞானபீடம் இந்திய இலக்கிய தத்துவ வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபடும் சிறந்த நிறுவனமாகும். வாரணாசி (காசி) யில் 1943ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் இலக்கிய ஆராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சிகட்கு துணைபுரிதலும் பழம்பெரும் ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பித்தலும் பல்வேறு இந்திய மொழிகளில் சிறந்த நூல்களை வெளியிடுதலும், சமண தத்துவ நூல்களை வெளியிடுதலும் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் ஆண்டுதோறும் இந்திய மொழிகளில் எழுதப் பட்ட சிறந்த தரமான நூல்களைப் பரிசீலித்து ஒரு நூலாசிரியருக்கு ஒன்றரைலட்ச ரூபாய் பரிசு அளித்து பெருமைப்படுத்துகிறது. இலக்கியத் துறையில் இதுவே சிறந்த - உயர்ந்த பரிசாகும்.

மூர்த்திதேவி இலக்கியப்பரிசு என ஒன்று பதினோராயிரம் ரூபாய். மானுட நேயம், அகிம்சை, அமைதி முதலிய சமண தத்துவ சாரமான கருத்துக்களை விளக்கும் இலக்கிய நூலுக்கு அளிக்கப்படுகிறது.

ஞானபீடப் பரிசுக்கான நூலைத்தேர்ந் தெடுக்க சிறந்த விமர்சகர்கட்கு நூல் பரிந் துரை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. அவர்களது பரிந்துரையை ஒரு குழுபரிசீலிக்கிறது. அது ஒவ்வொரு மொழி யிலும் ஒரு நூலை தேர்ந்தெடுக்கிறது. அந்த நூலின் சிலபகுதி - ஆங்கிலம், இந்தி மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டு ஆய்வுக்குழு முன் வைக்கப்படுகிறது. அந்த ஆய்வுக்குழு ஒரு நூலை தேர்ந்தெடுத்த பின் அந்த நூல் ஆசிரியருக்கு பரிசளிக்கப்படுகிறது. சில சமயம் இப்பரிசு இருவருக்கு பகிர்ந்தளிக்கப் படலாம். தற்போது ஸ்ரேயாம்ஸ பிரசாத் ஜெயின் (சாஹுபிரசாதின் சகோதரர்) தலைவர் ஆகவும் அசோக்குமார் ஜெயின் (சாஹுபிர சாத்தின் குமாரர்) மேனேஜிங் டிரஸ்டியாக வும் உள்ளனர். பி.வி. நரசிம்மராவ் (உள் துறையமைச்சர்) ஆய்வுக் குழுவின் தலைவராக உள்ளார் பிஷன்தண்டன் இயக்குநர்.

ஞானபீட முகவரி

BHARATIYA JNANPITH
18, Institutional Area
Lodhi Road
NEW DELHI 110 003

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஞான பீடப் பரிசு பெற்றவர்கள்

ஆண்டு	பெயர்	மொழி	நூல்
1965	ஜி. சங்கரகுருப்	மலையாளம்	ஓடக்குழல்
1966	தா. ரா. சங்கர் பந்தோபாத்யாயா	வங்காளம்	கணதேவதா
1967	கு. வெம். புட்டப்பா	கன்னடம்	ஸ்ரீராமாயணதர்சன
	உமாசங்கர் ஜோஷி	குஜராத்தி	நிசீத
1998	சுமித்ரானந்தன்பந்த்	ஹிந்தி	சிதம்பர
1969	பிராக் கோரக்புரி	உருது	குல்-எ-நக்ன
1970	விஸ்வநாத சத்யநாராயண	தெலுங்கு	ராமாயணகல்பவிருட்சம்
1971	விஷ்ணுடே	வங்காளம்	ஸ்மிருதிசத்தா-பவிஷ்யத்
1972	ராமதாரிசின்கா [தின்கர்]	ஹிந்தி	ஊர்வசி
1973	தா. ர பேந்த்ரே	கன்னடம்	நாகுதந்தி
	கோபிநாதமொஹந்தி	ஒரியா	மாடிமாடல்
1974	வி. ச. காண்டேகர்	மராட்டி	யயாதி
1975	பி. வி. அகிலாண்டம் [அகிலன்]	தமிழ்	சித்திரப்பாவை
1976	ஆசாபூர்ணதேவி	வங்காளம்	பிரதமப்ரதிஸ்ருதி
1977	சிவராமகாரந்த்	கன்னடம்	மூகஜ்ஜியகனசுகளு
1978	வாத்ஸ்யாயயன [அக்ஞேய]	ஹிந்தி	கித்னீநாமோமேகித்னிபார்
1979	வீரேந்திரகுமார் பட்டாச்சார்யா	அசாமி	மிருத்யுஞ்சய
1980	சம். கு. பொற்றெகாட்	மலையாளம்	ஒருதேசத்தின்றெகதா
1981	அம்ருதாப்ரீதம்	பஞ்சாபி	காகஜ்தெக்யான்வஸ்
1982	மகாதேவிவர்மா	ஹிந்தி	யாமா
1983	மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்	கன்னடம்	சிக்கவீரராஜேந்திரா

★
★★

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

புவனவாணி டிரஸ்ட்

உத்தர பிரதேஷ் லக்னோவில்-பத்மஸ்ரீ நந்தகுமார் அவஸ்தி அவர்கள் நிறுவிய புவனவாணி டிரஸ்ட் இந்திய மொழியில் தேவநாகரிலிபியில் மூலமும் இந்தி மொழி பெயர்ப்பும் கூடிய பிறமொழி இலக்கியங்களை வெளியிடுகிறது. தமிழில் இருந்து திருக்குறள், கம்பராமாயணம், பாரதியார் கவிதை மூன்றும் சேஷாத்ரி அவர்கள் மொழிபெயர்த்துத்தந்துள்ளார்கள். வெளியிடப்பட்டுள்ளன.

புவனவாணி மந்திர் என்றொரு கோயில் நிறுவுகிறார்கள் இங்கு எல்லாமொழி நெடுங்கணக்கு (Alphabete) சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டு அமைக்கப்படும் நடுவே சரஸ்வதி தேவி உருவம் அமையும் இப்பெரும் பணிக்கு இலக்கிய ஆர்வலர்கள் நன்கொடைகள் தரலாம். இதன் நுழைவாயிலில் எல்லா மொழி அகரம் (முதல்எழுத்து) பொறிக்கப்பட்டுள்ளது இதன் தலைப்பில் திருக்குறள் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்பதன் இந்தி மொழியாக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. பிற மொழி உச்சரிப்பை தமிழ் எழுத்தில எழுத இயலாமையால் கிரந்த எழுத்துக்களை பயன் படுத்துவது தவறல்ல அது பிறமொழிப் பயிற்சிக்கு நலம் தரும் என்பது அவரது கருத்தாகும். தேசீய ஒருமைபாட்டுக்கு இலக்கியத்தின் மூலம் நற்பணிபுரியும் இந்நிறுவன முயற்சிகள் மிகவும் பாராட்டற்பாலது

முகவரி

BHUVAN VANI TRUST
Mousam Bhagh
(Sitapur Road)
LUCKNOW 226 020

சென்ட்ரல் ஹிந்தி டைரக்டரேட்

தமது தாய் மொழியில் மட்டுமன்றி பிற இந்திய மொழியில் நூல் எழுதும் ஆசிரியர்கட்கு ஒவ்வொரு மொழிக்கும் ஒரிந நூல்கட்கு இந்திய அரசு பரிசளிக்கிறது மூலநூலுக்கு இரண்டாயிரமும் மொழி பெயர்ப்புக்கு ஓராயிரமும் தருகிறது. இந்தி சமஸ்கிருதம், இங்கிலீஷில் எழுதுவதற்கு தரப்படுவதில்லை பிற இந்திய மொழிகளில் தமது தாய்மொழி இல்லாத மொழியில் எழுதி இருக்க வேண்டும். பரிசுக்கனுப்பப்படும் ஆண்டுக்கு ஐந்தாண்டுகளில் நூல் வெளியிடப் பட்டிருக்க வேண்டும். நூறு பக்கங்கட்கு மேற்பட்டநூலாக இருக்க வேண்டும். ஐந்து படிகள் ஆகஸ்ட்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். பிரவேச கட்டணம் ரூ 5—00 மணியார்டர் மூலமோ போஸ்டல் ஆர்டரோ அனுப்ப வேண்டும். படிவத்தில் பூர்த்திசெய்து உறுதி மொழியில் கெஜடெட் ஆபீசர் கையெழுத்திட்டு அனுப்பிவைக்க வேண்டும்

முகவரி

The Assistant Directorate
(Extension)
(Ministry Of Euducation & Culture)
West Block VII
P. K. PURAM
NEW DELHI 110 066

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூரில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கு சீரிய தொண்டாற்றி வருகிறது சிறந்த தமிழ் இலக்கிய நூலுக்கு ராசராசன்பரிசு ஒருலட்சரூபாய் தருகிறது. சிறந்த மொழி பெயர்ப்பு புதியதுறை நூல்கட்கு ஐந்தாயிரம் வீதம் பரிசுகள் தருகிறது.

முகவரி

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

இலக்கியச் சிந்தனை

தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் குப் பணிபுரியும் இலக்கியசிந்தனை ஒவ்வொரு மாதமும் தமிழில் வெளிவரும் இதழ்களில்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வரும் சிறு கதைகளை ஆய்வுசெய்து ஒருகதை தேர்வு செய்கிறது. ஆண்டு முழுவதும் வந்த கதைகளில் ஒன்றை தேர்வு செய்கிறது. இக் கதைகளை நூலாக வானதி பதிப்பகம் வெளி யிடுகிறது இதுதவிர ஆண்டு தோறும் சிறந்த படைப்புக்கு ஐந்தாயிரம் பரிசளிக் கிறது. ஆண்டு தோறும் பிறமொழி இலக் கியப் பேரறிஞர்களை வரவழைத்து தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் சென்னையில் விழா எடுத்து சிறப்பிக்கின்றது.

முகவரி

இலக்கிய சிந்தனை
5-A, சித்தரஞ்சன் சாலை,
சென்னை - 600 018.

ஆதர்ஸ் கில்டு ஆப் இந்தியா

இந்திய நாட்டின் நூலாசிரியர்கள் கழகமாகிய ஆதர்ஸ் கில்டு ஆப் இந்தியா சிறந்த நிறுவனமாகும். மூன்று நூல்கள் எழுதி வெளியிட்ட எவரும் உறுப்பினர் ஆகலாம். நுழைவுக் கட்டணம் இருநூறு ரூபாய் ஆண்டுச்சந்தா ஐம்பது ரூபாய் நூல் ஆசிரியர்கட்கு ஏற்படும் காபிரைட், ராயல்டி போன்றவற்றில் தாவாக்கள் ஏற்பட்டால் ஆதர்ஸ் கில்டு மேற்கொண்டு பதிப்பாளரு டன் கலந்து தீர்வு ஏற்படுத்தும் இந்திய அரசு பலமொழி எழுத்தாளர்களும் ஒன்று கூடி கலந்துறவாடுவதற்காக மானியம் தரு கிறது ஆதர்ஸ் கில்டு. ஆண்டுமாநாடு ஆண்டு தோறும் நடக்கிறது. ஓராண்டு டில்லியிலும் அடுத்த ஆண்டு மாநிலத் தலை நகரங்களிலும் நடைபெறுகிறது. உறுப்பி னர்கள் போகவர இரண்டாம் வகுப்பில் ரயில் கட்டணமும் மூன்று நாட்களுக்கு தினப்படியும் தரப்படும். இதன் கிளைகள் சென்னை, டெல்லியில் இயங்குகின்றன.

முகவரி

AUTHORS GUILD OF INDIA
Ramayana Vidyapith
15, Institutional Area
Lodi Road
NEW DELHI 110 003

சென்னை கிளை முகவரி

எஸ். வி. எஸ்.
செயலர்
AUTHORS GUILD OF INDIA
Rajaji Centerary Library
36, Venkata Narayana Road
T. Nagar MADRAS - 7

பொது நூலகங்கள்

ஒரு எழுத்தாளர் தாம் ஒரு நூலை வெளியிட்டால் அந்நூலின் ஒரு பிரதி கீழ்க் கண்ட முகவரிக்கு கட்டாயம் அனுப்ப வேண்டும்.

1 Librarian
CONNEMERA PUBLIC LIBRARY
Egmore MADRAS - 600 008

2 Librarian
CENTRAL LIBRARY
Town Hall BOMBAY - 400 023

3 Librarian
NATIONAL LIBRARY
Beleuedere CALCUTTA - 27

இரண்டு பிரதிகள் - கீழ்க்கண்ட முகவரிக்கு அதற்குரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்.

Registrer of Books
FORT St GEORGE
MADRAS - 9

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஒரு பிரதி பொது நூலக இயக்குநர்க்கு நூலகங்கட்கு தனது நூலை வாங்குமாறு கோரி அனுப்பி வைக்கலாம். ஐநூறு அல்லது அறுநூறு பிரதிகள் - ஆர்டர் தருவார்கள். நமது செலவில் அவர்கள் குறிப்பிடும் முகவரிகட்கு அந்தந்த மாவட்டங்கட்கு அனுப்பி வைத்து விட்டு - பட்டியலும் அனுப்ப வேண்டும். பொது நூலக இயக்குநர் மூலமோ, அந்தந்த மாவட்ட நூலகர் மூலமோ நமக்கு பணம் காசோலையாக வழங்கப்படும்.

முகவரி

பொது நூலக இயக்குநர்
பொது நூலக இயக்ககம்
எழும்பூர் சென்னை - 600 018

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சிக்கான தமிழக அரசு நிறுவனமான தமிழ் வளர்ச்சி இயக்ககம் - தமிழக வரலாறு சம்பந்தமான நூல் வெளியிடுதல், சிறந்த நூல்கட்கு உதவுதல். சிறந்த நூல்கட்கு பரிசளித்தல் முதலிய பணிகள் செய்கிறது. அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்துமாறு ஏற்பாடு செய்கிறது.

தை முதல் நாள் பொங்கலன்றோ - மறுநாள் திருவள்ளுவர் திருநாளன்றோ சிறந்த தமிழ்நூல்கட்கு பல்வேறு துறையிலும் முதற்பரிசு இரண்டாயிரமும் இரண்டாம் பரிசு ஆயிரமும் ஆக நாற்பது நூல்கட்கு பரிசளிக்கின்றது.

பரிசுக்கு ஆறுபடிகள் அனுப்பப் பெறல் வேண்டும்.

முகவரி

இயக்குநர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
(2-ம் மாடி)
குறளகம்
சென்னை - 600 001

எம் ஏ சி அறக்கட்டளை

டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நினைவாக தமிழ் நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தில் இருபதாயிரம் ரூபாய் ஆண்டுதோறும் பரிசளிக்கப்படுகிறது படைப்பிலக்கியம், நுண்கலை இலக்கியம் என இருபகுதிகளாக பிரித்து ஓராண்டில் படைப்பிலக்கியத்திற்கும் அடுத்தாண்டு நுண்கலை இலக்கியத்திற்கும் பரிசு தரப்படும். ஏழு பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும். பாடநூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் ஏற்கப்படாது. நூல் இருநூறு பக்கங்கட்கு மேல் இருத்தல் வேண்டும். பரிசுக்குரிய நூல் அந்த ஆண்டிற்கு நான்கு ஆண்டுகளுக்குள் வெளியானதாக இருக்க வேண்டும்.

முகவரி

M. A. C. CHARITIES
Dr. Raja Sir Annamalai Chettiar
Award Administrative Committee
36-40 Armenian Street
MADRAS - 600001

வி ஜி பி. அறக்கட்டளை

வி. ஜி. பன்னீர்தாஸ் அறக்கட்டளை சார்பிலும் சிறந்த இலக்கிய நூல்கட்கும், புலவர்கட்கும் ஆண்டுதோறும் பரிசளிக்கப் படுகிறது.

முகவரி

வி. ஜி. பன்னீர்தாஸ் அறக்கட்டளை
21, தருமராஜா கோவில் தெரு
சென்னை - 15

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.



நாணயம் சேகரிக்கும் நல்லோர்

பேரிசர்ல சூரிய நாராயண ராஜு அவர்கள் ஆந்திராவில் ராஜமஹேந்திர வரத்தில் வனத் துறை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். எனினும் இவர் தன் வாழ்நாள் முழுதும் தொல்பெரும் நாகரிகங்களின் சின்னமாகத் திகழும் நாணயங்களைச் சேகரிப்ப தில் செலவிட்டு வருகிறார். சிறந்த விளையாட்டு வீரரான இவருக்கு நாணயங்களைத் தேடிக் கண்டு பிடித்து சேகரிப்பதுதான் பொழுது போக்காக கொண்டிருக்கிறார்.

நாணயங்களைச் சேகரித்து, அதை கால வரிசைப் படியும், சரித்திரச் சான்றுகளை ஆராய்ந் தும் சீர்பெறத் தொகுத்து வைத்து காட்சி அரங்குகளிலும் எடுத்துக்காட்டி பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

Old is Gold என்றபடி பழங்காலமே பொற்காலம் எனும்படியான பழமையான தங்க நாணயங்கள் பல இவர் சேகரித்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சாதவாகன மன்னர்கள் நாணயங்களிலிருந்து தற்காலத்திய பல நாட்டு நாணயங்களையும் இவர் சேகரித்து வைத்திருக்கிறார்.

சரித்திரச் சான்றுகளாக விளங்குபவை இலக்கியமும் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், நாணயங்களும் அகழ்வாய்வுத் தொல்பொருள்களும் ஆகும். அவற்றில் நாணயங்களைச் சேகரிப்பது சிரமமான பணியாகும். தொல்பொருள் களைச் சேகரித்து வைத்திருக்கும் கலைஞர்கள் ஆங்காங்கே உள்ளனர். அனைவருடைய தேடல்களும் சமுதாயப் பயன் விளைவிப்பதாகும். அவர்கள் கண்டுபிடித்தவற்றை எல்லாம் ஒருங்கே இணைவிக்க அரசு முயல வேண்டும். அவை சரித்திர ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படச் செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.



<— நந்தகுமார் அவஸ்தி

இலக்கியப் பாலம்

"பாரிறை"

நம் பாரதநாடு பல்வேறு மொழிகளும், இனங்களும், மதங்களும் உடைய பெருநிலப் பரப்புடையதாகும். நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசீய ஒருமைப்பாடு இன்றியமையாததாகும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்பதுணர்ந்து, நம் நாட்டினர் அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, சமமதிப்பளித்தும் வாழவேண்டும். தேசீய ஒருமைப் பாட்டையும் மானுடநேயத்தையும் உருவாக்க இலக்கியமே சிறந்த பாலமாகத் திகழ்கின்றது. இதனை நன்குணர்ந்தே சுதந்திர பாரதச் சிற்பியாகிய பண்டித ஜவகர்லால் நேரு, "சாஹித்ய அகாதெமி" நிறுவினர். பல்வேறு மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களை மொழி பெயர்த்து பிறமொழியினருக்கு அறிமுகப்படுத்தும் பாங்கில் சிறந்த நூல்களை வெளியிட்டு சாஹித்ய அகாதெமி தொண்டு புரிந்து வருகிறது. அதைப் போன்றே 'நேஷனல் புக் டிரஸ்ட்' நிறுவப்பட்டு அதுவும் சிறந்த பல நூல்களை வெளியிட்டு வருகிறது சாஹித்ய அகாதெமியும், நேஷனல் புக் டிரஸ்டும் அரசாங்கச் சார்புடையவை. அரசாங்கச் சார்பின்றி தனி மனித முயற்சியினால் மிகச் சிறந்த இலக்கியப் பாலமாக மிளிர்கிறது. உத்திர பிரதேஷில் லட்சுமணபுரி (லக்னோ)வில் உள்ள "புவன வாணி டிரஸ்ட்".

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

புவன வாணி டிரஸ்ட் தன் பெயருக்கேற்ப உலகிலுள்ள சிறந்த கருத்துக்களை மொழியாக்கம் செய்து தேசீய மொழியாகத் திகழ்கின்ற இந்தி மொழியில் சிறந்த பல நூல்களை வெளியிட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள் சாதிக்காத பெருந் தொண்டினை இந்நிறுவனம் செய்து வருவதைப் பாராட்ட வேண்டும்.

புவன வாணி டிரஸ்டை நிறுவிய நந்தகுமார் அவஸ்தி 2–5–1907ல் லக்னோவில் பிறந்தார். சாதாரணப் படிப்புதான் படித்தார். சுயமுயற்சியால் நன்கு கற்றவரானார். ரயில்வே சிப்பந்தியாக கல்கத்தாவில் சில காலம் இருந்தார். திருமணமானது; 'ஜைன யுவக்' எனும் பத்திரிகையில் சில காலம் ஆசிரியராக இருந்தார். ஏதாவது எழுதி வந்தார். இலக்கிய ஆர்வம் மிகுந்தது. லக்னோவிலிருந்து வெளிவரும் சிறந்த பத்திரிகையான 'மாதுரி' இந்தி பத்திரிகை ஆசிரியராக சிலகாலம் பணிபுரிந்தார். அரசியலிலும் விடுதலைப் போராட்டத்திலும் தீவிர ஈடுபாடு கொண்டார். 1942ல் சிறை வாசம் அனுபவித்தார்.

'ஸ்ரீ பிரபாகர் சாஹித்ய லோக்' எனும் பதிப்பகம் அமைத்து சில நூல்கள் வெளியிட்டு வந்தார்.

நாடு சுதந்திரம் பெற்றதும் நாடு முன்னேற தேசீய ஒருமைப்பாடு தேவை என்பதை நன்குணர்ந்த அவஸ்தி அதற்காக இலக்கியத்தின்மூலம் சேவை செய்ய தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 1905ல் நீதிபதி சாரதா சரண்மித்ரா அவர்கள் எல்லா மொழி இலக்கியங்களையும் தேவ நாகரிலிபியில் எழுதி அமைக்க வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டிருந்தார். அது அவஸ்தி மனதில் ஆழப் பதிந்தது. அதன்படி தான் ஒரு அமைப்பு உருவாக்கி செயலாற்ற வேண்டும் என முனைந்தார். அதன் விளைவாக 1947ல் 'புவன வாணி' டிரஸ்ட் உருவாக்கி அதன் தலைவராக இருந்து இயக்கி வருகிறார்.

'புவன வாணி' டிரஸ்ட் உலகின் மிகச் சிறந்த இலக்கியங்களை தேவநாகரி (இந்தி எழுத்து) லிபியில் - இந்தி மொழி பெயர்ப்புடன் அழகிய முறையில் வெளியிட்டது. சிறந்த அறிஞர்களைக் கொண்டு நன்முறையில் மொழி பெயர்க்கச் செய்து நல்லிலக்கியங்களை அறிமுகம் செய்து இந்திமொழி வளத்துக்கு பேருதவி புரிந்தது. 'வாணி சரோவர்' இஸ்லாம் மத வேத மான 'குரான்' அராபி மூலத்துடன் இந்தி மொழி பெயர்ப்பை வெளியிட்டு அனைவரது பாராட்டினையும் பெற்றார்.

இவரது சேவையைப் பாராட்டி பாரத அரசாங்கம் 'பத்மஸ்ரீ' விருது அளித்துச் சிறப்பித்துள்ளது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

புவனவாணி டிரஸ்ட் வெளியிட்ட இலக்கிய நூல்கள்:

	மூலமொழி	நூல்	காலம்	
1	தமிழ்	திருக்குறள்	2ம்	நூற்றாண்டு
2	,,	கம்பராமாயணம்	12	,,
3	தெலுங்கு	மொல்லராமாயணம்	13	,,
4	,,	ரங்கநாதராமாயணம்	,,	,,
5	,,	போதனபாகவதம்	,,	,,
6	கன்னடம்	ராமசந்திரசரிதம் (நாகசந்திரன்)	11	,,
7	,,	தொரவெராமாயணம்	16	,,
8	வங்காளம்	கிருத்திவாசராமாயணம்	15	,,
9	காஷ்மீரம்	ராமாவதாரசரித	18	,,
10	,,	லம்த்யவ (பொன் மொழிகள்)	14	,,
11	மராட்டி	ஸ்ரீராமவிஜய (ஸ்ரீதரர்)	17	,,
12	,,	ஹரிவிஜய	17	,,
13	,,	பாவார்த்தராமாயண (ஏகநாதர்)	16	,,
14	ஒரியா	ராமசரிதமானஸ		
15	,,	வைதேஹீஸவிலாஸ (உபேந்திரபஞ்ச)	18	,,
16	,,	ஜகமோகன் பலராம்தாஸ்ராமாயணம்	16	,,
17	குஜராதி	பிரேமானந்தரசாம்ருத	19	,,
18	,,	கிரிதாராமாயண		
19	மலையாளம்	எழுத்தச்சன் மகாபாரதம்	15	,,
20	,,	எழுத்தச்சன்ராமாயணம்		
21	ராஜஸ்தானி	ருக்மணிமங்கள் (பத்மபகத்)		
22	சிந்தி	சாமி, சேக், சச்சல்கித்ரிவேணி	18	,,
23	அசாமி	மாதவகந்தலி ராமாயண	14	
24	குருமுகி	குருகிரந்த சாஹெப்		
25	குருமுகி	ஸ்ரீ ஜபுஜீ சுகமனீ சாஹெப்		
26	நேபாளி	பானுபக்த ராமாயண		
27	உருது	ஸரீப்ஜாத் [டாக்டர் ருஸ்வா]		
28	உருது	குஜஸ்த் [அப்துல் ஹலீம் சரர்]		
29	சமஸ்கிருதம்	ராமசரித மானஸ		
30	ஹீப்ரு & கிரீக்	ஹோலி பைபிள்		

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

31	பாரசி	சீரே அக்பர் [தாராஷுக்கோவின் உபநிஷத மொழி பெயர்ப்பு]	16	,,
32	,,	முல்லாமசீகி ராமாயண்		
33	கம்போடியன்	ரேஅமகேர் [ராமாயணம்]		
34	அரபி	குர்ரான்		
35	,,	புகாரீ ஷரீப்		

இதுபோன்ற பல அரிய இலக்கியங்களை வெளியிட்டுள்ள புவன வாணி டிரஸ்ட். இதுபோல உயர்ந்த இலக்கியங்களை இன்னும் வெளியிட உள்ளது. தனி நிறுவனமாக அமைந்து, தனி மனிதனின் தியாக உணர்வில் உருவாகி, கம்பீரமாக உயர்ந்து தேசீய ஒருமைப்பாட்டுக்கு உதவியாக அமைதியாகத் தொண்டாற்றும் புவன வாணி டிரஸ்ட் நீடூழி வாழ்ந்து மனித சமுதாயத்துக்கு மகத்தான சேவை செய்ய மனமார வாழ்த்துகின்றேம். மணிமேகலை மன்றத்தின் பாராட்டுக்களையும் தமிழகத்-தின் இலக்கிய ஆர்வலர்களின் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேம்.

" சுகவிதா யத்யஸ்தி ராஜ்யேன கிம்? "

" நல்ல கவிதை இருக்குமேயானுல் அரச போகங்கள் எதற்காக? "

- பர்த்ருஹரி

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

கவிஞர்

சி. ஆ. ராமசாமி பிள்ளை

கரிவலம்வந்தநல்லூர்
(நெல்லை மாவட்டம்)

— "பாரிறை"

இராஜபாளையத்திற்கு தெற்கே சங்கர நயினர் கோவிலுக்குச் செல்லும் வழியில் உள்ள கரிவலம்வந்த நல்லூர் வரலாற்றுச் சிறப்புடைய ஊர் ஆகும் அதிவீரராமபாண்டியன் வரதுங்கராமபாண்டியன் முதலிய மன்னர்கள் இப்பகுதியை ஆண்டனர் அதிவீரராமபாண்டியனின் கருவைபதிற்றுப்பத்தந்தாதி - குட்டித் திருவாசகம் எனப் புகழ் பெற்ற நூல். இப்பகுதியில் தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்தனர். இப்பகுதியில் சிவகிரி சேத்தூர் எனும் இரு குறுநில மன்னர்களின் ஆதரவில் பல கவிஞர்கள் சென்ற நூற்றாண்டில் திகழ்ந்தனர். ராயகிரி, முகவூர் முதலிய ஊர்களிலும் பலர் புகழுடன் திகழ்ந்தனர். அந்த மரபிலே வந்த மற்றொரு சிறந்த கவிஞர் கரிவலம்வந்தநல்லூர் - சி. ஆ. ராமசாமி பிள்ளை ஆவார்.

1898ம் ஆண்டில் 1073 விளம்பி ஆடி மாதம் 14 தேதி இவர் ஆறுமுகம்பிள்ளை- ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்குப் பிறந்தார் சேத்தூர் சமஸ்தான வித்வான் அப்பாவுக் கவிராசரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்றுணர்ந்தார்.

ராமசாமிபிள்ளை - சிதம்பரத்தம்மாளை மணந்தார். அம்மையார் மறைவுக்குப் பின் இரண்டாவதாக ஆவுடையம்மாளை மணந்தார் இருவரும் மறையவே 24—10—1943ல் மூன்ரும் மனைவியாகிய கணபதியம்மாளை மணந்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தார். இவர்கட்கு ஆறுமுகம், நடராசன், திருநாவுக்கரசு என்ற மூன்று மக்கள் பிறந்தனர் ராமசாமிபிள்ளை பஞ்சு வியாபாரம் முதலிய பல முயற்சியில் ஈடுபட்டார் தமிழ்ப் புலவர்கட்குரிய திருவேறு தெள்ளியராதலும் வேறு என்ற விதிப்படி பொருளாதாரத் துறையில் தன்னிறைவு பெறவில்லை சிரமம் மிக்கவாழ்விலும் தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வமுடனும் ஈடுபாடுடனும் பற்பல சிறுபிரபந்த நூல்களைப் படைத்தார் தாம் வாழ்ந்த கரிவலம்வந்தநல்லூர் கோயில் பால்வண்ண நாதர்மேல் அந்தாதி, கலிவெண்பா, மாலை முதலிய சிறு பிரபந்தங்களை இயற்றினர்.

இவரது நூல்கள் அச்சிடவில்லை கைப் பிரதியாகவே இருந்தன கருவைத்தல புராணம் எனும் நூல் விசுவநாத தீட்சிதரால் வடமொழியில் எழுதினர் இதனை திருமலைவேற் கவிராயர் என்பவர் தமிழில் செய்யுட்களாக மொழிபெயர்த்தார் அதனை ராமசாமி பிள்ளை வசனமாக்கித்தந்தார். இந்நூல் 1964ல் கரிவலம்வந்தநல்லூர் ம. ரா. பாலசுப்பிரமணிய செட்டியார் என்பவர் பொருளுதவியில் வெளியிடப்பட்டுள்ளது. ராமசாமிப் பிள்ளை 1968ம் ஆண்டில் 70 வயது நிறைவுற்றபின் மறைந்தார் இவரது சாதக் குறிப்பில் இவருக்கு வயது 71 என்றிருந்தது அதன் படியே மறைவுற்றதும் கவனித்தற்குரியது

ராமசாமிப்பிள்ளை எழுதிய சிறு பிரபந்தங்கள் அடங்கிய இரண்டு நோட்டுப்புத்தகங்கள் பழைய பேப்பர் கடையில் இராஜபாளையத்தில் குப்பைகளுக்கிடையே கிடந்தன, அதனை மணிமேகலை மன்றத்தலைவர் மு கு. ஜகந்நாத ராஜா தற்செயலாகக் கண்டெடுத்தார். சிறந்த புலமையுடன் மிளிரும் அந்நூல்களை இயற்றியவர் குறித்து ஆய்ந்து கரிவலம் வந்தநல்லூரில் தற்போது எளிமையுடன் வாழ்ந்து வரும் அவரது மனைவி கணபதியம்மாளைக் கண்டு பேசினர். கணபதியம்மாளுக்கு தமிழக அரசும் இலக்கிய ஆர்வலர்களும் பொருளுதவி புரிய வேண்டும்.

ராமசாமிப்பிள்ளை எழுதிய நூல்கள் :		செய்யுள் எண்
1.	திருக்கருவை முகலிங்க வெண்பா அந்தாதி	100
2.	திருக்கருவை பால்வண்ணத் தந்தாதி	100
3.	திருக்கருவை நிரோட்டக வெண்பா அந்தாதி	50
4.	கருவை நாயக மாலை	30
5.	திருக்கருவை வருக்க மாலை	30
6.	திருக்கருவை இரட்டை மணிமாலை	20
7.	திருக்கருவை பால்வண்ணப் பத்து	10
8.	திருக்கருவை ஒப்பனையம்மன் வருகைப்பத்து	10
9.	திருக்கருவை ஒப்பில்லா வல்லியம்மன் பத்து	10
10.	திருக்கருவை முப்பிடாதியம்மன் பத்து	10
11.	திருக்கருவை மகமாயியம்மன் பத்து	10
12.	திருக்கருவை வீரசண்முகர் வருக்கச் சமயமாலை	30
13.	திருக்கருவை வீரசண்முகர் வாழ்த்துப்பாமாலை	30
14.	திருக்கருவை தலபுராண போற்றிக் கலிவெண்பா	
15.	திருச்செந்தூர் சிவசுப்பிரமணியர் பத்து	

சி. ஆ. ராமசாமி பிள்ளையின் சிறுபிரபந்தங்கள் மரபிலக்கியத்தின் தாக்கத்தில் இயற்றப்பட்டவை என்று தெரிகிறது. புதிய கண்ணோட்டம் இல்லை. தெய்வபக்தி மிக்க பாடல்களாக உள்ளன. சொற்சுவை மிக்கவை. சில பாடல்கள் காண்போம்,

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

காவலவன் சாபங் கடிதகற்றி யாட்கொண்ட
சேவலவா! தென்கருவைத் தேசிகனே - பாவந்
தருமாசைப் பேய்மிகவும் சார்ந்தமனத் தென்றும்
வருமாசைப் போக்கியருள் வாய்.

கண்ணே! கருத்தே! கதிகாணு மெய்த்தவத்தோர்
எண்ணே எழுத்தே யிறைவனே - நண்ணுந்
தவத்தால் உடல்வருந்தேன் சத்கருமஞ் செய்யேன்
அவத்தானே னுய்யு வதெவ் வாறு?

– முகலிங்கவெண்பா அந்தாதி

பாரிடத் தடியேனும் படுந்துயர்
யாரிடத் துரைப்பேன் உனையன்றியே!
சேரிடத் தெனைச் சேர்த்தருள் ஒப்பனை
சீரிடத்த பிரணவத் தேவனே.

நாட்டம் பஞ்சிட்டு நாவுஞ் சொல்லற்று மெய்
யாட்டமற் றுள்ளறிவுங் கரையுமுன்
பாட்டுவக்கும் நம் பால்வண்ணர் தாட்டுணை
வேட்டு நிற்பை நெஞ்சே! யருள் வேண்டியே

— பால்வண்ணத்தந்தாதி

இன்றல்லல் கண்டாய்! இரங்காய் எனில்ஐயே
நன்றல்ல நிற்கீதென் நாயகனே - என்றிறைஞ்சி
ஏத்தக் கனிந்தே இனியநகை தந்தாய்எற்
காத்தல் நினைக்கே கடன்.

திருக்கருவை நிரோட்டக வெண்பா அந்தாதி

தாயிருந்தும் வாடித் தயங்குமொரு சேயெனவே
நீயிருந்தும் நாயேன் நெடுந்துயரால் வாடுவதோ?
மாயிருந் துன்பங்களைவான் வாழ்வே கடைக்கண்பார்!
சேயிருந்த மேனியனே! தென்கருவை நாயகனே.

யானெடுத்துச் சொல்லுவதில் யாதுபயன் அப்பாநீ
தானெடுத்துச் சொன்னாலென்! தாழ்வனைத்துமே தவிரும்!
மானெடுத்த பூங்கரனே! மாயா மலங்கெடுத்தாள்
தேனெடுத்த பூங்களவோய்! தென்கருவை நாயகனே.

தென்கருவை நாயகமாலை

கன்னற் பழனக் கருவாபுரிவந்த காரணனை
வன்னப் பவளமலைபோல் விளங்குமெய் வானவனை
பின்னப் பிறவியொழிக்கும் பிரான்புகழ் பேசுகிலார்
மன்னப் புவிமிசைஏன் பிறந்தாரவந்து மானிடரே.

திருக்கருவை இரட்டை மணிமாலை

சொல்லுந் தமிழ்க்கவித்தார் சூட்டியம் பொற்றுணையடிக்கே
அல்லும்பகலும் அபயம் அபயம் அபயமென்றே
செல்லும் தினமது நற்றினம்தீர்ந்தவை தீயயமன்
கொல்லும் தினமல்லவோ கருவாபுரிக் கொற்றவனே.

இரட்டை மணிமாலை

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சாண் குப்பியின் பொருட்டாக நன்னுட்கள் விரு
தாவாய்க் கழித்து விட்டேன்
சத்துவ மிகுந்த பரநித்த வடியாருறவு
சார்கிலேன் நன்னெறியிலா

வீணர்பால் நட்டுடல பாவம் புரிந்தயான்
மேம்படுவ தெவ்வாறு சொல்
வேதாவை யீன்றநற் ருதாமுதற்பெரிய
விண்ணவரும் நிலேயீதெனக்

காணுத செம்பவள மாமேரு வுள்ளங்
களிப்பக் கலந்த கொடியே
கால்காட்டி என்ளேயுங் கண்பார் என் அன்னேயே
கைவிடேல் ஏழையம்மே!

மாணவடி யாரிதய மாமலர்க் கோயில்வளர்
வாழ்வே விளக்கு மொளியே
வாசமலர் மாதுறைய வீசுபுகழ் தென்கருவை
வளரொப்பிலா வல்லியே.

— திருக்கருவை ஒப்பிலாவல்லிபத்து

சொல்நயமும் நடையழகும் மிளிரும் பற்பல பாடல்கள் பாடிய இராமசாமிப்பிள்ளேயை அவரது குருவாகிய அப்பாவுக் கவிராயர் பாராட்டிய பாடல் இது.

தேனென்கோ மாதுரியத் தெள்ளமு தென்கோகருவை
யானென்கோ மாதுரிய மாதிநிறை - வானினருள்
நந்தா திலங்குபுகழ் ராமயமால் செப்பியறுாற்
றந்தாதி யின்சுவையை யான்.

இராமசாமிபிள்ளேயும் தமது குருவை வணங்கிய பாடல் இது.

அரும்புலவர் எல்லாம் அடிவணங்கப் பெற்றோன்
பெரும்புலவன் அப்பாவுப் பேரோன் - இரும்புவியோர்
சற்றும்மதியா நமக்கும் தக்கநன்னூல் ஓதுவித்தான்
பொற்றுணைத்தாள் நெஞ்சே புகல்.

அப்பாவுக் கவிராயரின் சீடராகிய இராமசாமிப்பிள்ளேயின் பாடல்கள் கிடைத்தது போல அவரது பாடல்கள் கிடைக்கவில்லே. எத்துணைக் கவிஞர்கள் இலைமறை காயாய் இருந்து விட்டுப் போயினரோ?

இராமசாமிப்பிள்ளேயின் குடுப்பத்தார் இன்றும் கரிவலம்வந்த நல்லூரில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கட்கு உதவுவதே தமிழ்த் தொண்டு புரிந்த கவிஞருக்கு நாம் ஆற்றும் அஞ்சலியும் நன்றிக் கடனுமாகும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

எங்கள் பகுதி இலக்கியம்

பன்மொழிப் புலவர் : மு. கு. ஜகந்நாத ராஜா

எங்கள் இராஜபாளையம் பகுதியில் விளைந்த இலக்கியம் உண்மையில் மிகவும் உயர்வானதும் கனிசமானதுமாகும். இவ்விலக்கியப் படைப்பாளர்கள் பலரின் வரலாறுகள் தெளிவாகத்தெரியவில்லை எனினும்தெரிந்த அளவு விரித்துரைத்தல் இன்றியமையாதது.

எங்கள் பகுதியாக நான் எடுத்துக் கொண்டது இராஜபாளையத்தைச் சுற்றிலும் சுமார் இருபது கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஊர்களைத்தான். இராமநாதபுர மாவட்டத்தின் மேற்குப் பகுதியும், திருநெல்வேலி மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியும் இதில் அடங்கும் குறிப்பாக திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், கரிவலர்வந்தநல்லூர், ராயகிரி சிவகிரி சேத்தூர் முகவூர் முதலிய ஊர்களில் வாழ்ந்த கவிஞர்களைப் பற்றிக் காண்போம்

திருவில்லிபுத்தூரில் வாழ்ந்து உலகுபுகழும் ஒப்பற்ற வைணவ அடியார்களாகத் திகழ்ந்த பெரியாழ்வாரும், சூடிக்கொடுத்தசுடர்க்கொடி ஆண்டாளும் எம்பகுதியின் முதற் கவிஞர்கள் ஆவர். நாலாயிர திவ்யபிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெரியாழ்வார் பாசுரங்களும், ஆண்டாளின் திருப்பாவை, நாச்சியார் திருமொழிப்பாசுரங்களும் அனைவரும் அறிந்தவை கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்துபக்தி இலக்கியத்தை உருவாக்கிய முதல்வர்கள் இவர்கள் இவர்களையடுத்துவந்த பிற்காலக் கவிஞர்களைக் காண்போம்.

இராஜபாளையத்தில் பதினேழம் நூற்றாண்டில் கொட்டிமுக்கல கிருஷ்ணமராஜு தெலுங்கு மொழியில் 'சீதாகல்யாணம்' எனும் யட்சகான இலக்கியநூல் இயற்றியுள்ளார். இவரது தமையனார் வெங்கடராஜு மிகச் சிறந்த பண்டிதர் பேரறிஞராகத் திகழ்ந்தவர் இவர்களது தந்தையார் வரதராஜுவும் கவிஞரே,

கிருஷ்ணமராஜுவிற்கு மனைவியர் இருவர் பெத்தமாம்பா, ரங்காம்பா என்பது அவர்கள் பெயர்கள். பெத்தமாம்பா மகன் சிங்கராஜு 'பாரிஜாதாபஹரணம்' என்னும் தெலுங்கு யட்சகான நூலை இயற்றினர். ரங்கமாம்பா குமாரரான குமார பெத்திராஜு ''சாவித்திரி'' என்னும் தெலுங்கு யட்சகான நூலை இயற்றினர். இந்த மூன்று நூல்களும் மணிமேகலை மன்றத்தைச் சார்ந்த தெலுங்கு வித்யாலயம் மூலமாக 1981ல் நூலாக வெளியிடப்பட்டுள்ளது ஏட்டுச்சுவடியிலிருந்து இந்த நூல்களை மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் தெலுங்கு துறை தலைவராக இருந்த காலம் சென்ற டாக்டர் தி. கோதண்டராமையா அவர்கள் பிரதிசெய்து தந்தார்கள், தெலுங்கில் உள்ள 'நாஞ்சாரு சரித்ர' கூரத்தாழ்வன் சரித்ர எனும் யட்சகான நூல்களும்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இப்பகுதியில் உள்ளவர்கள் இயற்றிய தாகலாம். தெளிவாக தெரியவில்லை.

திருவில்லிபுத்தூரில் பிறந்து தருமையாதீனம் நிறுவிய குருஞான சம்பந்தரும் சிறந்த கவிஞரே. திருவில்லிபுத்தூரில் இன்னும் எத்தனையோ வைணவ ஆசாரியர்கள் சிறந்த இலக்கியத் தொண்டாற்றியுள்ளனர். கரிவலம்வந்தநல்லூருக்கருகே இரண்டுமைல் தொலைவில் உள்ள சென்னிகுளத்தில் இருந்த அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து தமிழகம் நன்கறிந்த ஒன்று ஊற்றுமலை ஜமீன்தாரின் ஆதரவைப் பெற்ற இவர்தம் 'சீட்டுக் கவிகள்' நெல்லை க சுப்பிரமணியன் உரையுடன் சிறந்த பதிப்பாக 1980ல் வெளியிடப்பட்டுள்ளது

இவர் வீரையந்தாதி வீரைத்தல புராணம் வீரை நவநீதிகிருஷ்ணசாமி பதிகம் வீரைச் சிலேடை வெண்பா, கருவை மும்மணிக் கோவை, சங்கரன் கோவில் திரிபந்தாதி, கோமதி அந்தாதி முதலிய பல சிற்றிலக்கிய வகைச் செய்யுட்களும் பாடியுள்ளார். வீரை என்பது வீரகேரளம்புத்தூர் ஆகும்.

இவர் வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் பாண்டித்துரை தேவர், தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர்ஆகியோருடன் நெருங்கிப்பழகியவர். இவரது காவடிச்சிந்து தான் பெரும்புகழ் ஈட்டித்தந்தது. அருட்கவி அரங்க சீனிவாசன் உரையுடன் 1984ல் சென்னை சேகர்பதிப்பகம் நல்ல பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது

கரிவலம் வந்த நல்லூரில் இருந்த சி ஆ. ராமசாமிப் பிள்ளை திருக்கருவை முகலிங்க வெண்பா அந்தாதி, பால்வண்ணத் தந்தாதி முதலிய பதினைந்து சிறு பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவர் நூல்கள் அச்சிடப்படவில்லை. இவர் 1898 ம் ஆண்டில் பிறந்து 1968ல் மறைவுற்ற கவிஞர். இவரது படைப்புகள் சொற்சுவை மிகுந்துள்ளன. இவருடைய ஆசிரியர் அப்பாவுக் கவிராயர் சேற்றூர் சமஸ்தான வித்வானாக இருந்தவர் சி ஆ. ராமசாமிப் பிள்ளை திருமலைவேற்கவிராயரின் கருவைந் தல புராணச் செய்யுட்களை வசனமாக்கி யுள்ளார். இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கரிவலம் வந்த நல்லூருக்கருகே உள்ள எட்டிசேரியில் பிறந்ததிருமலைவேற் கவிராயர் மற்றொரு சிறந்த கவிஞர் இவரது முன்னோர்களில் ஒருவராகிய சங்குப்புலவர் என்பவர் தேவதானம். பெற்றநாயகியம்மை கோயில் திருப்பணிக்காக ஒரு மலைநகரக் கவி பாடியதாக ஐதிகம். இவர் மரபில்வந்த திருமலைவேற்கவிராயத் திருக்கருவைத்தல புராணம்பாடியுள்ளார். சேற்றூர் சமஸ்தான குறுநிலமன்னரான வடமலைத் திருவனாத சுந்தரதாசுப் பாண்டியர், ஊற்று மலை குறுநில மன்னரான இருதயாலய மருதப்பத்தேவர் முதலியவர்களிடம் பரிசில் பெற்ற சிறப்புடையவர். சேற்றூர் மன்னர் அவைகளப்புலவராக இருந்து சிறப்புற்ற முகவூர் கந்தசாமிக் கவிராயரிடம் இவர் ஐந்திலக்கணங்களையும் கற்றறிந்தார். இவர் மாணிக்கவாசகர் சிலேடைப்பதிகம், பால் வண்ண நாதர் பதிகம், கருவை மும்மணி மாலை கோமதியம்மன் பதிகம் குருநாதத் தேவர் 'காதல்' முதலிய பலசிறு பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவர் வண்ணம் பாடுவதில் வல்லவர். இவரது பால்வண்ண நாதர் வண்ணமும், அழகப்ப சேர்வை வண்ணமும் இவரது குமாரராகிய பண்டித வித்துவான் திசங்குப்புலவர் அவர்களால் 1964ல் ஆண்டில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது இவரது பால் வண்ண நாதர் வண்ணக்காப்புச் செய்யுள் இது,

,.மால் வண்ண மஞ்சுபடி வண்பொழில்
சூழ் தென் கருவைப்
பால் வண்ண நாதர் வண்ணம் பாடவே-
வால்வண்ண

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நற்றாமனை மரை வாழ் நங்கை இரு செங்
கமலப்
பொற்றாள் பணிவாமில் போது''

மரபிலக்கியம் படைத்த மற்றொரு கவிஞர் அ. கணபதிக் கவிராயர் சேற்றூர் என்னும் ஊரில் வாழ்ந்து சிறந்த பெருங்கவிஞர் சேற்றூர் இராஜபாளையத்திற்கு தெற்கே ஆறு மைல் தொலைவிலுள்ள ஊர் இங்கு குறுநிலமன்னர் (ஜமீன்தார்) ஆட்சி இருந்தபோது சமஸ்தான வித்துவானாக கணபதிக் கவிராயர் இருந்தார். சேற்றூர் ஜமீந்தார் ஆகிய வடமலைத் திருவநாததசேவகப் பாண்டிய மகாராஜா அவர்கள் இசைத் துறையில் மேதையாக இருந்து இயற் துறையில் பல கவிஞர்களை நன்காதரித்தவராவார். இவர் அவைக்களப் பெரும் புலவர்கள் பலர் தமிழறிஞர்களாக இருந்துள்ளனர், '' பூவகப் பாண்டியனே போலத் தமிழ் வளர்க்கும் சேவகப் பாண்டிய ராசேந்திரன் என்று பாராட்டப்பட்ட இவரது அவையில் மிகச் சிறந்த புலவராக கணபதிக் கவிராயர் திகழ்ந்தார். பெரும்புலவர் மு. ராகவையங்கார் அவர்கள், இக்கவிராயரின் நூலாகிய ''நதி விலாசம்'' எனும் சிறிய நூலுக்கு அளித்த சாற்றுக் கவியில் கூறியிருப்பதாவது.

'' வல்லாரும் தனமடவார் மடலெழுதும்
வடிவழக மதனே என்னப்
பல்லாரும் புகழ் சேறைச் சேவகப்
பாண்டியராச பண்பன் மேற்செஞ்
சொல்லாரும் கணபதிப் பேர்ப்புலவனதி
விலாசமொன்று சொற்றுப் யாங்கல
எல்லாரும் நல்விருந்து கிடைத்ததெனப்
பெருமகிழ்ச்சியெய்து மாரே.

நதிவிலாசம் எனும் இந்நூல் சேவகப் பாண்டிய மன்னர் மீது பாடப்பட்ட சிற்றிலக்கியமாகும். இந்நூலை சமஸ்தான மன்னர் குல குரு ஸ்ரீமத் ஞானனந்த சிவப் பிரகாச சிதம்பர தேசிகர் பாராட்டியுள்ளார். கவிராசக் கணபதிவேள் என்று கவிஞரைச் சிறப்பித்துள்ளார். சேத்தூர் சமஸ்தான வித்துவான்களாகிய இராமசாமிக் கவிராயர், மு. ரா. கந்தசாமிக்கவிராயர், மு. ரா. அருணாசலகவிராயர், ஸ்ரீவில்லிபுத்தூர், ரெ.அப்பு வைங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவரும் ஆந்திரதிராவிடகீர்வாண் வித்வான் (தெலுங்கு தமிழ், வடமொழிப்புலவர்) ராயலுவையங்கார் குமாரர் ஸ்ரீனிவாசஐயங்கார், பேரையூர் சமஸ்தான வித்துவான் அஷ்டாவதானம் மீனாட்சி சுந்தரக் கவிராயர், சிவகிரி சமஸ்தானம் எட்டிசேரி திருமலை வேலுக் கவிராயர் முதலிய இவரது சமகாலக் கவிஞர்கள் சாற்றுக் கவிகள் தந்து இவரைப் பாராட்டியுள்ளனர்.

இந்நூலுக்கு முகவுரை வரைந்த மு. ரா. கந்தசாமிக் கவிராயர் சேற்றூர் சமஸ்தான வித்வான் மதுரை ''வித்யாபானு'' பத்திரிக்கை ஆசிரியர். சமஸ்தான வித்துவக் குடும்பத்தில் பிறந்த பெரும்புலவர். இவர் தம் உரையில் கூறுவதாவது.

''தமிழ் வித்வான்களைக் கண்டால் மிகவும் ஏளனமாக நினைத்தும், தமிழ்க் கவிகளைக் கேட்பதை வீண் காலப் போக்காக கருதியும் தம்மையே இந்திரனாக மதித்தும். கல்விஞானமின்றிப் புவிக்குப் பொறையாயிருக்கும் ஏனைய ஜமீந்தார்கள். இச் சேற்றூர் மன்னர் பெருமானைப் போலத் தமிழபிமானங்கொண்டு தமிழ்ப் பிரபந்தங்களை ஏற்றுத் தமிழ் வித்துவான்களை ஆதரித்து வருவார்களாயின் அவர்கள் புகழடைவார்கள். நம் தமிழும் வளர்ச்சியுறும். இச் சேறை மன்னரவர்கள் அதிபால்ய திசையில் இருப்பினும் தம் அருமைப் பிதா மகாராஜா அவர்கள் சிறந்த தமிழ் வித்துவானாக இருந்தமையால் மகனறிவு தந்தையறிவு என்றஆன்றோர்திருவாக்கின்படிதாமும் அருங்கலை விநோதராக இருந்து தமிழையும் சைவத்தையும் ஆதரித்து வருதல் இத்தமிழ் நாட்டுக்கே ஒருபெருஞ் சிறப்பாகும் என்பதில் ஐயமில்லை.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இக்கூற்றில் அன்னுளில் இருந்த குறுநிலமன்னர்கள் நிலேயும் சேற்றூரில் தமிழ் வளர்த்த மன்னர்கள் மரபின மாண்பும் தெரிகிறது அல்லவா?

'நதி விலாசம்' சேற்றூர் மன்னர் மீது பாடப்பெற்ற 32 கவிகளேயுடைய நூல் ஆகும், சிலேடையணி மிகுந்த நூல். தடிகைமுத்துப் புலவரின் சமுத்திரவிலாசம் மாம்பழக்கவிச்சிங்க நாவலரின் சந்திர விலாசம் போல இந்நூல் நதியைக் நோக்கிக் கூறிய பாங்கில் அமைந்ததாகும்.

இந்நதி விலாசத்தில், சேற்றூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தேவியாறு, நகரியாறு, கோதநதி, பிராவடியாறு, மாக்கியாறு, முதலிய ஆறுகளுக்கு சிலேடைநயம் மூலம், சிவன், முருகன், விநாயகன், யானை, குதிரை, முதலிய தெய்வம் விலங்குகளோடு ஒப்பிட்டு அணி நயஞ் செறி கவிகள் அமைந்துள்ளன. இந்நூல் மதுரை விவேகபானு அச்சகத்தில் 1910ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

கணபதிக் கவிராயரின் மற்றொரு சிறு நூல் திருப்பழனித் தண்டபாணிப் பெருமான் சதுரங்கக் குதிரையடி வெண்பா ஆகும். சேற்றூர் மன்னர் மூத்தமகன் பழனிமலே அழகுராணியார் அவர்கள் ஆதரவில் இந்நூல் 1931ல் இராஜபாளையம் ஜெயராம்பிரசில் அச்சிட்டப்பட்டது. சதுரங்கத்தில் குதிரை செல்லும் வட்டங்களில் முருகன் பெயர் அமைத்து திறமைமிக்க வகையில் வெண்பாக்கள் இயற்றியுள்ளார். இந்நூலின் இறுதியில் இராஜபாளையம் அனகை நகர் வனக்கோவில் நீராற்றையனூர் அந்தாதியாக கலித்துறைப் பாடல்கள் முப்பது பாடி இணைத்துள்ளார்.

ஆந்திரமும் தமிழகமும் இணைந்திருந்த சென்னை மாநிலத்தின் முதன் மந்திரியாக இருந்த ராஜாஜி அவர்கள் அமைச்சரவையில் 1939ல் ஆந்திரகேசரி டி பிரகாசம் அவர்கள் ஜமீன் ஒழிப்பு மசோதா தாக்கல் செய்தார். அதுபின்னர் சுதந்திர இந்தியாவில் 1947க்குப் அமலாயிற்று 1942ல் சுதந்திர இயக்கம் தீவிரம் அடைந்தது. இந்த பெரிய சமூகமாற்ற கணபதிக் கவிராயரையும் எட்டியது. மன்னர் சமஸ்தானம் எல்லோரும் போய்விடும் என்பது உறுதியாக்கப்பட்டது. ஆதலின் மற்ற நிலக்கிழார்களும் தமிழறிந்த பெருமக்களும் ஆதரவுதர தம் பிறபடைப்புக்களை அவர்கட்கு சமர்பித்து சில நூல்கள் இயற்றினர். அவற்றுள் உடுமலேப்பேட்டை தாலுகா செவ்வப்பன்பாளையம் ஊரைச் சேர்ந்தகுமாரசாமிக்கவுண்டர் குமாரர் சண்முக முகவேல் கவுண்டர் மீது "அகப்பொருட் கோவை -பாங்கியிற்கூட்டம்'' எனும் எழுபத்தைந்து பாடல்கள் உள்ள நூல் ஒன்ருகும் இந்நூல் 1942ல் பொள்ளாச்சி சதானந்தபவர் பிரசில் அச்சிடப்பட்டுள்ளது.

உடுமலேப்பேட்டை செவ்வப்பம்பாளையம் சு பழனிவேலப்பக் கவுண்டர் மிகச்சிறந்த தமிழறிந்த புலவராகவும் பன்னூல் ஆராய்ச்சியில் தேர்ந்த அறிஞராகவும் புலவர்களை ஆதரிக்கும் புலவராகவும் திகழ்ந்தார்' இவர் மீது நமது கணபதிக்கவிராயர் அவர்கள் '' ஐந்திணை விலாசம் '' என்று ஒரு சிற்றிலக்கியம் படைத்துள்ளார்கள் இந்நூல் குறிஞ்சி முல்லே மருதம், பாலே நெய்தல் எனும் ஐந்திணைகளைப்பற்றிப 46 கலிகளைக் கொண்ட சிலேடையணி மிக்க நூலாகும் இந்நூலுக்கு ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சப்த பாஷா பண்டிதர் ராமானுஜ தாசர் அவர்கள் ஒரு சாற்றுக்கவி அளித்துள்ளார். அது வருமாறு

'செல்வபுரி வாஸ்துவுடி சீர்ப்பழனி
வேலப்பன்
தில்வாய்ந்த மெர்ஸி நந்நு தேட்டகா -
வல்லசேட்
ஐந்திணை விலாசமே ஆக கணபதி
அந்தமுறச் சொற்றன் அரிது'''

வாஸ்தவுடு (வாழ்பவன்) தேட்டகா (தெளிவாக) அந்தம் (அழகு) முதலியவை

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தெலுங்கு · தில் (உள்ளம்) இந்துஸ்தானி மெர்ஸி (கருணை) இங்கிலிஷ் நந்து (நன்றாக) மலையாளம் சேட் (பணக்காரன்) பிராகிருதம் ஆசு (உடனே பாடுவேன்) சமஸ்கிருதம் ஆகிய தாமறிந்த மொழிச் சொற்களை வைத்து வெண்பா பாடியுள்ளார்.

இந்நூலுக்கு, கணியூர் கே. அப்துல் சுக்கூர் எனும் புலவரும் பரமக்குடி -தமிழ்ப் பண்டிதர் பெ, கோவிந்த நாவலரும். பழனி பெரியசாமிப் பண்டாரம், உடுமலை வெ. ரா. கந்தசாமி பிள்ளை தளவாய்புரம்-தமிழாசிரியர் மா. பெருமாள் உபாத்தியாயர் முதலியோரும் சாற்றுக்கவி தந்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழறிஞர் மு. அருணாசலம் பிள்ளை தற்சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

கணபதிக் கவிராயரின் மகள் சற்குணச் செல்வியின் மகன் ரா. அ. முத்துக் குமாரு உபாத்தியாயர் அவர்களும் சாற்றுக்கவி அகவலில் தந்துள்ளார். இத்தகு பாராட்டுப் பெற்ற சிலேடை, மடக்கு முதலிய அணிகள் நிறைந்த இந்நூல் உடுமலைப்பேட்டை எலக்ட்ரிக் பிரிண்டிங் பிரசில் 1942ல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

கணபதிக்கவிராயர்' உடுமலைப்பேட்டை குருவப்பநாயக்கனூர் ஸ்ரீமான் ஆர் வி. குருசாமிநாயுடு அவர்கள் மீது மருதவிலாசம்' என்னும் நூலும் இயற்றியுள்ளார். 'வெயிலுகந்தம்மன் பதிகம்'' அருந்துறைக் கோவை 'எழுமலைச் சிலேடை வெண்பா' சிவகரிச் சிலேடை வெண்பா முதலிய சிறு நூல்களும் இயற்றியுள்ளார் மரபுவழிப்பட்ட சிற்றிலக்கியங்களைப்படைத்த மாபெரும் கவிஞராக கணபதிக் கவிராயர் எண்பதாண்டுகள் வரையும் வாழ்ந்து மறைந்த இனியகவிஞராவார். தமிழும் சைவமும் இருகண்ணெனப் போற்றிய கவிராயர் விபூதிப் பூச்சும் ருத்திராட்ச மாலையும் அணிந்திருந்தவாறு முதுபெரும் புலவராகவும் தமிழகம் பாராட்டிய பாவலராகவும் இருந்து இப்பகுதியில் இலக்கியத் தொண்டாற்றியுள்ளார்கள் இவரது புலமைநயம் மிக்க கவிகளை எடுத்துக் காட்ட ஈண்டு இடம் போதாமையின் ஒரே ஒரு பாட்டைமட்டும் பார்ப்போம்.

'' தன்னுயிர் போல் வெண் குடை நீழல்
நாட்டித் தழைத்த பல
மன்னுயிர் காத்தருள் சண்முக வேலெனும்
வள்ளல்வெற்பாய்
நின்னுயிராகும் செந்தேன் மயல் நோய்க்கு
நிகழ் மருந்தாய்
என்னுயிராகி நின்றுலினிவேறிங்கெவன்
சொல்வனே ''

- அகப்பொருட் கோவை.

சேற்றூருக்கடுத்த முகவூரில் பிறந்து வளர்ந்து சேற்றூர் சமஸ்தான வித்துவானாக இருந்தவர்களான மு. ரா. அருணாசலக் கவிராயர் ''சேறைத் தவம் பெற்ற நாயகி பிள்ளைத்தமிழ்'' எனும் ஒரு சிற்றிலக்கியம் படைத்துள்ளார்கள், அருணாசலக்கவிராயர் சகோதரர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் மதுரை தமிழ்ச்சங்க நூற்பரிசோதகராகவும் விவேகபானு பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தார். இன்னும் இராமசாமிக்கவிராயர், பழனிக்குமாரு, மீனாட்சிசுந்தரம் சுப்பிரமணிய கவிராயர் முதலிய ஏழு பெருங்கவிஞர்களும் ஒரே குலத்துதித்து பெருமைசேர்த்துள்ளனர். இத்தகு பெரிய வித்வத் குடும்பத்தில் பிறந்த அருணாசலக்கவிராயரைப் பாராட்டி பெ. ப. சுப்பிரமணிய முதலியார் சோழவந்தான் அரசர் சண்முகனார் முதலிய அன்னைய மாபெரும் கவிஞர்களும் அறிஞர்களும் சாற்றுக்கவி தந்துள்ளனர். இந்த பிள்ளைத் தமிழ் நூல் 1607ல் மதுரை விவேகபானு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் இருந்து ஒரு பாடல்.

'' இதுவரையும் ஒரு மூன்று பாயத்தினல்
அழைத்
திட்டுமிங் கெய்திலாய் நீ
எங்கள் பெருமாட்டி தான் அரசர்
கோமகளாய்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இருத்தலின் இனிப்பொருளாய்க்
கதுமென எழுந்து தண்டனைசெயற்
கெண்ணிடிற்

காப்பருனை யாவரந்தோ
கலைலான் என்றன்பு வைத்துரைப்பன
வெலாங்

கன்முனை நிகர்ப்ப இதயப்
பதுமமேற் சிறிதும் புகாமை தானென்
கொலோ

பழமறைகள் முழுது மெட்டிப்
பார்ப்பதற் கெட்டாத இவள் சேறை
நகர் செய்த

பாக்கியத் தாற் கிடைத்தாள்
அதுவிது எனச் சொலற் கிடமாயிருப்
பவளோ

அம்புலீ யாட வாவே
அருள்பமுத்திடு தெய்வ தருவெனத்
தருமுமையொ

டம்புலீ யாடவாவே.

முகவுரைச் சேர்ந்த மற்றொரு சேற்றூர் சமஸ்தான வித்வான் மா. பெருமாள் அவர்கள் " சங்கரானந்தக் களிப்பு "எனும் பழைய சைவ சித்தாந்த நூல் ஒன்றுக்கு உரை வகுத்து இருபதாண்டுகட்கு முன்பு வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த சிறந்த கவிஞர்களில் ஒருவர் ரெ. அப்புவையங்கார் என்னும் கவிபூஷணம் நரசிம்மாச்சாரியார் ஆவார். இவர் சேற்றூர் சமஸ்தான வித்வானகத் திகழ்ந்தவர். ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் ஆசிரியயராக இருந்தவர். இவர் பல சிற்றிலக்கிய வகை நூல்களை இயற்றியுள்ளார். "சூடிக் கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை" எனும் நூல் அவரே எழுதிய உரையுடன் மதுரை தமிழ்ச் சங்கம் நடத்திய 'செந்தமிழ்' இதழ் பிரசுரம் 93 ஆக 1936ல் வெளியிடப் பட்டுள்ளது. இந்நூல் வேதாந்ததேசிகரின் 'கோதா ஸ்துதி' எனும் வடமொழி நூலின் தமிழாக்கம் ஆகும்.

இவரது மற்ரெரு நூல் "தென்புதுவை மணிவண்ணனுலா" ஆகும். இந்நூல் சங்கரன்கோவில் கதிரேசன் பிரிண்டிங் பிரசில் 1936ல் வெளியிடப்பட்டுள்ளது உலா என்னும் பிரபந்தத்தைச் சேர்ந்த இந்நூல் செய்யுட்கள் விழுமிய நடையில் நயமுடன் அமைந்துள்ளன செஞ்சொற் சுவை மிக்க கலிவெண்பாக்கள்.

இவரது மற்ரெரு நூல் "ஆண்டாள் சந்திர கலாமாலை" ஆகும் இந்நூல் மதுரை ஹரிசமய திவாகரம் பிரசில் 1938ல் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது இவருடைய மற்ரெருரு சிறந்த நூல் "வரமங்கைக் கலம்பகம்" ஆகும் இந்நூலுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த "செந்தமிழ்" இதழ் ஆசிரியர் நாராயணையர் இயற்றிய சாற்றுக்கவி அணிசெய்கிறது இச் சாற்றுக் கவியில் கவிபூஷணம் நரசிம்மச்சாரியார் மாண்பு தெளிவாகத் தெரிகிறது.

ஏற்கும் முறைப்படி நாற்கவி நவில் வோன் வில்லிபுத்தூரினில் நல்லிசை மேவிய ஹிந்து ஹைஸ்கூலினில் செந்தமிழ்த் தலைமையுபாத்தியாயன் உயர் மதுரைத்தமிழ்ச் சங்கத் திலகரு அங்கத்தினருள் ஒருவர் எனத் தொடங்கும் இச் சாற்றுக்கவியில் இவர் "மதுவைப் பெய்தளப் புதுவைப் புராணம்" படைத்ததாக தெரிகிறது மற்றும் ஒருதுறைக் கோவை, புதுவைச் சிலேடை வெண்பா, அந்தாதி, பதிற்றுப் பத்து, பஞ்சரத்தினம், கலம்பகப் முதலிய பலநூல்கள் இயற்றியுள்ளார்.

பெரும்புலமை சான்ற அப்புவையங்கார் எனும் நரசிம்மாச்சாரியார் வரமங்கைக் கலம் பகத்திலிருந்து ஒரு கவி காண்போம்.

" வாச நறுங் குழலார் பாசமெனுஞ் சுழிவாய்
வாவி விழந்துழலா வாவியுநைந் தழலாழ்
நீசனெனன் பிதமாஞ் தேச விருன்பதமம்
நீடுறுலன் புனைமேய் நாடுறலென்று
கொலோ

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மேசக சுந்தரனே யாசகலந்தரனே
வேயினை பங்கயனே பூமிசை தங்கயனே
மாசறு சந்திரனே தேசுறு மந்திரனே
மாமரை நங்கையனே சீவரமங்கையனே ''

திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த சிறந்த கவிஞர் வித்துவான் பெ. கோவிந்தனார் ஆவார். இவர் தமிழாசிரியராக ஸ்ரீவில்லிபுத்தூர், திருத்தங்கல் முதலிய பல ஊர்களில் இருந்தார் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிந்தன் காலனியில் தம் வீட்டில் இருந்து கொண்டு தமிழ்ப்பணி புரிந்து வந்தார். தமிழ்ப்பற்று மிக்க இவர் சாலியர் குலத்தில் பிறந்தவர்' கைத்தறி நூலோடு மெய்க்குதவு நூலும் படைத்துச் சிறந்த திருவள்ளுவர் போல இவரும் தமிழ்ப்பற்று மிக்க பல இனிய செய்யுள் நூல்களைப் படைத்தளித்துள்ளார். இவர் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா சிறப்பாக நடத்திய போது மாநாட்டின் பிரதிநிதியாக கலந்து கொள்ளச் சென்றவர் நடுவழியில் திண்டுக்கல் அருகே மாரடைப்பால் மரண முற்றார். தமிழுலகு இவர் மரணமறிந்து வருந்தியது இவரது பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவி சிறப்பாக இயங்கி வருகிறது. வித்வான் சிவஞானம் வித்வான் க. கொன்றையாண்டி, வித்வான் க. சுப்பிரமணியம் முதலியவர்கள் இந்த அறக்கட்டளை நன்கு இயக்கி தமிழ்த் தொண்டாற்ற துணைபுரிந்து வருகின்றனர்.

பெ. கோவிந்தனார் இயற்றிய சிறந்த நூல் '' கொடை மன்னர்பனுவல் '' எனும் காவியம் ஆகும் கடை ஏழு வள்ளல்களின் சரிதத்தைக் காவியமாக்கியுள்ளார், இந் நூலில் 1117 செய்யுட்கள் உள்ளன. இவரது மற்றொரு நூல் '' இயற்கை இருநூறு '' என்பது இதில் இயற்கை வருணனைகள் நிரம்பப்பெற்ற பல இனிய செய்யுட்கள் அணி செய்கின்றன. இவரது மற்றொரு நூல் '' பைந்தமிழ்ப் பாமலர் ., என்பதாகும். இந்நூலில் தமிழ்' இயற்கை எழில், குந்த்த தனிப்பாடல்கள் பல அமைந்துள்ளன. ஐம்பது தலைப்புகளில் அருமையான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இன்னும் சில கவிதை நாடகங்களும் இயற்றி தமிழ் அன்னைக்கு சமர்ப்பித்துள்ளார். ' சூதின் மகள்'' ''சிறைமீட்ட செம்மல்'' எனும் செய்யுள் நாடகங்களும் யாத்துள்ளார் செஞ் சொல்லழகு எளிய நடையும் சிறந்த கருத்துக் களும் தமிழ்ப் பற்றும், இயற்கை வருணனை யும் மிக்க கோவிந்தனாரின் கவிதைகள் தமிழுக் கோர் அணிகலனாகும் இவரது ஒரு பாடல் காண்போம்.

'' தென்றல் கூட்டை அசைந்தாட்டச்
சிறுமின் மினிவிளக்குக் காட்ட
ஒன்றிப் பேடை உவப் பூட்ட
உடனுடுவாய் ஊச லாட்டம்
உன்போ லின்பம் எமக்கில்லை
உலகில் எமக்குப் பெருந்தொல்லை
நன்றே என்று நகரத்தே
நாளும் வாழ்கிறோம் துயருற்றே ,,

தற்போது தமிழுலகில் சிறந்த கவிஞர்களும் ஒருவராகத் திகழும் சி. விநாயக மூர்த்தி ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கும் கோவிந் தனார் மரபைச் சேர்ந்தவர் கோதை இலக் கிய மன்றம் எனும் இலக்கிய நிறுவனத்தை திரு. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் செயலராக சிறப்பாக நடத்தி வருகிறார். இவரது கவிதைகள் பல இதழ்களில் வெளி வந்துள்ளன. 'எரிநட்சத்திரம்' புதிய வாழ்க்கை - கருப்பு விளக்கு முதலியகவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இராஜபாளையத்தில் பிறந்த கார் காத்த வேளாளர் மரபினராகிய சங்கர மூர்த்திக் கவிராயர் மாதவ சிவஞான யோகி களின் நேரடிச் சீடராவார். சிவகிரி, கனனி வாடி ஜமீன்தார்களிடம் யானைக்கன்று பரிசில் பெற்ற கவிஞர் இவர். 'சேற்றூர்ப்பள்ளு' முதலிய பல நூல்களைப் படைத்தவர். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்த இக் கவிஞரின் படைப்புகள் இதுகாறும் கிட்ட வில்லை.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இராஜபாளையத்தில் இருந்த மற்றொரு சிறந்த கவிஞர் நா. சையது மஸ்ஹூது ராவுத்தர் ஆவார். இவர் "சீரு புராணத்தின் எழுவாயும் ஞானரத்தின பயநிலையும் அடங்கிய மும்மணிப் பதிகம்" எனும் கவிதை நூல் இயற்றியுள்ளார். இந்நூல் 1937-ல் அவரது குமாரர் கல்பானி நா சை. பீர் முகம்மது ராவுத்தர் அவர்களால் மதுரை இம்ருகிம் பிரசில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது. இந்நூலுக்கு பல கவிஞர்கள் சாற்றுக்கவி அளித்துள்ளனர்.

காஞ்சீபுரம் வள்ளார் சீடர் நிச்சல ராமானந்த சாமியின் மாணவர் சிதானந்த தேசிகர். இராஜபாளையம் வெ. சுப்ப ராஜா. சிவகிரி மகாலிங்கப் புலவர், எட்டிசேரி அருணாசலப் புலவர், சம்மந்தபுரம் முகிய்ய தீன் பாட்சா, ஸ்ரீவில்லிபுத்தூர் சே மீரா ஹூசேன் ராவுத்தர், சேத்தூர் சமஸ்தான வித்வான் ராமகிருஷ்ண ஆசாரி. பேரையூர் அப்பாவுக் கவிராயர், இராஜபாளையம் ஆர். முத்தையா பிள்ளை. இராஜபாளையம் சின்ன கிருஷ்ணய்யங்கார் ஆகியோர்கள் சாற்றுக்கவி தந்துள்ளனர். இச்சாற்றுக் கவிகள் இப்பகுதியில் இலக்கிய நயம் தேர்ந்த கவிஞர்கள் பலர் இருந்தனர் என்பதனை விளக்குவதோடு, சாதிமத பேதமின்றி தமிழ் உணர்வில் ஒன்றியிருந்த பாங்கினையும் தெரிவிக்கிறது

சிறந்த தமிழ்ப் புலமையும் இறை நாட்டமும் உடைய நா. சையது மஸ்ஹூது ராவுத்தரின் ஒருபாடல் காண்போம்.

"சிற்பொருளாதி செகதலத் துதித்த
சேதன சேதனத் துறைந்து
நற்பொருட் பெரியோ ரிதையத்துளாசி
நாட்டத்தின் படியெலாம் நடந்து
முற்பொருட் டுதேமுகமதே யமுதே
முத்திக்கு வித்தென முளைத்த
அற்புதக் கொழுந்தே சற்குணக்கடலே
அகமதே பரமசற் குருவே

இராஜபாளையத்தில் வாழ்ந்த மற்றொரு சிறந்த அறிஞர் இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்கள் வழக்குரைஞரான இவர் 'கிராம தூதன்' முதலிய பத்திரிக்கைகளை நடத்தினார். 'தியாகராச மாதவ நூல் நிலையம்' எனும் நூல்நிலையம் உருவாக்கினார். பல சிறந்த நூல்களைச் சேகரித்திருந்தார். திருவள்ளுவரில் மிகுந்த ஈடுபாட்டுடன் குறள் வகுப்புகள் நடத்தி வந்தார். திருவள்ளுவர் குறித்த தம் சிந்தனைகளை நூலாக வடித்து வெளியிட்டார். வள்ளுவர் பெயரில் அறநிலையம் ஏற்படுத்தினார். எனினும் சில சூழ்நிலைகளால் அவரது நூல் நிலையமும் அறநிலையமும் இயங்காமல் முடங்கிப் போனது வருந்தற்குரியது. நீதிக் கட்சியில் பற்றுடைய பிள்ளையவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சித் தலைவராக இருந்திருக்கிறார் நேர்மையும், சுதந்திரமாக யாருக்கும் அஞ்சாமல் தம் கருத்துக்களை வெளியிடும் துணிவும், ஆழ்ந்தகன்ற நூற்பயிற்சியும் உடைய இப்பெரியார் எண்பதாண்டுகள் வரை வாழ்ந்திருந்து பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் மறைந்தார்.

மற்றொரு தமிழறிஞரான பூசப்பாடி குப்புசாமி ராஜா சிறந்த அறிவாற்றலுடையவர். பூசப்பாடி குமாரசாமி ராஜா-சக்கனியம்மாள் தம்பதியருக்கு 1894 மார்ச் 23ந்தேதி பிறந்தார். சுயமுயற்சியால் தமிழிலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். மதுரைத் தமிழ்ச் சங்க பாலபண்டித பரீட்சை எழுதினார். 1932ல் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குபெற்று பெல்லாரி ஜெயிலில் ஆறுமாத சிறைவாசம் அனுபவித்தார். 1933ல் மரவியாபாரம் தொடங்கி செல்வம் திரட்டினார். சோதிட நூல் ஆய்வுகள் செய்தார். 'இராஜபாளையம் கல்லூரி' நிறுவப்படுபட்டார். எதிர்பாராத விதமாக 1969 ஜனவரி மீ 9 தேதி இரவில் மறைந்தார். இவர் இயற்றிய இலக்கண ஆய்வுநூல் "தொல்காப்பியச் செய்யுளில் இரு சூத்திர விளக்கம்" அறிஞர்களால் பாராட்டப்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பட்டது. இந்நூலும், 'குறள் ஆய்வுரை' என்னும் ஆய்வுநூலும் மணிமேகலை மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ளது,

பூ. கு. குப்புசாமிராஜாவின் சில தணிப் பாடல்கள் இவை.

''அமரின்றி எம்மை அடித்தாள 'இன்சுகம்'
கமரின்வாழ் நாகமென நின்ருன் - குமர
வயோதிகம் வந்துற்றதோ? வள்ளி தெய்வ யானை
பயோதரம் தோய்கின்றனையோ பார்''

''பாலாம் மொழியுடைப்பாஞ் சாலத் தனிச் சிங்கம்
லாலா லஜபதி ராயனைக் - கோலால்
அடியுண்டு மாளச்செய் ஆட்சியினி மேலும்
குடிகொண்டு நிற்குமோ கூறு''

''அங்கமா அக்கரங்கள் ஆறெண் புலவராய்
சங்கத் தமர்ந்து தமிழ்வளர்த்தாய் - கொங்குவிரி
பூவில் உறைகின்ற புத்தொளிர் வாணியேஎன்
நாவில் உறைவாய் நயந்து''

தற்போதும் எமது பகுதியில் சிறந்த இலக்கியப் படைப்பாளிகள் அறிஞர்கள், கவிஞர்கள் பலர் உள்ளனர்.

இராஜபாளையத்தில் மணிமேகலை மன்றம் நிறுவி இலக்கியத் தொண்டாற்றும் பன்மொழிப்புலவர் மு கு. ஜகந்நாத ராஜா (கட்டுரை ஆசிரியர்) கற்பனைப் பொய்கை, தரிசனம், சிலம்பில் சிறுபிழை, வான்கலந்த வாசகங்கள், ஆபுத்திர காவியம் தெரு (காவியம்) காவிய மஞ்சரி முதலிய சுய படைப்புக்களும் காத சப்த சதி, வஜ்ஜாலக்கம், கற்பூர மஞ்சரி எனும் பாகத மொழி நூல்களின் தமிழாக்கமும், கன்யாசுல்கம் (நாடகம்), களாபூணோதயம் (காவியம்) வேமனு, சேரி (நாவல்) முதலிய தெலுங்கு நூல்களின் தமிழாக்கமும், சிவசரணர் வசனங்கள் (கன்னடம்), நாகானந்தம், குந்தமாலா, எனும் வடமொழி நாடகங்களும், தமிழில் படைத்துள்ளார். குறிஞ்சிப்பாட்டு, முத்தொள்ளாயிரம், புறநானூறு, குறள் முதலியன தெலுங்கிலும், முத்தொள்ளாயிரம் கன்னட மலையாள மொழியாக்கங்களும் செய்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழக சிறப்பாய்வாளராக அமைந்து 1984ல் ''தமிழக, ஆந்திர வைணவத் தொடர்புகள்'' எனும் ஆய்வுநூல் படைத்தளித்துள்ளார். பிஞ்சுக்கரங்கள் (சிறுகதைத் தொகுதி) முதலிய பல படைப்புக்கள் செய்துள்ளார்.

மணிமேகலை மன்றப் பொதுச் செயலர் கொ. மா. கோதண்டம், தமிழகத்தின் தென்பகுதி மலை சார்ந்த குறிஞ்சி மக்களின் வாழ்க்கையினை முதன்முதலாக சிறுகதைகளாகப் படைத்து பாராட்டினைப் பெற்றவர் இவரது 'ஆரண்ய காண்டம்' மத்திய அரசின் பரிசு பெற்ற நூல் மலையின் மைந்தர்கள் ஏலச்சிகரம் (நாவல்) ஜன்ம பூமிகள் முதலிய நூல்கள் சிறந்த பாராட்டினைப் பெற்றன. ''கோழிக் குட்டிகளும் பன்றிக் குஞ்சுகளும்'' (புதுக்கவிதை) சின்னச்சின்ன அரும்புகள், கங்கை - காவிரி எனும் சிறுவர் கவிதை நூல்களும் குழந்தை இலக்கியப் படைப்புக்களாகும் இவரது 'மழைத்துளிகள்' எனும் குழந்தை இலக்கியப் பாடல்கள், தமிழ்நாடு குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் கவிதை முதற்பரிசான தங்கப் பதக்கம் (1984) பெற்றது

மணிமேகலை மன்றச் செயலரான பூ. அ. துரை ராஜாவின் 'சத்திய வேதனை' (சிறுகதைத் தொகுப்பு) 1978ல் வெளி வந்தது தெலுங்கு, மலையாள மொழிகளிலிருந்து பல சிறுகதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். கவிதை புனைவதிலும் திறன்மிக்க சிறந்த எழுத்தாளரும் 'கவிஞரும்' ஆவார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

அண்மையில் (1984 - மே) மறைந்த சிறந்த இலக்கியப் படைப்பாளி கொ. ச. பலராமன். செயலூக்கம் மிகுந்த நேர்மையுள்ளம் கொண்ட இலக்கிய அன்பர் ஆவார். 6-9-33ல் பிறந்த இவர் ரசிகன், கணக்கு, புதுக்கணக்கு எனும் புதுக்கவிதைத் தொகுதிகளும். பார்வை, ஏர்க்கால், மனிதன் இருக்கிருன் எனும் சிறுகதைத் தொகுதிகளும், முடியாத முற்றுப்புள்ளி எனும் நாவலும் படைத்தளித்துள்ளார்.

கொ. ரா. வேலாயுத ராஜா மற்ருெரு சிறந்த எழுத்தாளர் ஆவார். இயற்கை மருத்துவ விற்பன்னராகிய இவர் 'எலுமிச்சம் பழம்' எனும் நூல் படைத்துள்ளார். சுருதி தப்பிய ராகம் எனும் பி. வி. ராசமன்ஞரின் நாவலை தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். குண்டூரி சேஷேந்திர சர்மாவின் 'நா தேசம் நா ப்ரஜலு' எனும் தெலுங்கு புதுக்கவிதைக் காவியத்தை தமிழாக்கம் செய்துள்ளார்.

இ. ரெ. ரகுபதி ராஜா உமர்கய்யாமின் ருபாயத்துக்களை அழகிய வசனநடையில் தமிழாக்கம் செய்துள்ளார். காப்டன் - டி. வி. பி. ராஜா 'முதலாளி - தொழிலாளி' எனும் நூலை இயற்றியுள்ளார். பூ. கொ சுப்ப ராஜா 'வீரபாண்டிய கட்டபொம்மன்' எனும் நாடக நூல் வெளியிட்டுள்ளார். இவர் அண்மையில் மறைந்து விட்டார். இவரது நாடகம் 'பாராட்டுங்கள்' கன்னடத்தில் திரைப்படமாக்கப் பட்டுள்ளது.

புத்திலக்கியத்தில் பேரார்வம் உடைய த. பி. செல்லம் 'விதி' என்னும் புதுக் கவிதைத் தொகுதி ஒன்றை தொகுத்து வெளியிட்டார். இவரது 'அழகின் பரதம்' எனும் புதுக்கவிதை நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

ச. மாதவன் - தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபாடுடைய நல்ல எழுத்தாளர். இவரது 'தங்கச் சிலேகள்' எனும் நாடகம் 1982ல் வெளிவந்துள்ளது. 'ஒரு மனிதன் கவிதை படைக்கிருன்' எனும் நாவல் இவரது மற்ருெரு சிறந்த படைப்பாகும்.

கவிஞர் ப செல்வநாயகம் தமிழ்ப் பற்று மிக்க தியாக சீலர் முதுமையிலும் இளமையுள்ளத்துடன் தமிழ்த் தொண்டாற்றத் துடிக்கும் இவரது உழைப்பு இராஜபாளையம் திருவள்ளுவர் மன்ற வளர்ச்சி உரமாக அமைந்தது. இவரது "பொதிகைச் சாரல்" கவிதைநூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

இப்பகுதியில் முதல் பெண் எழுத்தாளராக மலர்ந்திருப்பவர் இரா. ஆனந்தி ஆகும். இலக்கிய ஆர்வமும் மானுடநேய உணர்வும் மிக்க இவரது 'அறிமுகம்' எனும் வசனகவிதை நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பேச்சு, கவிதை ஆற்றலினூலும் சிறுவெளியீடுகள் மூலமும் இலக்கியப் பணி புரியும் பலர் உள்ளனர். வித்துவான் க. கொன்றையாண்டி, கவிஞர் முத்தரசு, கவிஞர் கு. கார்மேகம், சி. கோ. ஆறுமுகம் சிவகிரி, எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஜி. கிருஷ்ணமூர்த்தி, மம்சாபுர நித்யானந்தன், கோதையூர் மணியன், மணியம். சிவகாசி பழனிச்சிங்காரவேலு, ந செண்பகம், பி எல் ஜெயராம், ராஜ்மகல். டாக்டர் K. கணேசன், பி.வி. வெங்கட்ரமணன், செயப்பிரகாசம் [அறிவுப் பாசறை பத்திரிகை ஆசிரியர்] மேலாண்மை பொன்னுச்சாமி, சொக்கலிங்கபுரம் பாரததேவி, மீனுட்சிபுரம், மு. நாராயணன் முதலிய பல இலக்கியப் படைப்பாளர்கள் இன்றும் சிறந்த படைப்பாக்கத் தொண்டாற்றி வருகின்றனர். மு. சிவம் குழந்தை இலக்கியத்தில் பல நாடகங்களும் சிறுகதைகளும் நிறைய எழுதி வெளியிட்டுள்ளார். சிவகாசி குரு மனோகரவேல், தம்தந்தையார் குருசாமி நாடாருடன்சேர்ந்து சிவகாசி முரசு பத்திரிக்கை வெளியிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சிவகாசி K. ராமசாமி சிறந்த சிறுகதை எழுத்தாளர் இராமச்சந்திரபுரம் வீரவேலுச்சாமி சிறுகதைகள் பல எழுதியுள்ளார். இவரது நூல்கள் 'நிறங்கள்' சிறுகதைத்தொகுதி சிறுவர்களுக்கான நாடோடிக் கதைகள் வெளி வந்துள்ளன

ராஜபாளையத்தைச் சேர்ந்த இராஜுக் கள் கல்லூரி நூலகர் தீ. ராமகிருஷ்ணன் ''முள்ளில் பூத்தமல்லிகை'' முதலிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

இராஜபாளையத்தில் தமிழ் மணம் பரப்பிய முதல்வரான சிறந்த சொற்பொழி வாளருமான தமிழ் பண்டிட் சுப்பராஜாவின், குமாரர் டாக்டர் எஸ். பாலசந்திரன் 'இலக்கியத்திறனாய்வு'' முதலிய பல திறனாய்வுநூல்கள் வெளியிட்டுள்ளார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ளார். டாக்டர் என் குமாரசாமி ராஜா அவர்கள் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறை ரீடராக உள்ளார். இவர் மொழியியல்பற்றிய அரிய ஆய்வு நூல்கள் வெளியிட்டுள்ளார். குறுந்தொகை பற்றிஆய்ந்துள்ளார். ஆய்வுக் கட்டுரைகள் பல வழங்கியுள்ளார்.

முகவூரைச் சேர்ந்த டாக்டர் ஆ. ராமகிருஷ்ணன் நெசவாளர் சமூகத்தைச்சேர்ந்த சிறந்த அறிஞர் இவர் ''அகத்திணைமாந்தர்'' எனும் ஆய்வுநூலும் பிற ஆய்வுக் கட்டுரைகளையும் வரைந்துள்ளார்.

இராஜபாளையத்தைச் சேர்ந்த அப்பாவய்யர் குமாரர் சுப்பரமணியன்எனும் கதைப் பித்தன் பொதுபணித்துறை அலுவலராக பணிபுரிகிறார் இவர் 'எங்கள் சஹாரா இங்கே இருக்கிறது'' எனும் கவிதைநூலும் 'தவிப்பு'' பழையசோறும் போர்ன்விடாவும் எனும் சிறுகதைத் தொகுப்புக்களும் வெளியிட்டுள்ளார்

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகிலுள்ள குன்னூரைச் சேர்ந்த ச விவேகானந்தசாமி தமிழிலும் இந்தியிலும் கவிஞராவார் 'கண்ணீர்' 'குருட்சேத்திரம்' முதலிய தமிழாக்க கவிதை நூல்களும் ''பாரதி நூறு'' முதலிய பல சிறு வெளியீடுகளும் இயற்றியுள்ளார். ஹோமியா பதி மெட்டீரியா மெடிகாவை தமிழ்ச்செய்யுள் வடிவில் அமைத்து புகழ்பெற்றவர்.

பிரபல எழுத்தாளர் நா பார்த்தசாரதி எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்தான் நதிக்குடி எனும் கிராமம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலுள்ளது. அங்கு பிறந்தவர். பல நாவல்கள், சிறு கதைகள், கவிதைகள். எழுதி புகழ் பெற்றவர் ''ஆரார்'' எனப்படும் ஆர். ராஜகோபாலன் வத்திராயிருப்பில் பிறந்தவர். சிறந்த அறிஞர் சிறந்த ஆங்கில இலக்கியங்களைத் தமிழாக்கி யுள்ளார். 'சொல்லேர் உழவர்' வண்ணக்களஞ்சியமே [கவிதை] மார்லோவின் பாஸ்டஸ் முதலிய பல நூல்கள் எழுதியுள்ளார்.

வத்திராயிருப்பு ரா விசுலநாதன் வண்டமிழ் இலக்கிய வரலாறு 'தனிச் சிறை' அல்லது மனச்சிறை [நாவல்] பல கதைகள் எழுதியுள்ளார். ஸ்ரீவில்லிபுத்தூர் கு. சங்கரநாராயண நாயுடு அவர்கள் இன்றைய இந்தியா முதலிய பல நூல்கள் எழுதியுள்ளார்.

ஆண்டாள் வரலாறு விவசாயப்பழமொழிகள், கீரையின்மாண்பு, நமக்கேற்ற வைத்தியம். ஆடுவளர்ப்பு. நமது இலைக்கறிகள், கோழிச் செல்வம் முதலிய நூல்கள் வரைந்துள்ளார்.

மம்சாபுரம் அ ழ. கிருஷ்ணமூர்த்தி சிறந்த எழுத்தாளர். வறுமைச்சக்கரம் [சிறுகதைத்தொகுதி] மற்றும் பல குழந்தைப் பாடல்கள் இயற்றியுள்ளார். சோலைசேரி சித்த மருத்துவ வித்தகர் ராமசாமி சிலகவிதை நூல்கள் படைத்தளித்துள்ளார். ஸ்ரீவில்லிபுத்தூர் அமுதன் சிறுகதைத் தொகுதி வெளியிட்டுள்ளார். 'திருப்பம்' எனும் இதழ் நடத்திஞர் துரை நாராயணன் 'மஞ்சன்வெயில்' எனும் நாவல் பலசிறு கதைகள் வெளியிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

P. ராமச்சந்திரபுரம் ஸ்ரீராமுலுதேசிகன் அவர்கள் கோதையும் கோவிந்தனும் கோதை தமிழ் அமுதம் "நாராயணனைப்பாடிய நம் ஆழ்வார்கள்" தசாவதாரத் தத்துவங்கள்" முதலிய பல நூல்கள் இயற்றியிருக்கிறார்.

அத்திகுளம் இராமனுஜ சுவாமிகள் பிரம்மதந்திரம் கீதை முதலியவற்றை தமிழ் பாடல்களாகச் செய்திருக்கிறார் ஸ்ரீவில்லிபுத்தூர் தங்கவேல், மணியம், முதலிய அவர்கள் சிலசிறு படைப்புகள் நல்கியுள்ளார்கள்.

எங்கள் பகுதியில் இலக்கிய நூல்களைப் போன்றே பிறதுறையில் பிரபலமான இரு பெருமக்களைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒருவர் மருத்துவதுறையில் பல நூல்கள் படைத்தளித்த பெருமகனார் ஆன W. D. தனுஷ்கோடி ராஜா அவர்கள்.

இராஜபாளையத்தில் பிறந்த க்ஷத்திரிய ராஜு குலத்தைச் சேர்ந்த தனுஷ்கோடிராஜா அவர்கள் பாளையங்கோட்டைக்கு படிக்கச் சென்றார். 1865ல் சென்னை மருத்துவக்கல்லூரியில் படிக்கச் சென்றார். பின்னர் 1873ல் பாளையங்கோட்டைக்கு வந்தார். 1889ல் குலசேகரன் பட்டினத்தில் உப்பளங்கள் நிறுவினார். அவர் கிறித்துவ மதத்தில் ஈடுபட்டு கிறித்துவரானார். அவ்வமயம் அவரது உப்பள மேற்பார்வைக்காக எச். ஏ. கிருஷ்ண பிள்ளை அமர்ந்தார். அவர்கள் நெருங்கிய நட்புடன் இருந்தனர். தனுஷ்கோடி ராஜா கிருஷ்ணபிள்ளையை கிறித்தவ மதத்தில் ஈடுபாடு ஏற்படச் செய்து கிறித்தவராக்கினார். கிருஷ்ணபிள்ளைக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கி தெளிவுறுத்திய அறிஞராகத்திகழ்ந்த ராஜாவின் தூண்டுதலே கிருஷ்ணபிள்ளை 'இரட்சணிய சரிதம்' முதலிய காவியங்களைப் படைக்க காரணமாயிற்று. ஜான்பனியனின் "பில்கிரிம்ஸ் புரோக்ரஸ்" நூலை ராஜாதான் மொழிபெயர்க்கச் செய்தார்.

'கிறித்தவக் கம்பன்' எனப் புகழ் படைத்த கிருஷ்ணபிள்ளையை உருவாக்கிய பெருமை தனுஷ்கோடி ராஜாவுக்குண்டு மருத்துவத் துறையில் பல உயர்ந்த சாதனைகள் புரிந்து, விக்டோரிய மகாராணியார் பேட்டியளித்து சிறப்பிக்கப்பட்ட ராஜா, ஆங்கில, ஹோமியோபதி, சித்த, யூனானி, இயற்கை மருத்துவம் ஆகிய பல துறைகளிலும் ஆய்வு செய்து பல நூல்கள் இயற்றினார். பிற்காலத்தில் சென்னை சாந்தோம் பகுதியில் வாழ்ந்து மறைந்தார். இத்தகு சிறப்புடைய தனுஷ்கோடி ராஜாவின் புகழ் நீடு நிலைக்குமென்பதில் ஐயமில்லை.

ராஜ குலத்தைச் சேர்ந்த மற்றொரு அறிஞரான கோவிந்த சுவாமிகள் வேதாந்த நூல்கள் சில இயற்றியுள்ளார் தஞ்சையருகே நன்னிலம், கோயிலூர் மடங்களில் இருந்து வேதாந்தம் கற்பித்து 'மகாவாக்கிய விசாரம்' என்றொரு சிறு நூலையும் இயற்றியுள்ளார் இராஜபாளையம் திரு K. B. பட்டாபி ராஜாவும் வேதாந்த நூல் ஒன்று எழுதி வெளியிட்டுள்ளார்.

இவ்விதம் எங்கள்பகுதியில் இலக்கியம் பழங்காலம் தொட்டு இடையறாது தொடர்ந்து வளர்ந்து கொண்டே வந்துள்ளது இலக்கியத்தை ஆதரிப்பவர்களும் பலர் இருந்து வளம் சேர்த்துள்ளார் மகாகவி பாரதியாரின் நூல்களை அவர் மறைவுக்குப் பின் வெளிகொணர்வதில் பூசப்பாடி சங்கர ராஜா எனும் தேசபக்தர் முனைந்து ஈடுபட்டு இருந்தார். கேப்டன ராமசாமி P. L. துரைசாமி ராஜா, பி. எஸ். வசந்தன் போன்றவர்கள், இப்பகுதி தியாகிகள் வரலாறுகள் எழுதியுள்ளனர் ரா. வைத்தியாபிள்ளை 'இராஜபாளையம் வரலாறு' எழுதி சிறப்புற்றவர். இதுபோல இலக்கியம், தத்துவம், வரலாறு, மருததுவம் முதலிய பல்வேறு துறைகளிலும் நூல்கள் படைக்கப்பட்டன

இம்மரபு இன்று மிக்க எழிலுடன் பிரகாசமாக விளங்குவது போலவே, எதிர்காலத்திலும் இப்பகுதியில் இலக்கியங்கள் படைக்கப்பட்டு தமிழன்னையின் பாதார விந்தங்களில் பொன் மலர்களாக ஒளியுடன் திகழும் என நம்புகிறேம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையார் அவர்கள்
மணிமேகலை நூல் பதிப்பிப்பதற்கு உதவிய

கையெழுத்துப் பிரதிகள்

1. திருவாவடு துறை ஆதீனத்துப் பிரதி.
2. எட்டயபுரம் பெரிய அரண்மனைப் பிரதி.
3. மிதிலைப்பட்டி ஸ்ரீ அழகிய சிற்றம்பலக்கவிராயர் அவர்கள் வீட்டுப் பிரதி.
4. திருநெல்வேலி ஸ்ரீ திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையவர்கள் பிரதி.
5. சேலம் ஸ்ரீ ராமசாமி முதலியார் பிரதி.
6. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ சிற்கைலாச பிள்ளையவர்கள் பிரதி.
7. ஆறுமுக மங்கலம் ஸ்ரீ சுந்தர மூர்த்திப் பிள்ளையவர்கள் பிரதி.
8. திருமயிலை ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் பிரதி.
9. சென்னை ஸ்ரீ தி. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் பிரதி.
10. சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தக சாலைப் பிரதி.
11. மதுரை தமிழ்ச்சங்க பாண்டியன் புத்தகசாலை பிரதி.
12. சென்னை ஸ்ரீ பார்சுவ நாதநயினார் அவர்கள் பிரதி.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ ரெங்கா ரைஸ் மில்ஸ்,
&
ஸ்ரீ ஜானகிராம் ரைஸ்
& பிளவர் மில்ஸ்,
தேனி.

உரிமையாளர்
N. L. இராமசந்திர ராஜா சன்ஸ்

நல்வாழ்த்துக்கள்

Phone : 2165 Resi : 2361

N. L. ராமசாமி ராஜா
ஸ்ரீ ஜோதி ரைஸ் & ஆயில் மில்ஸ்,
தேனி.

With best Compliments from :

RAMAJEYAM AGENCIES.
HPCL Dealers
Madurai Road,
THENI - 626 531

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ வேல் முருகன் பிரஸ்
P. S. K. பார்க், காளியம்மன் கோவில் தெரு,
இராஜபாளையம்.

விழாமலர், குறிப்பு, பேரேடு, பில் புக், கல்யாணபத்திரிகை
அச்சடிக்க சிறந்த இடம்.
போன் : 2162

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

விசுவ சாந்தி வெளியீடுகள் :

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜாவின் படைப்புகள்

தமிழில்

1.	கற்பனைப் பொய்கை	(கவிதை)	ரூ 5-00
2.	[illegible]	(வசன கவிதை)	ரூ 5-00
3.	சிலம்பில் சிறுபிழை	(ஆய்வுரை)	ரூ 5-00
4.	காதா சப்தசதி	(பிராகிருத மொழி இலக்கிய மொழிபெயர்ப்பு)	ரூ 20-00
5.	வான்கலந்த வாசகங்கள்	(வானொலி உரைகள்)	ரூ 4-00

தெலுங்கில்

6.	முத்யால ஸராலு	(முத்தொள்ளாயிரம் தெலுங்காக்கம்)	ரூ 4-00
7.	ஐங்குறு	(குறிஞ்சிப்பாட்டுக்கள் தெலுங்காக்கம்)	ரூ 4-00
8.	ராஜபாளையம் ராஜுகுல பட்டு காருலு		ரூ 6-00

With best Compliments from !

☎ 2171

LEO PRINTERS

Alagiah Raja Street

RAJAPALAYAM - 626 117.

Digitized by eGangotri and Sarayu Trust.

பசி நீக்கு

தமிழ்த் தொண்டன்
ப. செல்வநாயகம்
திருவள்ளுவர் மன்றம்
இராசபாளையம்

ஏழை மக்களுடைய இதயத்தைத் தொட்டுப்பார்த்து
இன்னல் களைவதற்கு இயன்றவரை செய்யவேண்டும்
இவ்வுலகில் வாழ்வ தென்றால் இதுவன்றி வேறில்லை !

தேடித் தொழில்செய்யத் தேகம் வலுவுற்று
அன்றாடம் அலைகின்ற அபலைகளைக் கண்டு
அன்னம் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் !

ஒருச்சாண் வயிற்றுக்கு ஒருநேரச் சோற்றுக்கு
ஊரெல்லாம் அலைகின்ற ஊன முடையோர்க்கு
பகலுணவைத் தானே பகிர்ந்தே அளிக்கவேண்டும் !

மாதவியாள் பெற்றமகள் மணிமே கலையம்மை
பசிக்கொடுமை தீர்ப்பதற்குப் பாரெல்லாம் பாடுபட்டாள்
பசிக்கொடுமை நீக்குதலே பாரிலுள்ளோர் கடமையாகும் !

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மணிமேகலை காட்டும் அறம்

மு. ஒ. இராசசேகரன் எம். ஏ.,
தமிழ் பேராசிரியர்
ராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்.

அறவண அடிகளார் மணிமேகலைக்கு மெய்யறத்தை மெய்யுணர்வை, மெய்யறிவை அறிவுறுத்தினார். புத்தர் திருவாய் மலர்ந்தருளிய தத்துவங்களையும் அவற்றை மேற்கொண்டொழுகுமாற்றையும் செவியறிவுறுத்தினர் பிணிமூப்பு சாக்காடென்னும் துன்பப் பிறப்பு அற்றுப் போகக்காம. வெகுளி, மயக்கங்களைக் கைவிட்டு மரணமிலா மகிழ்வுப் பெருவாழ்வு பெறும் வழிவகைகளை கூறினர். அவற்றை நன்குணர்ந்த மணிமேகலை அவ்வற நெறி நின்று பிறப்பற நோன்பு நோற்றாள். அவ்வற நெறியின் சாரம் காண்போம்.

குற்றங்கள், வினைகள் பயன்களே பிறப்பிற்கு மூலகாரணமாகும் துன்பங்கட்குக் காரணமான அவாபற்று பேதமையுடையது. இது குற்றத்தின்பாற்படும் கன்மக்கூட்டம், செய்யும் செய்கை வினையின்பாற்படும் உணர்ச்சி உடம்பு மனம் முதலிய கருவிகளும் ஊறும் நுகர்ச்சியும், வழிமுறைப் பிறப்பு, மூப்பு பிணி, சாவு எனும் வினைப்பயன்கள் பயன் என்பதன் பாற்படும் பிறப்பு நிலையில்லாதன; இன்பமில்லாதன; துன்பமுடையன என்பதை நார் உணர வேண்டும். அழியா வீட்டின்பம் பெற இப்பிறவியைப் பயன்படுத்த வேண்டும். அவரவர் செய்கின்ற நல்வினை தீவினைகைட்கேற்ப உயர்பிறப்போ, இழி பிறப்போ ஏற்படும்,

''பிறப்பெனப் படுவது அக்கருமப் பெற்றியின்
உறுப்புணர் உள்ளம் சார்பொடு கதிகளில்
காரண காரிய உருக்களில் தோன்றல்''

மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என உயிர்களின் பிறப்பு ஆறு வகைப்படுகிறது.

'' உலக மூன்றினு முயிரா முலகம்
அலகில் பல்லுயி ரறுவகைத் தாகும்
மக்களுந் தேவரும் பரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவிற் சார்தல் ''

ஞான நெறிநின்றியங்கி வீடுபெறும் தலையாய தன்மையுடையவர் மக்கள். தெய்வப்பிறப்பில் வீட்டுணர்வு சிறவாது நுகர்ச்சிச் சிறப்புண்டு. உணர்வடங்கி உருவம் சிறப்பது விலங்கினப் பிறவியில் உணர்வோ, உருவமோ சிறக்காது புணர்தலில் உள்ளம் தெரியும்.

பழவினையின் பாற்பட்ட நெஞ்சத்தோடு அவற்றின் பயனை நுகர்தற் கேற்ற உயிரானது ஆறுவகைப்பிறப்புக்களிலே அதற்கியன்ற சூழ்நிலைகளோடு காரண காரியத்தால் உடம்புகளில் பிறப்பெய்துகிறது. பிறப்புத்தானும் பழவினைக் கேற்பவும் வினைகளை முகந்து கொண்டுள்ள உள்ளத்தோடும் உயிர்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

விளைவுகளாகும். மனம்மொழி. மெய்களின் வழிதீவினைப்பயன் நிலவுகிறது. தீவினை வழியொழுகுவோர் விலங்கு, பேய், நரகப் பிறப்புற்றுத் துன்புறுவர். பிறவியை நம்புகிறவர்கள் இதைக் கொள்ளலாம். நம்பாதவர்கள் தீவினை செய்வாரின் பிற்கால, முற்கால வாழ்க்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் அல்லலுறுவதை கண்கூடாகக் காணலாம் தீவினை செய்வாரை அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்.

கொல்லாமை. கள்ளாமை, தீயநெறியில் காமுறாமை என்று உடம்பால் மூன்றும், வாய்மை, பிறரைப்புகழல், இன்சொல், பயனுடையச்சொல் எனச் சொல்லால் நான்கும் ஈதல், அன்பு, யாவரும் இன்புற எண்ணல் என உள்ளத்தால் மூன்றும் என்ற பத்தொடும் மேலும் ஒரு பத்தை நல்வினைத் தொகுதிகளாக மணிமேகலை வெளியிடுகிறது பள்ளிவலம்புரிதல், தவஞ்செய்தல் என மூன்றும், மெய்யுரை, நன்மொழிநவிலல், இன்சொல் நான்கும்; அருள்நினைவு. அவ்வாறுத்தல். தவப்பற்று என உள்ளத்தால் மூன்று எனப்பத்தையும் சேர்த்துச் செப்புகிறது மணிமேகலை. மனம்மொழி. மெய்வழிக் கொலை முதலிய பத்துவகைத் தீவினைகளை நீக்கக் கோருகிறது. கொல்லாமை முதலிய நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கக் கூறுகிறது.

நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை. நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைபிடிப்பு, நல்லுளத் தோர்தலைப்பாடு என துன்பநீக்க நெறிகளின் எட்டுவகைகளை விளக்குகிறது மேகலை.

இளமை, செல்வம், யாக்கை நிலையில்லாதன துன்பந்தருவனவாகும் ஆன்மா நிலையில்லா இவ்வுடம்பு தூய்மையில்லாததென்பதை உணரவேண்டும். பிற உடர்பைப்புணருமுன் இதனை சிந்தையில் கொள்ள வேண்டும் காமவெகுளி மயக்கம் போன்ற பற்றுக்களை விடல் வேண்டும்.

'' காமவெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய் ''

இதுவே புத்தரின் வழியுமாகும்.

திருந்திய நன்மையுடைய மெய்யுணர்வினால் சினந்தவிரும் மெய்நூல் கேட்டு, ஆய்ந்து, தெளிந்து பாவிக்க வேண்டும். மெய்யுணர்ந்து அதனை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். பேதைமையாகிய மயக்கத்தைப் போக்க வேண்டும்.

உள்ளத்தின் அறியாமை இருளினின்று நீங்கி உய்தல் வேண்டும். அறிவுச்சுடர் ஒளி பெற வேண்டும். அறவணர் அறிவுரைகளை ஐயந்திரிபறக் கற்கவேண்டும். சுழலும் பிறப்பு அற்றொழிவதாக என்று உறுதி கொண்டு தவம் மேற்கொண்டு நோன்பு நோற்றல் வேண்டும்.

'' பாங்கருஞ்சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே ''

[தொல்காப்பியனார்- காஞ்சித்திணையியல்பு]

'' தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதியார் மேற்கொள்வது ''

'' ஊனமில் தியானமே யுணர்ச்சி
யோடு பாயமும்
மானமில் லருளினைவ் வைத்தலே
வலிம்மையும்
ஞான மீரைம் பாரமீதை ''

உயிர்களிடத்தில் இரக்கங் கொண்டு தன்னலமின்றி, தன்னுயிர் தந்து மன்னுயிர் காத்து, ஈகைப்பண்புடன் இசைபட வாழ்ந்து பற்றுக்களை நீக்கி வாழ்தலே துன்பம் துடைக்கும நெறிகளில் தலைமையுடைத்தனவாகும்.

புத்தன் கூறியுள்ள வாழ்வியல் கருத்துக்களை மணிமேகலை ஆராய்ந்தாள், மெய்யுணர்வு கொண்டாள் பேதமையகற்றினாள். பிறப்பொழிய நோற்றாள், பசிப்பிணி போக்கினாள், ஈந்தாள் இசைபடவாழ்ந்தாள், உலகம் உய்ய அறவுரைகளையும், அறிவுரைகளையும் அறைந்தாள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவளாக ஆனாள் என்பதைச் சீத்தலைச். சாத்தனார் எழுதிய மணிமேகலை செவ்வனே செப்புகிறது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

சமுதாயச் சிந்தனையாளர் திரு. வி. க.

குன்றக்குடி பெரிய பெருமாள்

இருபதாம் நூற்றாண்டின் விடியவில், தமிழகத்து இலக்கிய வானில், என்றென்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சூரியனாய்த் திகழ்ந்தவர் தமிழ்த் தென்றல் திரு. வி. க.

தனியார் நிறுவனமொன்றின் கணக்கராய், பள்ளி ஆசிரியராய், தலைமைத் தமிழாசிரியராய், விடுதலை வீரராய், இதழாசிரியராய், சமரச சன்மார்க்க நெறியராய், தொழிலாளர் தலைவராய், சீர்திருத்தச்செம்மலாய், சமுதாயத் தொண்டராய், மாதரார் புகழ்ந்தேத்தும் மாமனிதராய் வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வ மனிதர் திரு. வி. கல்யாண சுந்தரனார். இயக்க ரீதியாகச் சமுதாயத்துடன் சங்கமப்பட்டு இமயமாய் உயர்ந்த பெருமகனார்! எழுபது ஆண்டுகள் வாழ்ந்த உயிர் வாழ்க்கையில், ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளைச் சமூகத்தின் உயர் வாழ்க்கைக்காக உவந்தளித்த அருள் வள்ளல்! இளமைக் காலம் முதலாகவே மனிதனை நேசிக்கவும் மனித குலத்தைப் பூசிக்கவும் இயல்புணர்வு கொண்டிருந்த திரு.வி.க. சமூகத்தின் விழிப்புணர்வைத் தூண்டும் சமுதாய சிந்தனையாளராக விளங்கினார்

அன்னிபெசண்ட் அம்மையாரின் தொடர்பும், திலகர் பெருமானின் நெருக்கமும், காந்தி அடிகளின் கருணை மொழிகளும் திரு. வி. க. வை முழுமையான தேசியவாதியாக, விடுதலை வீரராக விளங்கச் செய்தன. திலகர் பெருமானும், காந்தி அடிகளும் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த போதெல்லாம், அவர்களின் பேச்சைத் தமிழ் மொழியில் உணர்ச்சிப் பெருக்காய் மக்களுக்கு ஊட்டினார் திரு வி. க. நாட்டின் விடுதலையைக் குறிக்கோளாகக்கொண்ட காங்கிரஸ் பேரியக்கத்தில் தம்மை ஆட்படுத்திக் கொண்டு தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகிய திரு. வி. கலியாண சுந்தரனார் 1917ல் அவரது முப்பத்துநான்காம் வயதில் 'தேசபக்தன்' எனும் பத்திரிகைக்கு ஆசிரியர் ஆனார். தமிழ்மொழி அறிவும், தாய்நாட்டுப் பற்றும், உழைப்பவர் நலம் நாடும் உணர்வும், சமரச சமயநெறி ஊட்டும் உறுதியும், பெண்மையின் பெருமை உணர்த்தும் ஆர்வமும்-'தேசபக்தன்' பத்திரிகையில் தொடர்ந்து இடம் பெற்றன. மக்களுக்குத் திசைகாட்டும் திறமிக்க கருவியாகவும், திரு. வி க வின் சமுதாயச் சிந்தனைகளுக்குச் சரியான களமாகவும் 'தேசபக்தன்' விளங்கிற்று. தமிழகத்தின் வரலாற்று நாயகராக இடம் பெற்றார் திரு. வி. க!

இரண்டரை ஆண்டுகள் 'தேசபக்தன்' ஆசிரியராகப் பணியாற்றிய திரு. வி. க. 1920 இல் 'நவசக்தி' இதழை வெளியிட்டார். ஏறத்தாழ இருபது ஆண்டுகள் 'நவசக்தி'யின் ஆசிரியர் பொறுப்பு வகித்த பெருந்தகை-விடுதலை உணர்வைக் கிளர்ந்தெழச் செய்த ஊழித்தீயாகவும், சமுதாய விழிப்புணர்ச்சியை மூட்டிய காலப் புயலாகவும், நவசக்தியை வீரஞ்செறிந்த இதழாக ஒளிரச் செய்தார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இந்திய நாட்டின் குறிப்பாகத் தமிழகத்தின் இருபது ஆண்டு இணையற்ற நிகழ்ச்சிகளின் சரித்திரத் தீபமாக 'நவசக்தி' விளங்கியது! இந்த நூற்றாண்டின் முதல் பாரதியின் புகழார்ந்த நாயகர்களாய்த் திகழ்ந்த தமிழகத்தின் தலையாய தலைவர்களுள் தமிழ்த் தென்றல் திரு. வி. க. சிறப்பான இடத்தைப் பெற்ற சீரியராவார்!

நிறைமொழி மாந்தர் பலரிடம் தமிழ் மொழியை முறையாகத் தேடித் தேடிக் கற்றவர் திரு. வி கலியாண சுந்தரனார்.

எழுத்திலும் பேச்சிலும் ஈடு இணையற்ற திறம் படைத்தவர். இத்தகைய திறத்தை வர்க்கச் சார்புடைய இயக்கத்தின் வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன் படுத்தினார் திரு. வி க.

தொழிலாளர்களைப் பெரும்பான்மையாய்க் கொண்ட ஓர் அமைப்பின் அழைப்பிற்கிணங்கச் சொற்பொழி வாற்றச் சென்ற திரு. வி. க. தொழிலாளர் இயக்கங்களை உருவாக்க வேண்டுமெனும் கருத்துக் கொண்டார் 1917ல் ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் புரட்சி பற்றிய செய்தி, திரு. வி. க.வைப் பெரிதும் கவர்ந்தது. மனிதர் உழைப்பை மனிதர் பறிக்கும் மடமையை எண்ணி மனம் வருந்தினார். பொருளாதாரப் பொதுமையின் அவசியத்தையும், தொழிலாளர் ஒற்றுமையின் தேவையும் 'தேசபக்தன்' இதழில் வலியுறுத்தி வந்த திரு. வி. க தொழிற் சங்கங்களை உருவாக்கும் ஆர்வம் கொண்டார். திரு.வி க வின் ஆர்வம் இந்தியத் தொழிற்சங்க வரலாற்றைத் தொடங்கி வைக்கும் ஆரிய நிகழ்ச்சியாக உருக் கொண்டது. ஆம்! 1918 ஏப்ரல் 27 Trade Union என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிற தொழிலாளர் சங்கம் இந்திய மண்ணில் முதன் முதலாக வேரூன்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்! அன்று தான் சென்னைத் தொழிலாளர் இயக்கம் தேசச் செடியில் முதல் பூவாக அரும்பு கட்டியது! இதனைத் தொடர்ந்து தான் பம்பாய், கல்கத்தா. கான்பூர். நாகபுரி ஆகிய வடபுலங்களில் தொழிற்சங்கங்கள் தோன்றின!

மனிதரில் தாழ்ந்தவருமில்லை! தாழ்த்தப்பட்டவரும் இல்லை எனத் தமது பேச்சாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய சமரச ஞானி திரு. வி. க

சைவசமய நெறியில் பழகிப் பல நூலாராய்ச்சி செய்து தமிழகமெங்கும் நடைபெற்ற சைவசமய மாநாடுகளில் தலைமை பூண்டு அரிய கருத்துக்களை வழங்கிய திரு. வி. க., சமயத்துறையில் புரட்சிகரமான ஒரு புதிய வழித்தடத்தை உருவாக்கிய உயர் தனிச் செம்மலாவார்! சைவசமய நெறிகளைப் பயிலுகிறபோதே- சமண சமய உண்மைகளையும், பௌத்த சமயக் கோட்பாடுகளையும், கிறித்தவம் போதிக்கும் நன்மைகளையும், இஸ்லாம் எடுத்துரைக்கும் நன்மொழிகளையும் வேட்கையும் விருப்பும் கொண்டு ஆர்வத்துடன் அறிந்து தெளித்தார். எல்லாச் சமயங்களும் ஒருமையுணர்வு கொண்ட சமரச நோக்குடையவை என்பது திரு. வி. க. கண்ட சமய உண்மை! மதங்கள் அனைத்தும் மனிதனைக் தெய்வ நிலைக்கு உயர்த்த வந்தவையே! எம் மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும், உண்மையாகவே மதஒழுக்கங்களை மனமொப்ப ஏற்றவர் சமரச உணர்வு பெறுவது உறுதியென்றும் இத்தகைய சமரச உணர்வே தாம் கருதும் சன்மார்க்க நெறி என்றும் எடுத்துரைத்தார் திரு. வி. க. சன்மார்க்க நெறி - மனித குலத்திற்கு ஒழுக்கத்தையும் ஒருமையுணர்வையும் ஊட்ட வல்ல பொதுமை நெறி- திரு. வி. க கண்ட சமயப் புது நெறி!

அவர் கூறுகிறார்:

''மகர் மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும் அருகர் அஹிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை அப் பொதுமை அறம் என்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஓங்கவில்லே? சில தடைகள் மறிக்கின்றன அவைகள் எவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் முதலியன. இவைகளைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி வேற்றுமை ஒழிக்க வல்லது பொருட் பொதுமை. பொருட் பொதுமை-மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும் பிறவும் மன்பதையில் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்ததென்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது உலகில் பொருள் நிலையில் பொதுமை கண்டால் மன்பதை நிறைவெய்துமென்ற எண்ணங்கள் ஆங்காங்குள்ள சிற்சில அறிஞரிடை பிறந்தன அவ்வெண்ணங்கள் பற்பல இடங்களில் தனித் தனியே சமதர்ம இயக்கங்களாகப் பரிணமித்தன. அறிஞர் காரல் மார்க்ஸ் அவைகளை எல்லாம் திரட்டி ஒழுங்குபடுத்தி. விஞ்ஞான முறையில் அவைகட்கு ஒருநல்லுருவம் தந்தனர். அதனல் மார்க்ஸியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது''.

திரு. வி. க. வின் உள்ளத்தைக் கவர்ந்த மார்க்ஸியம் உலகில் புற அமைதியை நிலவச் செய்யுமென்றும், அக அமைதிக்கு அனைத்துச் சமய நெறிகளும் அடிப்படையாக அமையுமென்றும் தெளிவுபடுத்துகிருர் திரு. வி. க. இந்தியாவில் மார்க்ஸியம் முளைத்துக் கிளைத்து விழுதூன்ற வேண்டுமெனில் அதற்கு ஆன்மீக ஊட்டச் சத்து உரமாக அமைய வேண்டுமென்பது திரு. வி. க வின் கருத்து ஆன்மீகக் கலப்பற்ற மார்க்ஸியம் அனைத்து இந்தியப் பரப்பினும் செழுமையாகப் பயிராகி விளைச்சல்தர இயலாது வீரியமற்றுப் போகும் என்பது திரு. வி. க. வின் எழுத்து சிந்திக்கத் தூண்டும் எழுத்து ! ஏனெனில் மதத்தைப் போதைப் பொருளாகக் கண்டவர் மாமேதை மார்க்ஸ் ! அதையே பொதுமைக்குரிய ஊட்டச்சத்தாகக் கொண்டவர் மாமதனிதர் திரு வி க ! ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் முரண்! இல்லையா?

பெண்மையின் பெருமையைப்பல்லாண்டுகள் தொடர்ந்து தமது திறமிக்கப் பேச்சாலும், தெளிவுடைய எழுத்தாலும் உலகமறியச் செய்தார் திரு. வி க. 'கலியாண சுந்தர முதலியார் ஆண் உருவில் உலவும் பெண்ணுவர்' எனச் சிலர் பேசவும் செய்தனர்! 'ஆணெனும் அரக்கனுக வாழ்வதினும் பெண்ணெனும் தெய்வமாக வாழ்வதில் எனக்கு விருப்புண்டு' என நவசக்தியில் திரு. வி. க. தெளிவாகக் குறிப்பிட்டெழுதினுர். 'பெண்ணின் பெருமை' எனும் அவரது நூலை வெளியிட்ட போது அந்நூலுக்குச் சில பகுதிகளில் எதிர்ப்புகள் எழுந்ததை தமது சுய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தைப் பிறப்பித்து உருவாக்கும் பெண்மைக்குச் சமுதாயத்தின் சகல துறைகளிலும் முதலிடம் கொடுக்க வேண்டுமென அறக்குரல் கொடுத்த அறிஞர் திரு. வி. க. பெண்மையைப் பீடித்திருந்த பெருவாரியான நோய்களை ஒழித்துக் கட்டும் உயர் தனி மருத்துவராக விளங்கினுர் !

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும் இந்திய மண்ணில் தொழிற்சங்கம் தொடங்கிய பிதாமகராகவும் சாதி வேறுபாட்டைச் சாடிய தீரராகவும் சமயத்துறையில் சமரச சன்மார்க்க நெறியாளராகவும் பெண்மைக்குப் பெருமை சேர்த்த பேராண்மைப் பேராளராகவும் தமிழக வரலாற்றில் என்றென்றும் நின்று நிலவும் தமிழ்த் தென்றல் திரு. வி. க. சமுதாய மேன்மைக்குத் தமது சிந்தையைக் களமாக்கிச் செயற்கரிய செய்த செந்தமிழ்ச் செம்மலாவார்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மன்றமும் மக்களும்

தா. அ. ஈஸ்வர ராஜா

மக்கள் சமுதாயம் மனநிலையில் செம்மைப்பட்டியங்குவதற்கு இலக்கியம் பாடுபடுகிறது. இலக்கியம் ஒன்றுதான் மனிதனுக்கு மகிழ்ச்சியும் தந்து வழிகாட்டுகின்ற ஒளிவிளக்காகத் திகழ்கின்றது. ஒரு மனிதனுக்கு நேரடியாக அவனுடைய குற்றங்குறைகளை எடுத்துச் சொன்னுல் அவனுக்கு கோபம் வரும் அகங்காரத்தினுல் எதிர் விளைவுகளே ஏற்படும். எதிர்பார்த்த பலன் கிடைக்காது ஆனுல் அதே மனிதனைத் திருத்த இலக்கியத்தின் மூலமாக' அது கவிதையோ, காவியமோ, கதையோ நாடகமோ எதுவானுலும் எளிதில் நெஞ்சில் பதிந்து நல்வழி காட்டும் அதனுல்தான் இலக்கியங்கள் உயர்ந்த மதிப்பை பெறுகிறது.

இலக்கியங்களை நாம் எல்லோரும் கற்று உணர்ந்து சுவைத்து மகிழ்ச்சியடைய முடியாது. முதலில் இலக்கியம் தோன்றிய காலத்து மொழியே பெரும்பாலும் தடையாக விடுகிறது. மேலும் செய்யுள் அமைப்பு முறைகளும், இலக்கண விதிகளும் நமக்குப் புரியாது போகலாம் ஆகையால் இலக்கியங்களை சாதாரண மக்கள் அறிந்து இன்புறுவதற்கு கற்ற நல்லறிஞர்களுடைய சொற்பொழிவுகள் மிகுந்த பயனைத் தருகின்றன.

எத்தனையோ நூல்களையும் இலக்கியங்களையும் கற்ற பெரியவர்கள் தமது அனுபவத்தால் பெற்ற அறிவோடு கலந்து சாரமானதும் ரசனை மிக்கதுமான செய்திகளையும், கருத்துக்களையும் சொற்பொழிவுகள் மூலமும் பட்டிமன்றங்கள், வழக்காடுமன்றங்கள் மூலமும் தருகின்றனர். பொழுது போக்காக மட்டுமல்லாமல் நல்லறிவு தருவதான பட்டிமன்றம், சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றது. வழக்காடு மன்றங்கள், விறுவிறுப்பும் தர்க்கத் திறமையும் ஆர்வமும் ஊட்டி செவிக்கு விருந்தாகிறது. இத்தகைய சிந்தனைக்கு விருந்தளிக்கும் சொற்பொழிவுகளும் பட்டிமன்றம், கவியரங்கு, வழக்காடு மன்றம் முதலியனவும் மக்கள் சுவைத்து மகிழ்வதற்கு வாய்ப்பைத் தருபவை இலக்கிய மன்றங்களாகும்.

மக்கட்கும், அறிஞர்கட்கும் இடையே கூட்டுவிக்கும் பாலமாக அமைந்த மன்றங்கள் இருப்பது நாகரிகச் சின்னங்களாக கருதப்படுகிறது. அவை அறிவுக் கோயிலாகக் கருதத்தக்கன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

முற்காலத்தில் மன்னர்களும் குறுநில மன்னர்களும் இலக்கியத்தை ஆதரித்து வளர்த்து வந்தனர். எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகிய இந்த யுகத்தில் இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரியும் மன்றங்கள் மூலமாக பொதுமக்களே ஆதரவு தர வேண்டியுள்ளது.

பொதுமக்கள் தாமே முன்வந்து, தமது பெற்றோர், உற்றோர் பெயரில் நினைவுக் கட்டளைகளாக நிகழ்ச்சிக்கு ஆகும் பொருள் உதவி செய்து நிகழ்ச்சிகள் நடத்துவிக்கலாம். தம்மாலான உதவிகள் செய்யலாம். இலக்கிய நிகழ்ச்சிகட்கு வருகைதந்து சிறப்பிக்கலாம்.

மன்றங்கள் மக்கள் நலனைக் கருதி அமைந்துள்ளன. மக்களாகிய நமக்கு அதன் வளர்ச்சியில் பொறுப்புண்டு. சிறந்த கலைஞானமும், தத்துவ இலக்கியச் சிந்தனைகளையும் பெறுவதற்கும், உயர்ந்த படைப்புகள் உருவாகுவதற்கும் காரணமாக உள்ள இலக்கிய மன்றங்களை அரசும், பொதுமக்களும் பாதுகாத்து பொருளுதவி வளர்ச்சிபெறச் செய்வது கடனாகும்.

மன்பே ருலகத்து வாழ்வோர்க்கு இங்கிவை
துன்பந் தருவன துறத்தல் வேண்டும்!
கற்ற கல்வி யன்றால் காரிகை
செற்றஞ் செறுந்தோர் முற்ற உணர்ந்தோர்!
மல்லல்மா ஞாலத்து வாழ்வோ ரென்போர்
அல்லன் மாக்கட்கு இல்லது நிரப்புநர்!
திருந்தேர் எல்வனை! செல்லுல கறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்!
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பொழி யாரே!

— மணிமேகலை

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

மன்றம் வாழ்க

பி. கே. ராமசாமி ராஜா
சேர்மன் ; ஸ்ரீ ராம் குருப் இண்டஸ்ட்ரீஸ்
இராஜபாளையம்.

மனிதர்கள் நன்கு இன்புடன் வாழ வேண்டுமானல் உடல்நலம் போலவே உள்ள நலமும் தேவைப்படுகிறது. உள்ளம் நலமாக இருப்பதற்கு நல்ல சிந்தனைகள் தேவைப் படுகிறது. நற்சிந்தனைகளை வளர்ப்பது சிறந்த இலக்கிய மன்றங்களாகும்.

இராஜபாளையத்தில் புகழ்மிகு பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் காந்திகலை மன்றத்தை நிறுவினர்கள். அவர் முன்னுள் சென்னை மாநில முதலமைச்ச ராகவும், ஒரிசா மாநில ஆளுநராகவும் இருந்து நாட்டுக்கு நன்மை செய்த தியாகச் செம்மல் ஆவார்.

அவர் நினைத்திருந்தால் ஒரு மருத்துவ மனையோ, கல்லூரியோ, தொழிற்கூடமோ எளிதில் கட்டி முடிக்க முடியும். ஆனுல் அதை விடுத்து ஏன் கலைமன்றம் நிறுவினர்கள் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிறவற்றை யாராயினும் பின் வந்து செய்வார்கள். ஆனுல் பண்பாட்டை வளர்க்கும் மன்றங்களை எல்லோரும் உணர்ந்து உருவாக்க முடியாது என்ற எண்ணத்தில்தான் தாமே கலைமன்றம் உருவாக்கினர்கள்.

நாட்டுமக்கள் பொருளாதாரத்தில் மட்டும் போதாது. பண்பாட்டிலும், கலை ஞானத்திலும் சிறப்புடன் திகழ்ந்து மன நிறைவுடனும், மனமகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என்று நினைத்தே காந்திகலை மன்றம் உருவாக்கினர்கள். இது அவரது தீர்க்க தரிசனத்தை எடுத்துக் காட்டுகிறது.

புகழ்மிகு குமாரசாமி ராஜாவின் லட்சிய நோக்கை முன்னிறுத்தி, காந்திகலை மன்றத்தின் நிழலில் உருவானதே மணி மேகலை மன்றம் ஆகும்.

தமிழ்நாட்டில் மணிமேகலையின் பெயரில் இயங்கும் தனிச்சிறப்புடைய ஒரே மன்றம் இது. சிந்தனைத்திறம் மிக்க எழுத் தாளர்கள் பலர் இருந்து இதயசுத்தியுடன் தொண்டுள்ளத்தோடு இயக்கி வருவதும் இதன் சிறப்பாகும்.

உலகக் கண்ணேட்டமும், பரந்த மனப்பான்மையும், மானிடநேய முன்னேற் றக் கருத்துக்களும் கொண்டதாக இம்மன்றம் அமைந்திருப்பதும் தேசீய ஒருமைப்பாட்டு நோக்கோடு இயங்குவதும் இதன் மற்றொரு சிறப்பாகும்.

சிறப்புமிக்க இம்மன்றம் மேன்மேலும் வளர்ந்து இலக்கியத் தொண்டாற்றி தமிழ் நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்துவதோடு நாம் அனைவரும் ஆதரவளிப்பது நம் கடனுகும் என்று கூற விரும்புகிறேன்.

வாழ்க மணிமேகலை மன்றம் !

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

அறவண அடிகளின் ஞானதீபம்

வித்துவான் : ந. கி. நாராயண ராஜா M. A. B. Ed.,
இராஜபாளையம்.

'' மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு
எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ''
11 - 95 96

'' எவ்வுயிர்க்கு ஆயினும் இரங்கல்வேண்டும் ''
23 - 79

'' பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம் ''
2 - 64, 65

மணிமேகலைத் துறவு என்னும் காப்பியம் மணிமேகலையின் வாழ்க்கையைச் சித்தரிக்கின்றது மணிமேகலையை மையமாக வைத்துக்கொண்டு சித்தலைச் சாத்தனர் பௌத்த தருமங்களை அழகு தோன்றக் கூறிச் செல்கிருர் ஆங்காங்கே பிற சமயங்களை மறுத்தும் அதற்குரிய ஆதாரங்களையும் கூறுகிருர் புத்த தேவனுடைய பெரிய கண்டுபிடிப்பு, 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்ற அடிப்படை உண்மையைச் சாத்தனர் காப்பியத்தினிடையே தொகுத்தும் வகுத்தும் விரித்தும் விளக்குகிருர் காப்பியத்தின் இறுதிக் காதையாகிய '' பவத்திறம் அறுகென பாவை நோற்ற காதை '' யில் பௌத்த தத்துவங்களின் தொகுதியை ஒருங்கே ஒட்டு மொத்தமாக விவரிக்கின்ருர் சாத்தனரின் முடிந்த நோக்கமே முப்பதாவது காதை தான்.

பௌத்த தருமங்களைக் கூறித் தத்துவங்களை விளக்குவதற்கு மாதவியின் மகளாம் மணிமேகலையை ஒரு கருவியாக வைத்துக்கொண்டார். இறுதிக் காதையாகிய முப்பதாவது காதையில் தான் ஏனைய காதைகளில் கூறி விளக்கிய தத்துவங்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாகத் தொகுத்துத் தந்திருக்கிருர். பல படியாக விளக்கியும் இயம்பியும் உள்ளார். ஈண்டு வருகின்ற தத்துவ வார்த்தைகள் பன்முறை படித்தும், அறிந்தும் உணர்ந்தும், தெளிந்தும் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்

தத்துவங்களைக் கூறுவதும், அதனைக் கேட்டலும். பின் தெளிதலும் சிறிது கடினம் தான் என்ருலும், சில கடினமான தத்துவங்களை உணர்த்தும் சொற்களை மீண்டும் மீண்டும் பயின்று மனத்தில் இருத்திக் கொள்ளுதல் இன்பம் பயப்பனவாகும். சாத்தனரின் நோக்கம் '' உயிர்கள் (மக்கள்) துக்கத்திலிருந்து விடுபடுவதேயாகும். ''

துக்கம் நீங்கி இன்பம் எய்த முயற்சியும் பயிற்சியும் இன்றியமையாததாகும்.

சாத்தனர் தாம் கூறவந்த தத்துவப் பொருள்கள் பன்னிரண்டாகும். அப்பன்னிரண்டு தத்துவங்களும் தொகை, வகை விரிகளையுடையனவாகத் திகழ்கிறது.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

பன்னிரு தானங்கள்

1) மும்மணிகள்
2) ஈராறு பொருள்கள்
3) கண்டம் நான்கு
4) சந்தி மூன்று
5) தோற்றம் மூன்று
6) காலம் மூன்று
7) வாய்மை நான்கு
8) கந்தம் ஐந்து
9) வழக்கு ஆறு
10) நயங்கள் நான்கு
11) வினாவிடை நான்கு
12) இயல்பு பன்னிரண்டு (பன்னிரு நிதானங்கள்) (நிதானம்-ஆதிகாரணம்)

ஈண்டு கூறப்பட்ட பன்னிரண்டு பொருள்களையும் சுருக்கமாகவும், விளங்கும் வகையிலும் காணலாம்.

மேற்கூறிய பன்னிரண்டு தத்துவங்களும் சங்கிலித் தொடர் போலப் பிணைப்புடையது. அது மட்டுமில்லாமல், வட்ட வடிவமாக அமைந்துள்ளது. அடிப்படையான ஒரு தத்துவம் ஏனைய தத்துவங்களைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து இயங்கும் தன்மையுடையது. இவ்வட்ட வடிவமான வலையம் போன்ற உண்மைகளுள் ஒன்று ஒருவனைப் பற்றிக் கொண்டால் ஏனையவையும் அவனைப் பற்றிக் கொள்ளும். அதனால் அவனைத் துன்பம் சூழ்ந்து கொள்ளும். அத்துன்பத்தினின்றும் மீட்சி பெற வேண்டுமானால், முதலாம் தத்துவத்திலிருந்து ஒவ்வொன்றாக விடுபட்டு வந்தால் தான் அவன் துக்கத்திலிருந்து விடுபடுவான் என்ற பேருண்மையாகிய துக்க நீக்க வழியினையும் நமக்குச் சாத்தனார் தெளிவு படுத்துகின்றார்.

இனி பன்னிரு நிதானங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் காணலாம்.

தானமும் - சீலமும்

தானம் :

மணிமேகலை அமுத சுரபியினாலே தானங்களிற் சிறந்த உணவுத் தானத்தை (அன்னதானம்) மேற்கொண்டமையால் அவள் தானம் தாங்கியவள் ஆகின்றாள்.

சீலம் 3 :

தச சீலத்தை மேற்கொண்டவள் ஆகையால் சீலம் தலை நின்றாள் எனப் போற்றப்படுகிறாள்.

1 பஞ்ச சீலம் ;

1. கொல்லாமை
2. பொய் சொல்லாமை
3. களவின்மை
4. காமமின்மை
5. இரவாமை

2 தச சீலம் :

மேற்கூறிய ஐந்துடன்

6. உயர்ந்த ஆசனத்திருத்தல், கிடத்தலின்மை
7. சந்தனம் மாலை முதலியன தரியாமை
8. பொன் - வெள்ளிகளைத் தீண்டாமை
9. பாடல், ஆடல் விரும்பாமை
10. உதயத்திற்கு முன் உண்ணாமை

3 அஷ்டாங்க சீலம் :

1 கொல்லாமை
2 திருடாமை
3 வியபசரியாமை
4 பொய் கூறாமை
5 கள்ளுண்ணாமை

இவ்வைந்தும் இல்லறத்தார் அனைவருக்கும் உரியனவாகும்.

6 இரவில் தூய்மையில்லாத உணவைப் புசியாமை
7 சந்தனம் முதலிய மணமுள்ள பொருள்களை உபயோகியாமை
8 தரையில் பாய்மேல் படுத்தல்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இவை மூன்றும் சேர அஷ்டாங்க சீலம் எனப்படும். இவ்வெட்டு ஒழுக்கங்களும் இல்லறத்தாரில் நிஷ்டாபரர்களுக்கே உரியனவாகும்.

ஈராறு பொருள்கள்

1. மும்மணிகள் :

1 புத்தம் சரணம் கச்சாமி
2 தர்மம் சரணம் கச்சாமி
3 சங்கம் சரணம் கச்சாமி

இவற்றை மும்முறை ஜபித்து மூன்று முறை பணிதல். மும்மையின் வணங்கல் என்பது. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களால் வழிபடுதல்.

அல்லது

புத்த தேவரது உபதேசங்களாகிய திரிபிடகம் என்றும் கூறுவர்.

1 அபி தரும பிடகம்
2 சூத்திர பிடகம்
3 வினய பிடகம்

2 வட்ட வடிவினதாகிய ஈராறு பொருள்கள்:

1 பேதைமை 2 செய்கை
3 உணர்வு 4 அருவுரு
5 வாயில் 6 ஊறு 7 நுகர்வு
8 வேட்கை 9 பற்று 10 பவம்
11 தோற்றம் 12 வினைப்பயன்

இப் பன்னிரு நிதானங்களையும் (நிதானம் - காரணம்). மக்களாகப் பிறந்தவர் அறிந்தால் பெரும்பேறு அறிகுவர், அறியார் எனில் ஆழ்நரகு அறிகுவர். 30-49. 50

2. ஈராறு பொருள்கள் 3. கண்டங்கள் மூன்று 4 சந்திகள் மூன்று 5 காலம் மூன்று

மேற்கூறப்பட்ட நான்கு தொகுதியாகிய தத்துவங்களை மண்டில (வட்டம்) வகையால் அறியக் காட்டியுள்ளார். கீழ் காணும் வட்ட வடிவமான படத்தில் விளக்கியுள்ள தத்துவங்களை மீண்டும் தனித் தனியாக விளக்கியும், விரித்தும் கூறப்படும்.



CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இவ் ஈராறு தத்துவங்களையும் வட்டமான சக்கர சித்திரத்தில் அடக்கி விளக்கிக் காட்டுவர். அதன் விளக்கம் காண்க.

1 பேதைமை :

காட்சியாலும், கருத்தளவையாலும் அறியப்படும் பொருளால், கண்டறிந்த மெய்ப்பொருளை மறந்துவிட்டு முயற்கோடு என்பது உள்பொருளேயாகும் என்று பிறர் சொல்லக் கேட்டதனுல் அதனுண்மையை ஆராய்ந்து உணராது அங்ஙனமே உண்டென மேற்கொள்ளுதலாகும்.

2 செய்கை :

நற்செய்கை, தீச்செய்கை (நல்வினை தீவினை) எனும் இருவகைச் செயல்களால், உயிர்கள் அறுவகைப் பிறப்புக்களுள் ஒன்றன் கருவிற் சென்று அவ்வகையாகவே பிறவியும் எடுக்கும் பின் அவற்றின் செய்வினைப் பயன்கள் வந்து விளைகின்ற காலத்தில் அவ்வுயிர்கட்கு அதுமனத்திங்கண் பேரின்பத்தையும். பெருங்கவலையும் வினைகளுக்கு ஏற்றவாறு காட்டுவதாக அமையும்.

(நல்வினையால் வரும் பிறப்புக்கள் :-
தேவர், மக்கள், பிரபர்,

தீவினையால் வரும் பிறப்புக்கள் :-
விலங்கு, பேய் நரகர் இவ்வாறு வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் அறுவகை பிறப்புக்கள் வந்து சேரும்)

(அ) தீவினை : செய்கை (உ) (தீவினை நல்வினை) 10

1. உடலால் வரும் தீவினைகள் : 3
   கொலை-களவு காமமாகிய தீயஇச்சை

2. சொல்லால் வரும் தீவினைகள் : 4
   பொய், கோள்சொல்லுதல் கடுஞ்சொல், பயனில்சொல்

3 உள்ளத்தால் வரும் தீவினைகள் : 3
   பிறர்பொருளை வெளவக்கருதல், வெகுளுதல் குற்றம் பட உணர்தல்.

ஆ) நல்வினை 10

மேற்கூறிய பத்துக்குற்றங்களின்றும் நீங்கி, சீலத்தை மேற்கொண்டு, தானங்களில் தலைநிற்றல் அத்தகையோர் மேலான வினைப் பயன் உணர்வர்,

1 உடலால் வரும் நல்வினைகள் 3

பள்ளிவலம்புரிதல், தவஞ்செய்தல், தானம் செய்தல்.

2 சொல்லால் வரும் நல்வினைகள் 4

மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படு சொற்கூறல்

3: மனத்தால் வரும் நல்வினைகள் 3

அருள் நினைவு. ஆசையறுத்தல் தவப்பற்று.

3 உணர்வு :

(உணர்வு. உள்ளம், விஞ்ஞானம் ஒருபொருட் சொற்கள். இது பஞ்சஸ்கந்தங்களுள் ஒன்ருகவும் கூறப்படும். இதுவே கருமத்தொகுதியோடு கூடிய வியவகார தசையில் உயிரென வழங்கப்படும். முடிவில் ஆன்மாவென்று ஒன்று இல்லையென்பது பௌத்தர்கொள்கை)

உணர்வு எனப்படுவது கண்ணுறங்குபவரின் உணர்வினைப் போல. விளக்கம் ஏதும் இல்லாமல் செய்தொழில் என்பது யாதுமின்றி உளதென்னும் அளவான்மட்டுமே விளங்குவதாகும்

4 அருவுரு :

மேற்கூரிய உணர்வோடு கூடிய உயிரும் உடம்பும் ஆகும். அருவாகிய உயிரும், உருவாகிய உடலும் ஒருசேரக் கூடுவதால் அருவுரு என்றனர்.

5. வாயில் :

மெய் வாய், கண். மூக்கு, செவி ஆகிய

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஐந்து அறிகருவிகள் (ஐம்பொறிகள்) மனமுடன் கூடிய ஆறுவகை வாயில்களும் உள்ளத்தின் பொருளுணர்ச்சி தோன்றி. அவை பொருந்துவதற்கு உரிய இடங்களாகும்.

6. ஊறு

ஸ்பரிசநிதானம் ஆவது. உள்ளமும் ஆறுவகைவாயிலும் தம்மின் வேருகிய விஷயங்களைப் பொருந்துதல்.

7. நுகர்வு :

புலன்களை உணர்ந்து அவற்றின்பயனை அனுபவித்தல்.

8. வேட்கை :

பயனை நுகருமிடத்து அந்நுகர்ச்சிமேல் கொள்ளும் ஆசை அடங்காது எழுந்து கொண்டிருக்கும் நிலைமையே வேட்கையாகும்.

9. பற்று :

அடங்காது எழுகின்ற ஆசையினுலே. அதனையே பற்றிநிற்கின்ற ஒருதன்மை.

10 பவம் :

கருமங்களின் தொகுதி அதுதன்பயனை விளைவித்துக் கொடுக்கும் முறைமை இதுவெனக்கருதி அதற்கு உடன்பட்டு சார்ந்து நிற்கும்.

11. தோற்றம் :

கருமங்களின் தன்மைக்கேற்ப, ஏனையவற்றேடு மிகவும் சார்ந்திருக்கும் உள்ளமானது சாரோடு ஏற்றகதிகளில் காரண காரியமாய்ப் பொருந்தும் உடம்புகளிடத்தே சென்று தோன்றுவது.

12 வினைப்பயன் : பிணி, மூப்பு, சாக்காடு

பிணி :

பேதைமை முதலாகக் கூறப்பட்டவற்றினின்றும் வேறுபட்ட சார்பினை உடையதாய் உடலின் இயற்கைத் தன்மையினின்றும் வேறுபட்டு உடலுக்குத் துன்பத்தை உண்டு பண்ணும்.

மூப்பு :

சாகும் இறுதிவரையும் உடலை வந்து மோதுகின்ற நிலைமையாகிற தன்மையினுலே. உடல் தளர்ச்சி அடைதல்.

சாக்காடு :

அருவாகவும். உருவாகவும் ஆகிய தன்மையினையுடைய உடலினது, மேற்றிசைக்கண் மறைகின்ற ஞாயிற்றைப் போலச் சென்று மறைந்து போதல்.

துன்பத்தொடர்ச்சியும் துன்பமீட்சியும்

ஒருவனது வாழ்க்கையில், துன்பம் அழுகை கையாறு (செயலறுதி) இவைகளுக்கு ஆதிகாரணமாக இருப்பது மேற்குறிப்பிட்ட வட்டவடிவமாக உள்ள படத்தில் காட்டியபடி பேதைமை தொடங்கி வலமாக ஒவ்வொன்றின் சார்பாக வினைப்பயன் இறுதியாகப் பன்னிரண்டும் ஒருவனுக்குச் சங்கிலித் தொடர் போல வந்து எல்லையற்ற துன்பங்கள் பிறவிகளைச் சூழ்ந்து கொண்டேயிருக்கும். இத்துன்பத் தொடர்புகள் நீங்கவேண்டுமானுல், பேதைமை முதலாக ஒவ்வொன்றையும் இடமாகவிட்டு நீக்கிக்கொண்டு வந்தால் துன்பமீட்சி ஏற்பட்டு துன்பம் நீங்கியபின் பிறவும் நீங்கும்.

3. கண்டங்கள் நான்கு :

(பன்னிரு தானங்களின் பகுப்பு)

அ) முதற்கண்டம் : 2

பேதைமையும். செய்கையும் இரண்டும் ஆதிக்கண்டம்

ஆ) இரண்டாம் கண்டம் : 5

உணர்ச்சி. அருவுரு. வாயில், ஊறு, நுகர்ச்சி. ஆகிய நிதானங்கள் ஐந்தும் முதற் கண்டத்துள்ளவற்றின் இயல்பினுலே வந்தன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இவ் ஈராறு தத்துவங்களையும் வட்டமான சக்கர சித்திரத்தில் அடக்கி விளக்கிக் காட்டுவர். அதன் விளக்கம் காண்க.

1 பேதைமை :

காட்சியாலும், கருத்தளவையாலும் அறியப்படும் பொருளால், கண்டறிந்த மெய்ப்பொருளை மறந்துவிட்டு முயற்கோடு என்பது உள்பொருளேயாகும் என்று பிறர் சொல்லக் கேட்டதனல் அதனுண்மையை ஆராய்ந்து உணராது அங்ஙனமே உண்டெனமேற்கொள்ளுதலாகும்.

2 செய்கை :

நற்செய்கை, தீச்செய்கை (நல்வினை தீவினை) எனும் இருவகைச் செயல்களால், உயிர்கள் அறுவகைப் பிறப்புக்களுள் ஒன்றன் கருவிற் சென்று அவ்வகையாகவே பிறவியும் எடுக்கும் பின் அவற்றின் செய்வினைப் பயன்கள் வந்து விளைகின்ற காலத்தில் அவ்வுயிர்கட்கு அதுமனத்தின்கண் பேரின்பத்தையும். பெருங்கவலையும் வினைகளுக்கு ஏற்றவாறு காட்டுவதாக அமையும்.

(நல்வினையால் வரும் பிறப்புக்கள் :-
தேவர், மக்கள், பிரமர்,

தீவினையால் வரும் பிறப்புக்கள் :-
விலங்கு, பேய் நரகர் இவ்வாறு வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் அறுவகை பிறப்புக்கள் வந்து சேரும்)

(அ) தீவினை : செய்கை (உ) (தீவினை நல்வினை) 10

1. உடலால் வரும் தீவினைகள் : 3
கொலை-களவு காமமாகிய தீயஇச்சை

2. சொல்லால் வரும் தீவினைகள் : 4
பொய், கோள்சொல்லுதல் கடுஞ்சொல், பயனில்சொல்

3 உள்ளத்தால் வரும் தீவினைகள் : 3
பிறர்பொருளை வெளவக்கருதல், வெகுளுதல் குற்றம் பட உணர்தல்.

ஆ) நல்வினை 10

மேற்கூறிய பத்துக்குற்றங்களின்றும் நீங்கி, சீலத்தை மேற்கொண்டு, தானங்களில் தலைநிற்றல் அத்தகையோர் மேலான வினைப் பயன் உணர்வர்,

1 உடலால் வரும் நல்வினைகள் 3
பள்ளிவலம்புரிதல், தவஞ்செய்தல், தானம் செய்தல்.

2 சொல்லால் வரும் நல்வினைகள் 4
மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படு சொற்கூறல்

3: மனத்தால் வரும் நல்வினைகள் 3
அருள் நினைவு, ஆசையறுத்தல் தவப்பற்று.

3 உணர்வு :

(உணர்வு, உள்ளம், விஞ்ஞானம் ஒருபொருட் சொற்கள். இது பஞ்சஸ்கந்தங்களுள் ஒன்ருகவும் கூறப்படும். இதுவே கருமத்தொகுதியோடு கூடிய வியவகார தசையில் உயிரென வழங்கப்படும். முடிவில் ஆன்மாவென்று ஒன்று இல்லையென்பது பௌத்தர்கொள்கை)

உணர்வு எனப்படுவது கண்ணுறங்குபவரின் உணர்வினைப் போல, விளக்கம் ஏதும் இல்லாமல் செய்தொழில் என்பது யாதுமின்றி உளதென்னும் அளவான்மட்டுமே விளங்குவதாகும்

4 அருவுரு :

மேற்கூரிய உணர்வோடு கூடிய உயிரும் உடம்பும் ஆகும். அருவாகிய உயிரும், உருவாகிய உடலும் ஒருசேரக் கூடுவதால் அருவுரு என்றனர்.

5. வாயில் :

மெய் வாய், கண், மூக்கு, செவி ஆகிய

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

ஐந்து அறிகருவிகள் (ஐம்பொறிகள்) மனமுடன் கூடிய ஆறு வகை வாயில்களும் உள்ளத்தின் பொருளுணர்ச்சி தோன்றி, அவை பொருந்துவதற்கு உரிய இடங்களாகும்.

6. ஊறு

ஸ்பரிசநிதானம் ஆவது, உள்ளமும் ஆறுவகைவாயிலும் தம்மின் வேருகிய விஷயங்களைப் பொருந்துதல்.

7. நுகர்வு :

புலன்களை உணர்ந்து அவற்றின்பயனை அனுபவித்தல்.

8. வேட்கை :

பயனை நுகருமிடத்து அந்நுகர்ச்சி மேல் கொள்ளும் ஆசை அடங்காது எழுந்து கொண்டிருக்கும் நிலைமையே வேட்கையாகும்.

9. பற்று :

அடங்காது எழுகின்ற ஆசையினலே, அதனையே பற்றிநிற்கின்ற ஒருதன்மை.

10 பவம் :

கருமங்களின் தொகுதி அதுதன் பயனை விளைவித்துக் கொடுக்கும் முறைமை இது வெனக்கருதி அதற்கு உடன்பட்டு சார்ந்து நிற்கும்.

11. தோற்றம் :

கருமங்களின் தன்மைக்கேற்ப, ஏனையவற்ருேடு மிகவும் சார்ந்திருக்கும் உள்ளமானது சார்போடு ஏற்றகதிகளில் காரண காரியமாய்ப் பொருந்தும் உடம்புகளிடத்தே சென்று தோன்றுவது.

12 வினைப்பயன் : பிணி, மூப்பு, சாக்காடு

பிணி :

பேதைமை முதலாகக் கூறப்பட்டவற்றினின்றும் வேறுபட்ட சார்பினை உடையதாய் உடலின் இயற்கைத் தன்மையினின்றும் வேறுபட்டு உடலுக்குத் துன்பத்தை உண்டு பண்ணும்.

மூப்பு :

சாகும் இறுதிவரையும் உடலை வந்து மோதுகின்ற நிலைமையாகிற தன்மையினுடே, உடல் தளர்ச்சி அடைதல்.

சாக்காடு :

அருவாகவும், உருவாகவும் ஆகிய தன்மையினையுடைய உடலானது, மேற்றிசைக்கண் மறைகின்ற ஞாயிற்றைப் போலச் சென்று மறைந்து போதல்.

துன்பத்தொடர்ச்சியும் துன்பமீட்சியும்

ஒருவனது வாழ்க்கையில், துன்பம், அழுகை கையாறு (செயலறுதி) இவைகளுக்கு ஆதிகாரணமாக இருப்பது மேற்குறிப்பிட்ட வட்டவடிவமாக உள்ள படத்தில் காட்டியபடி பேதைமை தொடங்கி வலமாக ஒவ்வொன்றின் சார்பாக வினைப்பயன் இறுதியாகப் பன்னிரண்டும் ஒருவனுக்குச் சங்கிலித் தொடர் போல வந்து எல்லையற்ற துன்பங்கள் பிறவிகளைச் சூழ்ந்து கொண்டேயிருக்கும். இத்துன்பத் தொடர்புகள் நீங்கவேண்டுமானுல், பேதைமை முதலாக ஒவ்வொன்றையும் இடமாகவிட்டு நீக்கிக்கொண்டு வந்தால் துன்பமீட்சி ஏற்பட்டு துன்பம் நீங்கியபின் பிறவும் நீங்கும்.

3. கண்டங்கள் நான்கு :

(பன்னிரு தானங்களின் பகுப்பு)

அ) முதற்கண்டம் : 2

பேதைமையும், செய்கையும் இரண்டும் ஆதிக்கண்டம்

ஆ) இரண்டாம் கண்டம் : 5

உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, ஆகிய நிதானங்கள் ஐந்தும் முதற் கண்டத்துள்ளவற்றின் இயல்பினுலே வந்தன.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

இ) மூன்ரும் கண்டம் : 3

வேட்கை, பற்று, கருமத்தொகுதி (பவம்) எனப்பகுத்துச் சொல்லப்படும் மூன்றும் முறையே நுகர்ச்சி நிகழ்வினுள்ளே தோன்றும் குற்றமும் வினையும் ஆதலினுலே இவை மூன்ரும் கண்டம் ஆகும்.

ஈ) நான்காம் கண்டம் : 2

தோற்றம் (பிறப்பு) வினைப்பயன், (பிணி, மூப்பு, சாக்காடு) எனச்சொல்லும் இவையெல்லாம் பிறந்த உடம்பினிடத்தே அடையவரும் பயன் ஆதலினுலே, இவற்றை, நான்காம் கண்டம் என்பர்.

4. சந்திமூன்று

(நிதானங்கள் சந்திக்கும் இடங்கள்)

முதற்சந்தி :

பிறப்புக்குக் காரணமாகிய செய்கையும் உணவும் பொருந்துவது.

இரண்டாம் சந்தி :

நுகர்ச்சியாகிய ஒழுக்கமும் வேட்கையும் கூடும்சந்தி பழுதின்றி அறியவேண்டியது

மூன்ரும் சந்தி :

(பவம்) கருமத்தொகுதியோடு மேல் வரும் பிறப்புப் (தோற்றம்) பொருந்திச் செல்வதாகிய சந்தி மூன்ருவது சந்தியாகும்.

5. தோற்றம் மூன்று

மூன்று வகையான பிறப்புக்களைப் பற்றிக் கூறும்போது தூய்மை பொருந்திய விசுத்தி மார்க்கத்து முடிவாகிய சமாதி ஞானமே வீடுபேறு எனத்துணிந்து அதுவேயாகத் தோன்றியிருத்தலும்,

உணர்வு உள்ளேயடங்க உருக்கொண்டு தோன்றியிருத்தலும்,

உணர்வும், உருவும் உடன்நிகழுமாறு தோன்றிச் சேர்ந்திருக்கும் மக்கள், தெய்வம், முதலியவற்ருல் தோன்றியிருத்தல்.

(மூவகைப் பிறப்புக்களையும் அருபதாது, ரூபதாது, காமதாது என்பர் இவை மூன்றும் வரிசையாக அமையும்)

6. காலம் மூன்று

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்,

இறந்தகாலம் 2 பேதைமை, செய்கை.

நிகழ்காலம் 9 உணர்வு அருவுரு வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை பற்று, பவம், தோற்றம்.

எதிர்காலம் 1

(வினைப்பயன்) இவை எட்டுவகையாம். பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு அவலம் அரற்று, கவலை, கையாறு (மூர்ச்சித்தல்) (பன்னிருநிதானங்கள், நான்கு கண்டம், மூன்றுசந்தி மூன்றுகாலம் ஆகிய நான்கு தத்துவங்களின் விளக்கம் வட்டவடிவமான படத்துள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனை நன்கு உணர்ந்து தெளிந்து கொள்க)

பன்னிரு நிதானங்களின் தன்மைகள்

1 குற்றம் 2 செயல் 3 பயன் 4 வீட்டுஇயல்பு

1. குற்றம் :

வேட்கையும், பற்றும், பேதைமையும் ஆகிய மூன்றுநிதானங்கள் குற்றம்எனப்படும்.

2. செயல் :

உருப்படுத்தும்பவமும் அதனுல் வந்தடையும் வினையும் ஆகிய இரண்டு நிதானங்கள் குற்றவினையால் வரும் செயல்களாகும்.

3. பயன் :

உணர்ச்சி, அருவுரு வாயில், ஊறு, நுகர்ச்சி, பிறப்பு வினைப்பயனுகிய மூப்பு, சாக்காடு ஆகிய ஏழு நிதானங்களும் குற்றம் செயல் ஆகியவற்ருல் ஏற்படும் வினைநிகழ்ச்சியின் பயனுகும்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

4. வீட்டு இயல்பு :

குற்றமும் வினையும், பயனும் ஆகியவை எல்லாம் துன்பம் பயப்பனவேயாகும். இவற்றின் காரணமாகப் பெற்ற தோற்ற தன்மைகள் நிலையுடையன ஆகா. உயர் திணை அஃறிணை என்று கூறுப்பெறும் எவ் வகையான ஒருபொருளுக்கும் ஆன்மா என ஒன்று தனிப்பொருளாக அமைந்ததில்லை என்று இவ்வாறு உணரப்படும் இவைகள் வீடுபேற்றுக்குரிய தன்மையாகும்.

7. வாய்மை நான்கு

1. உணர்வு அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு. அவலம், அரற்று, கவலைகையாறு என்று சொல்லப்படுவனவெல்லாம் துக்கம் ஆகும் என்பது முதல்வாய்மை.

2. அந்த துக்கத்திற்குப் பேதைமையும் செய் கையும், அவாவும், பற்றும், கருமத்தொகு தியும் ஆகியவை காரணமாகும் என்பது இரண்டாம் வாய்மை.

3. துன்பத்திற்கும், தோற்றத்திற்கும் பற்றே காரணமாகும் என்பது மூன்றும் வாய்மை ஆகும்.

4. இன்பத்துக்கும், வீட்டுக்கும், காரண மாவது பற்றின்மையேயாகும் என்பது நான்காவது வாய்மையாகும். இவையே நான்கு வாய்மை நெறிகளாகும்.

8. கந்தம் ஐந்து

(கந்தம்-சமுதாயம், கூட்டம்)

1. உருவகந்தம்

பூத உரு, உபாதாயஉரு என இரு வகைப்படும்.

பூதவுரு :

பிருதிவி,	அப்பு,	தேயு.	வாயு
(மண்)	(நீர்)	(நெருப்பு)	(காற்று)

உபாதாயருவு :

வலி,	இரதம்,	வன்னம்,	கந்தம்
(மண்)	(சுவை)	(ஒளி)	(நாற்றம்)

(ஐந்தாவது பூதமாகிய ஆகாயம், ஒப்புக் கொள்வது இல்லை) இந்த எட்டினலும் பிறப் பொருளும் உடம்பும் அமையும்

2. வேதனை கந்தம்

1. குசலவேதனை - சுகவறிவு
2. அகுசலவேதனை - துக்கவறிவு
3. குசலாகுசலவேதனை - சுகதுக்கவறிவு

3 குறிப்புக் கந்தம்

மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம்

4 பாவனை கந்தம்

மனம், வாக்கு, காயங்களினல் உண்டா கும் நல்வினைபத்தும், தீவினைபத்தும் ஆகிய இருபதாம்

5. விஞ்ஞான கந்தம் (உண்மையறிவு)

இந்நால்வகை கந்தங்களையும் சந்தே கம் இன்றி ஆராய்ந்து எண்ணுகின்ற எண்ணம் உள்ளவறிவே விஞ்ஞான கந்தம் எனப்படும்.

பஞ்சகந்தங்களின் கூட்டமே ஆன்மாவாகும்,

தொகையும் தொடர்ச்சியும்

பலதாதுக்களின் கூட்டமே உடம்பு. பலதுளிகளின் கூட்டமே நீர். பலஊர்களின் கூட்டமே நாடு எனத் தொகைப்படுத்து வழங்குமாறு போலவே பஞ்சகந்தங்களின் கூட்டமே ஆன்மா என்று வழங்கப்படுவது தொகையாகும்.

இதனை உண்மை வழக்கு இன்மை வழக்கோடு சேர்த்தும் ஏற்பக்கூறுவர்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

தொடர்ச்சியாவது வித்திலிருந்து முளையும் முளையிலிருந்து தாளும் தோன்றி நிகழ்ந்து நெல்லாகுமாறு போல, எல்லாம் காரணகாரிய சம்பந்தமாகவே உள்ளது தொடர்ச்சியும் இன்மை உண்மை வழக்குகளிற் சார்த்திக் கூறப்படும்

9. வழக்கு ஆறு

1. உண்மைவழக்கு

உள்ளதாகிய உணர்ச்சியை உள்ளது என்று கூறுதல்

2. இன்மைவழக்கு

இல்லாதாகிய முயற்கொம்பினை இல்லாததென்றே கூறுதல்

3. உள்ளத்து சார்ந்த உண்மைவழக்கு

உள்ளதாகிய உணர்வுடனே அதனோடு பொருந்திய நுகர்ச்சியும உளதாகும் என்று கூறுதல்

4 உள்ளது சார்ந்த இன்மைவழக்கு

மின்னலைப் போல உணர்வு தோன்றிற்று என்று கூறுதல்

5 இல்லது சார்ந்த உண்மைவழக்கு

காரணம் இல்லையாகக் காரியத்தை மட்டும் கொண்டு உரைத்தல்

6 இல்லது சார்ந்ந இன்மைவழக்கு

முயற்கொம்பு என்பது இல்லாத பொருளாதலின் அதற்குத் தோற்றமும் இல்லை என்று கூறுதல்.

10. நயங்கள் நான்கு

1 ஒற்றுமைநயம்

காரணமும், காரியமும் ஆகிநிற்கும் பொருள்களை வேற்றுமையைப் பற்றிக்கருதாது காரணமாகவோ காரியமாகவோ கொள்ளுதல்.

2. வேற்றுமைநயம்

காரண காரியங்களை ஒன்றுக உணராது தனித்தனியே வேறுபடுத்தி உணர்ந்து கொள்ளுதல்

3 புரிவின்மைநயம்

முற்றவும் கெடுதல் அல்லாத முதற்பொருள் காரியப்பொருள், என்பவனவற்றுக்குப் பொருந்தியுள்ள காரணமானது விளைதற்குரியதான காரியத்தைப் பயத்தலை அறிவதற்கு ஏற்றதான உள்ளமில்லை எனக்கூறுதல்.

4 இயல்புநயம்

நெல் வித்தினுள்ளாக நெல்முளை தோற்றும் என்று கூறுதல்.

நயத்தின்பயன்

மேற்கூரிய நால்வகை நயங்களாலும் நாம் கொள்ளும் பயன்கள் எல்லாம், காரண காரியமாகத் தொக்க பொருள்களே அல்லாது அஃதன்றித் தனியே ஒன்றில்லை என்பதும், அதனால் அத்தகைய பொருள்களினிடத்தே பற்றுவைத்தல் கூடாது என்பதும் வினை முதலியவற்றைச் செய்வாளேடு செய்கைக்கு ஒரு கோட்பாடு இல்லை என்பதும் பொருந்தும் ஒரு காரணத்தினுலேயே ஒருகாரியம் பிறக்கும் என்பதும் அதுகாரண காரியமும் அன்று அஃதல்லாததும் அன்று எனவும் முறையாகத் தொகையினுலே இவை நான்காகவிரிந்தன.

11 வினவிடை நான்கு

1 துணிந்துசொல்லல்

தோன்றியது ஒன்று கெடுமோ? கெடாதோ? என்று கேட்டால் கெடுதல்உண்டு என்று விடையளித்தல் ஒருதலையாகத் துணிந்து கூறுதலாகும்.

2. கூறிட்டுமொழிதல்

செத்தான் பிறப்பானே? பிறவானே? என்று கேட்டால் அவன்பற்றுக்களை விட்டவனே? விடாதவனே? எனப்பகுத்துவிட்டவனயின் பிறவான் எனவும் கூறுசெய்து விடை கூறுதலைக் கூறிட்டு மொழிதல் என்பர்,

3. வினவின் விடுத்தல் :

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

முட்டையாகியகொட்டை முந்தியதோ? அன்றிப்பனைமுந்தியதோ? என விளக்கி உரைப்பாயாக என ஒருவன் கேட்டால், எந்தக் கொட்டைக்கு எந்தப்பனை? என்று அதனைத் தெளிவுபடுத்த வினவுவது போலக் கேள்வி கேட்டால், அது வினவினால் விடை யிறுத்தல் ஆகும்.

4. வாய்வாளாமை

ஆகாயப்பூ பழையதோ? புதிதோ? என்று கேட்பவரின் கேள்விக்கு, எவ்வகை விடையும் கூறாதே இருந்து விட்டால்போல்வதாம். இல்லாத ஒன்றினைக் கேட்பவனுக்கு பயனில்சொல் பாராட்டுவான் என அவனுக்கு விடை கூறுதல் தவறு என்பதாம்.

இயல்பு ஈராறு நிதானங்கள் பன்னிரண்டு

(நிதானம்-ஆதிகாரணம்) மேல் கூறப்பெற்ற பேதைமை முதல் வினைப்பயன் இறுதியாகவுள்ள நிதானங்கள் பன்னிரண்டாம்.

1. மேற்கூறிய நிதானங்கள் உண்டாக்குதல் இல்லை
2. கெட்டு அழிவது இல்லை.
3. ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்து போவதென்பது அல்லாது முற்றவும் கெடுதல் இல்லை.
4. செய்யும் முதலாக ஒன்று இன்றித்தானே செயற்படுவது இல்லை.
5. யான் என்பது இல்லை
6. எனது என்பது இல்லை
7. போக்கு இல்லை
8. வருதல் இல்லை
9. பிறரால் முடிக்கப்படுவது இல்லை
10. தானே முடிவதும் இல்லை
11. வினையாகவும், வினையின் பயனாகவும் இருக்கும்
12. பிறப்புக்கும், வீடுபேற்றுக்கும் காரணமாகியும் இவை போன்ற பிறவற்றுக்கெல்லாம் தாமே முதலாகியும் விளங்குவன இந்நிதானங்களாம்.

அறவண அடிகளின் ஞானதீபம்

1. கட்டும் வீடுமாகிய இரண்டினையும் அதனதன் காரணத்தினையும் கூடியிருந்து பெறுமாறு தருவதற்கு உரியவர் பிறர் எவரும் இலராவர் யாம் மேலே உரைத்த பொருள்கட்கு எல்லாம், காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றுமே காரணங்களாகும்

2. பொருள்களை நிலையில்லாதன வென்றும் துன்பம் தருவன என்றும் அநான்மா வென்றும் அருவருப்புடையனவென்றும், தனித்து ஆராய்ந்து பார்த்து பற்றினை அறுத்திடுதல் வேண்டும்.

3. மைத்திரி பாவனை, கருணைப் பாவனை, முதிதைப்பாவனை அசுபபாவனை, உபேக்ஷாபாவனை என்று சொல்லப்படும் இவைகளை அறிந்து அதனால் திருத்தமுறும் நல்லுணர்வினாலே நின்வெகுளியும் அற்றுப் போவதாக.

4. சுருதியும், சிந்தனையும் (சுருதி-ஞான நூற்பொருளைக் கேட்டல் சிந்தனை-சிந்தித்தல்) பாவனையும் (பாவனை-தெளிதல்) தரிசனையும் (தரிசனை-அறிதல்) ஆகிய நான்கையும் கருதி மேற்கொண்டு நின் மனமயக்கத்தைப்போக்குக. இந்நால் வகையாலும் நின் மனத்து இருளும் அகலுமாக.

எல்லாவற்றிற்கும் காரணமாகியகாமம்,

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

வெகுளி, மயக்கங்களைமுறையே நீக்குதற்குரிய பாவனைகள்

பாவனைகள் ஐந்து

1. மைத்திரிபாவனை

உயிர்கள் அனைத்தின்பாலும் அன்புடைமை கொண்டு அவற்றின் நலனுக்காகத் தியானித்தல். (மைத்ரம்-அன்பு)

2. கருணாபாவனை

உயிர்கள்பால் இரக்கம் கொண்டு வறியவர்கள் வளமுடையவர்கள் ஆகுக எனத் தியானித்தல். இரக்கவுணர்வும் இதனுள் அடங்கும். (கருணை-இரக்கம்)

3. முதிதைபாவனை

ஆக்கமுடையவரின் அதிர்ஷ்டம் நீங்காதிருக்கவென்றும். ஒவ்வொருவரும் தத்தமக்குரிய நல்வினைப்பயனை அடைகவென்றும் பாவித்தல். (முதிதை-சந்தோசம்)

4. அசுபபாவனை

சரீரம் செல்வம் ஆகியவற்றின் நிலையின்மையைப் பாவித்தல். (அசுபம்-அமங்கலம்)

5. உபேக்ஷாபாவனை

எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்தலும் விருப்பு வெறுப்பின்றியிருத்தலும் (இந் நான்கு பாவனைகளைக் காட்டிலும் மிகவுயர்ந்தது சமசித்தத்துவம் என்றும் கூறப்படும்.)

இங்ஙனம் அறவணவடிகள் ஞான தீபத்தை நன்முறையிலே காட்டியருள மணிமேகலையும் தெளிவு பெற்றுத் தவத்தின் கூறுகளைப் பூண்டவளாயினள். பல்வகைத் தருமங்களையும் கேட்டு முடிவில் என்பிறப்புக்கு ஏதுவாகிய குற்றங்கள் நீங்குக! என நோன்பு இயற்றினள்.

குற்றமற்ற, சிறந்த, களங்கமில்லாத நன்னடத்தையைச் செயலில் காட்டுக! எல்லாவற்றுக்கும் ஆதாரமாக பூமி இருப்பதைப் போல, எல்லா அறங்களுக்கும் ஆதாரம் நன்னடத்தை தான்.

மதச் சடங்குகள், பொய்யான தத்துவம், சந்தேகத்தில் நாட்டம் - இம் மூன்றும் அடிமைத் தளைகள் என்பதனை உணர்வாயாக.

— சித்த நாகார்ச்சுனர்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நல்வாழ்த்துக்கள்

"மண்டிணி ஞாலத்து
மக்கட் கெல்லாம்
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே"

ASOKA LODGE,
RAJAPALAYAM.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From :

Spinners of Best
Quality Cotton Yarn
2/20s and 2/40s

Rajulakshmi Textiles,
1110-A, Cotton Market,
RAJAPALAYAM - 626 117.

With Best Compliments From :

Estd : 1942 Phone : 2407

KUMARAN STORES,
Electrical Dealers,
746, Tenkasi Road,
RAJAPALAYAM - 626 117.

Authorised Dealer :
Crompton Greaves Ltd.

With Best Complements From :

P. S. N.

Tel : PEEYESYEXI
Phone : 2875, 3111 Mill
Resi : 2580, 3100

P. S. NARAYANA RAJA
" PSN " RICE & OIL MILLS
Rice Mill Road,
RAJAPALAYAM.

High Quality " PSN " Brand Groundnut
& Gingelly Oil, Manufacturer
Small Packing also Available

Sri Venkatesa Lathe Works
Office & Workshop :
1079-A, Srivilliputtur Road,
Factory : SRI VENKATESA
62-B, Srivilliputtur Road,
RAJAPALAYAM - 626 117.
Prop : S R. VENU Phone : 2655

Manufacturers of :
New Type & Modern Steam
Paddy Tanks Capacity of 80 to 150
Bags Per Hour

All Type of Oil Expeller
Spare Parts & Steam Generater,
Oil Tanks Heavy Duty Oil &
water Piston Pumps Etc.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

அரவிந்த் வைத்தியசாலை

454 C, தென்காசி ரோடு இராஜபாளையம்.

(P. P. போன் 2128)

நோயற்ற வாழ்வே! குறைவற்ற செல்வம்!

உங்கள் நோய் எதுவாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நன்கு பரிசோதித்து **நோயின் மூலகாரணத்துக்கு** சிகிச்சை அளிக்கப்படும்.

ஒருவர் உடல் மற்றொருவர் உடலிலிருந்து வேறு பட்டிக்கிற தன்மை அறிந்து, நோய் ஒன்ருய் இருப்பினும் நோயாளியின் உடல் வாகுக்குகந்த மருந்தைத் தேர்வு செய்து குணமாக்கும் திறன் **ஓமியோ, சித்த மருத்துவத்தின்** தனிப் பண்பாகும்.

நோய்களுக்கு, 25 வருட அனுபவ மருந்துகளைக் கொண்டு சிறப்புச் சிகிச்சை செய்யப்படும்.

இவண்

Dr. P. ராஜாலிங்கம் RIMP, RHMP, (RAMP)

ஓமியோ, சித்தா, ஆயுர்வேதிக், யுனானி மருந்துகள் கிடைக்குமிடம்:

அரவிந்த் மெடிக்கல் ஸ்டோர்

(போன் : 2128) 278 தென்காசி ரோடு பஸ்நிலையம் தென்புறம், இராஜபாளையம்.

With Best Compliments From

M. R. S. Radhakrishna Raja

MANAGING PARTNER.

The Universal Trading And Agencies Company,
Cotton & Cotton Waste Merchants,
Cotton Market,
Rajapalayam - 626 117.

Tel: "RADHA" Phone : Office : 2919
Factory : 2929
Res : 2955

With Best Compliments from

E. P. MANIA RAJA

Jaggery Merchant.

RAJAPALAYAM.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments :

★

SARAVANA TRADERS

COTTON WASTE MERCHANTS

Cotton Market

RAJAPALAYAM

Phone - Office : 2628

Factory : 2371

With best compliments from :

INDIAN REINFORCING COMPANY [WELDED MESH] PRIVATE LTD.

Manufacturers of

'Irc'

WELDED WIRE MESH

Office and Factory at

4, Mount - Poonamallee Road,

Nandambakkam, MADRAS-600 089.

Phone : 431989 Telex : 041 - 7459 Grams : "REINFORCE" and "WELDEDMESH"

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நல் வாழ்த்துக்கள்

ANANDAS
GROUP OF HOTELS
RAJAPALAYAM & COURTALAM

இராஜபாளையம்

ஆனந்தா லாட்ஜ்

ஆனந்த விலாஸ்

ஆனந்தா போர்டிங் A/c

ஹோட்டல் ஆனந்த்

ஆனந்தா கூல்டிரிங்க்ஸ்

குற்றாலம்

இராஜபாளையம்

ஆனந்த விலாஸ்

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

WITH BEST COMPLIMENTS FROM :

SRI BALAJI CHIT FUNDS RAJAPALAYAM

RAMCO BALAJI CHIT FUNDS (P) LTD. RAJAPALAYAM

K. D. BALARAM RAJA & SONS

இனிய வாழ்த்துக்கள்

ராஜா சைக்கிள் மார்ட்,
436, தென்காசி ரோடு,
ராஜபாளையம் - 626 117.

அங்கீகாரம் பெற்ற பிலிப்ஸ்
ரேடியோ டீலர்ஸ்
கிளைகள் : ஸ்ரீவில்லிபுத்தூர்,
சிவகாசி, கோவில்பட்டி

With best Compliments from :

Mfg. Licence No. 260

Phone: Off : 2612, Fac : 2097, Res : 2747

SRI VENKATESWARA PRODUCTS
MANUFACTURERS OF PLASTER OF PARIS I. P. &
INDUSTRIAL GRADES

FACTORY :
Vadakkuvenganallur,
Opp Rajus' College,
Mudangiar Road,
RAJAPALAYAM.

OFFICE :
40 - A, Bank Road
RAJAPALAYAM.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

With Best Compliments From :

THE JANAKIRAM MILLS LIMITED.

(SPINNING MILLS)

Post Box No. 4

RAJAPALAYAM - 626 117

Telegram : 'SAKTHI'

Phone : 2115 { PBX Three Lines

Telex : 0442 - 210 JKRM IN

INSTALLED SPINDLEAGE - 28000

SPINNERS OF BEST QUALITY OF COTTON YARN
COUNTS RANGING FROM 14s TO 80s IN HANK & CONE
BOTH SINGLE AND DOUBLED YARN
AND STAPLE FIBRE YARN OF 31s AND 40s

நல்வாழ்த்துக்கள்

ஹோட்டல் பரணி
பரணி பவான்
இம்பாலா ஐஸ்லாண்ட்

இராஜபாளையம்

வெள்ளிவிழாக் கொண்டாடும்
மணிமேகலை மன்றத்துக்கு
நல்வாழ்த்துக்கள்

புதுப்பாளையம்
டிம்பர் இண்டஸ்ட்ரீஸ்

90 G, சங்கரன்கோவில் ரோடு,

இராஜபாளையம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

நல்வாழ்த்துக்கள்!

ராஜா இன்ஜினியரிங் கம்பெனி
எலக்ட்ரிகல் மோட்டார், பம்புசெட் &
மெஷினரி டீலர்ஸ்
சங்கரன்கோவில்

Phone No : 365

வினியோகஸ்தர்கள் :
P.S.G மோட்டார் பம்பு ஆயில் இஞ்சின்கள்
லிபரல், பஜாஜ், ஆயில் இஞ்ஜின்கள்
N. B. C. பால் & டேப்பர் ரோலர் பேரிங்
ஜெனித் G. I. பைப்புகள்
Dutron Kanaflex ஹோஸ் பைப்புகள்
Good year பெல்ட்ஸ்
Aspee Bolow ஸ்ப்ரேயர்கள்
Castrol ஆயில் & கிரீஸ்

With Best Compliments From :

Gram : " ASOKPLASTR" Phone Off : 2704
Res : 2924

ASHOK INDUSTRIES
Post Box No. 63
218, P. S. K. Road,
RAJAPALAYAM - 626 117.

Manufacturers of
PLASTER OF PARIS
(All Kinds)
ASHOK CEM
(Water proof wall paint)

Tel : KING Phone : 2617

SRIRAM KRISHNA TIMBER
193 Asok Talkies Road
RAJAPALAYAM

தேக்கு தடிகள் I II III Ex போர்ட் தடிகள் மருது, தேம்பா கோங்கு, வெண் தேக்கு தடிகளும் மொத்தமாகவும் சில்லரையாகவும் சைஸ்களும் உடனுக்குடன் சப்ளை செய்யப்படும்.

புரோப்ரைட்டர்
P. மணி ராஜா

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

NSR

இராஜபாளையம் நகரில் வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் எல்லா மாநில லாட்டரி சீட்டுகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் வாங்கு வதற்கு சிறந்த ஸ்தாபனம்

N. S. R. லக்கி சென்டர்

தென்காசி ரோடு, இராஜபாளையம்.

Prop : R. நவநீதன் & Co.,

Phone : 2559 P. P.
2359 Branch
3159 Resi

நல்வாழ்த்துக்கள்

கணேஷ் அன்கோ.,

வெல்லம் வியாபாரம்,
504, தென்காசி ரோடு,
இராஜபாளையம்.

N. K. P. ஜெகநாத ராஜா
&
S. சீனிவாச ராஜா

நல்வாழ்த்துக்கள்

S. P. சுப்ப ராஜா,

வெல்லம் கமிஷன் மண்டி,
62, மதுரைராஜா கடைத் தெரு.
இராஜபாளையம்.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

"ESTIMATE pH OF SOLUTIONS - WITH 'ELICO' pH ELECTRODES"

Range :

pH Glass Electrodes, Combined Electrodes

Reference Electrodes, Ion Specific Electrodes

Industrial pH Electrodes and

Conductivity Cells

PROGRESSIVE PISTON COMPANY

6-3-1100/5, Raj Bhavan Road

Somajiguda, HYDERABAD - 500 482

Phone : (0842) 22 4501

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

WITH THE BEST COMPLIMENTS FROM:

SRIRAM PRODUCTS,
RAJAPALAYAM.
(Manufacture of A. C. Wool and Surgical Dressings)

SRIRAM GELKEM INDUSTRIES (P) LTD.,
RAJAPALAYAM.
(Manufacture of Gelatine Glue)

GITANJALI MILLS LTD.,
SANKARANKOVIL.
(Modern Spinning Mill)

SRIRAM CHEMICAL COMPLEX
MADRAS.
(Manufacture of Gelatine Glue)

PUSHPANJALI INDUSTRIES (P) LTD.,
SANKARANKOVIL.
(Manufacture of Cotton Seed Oil)

SRIRAM VINYL FABRICS,
RAJAPALAYAM.
(Manufacture of Rexin and Coated Fabrics)

P. R. VIJAYARAGHAVAN & CO.,
RAJAPALAYAM.
(Manufacture of Gauze and Bandages)

SRI LAKSHMI GINNING & PRESSING FACTORY,
RAJAPALAYAM.
(Bales Pressing Factory)

Registered Office: 36, Sriram Nagar, RAJAPALAYAM - 626 117.

CC-0. In Public Domain. Funding by IKS-MoE

Digitized by eGangotri and Sarayu Trust.

MADRAS CEMENTS LTD.,
'Ramamandiram', RAJAPALAYAM.
Factory : Ramasamyraja Nagar - 626 204 Tamil Nadu
(Manufacturers of RAMCO brand Cement)

SOUTHERN ASBESTOS CEMENT LIMITED.
739, Mount Road, MADRAS - 600 002.
Factories : Arkonam (Tamilnadu)
Karur (Karnataka)
Maksi (Madhya Pradesh)
(Manufacturers of RAMCO Asbestos Cement Roofing Sheets, Pipes and Accessories and also Asbestos Cement Pressure Pipes)

RAJAPALAYAM MILLS LTD.,
RAJAPALAYAM.
(A Modern Spinning Mill with 36,044 spindles)

THE RAMARAJU SURGICAL COTTON MILLS LIMITED,
Factories : RAJAPALAYAM & PERUMALPATTI.
(Manufacturers of Surgical dressings & Plaster of Paris Powder)
(Proprietors of M/s. Sudarsanam Spinning Mills)

JAYARAM MILLS LTD.,
RAJAPALAYAM.
(Manufacturers of quality CHANGU Mark Grey Gadas, mills and superfine Dhotties)

GOWRIHOUSE METAL WORKS,
RAJAPALAYAM.
(Manufacturers of Woodscrews, Coach Screws, Machine Screws and Wirenails)

Founder : P. A. C. RAMASAMY RAJA
Chairman : P. R. RAMASUBRAHMANEYA RAJHA, B. Sc.,

Leo Printers, Rajapalayam. Phone : 2771

CC-0. In Public Domain. Funding by IKS-MoE